|| ஸ்ரீ: ||

# யஜ்ஞஸம்ரக்ஷிணீ

(யாகஸம்பந்தமான பல விஷயங்கள் அடங்கியது)

இரண்டு பாகமுள்ளது.

மஹோபதேசக, வித்வான், அக்நிஹோத்ரம்
ஸ்ரீ கோபாலதேசிகாசார்யர்
இயற்றியது.

கும்பகோணம்
ஸ்ரீ ஜநார்தன அச்சுக்கூடத்தில்
அச்சிட்டு வெளியிடப்பட்டது.

பார்த்திவ-ளு

விலை ] 1945. [ரூ 1-8-0

First Edition—Dec. 1945.

All Rights Reserved

Printed & Published by S. Kalyanasundaram
Manager,
The Sri Janardana Printing Works, Ltd,
Town High School Road,
Kumbakonam.

॥ श्रीः ॥

श्रीकाञ्ची कामकोटिपीठाधिप जगद्गुरु श्रीशङ्कराचार्यवर्य

स्वामिपादैः सादरं अनुगृहीतम्

# ॥ श्रीमुख पत्रं ॥

श्रीमत्परमहंसपरिव्राजकाचार्यवर्य श्रीशंकर भगवत्पाद प्रतिष्ठित श्रीकाञ्चीकामकोटिपीठाधिप जगद्गुरु श्रीमच्चन्द्रशेखरेन्द्र सरस्वती श्रीपादैः क्रियते नारायणस्मृतिः ।

अस्मदत्यन्त प्रेमास्पदैः कुंभघोण नगराभिजनैः श्रीमद्भिः अग्निहोत्रं गोपालदेशिकाचार्यैः प्रणीय, अस्मत्समक्षं समर्पितां, देश भाषामयीं यज्ञसंरक्षणीत्यन्वर्थ नाम्नीं कृतिमालोक्य नितान्तं सन्तुष्टास्मः । श्रुतिपुराणादि प्रमितः लोकोपकारकः आत्मज्ञान साधनीभूतः यज्ञमहिमा अस्मिन् ग्रन्थे संरक्षितो वर्तते ।

शास्त्रेषु यज्ञमुद्दिश्य विप्रकीर्णतया तत्र तत्र कृताः सर्वाः चर्चाः एकस्मिन्नेवास्मिन् ग्रन्थे समुच्चित्य निरूपिता इत्यास्तिकैरादरणीयोऽयं ग्रन्थः । एतद्ग्रन्थरचना प्रोत्साहकस्य श्रीसुब्बय्यस्य, ग्रन्थकर्तुः, पठितॄणां च श्रीचंन्द्रमौलीश कृपया श्रेयांसि भूयांसि भूयासुरित्याशास्महे ॥

मुखां—कुंभघोणम्,
पार्थिवनाम संवत्सर
आश्वयुज कृ. । ६॥
स्थिरवासरः ।

नारायणस्मृतिः ।

मनु याज्ञवल्क्यादि वचन जातं, तदनुगुण ब्रह्मसूत्र तद्भाष्यादि प्रमाणजातं चावलंब्य विवेचयन्, अनाहिताग्नितायाः बहुभिरेव प्रमाणजातैः स्तेय तुल्यत्वेन अत्यन्त निन्द्यतां निरूपयन्, नित्यनैमित्तिक काम्य भेदेन कर्मणां त्रैविध्यं, तत्रापि नित्यनैमित्तकयोरिव काम्यस्यापि विना फलेच्छामनुष्ठानेनैव सर्वेषां कृतकृत्यतां फलोद्देशेन क्रियमाणानां काम्यकर्मणां अत्यन्त निन्द्यतां च प्रमापयन्, अधीत वेदपरित्यागमिव गृहीताग्निहोत्रपरित्यागमपि पातित्य निदानमधिगयन्, नित्येष्वपि बहुष्वग्निहोत्र सोमयागयोः, अतिपावनयोरनुष्ठानं विना न ब्रह्मविद्याधिकार सिद्धिरित्यवगमयन्, यज्ञार्थ धन संग्रहोपायप्रसंगे गत्यन्तराभावे नित्याग्निहोत्राद्युद्देशेन ब्राह्मणेतरधनस्यापि अत्यन्तापद्धर्मतया न निन्द्यत्वमिति निष्कर्षयन्, "न वा उवेतन्म्रियसे नरिष्यसि—" हिरण्यशरीरः ऊर्ध्वः स्वर्गं लोकमेति" इत्यादि बहुतर यजुर्वेदादिगत वाक्यानां मन्त्रार्थवाद रूपाणां "यज्ञार्थं पशवः सृष्टाः स्वयमेव स्वयंभुवा" इत्यादि पंचमाध्यायगतमनुवचनानां आनुशासनिकपर्वगतानां "पशवः पशुबन्धेषु ये हन्यन्तेऽध्वरेषुच" इति वचनानां, अश्वमेध पर्वगतानुगीताप्रकरण गतानां अध्वर्युयति संवाद प्रकरण गतानां वाक्यानां 'अशुद्धमिति चेन्न शब्दात्' इति ब्रह्मसूत्र विवरण प्रसंगेन, शङ्करभगवत्पाद, भगवद्रामानुज भाष्याणां, तदनुयायिनां, तत्तदाचार्यवर्य व्यवस्थानां चानुसारेणच यज्ञीय हिंसायाः अहिंसात्वं निगमयंश्च यज्ञसंरक्षणोपाय प्रकारान् तत्तत्प्रसक्त शंकानिरसन पूर्वकं सुष्ठु व्यवस्थापयतीति सत्यमयं अन्वर्थनामा यज्ञसंरक्षणी निबन्धः॥

यज्ञानुष्ठानावश्यकता निरूपणं हि कलौ यज्ञनिषेधपराणां वाक्यानां यावद्वर्ण विभागं, यावद्वेद प्रवृत्तिच न प्रवृत्तिरिति निरूपणं, यागीयहिंसायाः अदोषत्व व्यवस्थापनं च प्रधानतमं कृत्यं यज्ञसंरक्षण प्रसङ्गे।

महाभारतगतानां, पाञ्चरात्र सिद्धान्तानुसारि पिष्टपशु यागानुष्ठानादीनां

विषया हि केवल पांचरात्र सिद्धान्तानुसारिण एव न तु वेदमात्र प्रामाण्यानुसारिणः, वेद=पांचरात्रोभय प्रामाण्यानुसारिणोवा इति पिष्टपशुयाग, मुख्यपशुयागयोः अधिकारि भेदेन व्यवस्थित विकल्प सिद्धान्त एव तत्तदखिल संप्रदायाचार्य संमतः ।

कुमारिलपादा अपि श्लोकवार्तिके हिंसायाः दोषत्वं परोपकारादीनां गुणत्वं वा न केवल तर्क समधिगम्यं, अन्यथाहि गंगापानमिति सुरापानमप्यधर्मस्स्यादिनि विशदयन्तः, "अशुद्धमिति चेन्नशब्दात्" इति सौत्र सिद्धान्तमेव, हिंसादोषत्वा दोषत्व सिद्धये शरणं मन्यन्त इति पूर्वोत्तर मीमांसयोरुभयोरपि सर्वथैककण्ठयं पूर्वोत्तर मीमांसा शास्त्रभेद वादिनामपि यज्ञीय हिंसायाः तीर्थत्वमात्रे निरपोहमेव ।

न केवलं वेदान्तिनां, किन्तु सर्वेषामपि तीर्थकराणां तत्तद्वर्णाश्रमोचितनित्यकर्मानुष्ठानं विना न पुरुषार्थसिद्धिरिति संप्रतिपन्नमिदम् । अवैदिका अपि, वैदिककर्मानुष्ठान विरोधिनोऽपि तत्तत्स्वीयागमानुसारिणः कर्म विशेषान् नियत कर्तव्यान् यदि मन्यन्ते, तर्हि वैदिकानां परं स्व स्व कर्मानुष्ठाने वैमुख्यं कथं न निन्दावहम्? ।

अतः वैदिकत्वं वा आत्मनः परिहातव्यं, यथा शक्ति स्वस्वोचितकर्म वाऽनुष्ठातव्यं । स्वयं वैदिकत्वाभिमान', तत्तद्ब्राह्मणत्वादिजात्यभिमानो वा स्वस्वब्राह्मणत्वाभिमानि पित्रादि धनाद्यधिकारलोभादिकं परं रक्ष्यते, तत्तत्पैतृकधर्माधिकारः परं परित्यज्यत इति किं केन श्लिष्यत इति सर्वएवेदं विचारयन्तु ॥

सांप्रतं यज्ञसंरक्षणं अत्यन्तावश्यकं मत्वा याज्ञिक कुलजीवातूनां टि. यल्. सुब्बार्य महोदयानां प्रार्थनया, स्वयमग्निहोत्राद्यनुष्ठानेनैव स्वजीवनयात्रां निर्वहतां, काठ कालापकादि समाख्यावत् स्वयमग्निहोत्र प्रवर्तकत्वेन

अग्निहोत्रोपनाम्नैव प्रसिद्धानां, स्वपूर्व पुरुषाणां क्षुण्णेनैव मार्गेण कथंचन धर्मरक्षणं स्वकर्तव्यं मन्वानानां श्री गोपालदेशिकाचार्याणां यज्ञसंरक्षणी समाख्योऽयं निबन्धः, विश्वसिमि, प्रसक्ततत्तदाक्षेप परिहारेण यज्ञसंरक्षणं स्वकर्तव्यं नूनं सम्यक् करिष्यतीति ॥

इति वैदिकजनविधेयः ।

अनन्तकृष्ण शास्त्री.

महामहोपाध्यायः

25—10—45.

श्रीरस्तु ।

# ஓர் விக்ஞாபனம்.

(ஸ்ரீ டி. எல். ஸுப்பய்யர்.)

யக்ஞ ஸம்ஸரக்ஷிணீ என்கிற இந்த அபூர்வ கிரந்தமானது வெளிவந்திருப்பது வைதிக தர்மத்திற்கும், வைதிக ஸமூஹத்திற்கும் மிகுந்த உதவியாயிருக்குமென்று நம்புகிறோம். இக்கிரந்தமானது தனது காரணப் பெயருக்கேற்றபடி யக்ஞஸம்ரக்ஷணம் செய்வதில் நிகரற்றதாக விளங்குவதை, இதைப் படிக்கும் யாவரும் ஸுலபமாக அறியக்கூடும். இக்கொடிய கலியின் கௌடில்யத்தால் நம்மில் யக்ஞானுஷ்டானம் குறைந்துவிடவே, பொதுஜனங்கள் யக்ஞ மஹிமையை மறக்க நேர்ந்துவிட்டது. இத்துடனில்லாமல் வைதிகர்களுக்குள்ளேயே பலர் யக்ஞங்களைப்பற்றி சிற்சில விபரீத அபிப்பிராயங்களைக் கொண்டிருப்பதையும் நாம் அநுபவத்தில் அறிந்துவருகிறோம். சாஸ்திர உண்மைகளையும் ஆசார்யர்களின் ஸித்தாந்தங்களையும், வைதிக மதத்தின் அடிப்படையான அம்சங்களையும் அவர்கள் நன்கு அறிந்துகொள்ளாததே அதற்குக் காரணமாகும். ஆகையால் வைதிக ஸித்தாந்தத்தை பிரமாணங்களைக் கொண்டு விளக்கி யக்ஞ விஷயமாக எவ்வளவு ஆக்ஷேபங்கள் இப்போது தோன்றியிருக்கின்றனவோ அவையனைத்தையும் நிவிருத்தி செய்து, ஆங்காங்கு ஸ்வல்பமாக நடக்கும் யக்ஞங்களுக்கும் இடையூறுகள் ஏற்படாமல் யக்ஞஸம்ரக்ஷணம் செய்யவேண்டியதற்காகவே இக்கிரந்தம் எழுதப்பட்டிருக்கிறது. ஆஸ்திகர்கள் ஆலஸ்யமின்றி இதை ஊன்றிப் படித்து உண்மையையறிந்து அங்காங்கு யக்ஞானுஷ்டானத்தை அதிகரிக்கச் செய்தும் ஆதரித்தும் வைதிகமதத்திற்குத் தொண்டு புரியவேண்டுமென்பது நமது விருப்பமாகும்.

உலக க்ஷேமத்திற்கு இன்றியமையாத ஸாதனமாக பகவானால் ஸிருஷ்டிக்கப்பட்டவை வேதம், யக்ஞம், பிராம்ஹணன் ஆகிய மூன்றுதான். இந்த மூன்றின் க்ஷேமத்தை, அதாவது நாம் ஆதரிப்பதைப்பொறுத்தே உலகக்ஷேமமிருக்கிறது. இந்த மூன்றும் அழிய நாம் இடம் கொடுத்தால் உலகத்தையே அழிக்க நாம் உடந்தை

யாயிருந்த குற்றத்தைச் செய்தவர்களாவோமென்று மனு, பராசர பகவத்கீதை மஹாபாரதம் முதலிய பிரமாணங்கள் உத்கோஷிக்கின்றன.

பாரததேசத்தின் கலை, ஆசாரம் தர்மம், நாகரீகம் போன்ற ஸகல விஷயங்களும் நமது வேதங்களிலிருந்தே வெளிப்பட்டவை. வேதங்கள் யாககர்மாக்கள் மூலமாகவே மேற்கண்ட மஹிமைகளை வெளிப்படுத்தி யிருக்கின்றன. ஆகையால் பாரததேச நாகரிகாதி மஹிமைகளுக்கு மூலகாரணமாயிருப்பவை யாகங்களே. அவைகள் மறைந்தால் நம்தேச மஹிமையும் மறையநேரிடும்

குறிப்பாக யக்ஞங்களால் மழை பெய்து கிருஷி, ஸஸ்யம் முதலியவை விருத்தியடைந்து பிரஜைகளுக்கு மிகுந்த க்ஷேமமேற்படுவதாக சுருதிகளும், கீதையில் பகவானும் மனுவும், மஹாபாரதாதிகளும் முறையிடுவது, மித்யையென்று ஆஸ்திகர்கள் நினைக்கமுடியுமா? ஆகையால் உலக க்ஷேமம் மீண்டும் உயர்ந்த நிலைமைக்கு வரவேண்டுமானால், மழை, கிருஷி, ஸஸ்யவிருத்தி ஏற்படவேண்டுமானால், துர்ப்பிக்ஷம், துர்மரணம், ஸங்காத மரணம், அன்னக் கஷ்டம், அக்நிபயம், முதலிய அனர்த்தங்கள் நீங்கவேணுமானால் எங்கும் யக்ஞானுஷ்டானம் அதிகரிக்கவேண்டியதே அவஸ்யமென்பதை சாஸ்திரவஸ்யர்கள் மறுக்கமுடியாது. மிராசுதார்கள் ஸஸ்ய விருத்திக்காக எரு, தழை முதலிய செய்நேர்த்திகளைச் செய்வதுபோல், பகவான் காட்டியுள்ள உயர்ந்த செய்நேர்த்தி கார்யமான யக்ஞானுஷ்டானத்தையும் கிராமம்தோறும் ஒவ்வொரு வருஷத்திலும் நடத்திவந்தால் க்ஷேமம் அடையத் தடையிராது. வியவஸாயிகளுக்கு முக்ய ஸாதனங்களான ஆடு, மாடு முதலிய கால்நடை பிராணிகளின் க்ஷேமத்தை யக்ஞ மந்திரங்கள் எங்கும் பிரார்த்திக்கின்றன. புல் பூண்டு, ஜலம் முதலிய கால்நடை ஆஹாரங்கள் ஏராளமாக விருத்தியாகும்படி யக்ஞங்களில் மந்திரங்களால் பிரார்த்திக்கப் படுகிறது.

மேற்கண்டவாறெல்லாம் யக்ஞத்திற்குள்ள மஹிமைகள் இக்கிரந்தத்திலும் இதன் பூர்வபீடிகையிலும் ஏராளமான பிரமாணங்களுடன் விஸ்தாரமாக நிரூபிக்கப்பட்டிருப்பதை ஆஸ்திகர்கள் படிக்காமலிருக்கக்கூடாது. இதுதவிர யக்ஞாக்நிஹோத்ராதி தர்மங்கள்

நித்யங்களென்றும், வர்ணாச்ரம தர்மங்களென்றும் அவச்யாநுஷ்டேயங்களென்றும், அவைகளைச் செய்யாவிட்டால், தோஷமேற்படுவதாயும், சுருதி ஸ்மிருதி, கல்ப ஸூத்ராதிகளான பிரமாணங்களைக் கொண்டு இதில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

முக்யமாக மதாசாரியர்களானஸ்ரீசங்கரபகவத்பாதாசாரியாள் ஸ்ரீபகவத் ராமாநுஜர், ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதேந்திராள், ஸ்ரீவேதாந்த தேசிகர் முதலியவர்கள் அக்நிஹோத்ர ஸோமயாகாதி கர்மாக்கள் நித்யங்களென்று ஸ்பஷ்டமாகக் கூறியிருப்பதை இங்கு எடுத்துக் காட்டப்பட்டிருப்பது பிரதான விஷயமாகும். ஸ்ரீசங்கர பகவத் பாதாசார்யாள், முமுக்ஷு, அமுமுக்ஷு, ஆகிய இரண்டு அதிகாரிகளும் நித்யங்களான யக்ஞாதிகளைச் செய்யவேணுமென்று பிர்ம்ஹ ஸூத்ரபாஷ்யத்தில் கூறியிருப்பது மிகவும்முக்யமாகும். முமுக்ஷுவானவன் விவிதிஷா ஸாதனமாகவும், அமுமுக்ஷுவானவன் வர்ணாச்ரம தர்மமாகவும் யக்ஞாதிகளை அனுஷ்டிக்கவேண்டுமென்று ஸ்ரீமத் பகவத்பாதாள் செய்துள்ள ஸித்தாந்தம் இக்கிரந்தத்தில் காட்டப்பட்டிருக்கிறது. (15, 16 பக்கம் பார்க்க)

யாக பசு கார்யமானது ஹிம்ஸையேயல்லவென்றும் பரிசுத்தமான உத்தம தர்மமென்றும் வைதிகமதத்தின் அடிப்படையான ஸித்தாந்தமும் ஆசார்யர்களின் நிர்ணயமும் இதில் நன்கு நிரூபிக்கப்பட்டிருப்பதுடன் நவீனர்களாகிய அஹிம்ஸாவாதிகளுக்கும் அசைக்கத் திருப்பமுடியாத வழியில் பிரமாண யுக்தி நியாயாதிகளால் பூர்வபீடிகையில் தக்க பதில் கொடுக்கப்பட்டிருப்பதையும் யாவரும் படிக்கவேண்டியதவச்யம். இதைத் தவிர நித்யங்களில் யதாசக்தி அனுஷ்டானம், யாகார்த்தமாக திரவ்யஸம்பாதனம், கலியில் செய்யலாம், இத்யாதிகளான வேறுபல விஷயங்களும் இதில் நிஷ்கர்ஷிக்கப்பட்டிருக்கின்றன. இக்கிரந்தத்தின் இரண்டாவது பாகத்தில் வைஷ்ணவாசாரியர்கள் யக்ஞாதிகளை அவச்யமென்று நிர்ணயித்திருப்பது விசேஷமாக நிரூபிக்கப்பட்டிருப்பதுடன் யக்ஞ பசு விஷயம் ரக்ஷணமென்றுகூறி, குறிப்பாக பிஷ்ட பசு கல்பமானது வேத பஹிர்பூதனான உபரிசரனுக்கு மாத்ரம் ஏற்பட்டதென்று ஸ்ரீவேதாந்த தேசிகர் நிச்சயித்திருப்பது யாவராலும் அறிந்துகொள்ளப்படவேண்டிய முக்ய அம்சமாகும்.

இத்தகைய கிரந்தமொன்று யக்ஞப்ரசாரத்திற்கு மிகவும் ஆவச்யகமென்று நமக்குத் தோன்றியபோது, நமது அத்யந்த ஆப்தரும், ஆர்யதர்மம் பத்திராதிபருமான மஹோபதேசக அக்னி ஹோத்ரம் ஸ்ரீகோபால தேசிகாசாரியர் ஸ்வாமிகளால் ஏற்கனவே ஸம்ஸ்கிருத பாஷையில் ஒரு கிரந்தம் எழுதப்பட்டிருப்பதை அறிந்து அதைத் தமிழில் மொழிபெயர்க்க வேண்டுமென்று விரும் பினேம். அதற்கிணங்க அவர்கள் மிகுந்த ஊக்கத்துடன் இதை லோகோபகாரமாக எழுதியுள்ளார்கள். இக்கிரந்தத்தை பாரத தேசம் முழுவதும் உபயோகப்படும்படி ஸம்ஸ்கிருத பாஷையிலும் பிரசுரிக்க வேண்டியதவச்யமென்று நினைக்கிறேம். இக்கிரந்த மானது ஒவ்வொரு வைதிக மதஸ்தர்களிடமும், முக்யமாக யாக்ஞி கர்களிடமும் இருக்கவேண்டியதவச்யமாகும். யாகாதி விஷயமான எவ்வித தூர்க்கக்ஷிகளையும் இக்கிரந்தத்தைக் கொண்டு தக்க பதில் கூறி நிரஸிக்கலாம்.

இக்கிரந்தத்தை கடாக்ஷித்து ஸ்ரீமுகபத்திரம் அநுக்ரஹிக் கும்படி அடியேன் பிரார்த்தித்ததை அங்கரீகரித்து ஜகத்குரு ஸ்ரீ ஆசார்யாள் ஸ்ரீமுகம் அருளியதற்காக அநேக பிரணமங்களை அவர்களுக்கு ஸமர்ப்பித்துக்கொள்ளுகிறேன்.

மஹாமஹோபாத்யாய வித்வத்வர ஸ்ரீமத் அனந்தகிருஷ்ண சாஸ்திரிகளவர்களும், மீமாம்ஸாரத்ன ஸ்ரீ ஏ. வி. கோபாலாசாரி யர் அட்வகேட் அவர்களும் எனது பிரார்த்தனைக்கு இணங்கி இத ற்கு முறையே ஸம்ஸ்கிருதத்திலும் ஆங்கிலத்திலும் முகவுரை எழுதி உதவியதற்கு எனது வந்தனத்தை தெரிவித்துக்கொள்ளு கிறேன்.

திருக்கருகாவூர், }

டி. எல். ஸுப்பய்யர்,
பி. ஏ., பி. எல்.,

——:OOO:——

॥ श्रीरस्तु ॥

# யக்ஞ ஸம்ரக்ஷிணீ

## பூர்வபீடிகை

ஸர்வேஸ்வரனை பகவானைப்போல் அநாதியாக விளங்கும் நமது வேதங்களில் நித்யமாக விதிக்கப்பட்டுள்ள யக்ஞங்களைப் பற்றி இக்காலத்தில் நம்மவர் சிலரிடையில் தோன்றியுள்ள சில ஆக்ஷேபங்களையும், ஸந்தேஹங்களையும், சாஸ்திரப் பிரமாணங்களைக்கொண்டு நீக்கவே "யக்ஞஸம்ரக்ஷிணீ" என்கிற இந்தக் கிரந்தம் எழுதப்பட்டிருக்கிறது. ஸம்ஸ்கிருதபாஷா பரிசயமில்லாத ஆஸ்திகர்களும் முக்யமாக மாணவகர்களும், ஸ்திரீகளும்கூட, யக்ஞதத்வத்தை அறியவேண்டி இது தமிழிலேயே எழுதப்பட்டிருக்கிறது.

நமது வேதங்கள் முழுவதிலும் நித்ய, நைமித்திக, காம்ய யாகங்களே விதிக்கப்படுகின்றன. பாரத தேசத்திற்கு யாகமே உயிர் ஸ்தானமாக இருக்கிறது. சராசர பிராணிகளுடைய ஸகல க்ஷேமங்களும் யாகத்தினாலேயே ஸித்திக்கின்றன. தேசமெங்கும் யாகானுஷ்டானம் கணக்கில்லாமல் நடந்துவந்தது. அத்தகைய தர்ம தேசத்தில் அன்ய தேசபாஷா, வேஷ, ஆசாராதிமோஹம் காரணமாக ஸ்வதர்மச்ரத்தை குறைந்து ஸகல தர்மங்களும் மறைந்துவருவதுபோல் யாகானுஷ்டானமும் மறைந்துவருகிறது. ஸகல க்ஷேமங்களுக்கும் ஹேதுவான யாகானுஷ்டானத்தைக் கைவிட்டதால் தான் தேசத்தில் வியாதி, துர்பிக்ஷம், அக்னிபயம், துர்மரணம், ஸங்காத மரணம் போன்ற பற்பல துன்பங்கள் என்றும்காணாத நிலையில் தோன்றிப் பிரஜைகளை வாட்டிவருகின்றன. இது அக்னி உபாஸனமாகிய உத்தம தர்மத்தை கைவிட்டதால் ஏற்பட்ட அனர்த்தமே என்பதில் ஸம்சயமில்லை.

இந்தக் கிரந்தத்தை ஊன்றிப்பார்த்த பிறகாவது ஆஸ்திக ஜனங்கள் யாக விஷயமான ஸந்தேஹங்கள் நீங்கப்பெற்று எங்கும் யாகானுஷ்டானத்தை அதிகரிக்க செய்யவேண்டுமென்பது நமது மனோரதமாகும். தாங்கள் அனுஷ்டிக்க ஸௌகரியமில்லாத ஆஸ்திகர்கள் அனுஷ்டிப்பவர்களுக்கு எல்லாவித உதவியும் செய்தாவது உலக க்ஷேமார்த்தமான யாகானுஷ்டானத்தை வ்ருத்தி

செய்யிலாம். இக்கொடிய கலிகால கோலாஹலத்திருல் இந்த நமது மனோரதம் நிறைவேறிஞலும், நிறைவேருவிட்டாலும் இக்கிரந்தமானது யாகத்தின் ஆவச்யகதையையும் அதன் மஹிமையையும் ஸம்ரக்ஷிக்கும் ஓர் விதைபோன்று விளங்கி என்றைக்கும் பிரயோஜனமுள்ளதாக இருக்குமென்று நம்புகிரேம்.

இக்கிரந்தத்தில் நாம் மூலமற்றதாகவோ, நிஷ்பிரமாணமாகவோ ஸ்வச்சந்தமாக எதையும் எழுதவில்லே. நாம் காட்டியுள்ள பிரமாணங்கள் ஒவ்வொன்றையும் மூலக்கிரந்தங்களுடன் ஒற்றுப்பார்த்தால் இது நன்கு விளங்கும். யாக விஷயமாக நமது சாஸ்திரங்களில் பல இடங்களில் அங்குமிங்குமாகச் சிதறிக்கிடக்கும் பிரமாணங்களே ஒரே இடத்தில் சேர்த்து வரிசைப்படுத்தி காட்டுவதுதான் இக்கிரந்தத்தின் முக்ய கார்யமேயன்றி, புதிதாக எதையும் நாம் கல்பித்து எழுதவில்லே. மேலும், சாஸ்த்ர நிர்ணயங்களே மட்டும் உள்ளபடி இதில் நாம் வெளியிடுகிரேமேயல்லது வேறு எவ்வித மனேபாவமும் நமக்கு இல்லே என்றும் தெரிவித்துக் கொள்ளுகிரேம்.

### யாக மஹிமையும் உலக க்ஷேமமும்

வைதிக மதத்தில் யாகம் ஒன்றுதான் உத்க்ருஷ்டமான தர்மமென்று வேதமே यज्ञोहि श्रेष्ठतमं कर्म என்பதால் சொல்லி அந்த யக்ஞத்திலேயே லோகக்ஷேமாதிகள் யாவற்றும் அடங்கியிருப்பனவாக यज्ञे सर्वं प्रतिष्ठितम् என்பதாலும் கூறுகிறது. ஸ்மிருதி புராணுதிகளிலும் யக்ஞ மஹிமை அநந்தமாக வர்ணிக்கப்படுகின்றது. வேதங்கள் அக்நிஹோத்ராதி யக்ஞங்களேயே முக்ய பலனுகக் கொண்டு தோன்றினவையென்று अग्निहोत्र फला: वेदा: என்பதால் ஸ்மிருதிகள் கூறுகின்றன. ஹாரீத ரிஷியும் தமது ஸ்மிருதியில்

नाग्निहोत्रात्परो धर्मः नाग्निहोत्रात्परं तपः ।
नाग्निहोत्रात्परा सिद्धिः नाग्निहोत्रात्परं व्रतम् ॥

என்பதால் அக்நிஹோத்ர மஹிமையைக் கூறுகையில் அதைவிட வேறு தர்மமோ, தபஸ்ஸோ ஸித்தியோ, வ்ரதமோ, சிரேயஸ்ஸோ ஒன்றும் கிடையாதென்று பிரதிக்ஞை செய்கிருர். ஆகையால்தான்

अग्निहोत्रसमो धर्मो न भूतो न भविष्यति ।

என்பதால் அக்நிஹோத்ர ஸமமான தர்மம் ஒன்றுமில்லேயென்றும் ஸ்மிருதிகள் கூறுகின்றன. ஸ்மிருதி சந்திரிகையில்

सुहुतानि अग्निहोत्राणि नयन्ति परमां गतिम् ।
अत्र स्वर्गश्च मोक्षश्च यो यथा गन्तुमिच्छति ॥

என்பதால் அக்னிஹோத்ரத்திலுல் பரமகதி ஏற்படுவதாயும் அந்த தர்மத்தில் அவனவன் அபேக்ஷிக்கிறபடி ஸ்வர்க்கமோ மோக்ஷமோ கிடைப்பதாகக் கூறப்பட்டது அக்னிஹோத்ர கர்மாவானது ஸகல தேவதாஸ்வரூபமான உத்தம பிரம்ஹ கர்மாவாக இருப்பதால்தான் உலகில் உள்ள சராசர வஸ்துக்கள் ஒவ்வொன்றும் அக்னிஹோத்ராதி யக்ஞங்களுக்காகவே பகவானுல் ஸ்ருஷ்டிக்கப்பட்டிருப்பனவாகப் பிரமாணங்கள் கூறுகின்றன. மஹாபாரத அனுசாஸனபர்வாவில்

यच्चैतस्यां पृथिव्यां हि किञ्चिदस्ति चराचरम् ।
तत्सर्वं अग्निहोत्रस्य कृते सृष्टं स्वयंभुवा ॥ என்றும்,
एवमेतत् जगत्सर्वं अग्निहोत्र कृते कृतम् ।

என்றும் அக்னிஹோத்ராதிகளுக்கு உதவிசெய்வதற்காகவே ஜகத் ஸ்ருஷ்டிக்கப்பட்டதென்று பகவானே கூறுகிருர். ஆச்வமேதிகபர்வாவில்

यजनार्थं द्विजाः सृष्टाः तारका दिवि देवताः ।
गावो यज्ञार्थमुत्पन्नाः दक्षिणार्थं तथैव च ॥
सुवर्णं रजतंचैव पात्री कुम्भार्थमेवच ।
इध्मार्थं अथ यूपार्थं ब्रह्मा चक्रे वनस्पतिम् ॥
ग्राम्यारण्याश्च पशवः जायन्ते यज्ञकारणात् । (111-அத்)

என்பதால் தேவர்கள், நக்ஷத்ரங்கள் த்விஜர்கள், பசுமாடுகள் தங்கம், வெள்ளி, விருக்ஷங்கள், அஜம் முதலிய பசுக்கள் எல்லாம் யக்ஞார்த்தமாகவே ஸிருஷ்டிக்கப்பட்டதாக கூறப்பட்டுள்ளது. மேற்கண்ட ச்லோகங்கள் பராசரமாதவீயத்தில் யக்ஞ மஹிமையைச் சொல்லுமிடத்தில் எழுதப்பட்டிருப்பதைக் காணலாம்.

மேலும் அக்னிஹோத்ராதி யக்ஞங்களாலேயே உலகம் தரித்து நிற்பதாயும் तेनैवध्रियते जगत् என்பதால் பகவானே சொல்லுகிருர். கீதையில் सहयज्ञाः प्रजाःसृष्ट्वा என்பதால் பிரஜைகளை ஸ்ருஷ்டிக்கும்பொழுதே அவர்களுடைய க்ஷேமஸாதனமாக யக்ஞங்களையும் சேர்த்தே பிரம்மா ஸ்ருஷ்டித்துக் கொடுத்து, அந்த யக்ஞங்களால் பிரஜைகள் ஸகல க்ஷேமங்களையும் அடையலாம்

என்றும் அந்த யக்ஞமானது பிரஜைகளின் ஸகல இஷ்டகாமங்களையும் கொடுக்கவல்லதென்றும்,

एषवोऽस्तु इष्ट कामधुक् என்பதால் பகவானே ஸ்பஷ்டமாகக் கூறியுள்ளார். மனுவும யज्ञोस्य भूत्यै सर्वस्य என்பதால் யக்ஞமானது எல்லா உலகத்திற்கும் க்ஷேமகரமென்று சொன்னார்.

देवास्तु तर्पिताः यज्ञैः लोकान् संवर्धयन्ति उत ।
उभयोर्लोकयोश्चैव भूतिः यज्ञैः प्रदृश्यते ॥

என்பாதல் ஆச்வமேதிகபர்வாவிலும் கீதையில் சொல்லியதுபோல் யக்ஞங்களால் திருப்திசெய்விக்கப்பட்ட தேவதைகள் உலகங்களை போஷிக்கிறதாகவும், யக்ஞங்களால் தேவ மனித இரண்டு உலகத்திற்கும் க்ஷேமம் காணப்படுகின்றதாகவும் பகவான் கூறியுள்ளார்.

யக்ஞங்களால் லோக க்ஷேமம் எப்படி ஏற்படுகிறதென்பதை சுருதி, ஸ்மிருதி, கீதாதிகள் விளக்கிச் சொல்லுகின்றன, யஜுர் வேதத்தில் आश्रावय, अस्तुश्रौषट्, यज, येयजामहे, वौषट् என்று 17 அக்ஷரங்களுள்ள ஐந்து மந்திரங்கள் பிரம்ஹஸ்வரூபமென்றும், மிகுந்த சக்திவாய்ந்தவைகள் என்றும், விவரிக்கப்படுவதுடன், மேற்சொன்ன மந்திரங்கள் மழையை உண்டுபண்ணும் சக்தி வாய்ந்தவைகள் என்றும் கூறப்படுகின்றது.

आश्रवयेति पुरोवातमजनयन् । अस्तु श्रौषडित्यभ्रंसमप्लावयन् । यजेति विद्युतमजयन् । येयजामह इति प्रावर्षयन् । अभ्यस्तनयन् वषट्कारेण என்ற வாக்யங்களால்-தேவதைகள் முதல் மந்திரத்தினால் கீழ்க்காற்றை உண்டுபண்ணினார்களென்றும், இரண்டாவது மந்திரத்தில் மேகங்களை ஒன்று சேர்த்து பரப்பினார்களென்றும், மூன்றாவது மந்திரத்தினால் மின்னலை உண்டாக்குகின்றனரென்றும், நான்காவது மந்திரத்தால் மழையை வர்ஷிக்கிறார்களென்றும், ஐந்தாவதான வஷட்காரத்தால் மழைஜலத்தை எங்கும் பரவச் செய்கின்றனரென்றும் சொல்லப்படுகிறது.

இதைக் கொண்டுதான் கீதையில் பகவானும்

अन्नात् भवन्ति भूतानि पर्जन्यात् अन्नसंभवः ।
यज्ञात् भवति पर्जन्यः ॥

என்பதால் யக்ஞானுஷ்டானத்தினால் மழையும், மழையால் அன்ன

ஸம்ருத்தியும், அன்னத்தினுல் பிராணிகளும் உண்டாவதாகக் கூறினார்.

अग्नौ प्रास्ताहुतिः सम्यक् आदित्यं उपतिष्टते ।
आदित्यात् जायते वृष्टिः वृष्टेरन्नं ततः प्रजाः ॥

என்பதால் மனுவும், சாஸ்திர விதிப்படி யக்ஞங்களில் செய்யப்பட்ட ஹோமமானது, ஸூர்யனிடம் போகிறதென்றும், அதனுல் ஸூர்யனிடமிருந்து மழையும், மழையிலிருந்து அன்னமும், அன்னத்திலிருந்து பிரஜைகளும் ஏற்படுவதாகச் சொன்னுர்.

வேதமானது வேறு பல இடங்களிலும் இந்த அம்சத்தைக் கூறுகிறது.

सौम्या खलु वा आहुतिः दिवो वृष्टिं च्यावयति ।

என்ற வேதவாக்யமான்து, நன்ருக அக்னியில் செய்யப்பட்ட ஹோமமானது ஆகாசத்திலிருந்து மழையைப் பொழியும்படி செய்கிறது. दिवो वृष्टिमेरय என்ற மற்ருெரு மந்திரமும் ஆகாசத்திலிருந்து மழையைப் பொழியும்படி பிரார்த்திக்கிறது.

कृषि वृष्टि र्यजमानाय कल्पतां என்கிற சுருதி வாக்யமானது யாகத்தினுல் யஜமானனுக்கு மழையும், கிருஷியும் விருத்தியாக வேண்டுமென்று சொல்லுகிறது. இம்மாதிரி நூற்றுக்கணக்கான வேதவாக்யங்கள் இருக்கின்றன.

மஹாகவி காளிதாஸரும் ரகுவம்சத்தில்

हविरावर्जितं होतः त्वया विधिवत् अग्निषु ।
वृष्टिः भवति सस्यानां अवग्रहविशोषिणाम् ॥

என்பதால் திலீபன் வஸிஷ்டரை ஸ்துதிக்கையில்;—வஸிஷ்டர் சாஸ்திர விதிப்படி அக்னிகளில் யக்ஞம் செய்வதால்தான் நல்ல மழை பெய்கிறதாகவும், ஜலமின்றி உலர்ந்து வீணுகப்போகும் நிலைமையிலுள்ள பயிர்களுக்கு அந்த மழை உயிர் கொடுப்பதாகவும் கூறினுர். இதிலிருந்து யக்ஞத்தால் மழை பெய்யுமென்கிற வைதிகமதக் கொள்கை நம் ஜனங்களிடம் எவ்வளவு நம்பிக்கையுடனும், அனுபவத்துடனும் பரவி இருந்ததென்பது விளங்கும். மழை அன்னம் முதலியவைகளைவிட பிரஜைகளுக்கு முக்ய க்ஷேமம் வேறு என்ன இருக்கிறது? ஆதலால்தான்

कल्पते ह वै तत्र प्रजाभ्यो योगक्षेमः, यत्रैतेन यज्ञेन यजन्ते ।

என்கிற வேதவாக்யமானது "எங்கு இந்த யாகம் செய்கிருர்களோ அங்கு பிரஜைகளின் யோகக்ஷேமமானது ஸித்திக்கிரது" என்பதால் எல்லா யோகக்ஷேமங்களும் யக்ஞத்தால் ஏற்படுவதாகச் சொல்லுகிறது. யோகம் என்பது இல்லாத வஸ்து கிடைப்பதாகும். க்ஷேமம் என்பது கிடைத்த வஸ்து ஜாக்ரதையாக உபயோகப்படுவதாகும். ஆகவே யோக க்ஷேமம் என்பதில் எல்லாம் அடங்கிவிட்டது. மேலும் யக்ஞங்களால் நான்கு கால் பிராணிகளாகிய பசு, அஜம, அச்வம் முதலிய குடும்ப ரக்ஷணார்த்தம் ஏற்பட்ட பிராணிகளுக்கும் க்ஷேமம் ஏற்படுவதாக

शन्नो अस्तु द्विपदे शञ्चतुष्पदे ।

இத்யாதி வாக்யங்கள் வேதமெங்கும் இருப்பதை காணலாம். மாடு முதலிய பிராணிகளுக்கு, புல், ஜலம் முதலிய ஆஹாரங்கள் அதிகரிக்கவேணுமென்றும் அநேக மந்திரங்களில் பிரார்த்திக்கப்படுகிறது. மழை முதலிய க்ஷேமங்களுக்கும். யக்ஞங்களுக்கும், நெருங்கிய ஸம்பந்தமிருப்பதாக சுருதிகளும், கீதையில் பகவானும் மனு முதலியவர்களும் கூறுவது வெறும் ஸ்துதி அல்லது அர்த்தவாதமென்று நினைக்கக்கூடாது. பகவானே அம்மாதிரி கூறுவதால் அது உண்மையானதென்றே ஆஸ்திகர்கள் நினைக்கவேண்டும்.

மேல் உலகம் ஒன்று இருக்கிறதென்பதை எல்லாமதங்களும் அங்கீகரிக்கின்றன இவ்விரு லோகங்களுக்கும் ஸம்பந்தமிருக்கிறதென்பதையும் மதங்கள் ஒப்புக்கொள்ளுகின்றன. இப்பூவுலகில் நாம் செய்யும் பாப, புண்ய கர்மங்களுக்கேற்றபடி மேல் உலகத்திலுள்ள தெய்வங்கள் பலனைக் கொடுக்கின்றன. அந்த தெய்வங்கள் மந்திரங்களுக்குக் கட்டுப்பட்டவை. நமது மதமானது

मन्त्राधीनन्तु दैवतम् என்பதால் இதைச் சொல்லுகிறது. பிரார்த்தனை ரூபங்களான மந்திரங்களால் தெய்வங்களைத் திருப்திசெய்து அவரவர் தங்கள் இஷ்டகாமங்களைப் பெறலாம் என்பது எல்லா மதங்களும் ஒப்புக்கொண்ட விஷயம். கிருஸ்துவர், மஹமதியர்போன்ற பற்பல மதஸ்தர்களும் ஸுக, துக்க காலங்களில் தெய்வங்களை மந்திரங்களால் பிரார்த்தனை செய்கிருர்கள். ஆகையால் மந்திரத்தால் தெய்வப் பிரீதி ஏற்பட்டு இஷ்டஸித்தி கிடைப்பதாய் இருக்குகையில் யாகங்களால் மழை பெய்வதும் ஸாத்யமானதே, பகவானே இதைச் சொல்லுவதால் ஸந்தேஹிக்க இடமில்லை, ஆஸ்திக மதங்கள் இதை அங்கீகரிக்கவேண்டும்.

தற்கால ஸயன்ஸ் நிபுணர்கள் மேல் உலகத்திற்கும் பூவுலகத்திற்கும் மிக்கபலம் வாய்ந்த அகண்டமானதொரு தேஜஸ் சக்தி மூலம் ஸம்பந்தமிருந்து கொண்டே இருப்பதாகக் கூறுகிறார்கள். ஸூர்ய சந்திர கிரஹணங்கள், கிரஹங்களின் சாரங்கள், நக்ஷத்திரங்களின் நடமாட்டங்கள், மேகம் மின்னல் இடி மழை ஆகிய மேலுலகக்காரியங்கள் யாவும் கீழ் உலகத்திற்கு வந்து அந்த சக்தி மூலம் பரவுகின்றன. அதுபோல் பூமியிலிருந்தும் பற்பல சக்திகள் எழுந்து மேலுலகத்திற்குப் போகின்றன. ஸூக்ஷ்மமான தேஜஸ் சக்திமூலம் இவைகள் எல்லாம் நடப்பதாக அந்த விக்ஞான சாஸ்திரிகள் கூறுவதில் உண்மை இருக்கிறது. நமது வேதத்தில்

भूमिं पर्जन्या जिन्वन्ति । दिवं जिन्वन्ति अग्नय इति ।

என்ற வாக்யமானது ஸயன்ஸ்ரீதியில் மிக்க அர்த்தபுஷ்டி உள்ளதாக காணப்படுகிறது. "பூமியை மேகங்கள் (மழை) போஷிக்கின்றன. அதுபோல் ஆகாசத்தை (அதாவது மேல் உலகத்தை) அக்னிகள் போஷிக்கின்றன" என்று இந்த வேதம் சொல்லுகிறது. ஆகையால் மேகம் அல்லது மழையானது மேல் உலகிலிருந்து பூமிக்குவந்து பூமியைப் போஷிப்பதுபோல் அக்நியானது கீழ் உலகிலிருந்து தன்து தேஜஸ் சக்தி மூலம் மேல் உலகிற்குச் சென்று அதைப்போஷிக்கிறதென்று இந்த சுருதியானது ஸயன்ஸ்ரீதியான ஓர் தத்வத்தை வெளிப்படுத்துவதாக நினைக்கவேண்டியிருக்கிறது. மழை எப்பொழுதும் கீழ் நோக்கியே பொழியும் இயற்கையுள்ளது, அதுபோல் அக்னியானது எப்பொழுதும் மேல் நோக்கியே போகும் இயற்கை உள்ளது, ஆகவே பூலோகத்தில் அக்னியை ஏராளமாக வளர்த்து நெய், ஸோமரஸம் முதலிய உயர்ந்த வஸ்துக்களால் ஹோமம் செய்தால் அதனால் அந்த அக்னியின் சாந்தமான தேஜஸ்ஸானது ஸூர்ய கிரணங்களில் கலந்து உயரச் சென்று ஆகாசம், மேகம் ஸூர்யன், சந்திரன் போன்ற தேஜஸ் சக்திகளுக்கு வலிமையைக் கொடுப்பதாகச் சொல்லலாம்,

ஸோமலதை என்கிற ஒஷதியானது உயர்ந்த சக்திவாய்ந்த மூலிகை என்றும், அதற்கு அமிருதம் என்ற பெயர் உள்ளதென்றும், ஸோம ரஸத்தினால் ஹோமம் செய்தால் அந்தப் புகையானது மழை பொழியும் சக்தியை ஒன்று சேர்த்து மழையைப் பொழியச் செய்வதாகவும், வைத்ய சாஸ்திர நிபுணர்கள் பிரசாரம் இப்பொழுதும் செய்துவருகிறார்கள். ஸித்த நூல்களும், ஆயுர்வேத கிரந்தங்களும், ஸோமலதையை வெகுவாகப் புகழ்கின்றன. ஸோமரஸம் ஹோமம் செய்யப்பட்ட சாம்பலை சரீரத்தின் மேல் பூசிக்கொள்ளுவதாலும் ஜலத்தில் கலந்து சாப்பிடுவதாலும் தீராத பல ரோகங்களும் தீருவதாக ஓர் ஸித்தவைத்ய நிபுணர் பிரசாரம்

செய்கிறார், ஸோமரஸ ஹோமமானது மழையைப் பொழியச் செய்யும் சக்திவாய்ந்ததென்பது

सौम्या खलु वा आहुति र्दिवोवृष्टिं च्यावयते

என்கிற நமது வேதவாக்யத்தாலும் உறுதிப்படுகிறது. ஸோமரஸ ஹோமமானது ஆகாசத்திலிருந்து மழையைப் பொழியச் செய்கிறது என்று கூறும் ஸித்த வைத்யருடைய ஆராய்ச்சிக்கு இந்த வேதவாக்யம் ஆதாரமாய் இருப்பதைக் காண்க.

நிற்க ஸூர்யனுடைய தேஜஸ் சக்தியானது வலிமை பொருந்தியதாக இருப்பதற்கு இவ்வுலகில் அக்னிஹோத்ராதி யக்ஞங்கள் முக்ய ஸாதனங்கள் என்றும் பகவான் மஹாபாரதத்தில்

यावत् कालंहि तिष्ठन्ति लोकेचापि अग्निहोत्रिणः ।
तावदेव हि पुण्येन दीप्यते रविरम्बरे ॥

என்பதால் கூறுகிறார். எதுவரையில் அக்னிஹோத்ராதிகள் நடக்கின்றனவோ அதுவரையில்தான் ஆகாசத்தில் ஸூர்யன் பிரகாசிப்பான் என்று பகவான் சொல்லுவதால் அக்னிஹோத்ராதிகள் குறைந்தால் ஸூர்யதேஜஸ் குறைந்து மழை பொழியாது. ஸூர்ய தேஜஸ்ஸானது எவ்வளவுக்கெவ்வளவு தாபம் அதிகரித்து பிரகாசிக்கிறதோ அவ்வளவுக்கு மழைபெய்யுமென்று

याभिरादित्यस्तपति रश्मिभिः ताभिः पर्जन्यो वर्षति

என்ற சுருதி கூறுகிறது. இந்த ரீதியில் ஆழ்ந்து விமர்சித்துப் பார்த்தால் यज्ञात्भवति पर्जन्यः என்பதால் மழைக்கு யக்ஞம் ஸாதனமென்று கீதையில் பகவான், மனு முதலியவர்கள் கூறியது தத்வ முறையில் ஸத்யமானதே ஆகும். ஸயன்ஸ்ரீதியான இந்த நிருபணம் எப்படியாயினும் ஆஸ்திகமதமாகிய நமது மதத்தில் ஸகலமும் ஈச்வரானுக்ரஹத்தால், அவன் ஆக்ஞைபடி நடக்கிறதென்கிற தத்வப்படி யக்ஞாதிகளால் ஆராதிக்கப்பட்ட அந்தபகவானே மழை முதலிய க்ஷேமங்களைக் கொடுத்து உலகத்தை ஸம்ரக்ஷிக்கிறான் என்பது நிர்விவாதமானது.

### யக்ஞம் பகவத் ஸ்வரூபம்,

யக்ஞமானது ஸாக்ஷாத் பகவத் ஸ்வரூபம் என்பது வைதிக மதக் கொள்கை, பகவானுக்கு ஏற்பட்ட அநேக மூர்த்திகளில் யக்ஞம் என்ற மூர்த்தியும் ஒன்றாகும். ஆகையால் பகவானே

யக்ஞும், யக்ஞுமே பகவான், இரண்டும் வேறன்று. இந்த அர்த்தத்தை यज्ञ इज्यो महेज्यश्च என்ற ஸஹஸ்ரநாமச்லோகத்தில் உள்ள யக்ஞ என்ற பதத்திற்கு ஸ்ரீசங்கர பகவத்பாதாசார்யாள் அர்த்தம் செய்கையில் பகவான் ஸகல யக்ஞஸ்வரூபியாய் இருப்பதால் அவனே யக்ஞம் என்ற பெயருள்ளவன் என்று கூறி அதற்கு பிரமாணமாக यज्ञो वै विष्णुः என்ற சுருதியையும் காட்டியுள்ளார்.

கீதையிலும் अहं क्रतुरहं यज्ञः என்பதால் பகவான், தாமே யக்ஞம், க்ரது என்ற யாகஸ்வரூபங்கள் என்று சொல்லி யாகங்கள் பகவானுடைய மூர்த்தி என்பதை உறுதிப்படுத்தினர்.

யக்ஞமூர்த்தியாக அவதாரம் செய்த வராஹ பகவானின் கரசரணாதி ஒவ்வொரு அவயவங்களும் யாகங்களில் உபயோகிக்கப் படும் ஸ்ருக், ஸ்ருவம்,யாகவேதி,தர்ப்பம், ஸமித், ஹவிஸ் முதலிய ரூபங்களாக ஸ்ரீவிஷ்ணுபுராணம், ஸ்ரீபாகவதம், ஹரிவம்சம் முதலியவைகளில் கூறப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். यज्ञाङ्गः என்ற ஸஹஸ்ரநாமபதத்திற்கு ஸ்ரீ சங்கர பகவத்பாதாசாரியாள் அர்த்தம் செய்கையில் மேல்கண்ட ஹரிவம்சாதி ச்லோகங்களை அங்கு உதாஹரித்திருப்பதைக் காணவும். இம்மாதிரியாக யக்ஞங்கள் பகவத் ஸ்வரூபமென்பது கணக்கற்றவிடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. अग्नौतिष्ठति विप्राणां என்ற வசனமும் பகவான் அக்னியில் ஸாந்நித்யமடைந்து நிற்பதை ஸ்திரப்படுத்துகிறது.

### யக்ஞதர்சனம் அவச்யம்.

இவ்வாறு யாகமானது பகவத்ஸ்வரூபமாய் இருப்பதால்தான், யார் எங்கு யக்ஞ பகவானை ஆராதித்தாலும், அதாவது அக்னிஹோத்ர யாகாதிகள் செய்தாலும், ஆஸ்திகர்கள் அங்கு சென்று யக்ஞ பகவானை ஸேவித்து பிரதக்ஷிண, நமஸ்காராதிகள் செய்ய வேண்டுமென்று சாஸ்திரம் விதிக்கிறது. अनाहूतोऽध्वरं गच्छेत् என்கிற ஸ்மிருதி விதியானது இதைத்தான் சொல்லுகிறது. யாகங்கள் எங்கு நடந்தாலும் ஆஹ்வானமில்லாமலே ஆஸ்திகன் அங்கு போகவேண்டுமென்பதை ஓர் தர்ம்மாக இது விதிக்கிறது. வேதமே இதைச் சொல்லுகிறது, தைத்திரீய பிராம்மணத்தில், ஸோமயாகம் நடக்குமிடத்திற்கு ஆஸ்திகன் போகவேண்டியதை ஓர் புருஷதர்மமாக விதிக்கப்பட்டிருக்கிறது.

सोमो वै यशः, यएवं विद्वान् सोममागच्छति, यश एवैन मृच्छति, तस्मादाहुः यश्चैवं वेद यश्च न, तावुभौ सोममागच्छतः ।

ஸோமயாகமானது யசஸ் என்கிற பார லௌகிக சிரேயஸ்ஸுக்கு ஸாதனமாய் இருப்பதால் அதை அறிந்தவனோ அறியாதவனோ இருவரும் ஸோமயாகத்திற்கு வரவேண்டுமென்று சுருதி கூறுகிறது. இங்கு வேத பாஷ்யகாரராகிய ஸ்ரீ ஸாயணாசாரியார்

पुरुषार्थं सोमयाग समीपगमनं विधत्ते

என்ற அவதாரிகையில், ஸோமயாகம் நடக்குமிடத்திற்குப் போக வேண்டியதைப் புருஷ தர்மமாகக் கூறியிருப்பது முக்யமானது. தைத்திரீய ஸம்ஹிதையில்

तस्मादेवं विदुषा बहिष्पवमान उपसद्यः पवित्रम वै बहिष्पवमानः आत्मानमेव पवयति ।

என்பதால் "யாகத்திலுள்ள பஹிஷ்பவமானம் என்கிற ஸ்தோத்ர பிரயோகமானது மனிதர்களுக்கு மிகவும் பரிசுத்திகரமான ஓர் கர்மாவாகையால் இதை அறிந்து ஒவ்வொருவரும் அதற்குப் போகவேண்டும், அப்படிப்போவதால் அவர்கள் தன்னையே பரிசுத்தமாக்கிக் கொள்ளுகிறார்கள்" என்று சுருதியானது ஸோமயாக பிரயோகத்திற்குப் போகவேண்டியதைத் தர்மமாக விதிக்கிறது. இதிலிருந்து யாகம் செய்கிறவன் ஒருவனாய் இருந்தாலும் யாகம் பகவத் ஸ்வரூபமாயும் உலக க்ஷேமகரமாயும் பகவானுடைய ஆராதன ரூபமாயும் இருப்பதால் தேவாலயத்திற்கும் தேவ உத்ஸவங்களுக்கும் ஆஹ்வானமில்லாமலேயே போகவேண்டியது புருஷ தர்மமாய் இருப்பதுபோல் யாகவிஷயத்திலும் இருக்க வேண்டியது அவச்யமாகிறது.

### பிராசீன கால நிலமை.

உலக க்ஷேமார்த்தமான இந்த யாகங்கள் பிராசீன காலங்களில் நமது பாரத தேசமெங்கும் அபரிமிதமாக அனுஷ்டிக்கப்பட்டுவந்தனவென்பது ஸ்ரீ ரமேசசந்திர தத்தர் போன்ற சரித்திரக்கரர்களால் கூட விளக்கப்பட்டிருக்கிறது. ஜாமெட்ரி முதலிய கணிதங்களும் யாக வேதிக்காக ஏற்பட்ட சுல்ப ஸூத்ரங்களிலிருந்தே கண்டுபிடிக்கப்பட்டனவென்று ஸ்ரீ ரமேசசந்திர தத்தர் கூறுகிறார். நமது ராமாயண, பாரத, பாகவதாதி புராணங்களில் கணக்கற்ற இடங்களில் யாகப்பிரஸ்தாவம் ஏராளமாகக் காணப்படுவதிலிருந்து நம்தேசத்தில் அது ரொம்பவும் பிர

சாரத்தில் இருந்ததென்பது விளங்கும். வால்மீகி, வியாஸர் முதலியவர்கள், ரிஷிகளைப்பற்றிப்பேசினால் அவர்கள் அக்நிஹோத்ராதிகள் செய்வதை வர்ணிக்காமல் விடுவதில்லை. க்ஷத்திரிய அரசர்களைப்பற்றிப் பேசினால் ராஜஸூய, அச்வமேதாதிகளான யக்ஞானுஷ்டானத்தினால் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள சிறப்பைச் சொல்லாமல் விடுவதில்லை.

சாந்தோக்யத்தில் வைச்வாநரவித்யையின் ஆரம்பத்தில் அச்வபதி என்ற அரசன் தமது ராஜ்யத்தில் அக்நிஹோத்ரியாயில்லாதவர் ஒருவர் கூடக்கிடையாதென்று न अनाहिताग्निः ना विद्वान् என்று சொல்லுவதும் முன் காலத்தில் அக்நிஹோத்ராதிகள் ஸஹஜமாக எவ்வளவு அதிகமாயிருந்தனவென்பதை விளக்கும்.

குறிப்பாக ஸ்ரீ ராமாயணத்தைப் பார்த்தால் பல இடங்களிலும் யக்ஞ பிரஸ்தாபம் இருப்பதைக் காணலாம். அயோத்தியையை வர்ணிக்குமிடத்தில் नानाहिताग्निः नायज्वा என்பதால் அந்த நகரத்தில் அக்னிஹோத்ரம் செய்யாதவனோ யாகம் செய்யாதவனோ ஒருவனுமில்லை என்று கூறப்படுகின்றது. தசரதனுடைய அச்வமேதத்தை வால்மீகி வெகுவிரிவாக வர்ணிக்கையில் அக்காலத்தில் யாகங்களைப்பற்றி ஜனங்களின் மனோபாவம் எப்படி இருந்ததென்பதைக் காட்டுகிறார். அச்வமேத யாகத்தில் முன்னூறு பசுக்கள் (பிராணிகள்) உபயோகிக்கப்பட்டனவென்றும் இதில் முக்யமான அச்வ பசுவை (குதிரையை) கௌஸல்யை வேதவிதிப்படி மூன்று கத்திகளால் கீறியதாகவும் கூறப்படுகின்றது. பிறகு ரித்விக்கு அந்த அச்வத்தின் வபையை எடுத்து அக்னியில் பக்வம் செய்ததாகவும் அப்போது வபையிலிருந்து கிளம்பிய பரிசுத்தமான புகையின் வாஸனையைத் தசரதர் முகர்ந்து தனது பாபங்களைப் போக்கிக்கொண்டார் என்றும் வர்ணிக்கப்படுகிறது—

पतत्रिणः तस्य वपां उद्धृत्य नियतेन्द्रियः ।
ऋत्विक् परम सम्पन्नः श्रपयामास शास्त्रतः ॥
धूमगन्धं वपयास्तु जिघ्रतिस्म नराधिपः ।
यथाकालं यथान्यायं निर्णुदन् पापमात्मनः ॥

என்று. வபையின் பக்வகால வாஸனையை நுகர்ந்ததால் தசரதன் தனது பாபத்தையே போக்கிக்கொண்டான் என்பதிலிருந்து யாகத்தைப்பற்றியும் யாகபசு விஷயத்தைப்பற்றியும் பாரததேச ஜனங்களுக்கு எவ்வளவு பக்தியும் சிரத்தையும் இருந்ததென்பது விளங்கும். இதுபோல் பாரத பாகவதாதிகளிலிருந்தும் நமது

தேசத்தில் யாகப்பிரசாரம் எவ்வளவு இருந்ததென்பதை அறியலாம்.

ஸ்ரீ பாகவதத்தில் ஸ்ரீ துருவஸ்வாமீ வெகு பால்யத்திலேயே தபஸ்ஸினல் பகவானை ஸாக்ஷாத்கரித்தபோதிலும், பகவான் அவருக்கு உபதேசம் செய்கையில் துருவனை, மறுபடி வீடு திரும்பி கிருஹஸ்த தர்மத்தை அனுஷ்டித்து ஏராளமான தக்ஷிணைகளுடன் அநேக யக்ஞங்களை அனுஷ்டித்துவிட்டுப் பிறகு தன்னிடம் வரும்படி பகவான் உபதேசிக்கிறார்.

इष्ट्वा मां यज्ञहृदयं यज्ञैः पुष्कल दक्षिणैः ।
ततो गन्तासि मत्स्थानं सर्वलोक नमस्कृतम् ॥

வால்மீகி, வியாஸாதிகளுக்குப் பிற்பட்ட ஸகல கவிகளும் தங்களது காவ்ய நாடகாதிகளில் பல இடங்களில் யக்ஞாதிகளைப் பற்றி ஸஹஜமாக பிரஸ்தாபம் செய்வதிலிருந்தும் நம் தேசத்தில் யாக கர்மாவானது வெகு அதிகமாய் இருந்து ஜனங்களின் நித்ய வாழ்க்கையிலேயே பழக்கத்திற்கு வந்திருந்தது புலப்படும். நமது பாரத தேச நிலைமையை வர்ணித்து எழுதிய விச்வகுணாதர்சகாரரும் சோள தேசத்தை வர்ணிக்கையில் गृहे गृहे पश्य कृताग्निहोत्राः என்பதால் ஒவ்வொரு கிருஹங்களிலும் அக்னிஹோத்ரம் நடப்பதாய் குறிப்பிட்டுள்ளார். ஆழ்வார்களும் நாயன்மார்களும் தங்கள் பாசுரங்களில் பலவிடங்களில் வேள்விகளைப்பற்றிப் பிரஸ்தாபித்து பல க்ஷேத்திரங்களில் வேள்விகள் நடப்பதை வர்ணிப்பதும் முன்கால நிலைமையை உணர்த்தும்.

### தற்கால நிலைமை

இவ்வாறு பிராசீன காலங்களில் யாகப்பிரசாரம் அதிகமிருந்ததால் ஜனங்களுக்கும் யாகமஹிமை தெரிந்திருந்தது. இப்போது யாகமஹிமை மறைந்துபோனதுடன் அதைப்பற்றி விபரீத எண்ணங்களும் தோன்ற ஆரம்பித்துவிட்டன. எந்த உத்தம வைதிக தர்மமான யாகமானது பிராம்மணனுக்கும் தேசத்திற்கும் அவசியமோ எது பரமபவித்ரமென்று வேதமே உத்கோஷிக்கிறதோ, எது ஸாக்ஷாத் பகவத் ஸ்வரூபமோ, எந்த யாகத்தால் உலகில் சராசர பிராணிஸமூஹத்திற்கும் க்ஷேமமோ, அத்தகைய யாகமே இக்காலத்தில் அனுவச்யகமென்றும் தேசத்திற்கு கெடுதிசெய்யுமென்றும் தலைகீழாகமாற்றிப் பேசப்படுகிறது !!!

யாகங்கள், நித்யகர்மாவல்ல, அவை அவச்யாநுஷ்டேயங்களல்ல, யாகமானது ஸ்வர்க்க பலனுக்காகச் செய்யப்படுகிற கேவல காம்யகர்மாவே யல்லது அவச்ய விஹிதமல்ல, பணமுள்ளவன்தான் யாகம் செய்யலாம், கலியில் செய்யக்கூடாது, பசு ஹிம்ஸை தோஷமாகும், மந்திரசக்தி இல்லை, மந்திரார்த்தக்ஞானமில்லை, இத்யாதிகளான பற்பல ஆக்ஷேபங்களை பாமரர்களும் அரைகுறைப் பண்டிதர்களும் வெளியிட்டு யாக ஸத்தர்ம விஷயமாக க்ஷோபத்தை உண்டுபண்ணிவருகிறார்கள். ஆதலால் சாஸ்திர உண்மையை யாவரும் எளிதில் அறியவேண்டி இக்கிரந்தம் இயற்றப்பட்டு மேற்கண்ட ஆக்ஷேபங்கள் ஒவ்வொன்றுக்கும் மறுக்கமுடியாத பிரமாணங்களைக்காட்டி இதில் பதில் கூறப்பட்டிருப்பதை ஆஸ்திக சிரேஷ்டர்கள் கவனிக்கவேண்டியதவசியம். எல்லா ஆக்ஷேபங்களுக்கும் இக்கிரந்தத்தில் ஸமாதானம் கூறப்பட்டுவிட்டபடியால் வேறு இரண்டொரு விஷயங்களுக்குமட்டில் இங்கு ஸமாதானம் கூறுகிறோம்.

## மந்திரசக்தி இல்லையா?

கலியுகத்தில் நியமாத்யயனம் இல்லாததால் மந்திரங்களின் சக்தியானது குறைந்துவிட்டதால் கர்மானுஷ்டானங்களுக்குப் பலனுண்டா என்று சிலர் ஸந்தேஹிப்பது உசிதமன்று. இந்த ஆக்ஷேபம் ஸரியானால் சிரௌத ஸ்மார்த்தாதிகளான ஸகல வைதிககர்மங்களையும் விட்டுவிட நேரும். ஸரியான மந்திரங்கள் இல்லையென்றால் விவாஹ, உபநயன சிராத்தாதிகளான ஸகல கர்மங்களும் நிஷ்பலங்களே. பிராம்மண்யமும் பிரும்மசாரி, கிரஹஸ்த, ஸந்யாஸிகளான ஆச்ரமிகளும் இக்காலத்தில் இருக்க இடமில்லாமல் போகும், ஏனென்றால் மந்திர ஸம்ஸ்காரங்களால்தான் ஒருவன் பிரும்மசாரியாக ஆகிறான். பிறகு பிரம்மசர்யம் மாறி கிரஹஸ்தனாவதும் மந்திர சக்தியால்தான், கிரஹஸ்தனாக இருக்கும் ஒருவன் கிரஹஸ்ததர்மங்களைக் கைவிட்டு சிகா, யக்ஞோபவீதாதிகளைத் தியாகம் செய்து கச்சத்தைக் கழட்டிக் காஷாயம் உடுத்தி மாதா–பித்ரு கிருத்யங்களையும் சிராத்தங்களையும், தாயாதிகளையும் தீட்டுக்களையும், கைவிட்டு ஸன்யாஸியாக விளங்குவதும் மந்திரபலத்தால் அன்றி எப்படி ஸித்திக்கும்? ஆதலால் இக்காலத்திலும் மந்திரசக்தி இருப்பதை ஒப்புக்கொண்டு காம்தர்மங்களையும் அனுஷ்டித்துவருவதால் மந்திர சக்தியில்லை என்ற துர்வாதமானது ஆத்மஹத்திபோன்றதாகும்.

கலியில் மற்ற யுகங்களைப்போல் நியமாத்யயனம் அசக்யமென்பதை ரிஷிகளே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள், ஆபஸ்தம்பர்

तस्मात् ऋषयः अवरेषु नजायन्ते, नियमातिक्रमात् । (ஆப-தர்ம)
என்று சொல்லுகிருர். அதாவது கலியுகத்தில் வேதாத்யயன நியமம் இருக்காதாகையால் மந்திர தர்சிகளான ரிஷிகள் கலியில் உண்டாகமாட்டார்கள் என்று கூறி நியமாத்யயனம் கலியில் அசக்யம் என்பதை ஒப்புக்கொள்ளுகிருர். அப்படி இருந்தும் ஸ்ரௌத ஸ்மார்த்த கர்மாக்களை அவர் விட்டுவிடச் சொல்லவில்லை. அனுஷ்டிக்கும்படியே விதிக்கிருர்.

இந்த ஸூத்ர வியாக்யானத்தில் ஹரதத்தரும், नियमातिक्रमस्य इदानीम् अवर्जनीयत्वात् என்பதால் கலியில் நியமாத்யயனம் அஸாத்யமென்று கூறுகிருர்.

மேலும் வேதாத்யயனத்தில் விதிக்கப்பட்ட ஸாங்காத்யயனுதிகள் விகல்பிதங்கள் என்றும் காண்டோபாகரண விஷயங்கள் என்றும் நிபந்தனகாரர்கள் வ்யவஸ்தை செய்திருக்கிருர்கள். இக்காலத்திலும் உபாகரண, உத்ஸர்ஜன, அநத்யயனுதி நியமங்கள் ஆசரிக்கப்பட்டுத்தான் வருகின்றன, ஆகையால் மந்திரங்கள் ஸரியாயில்லை என்று வாதிப்பது தன்தலையிலேயே மண்ணைப்போட்டுக்கொள்ளுவதுபோல் ஆகும். அப்படிச் சொன்னுல் பிராம்மணுதி ஜாதிகளே நிலைத்திருக்க வழியில்லாமல் போகும். மேலும் மந்திரசக்தி இல்லை என்ருல் இத்தேசம் முழுவதும் இருந்துவரும் தேவாலயங்களின் கதி என்ன? லோஹமயமாயும் சிலாமயமாயும், தாருமயமாயும் உள்ள தேவாலய பிம்பங்களில் தெய்வஸாந்நித்யம் ஏற்படுவதெப்படி? மந்திரசக்தி ஒன்றினுல் மட்டுமல்லவா தெய்வசக்தி ஏற்படவேண்டும்? கடையில் விற்கும் தேவபிம்பத்திற்கும் ஆலயத்தில் இருக்கும் பிம்பத்திற்கும் வித்யாஸமென்ன? கடையிலுள்ள பிம்பங்களை நாம் பிரதக்ஷிண நமஸ்காராதிகள் ஏன் செய்வதில்லை? மந்திரசக்தியால் தெய்வ ஸாந்நித்யம் ஏற்பட்டபிறகல்லவோ அதைத் தெய்வமென்று மதிக்கிருேம்? பூஜகன் சொல்லும் மந்திரத்திஞலேயே தெய்வ ஸாந்நித்யம் ஏற்படுவதாக சாஸ்திரம் கூறுகிறது. கும்பாபிஷேகத்திற்காக வைக்கப்படும் கும்பங்களில் இருக்கும் ஜலமானது வெறும் ஜலம்தானே, அதில் தேவதா ஸாந்நித்யம் ஏற்படுவது மந்திரசக்தியினுல்தானே? ஆகையால் மந்திரசக்தி விஷயமாகச் சொல்லப்படும் துராக்ஷேபமானது சாஸ்திர விருத்தமாயும், சிஷ்டாசார விருத்தமாயும் இருப்பதால் அங்கீகரிக்கக் கூடியதல்ல.

கலியுகத்திற்கென்று ஸ்மிருதிசெய்த பராசரர் கலியுகத்தில் பிராம்மணர்களின் ஆசாரானுஷ்டானங்கள் யுகதர்மத்தை அனுஸரித்துக் குறைவுபட்டிருக்குமென்றும் சொல்லுகிறார். அப்படி இருந்தும் சிரௌதஸ்மார்த்தாதி ஸகல தர்மங்களையும் கலியிலும் அனுஷ்டிக்கும்படி அவர் விதிப்பதைக் கவனிக்கவேண்டும்.

युगे युगे च ये धर्माः तत्र तत्र च ये द्विजाः ।
तेषां निन्दा न कर्तव्या युगरूपा हि ते द्विजाः ॥

இதில் சிரௌதகர்மாக்களுக்கென்று தனியான நியாயம் கற்பிக்கவும் இடமில்லை. எல்லா ஸூத்ரகாரர்களும் ஸ்மிருதிகாரர்களும் கலியுகத்தில் கூட நித்யங்களான யக்ஞாக்னிஹோத்ராதிகளை விடக்கூடாதென்று விதி செய்துள்ளார்கள், ஜைமினி முதலிய பல ரிஷிகளும் நித்யங்களான சிரௌதகர்மாக்களை மந்திரதந்திராதி ஸகலாங்க பூர்த்தி இல்லாவிட்டாலும் யதாசக்தி அனுஷ்டிக்கலாமென்று மீமாம்ஸையின் ஆருவது அத்யாயத்தில் ஸித்தாந்தம் செய்திருப்பதால் கலியில்கூட நித்யங்களான சிரௌதகர்மாக்களை அனுஷ்டிக்கவும் அவைகள் ஸபலங்களாகவும் எவ்விதத்தடையுமில்லை என்று பிரமாண சரணர்கள் அறியக்கடவர்.

### அர்த்த ஞானம் ஆவச்யகமில்லை,

சிரௌதஸ்மார்த்த கர்மாக்களில் பிரயோகப்படும் மந்திரங்களின் அர்த்தத்தை அறிந்துகொண்டவனுக்கே அந்த கர்மாவில் அதிகாரம் உண்டென்றும் அர்த்தக்ஞானம் இன்றி கர்மாவை செய்யக்கூடாதென்றும் சிலர் சொல்லுவதை அறிந்துள்ளோம். இந்த ஆக்ஷேபமும் சிரௌத கர்மாக்களைமட்டும் பற்றியதாகாது, உபநயந, விவாஹ சிராத்தாதிகளான ஸகல கர்மாக்களையும் பற்றியதாகவே ஆகும். அர்த்தக்ஞானம் இருப்பது விசேஷம். ஆகையால் அர்த்தக்ஞானத்தை பிரசம்யை செய்ய சாஸ்த்திரம் முன்வந்ததே அல்லது அர்த்தக்ஞானம் இல்லாவிட்டால் கர்மார்ஹதை கிடையாதென்று விதிக்க வரவில்லை, இப்படி ஒப்புக்கொள்ளாவிட்டால் பெரிய ஷோபங்கள் ஏற்பட்டு ஸர்வகர்மலோப பிரஸங்கம் உண்டாகி பிராம்மண்யமே நிலைக்க வழியில்லாமல் போய்விடும் என்று பிராசீன நிபந்தனகாரர்கள் நிச்சயித்தார்கள்.

ஜைமினி மஹரிஷி அர்த்தக்ஞானம் அவசியமென்று கூறினார். நாம் அனுஷ்டிக்கும் பிரயோகம் இன்னதென்பதை மந்திரம் விளக்குவதால் மந்திரார்த்தக்ஞானமானது அவச்யமென்று ஜைமினி

காரணம் கூறினர். ஆனால் இதைக் கல்பஸூத்ரகாரர்களும் அநேக ஸ்மிருதி நிபந்தனகாரர்களும் ஒப்பவில்லை. கர்மாக்களில் கூறப்படும் மந்திரங்களுக்கு அதிருஷ்டமான பிரயோஜனம்தான் மூக்யமென்றும் அர்த்தக்ஞானம் அவச்யமில்லை என்றும், அனுபவத்தில் அது அசக்யமென்றும் இன்ன மந்திரத்தினால் இன்ன கர்மாவை செய்கிறோம் என்கிற பொதுவான க்ஞானம் இருந்தால் போதுமென்றும் பிரமாணநியாயங்களுடன் நிர்ணயித்தார்கள்.

முக்யமாக ஜைமினி கூறிய காரணமே நிலைக்காதென்றும் ஏற்படுகிறது. மந்திரங்கள் அனுஷ்டேயார்த்த பிரகாசகமென்று ஜைமினி சொல்லுவதே ஸித்திக்கவில்லை என்று அவர்கள் எடுத்துக்காட்டுகிறார்கள். அநேக கர்மாக்களில் அங்கமாக உச்சரிக்கப்படும் மந்திரங்களுக்கும் அந்த பிரயோகத்திற்கும் ஸம்பந்தமே காணப்படவில்லை. हावु, हस्, ईयो, ईया, ओ, हा போன்ற பல மந்திரங்களுக்கு அர்த்தமே இல்லை, அத்தகைய இடங்களில் மந்திரோச்சாரணத்திற்கு அதிருஷ்டம்தான் பிரயோஜனமென்பதை மீமாம்ஸர்களே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். மேலும் ஜப, அனுமந்த்ரண மந்திரங்களில் பிரயோகம் ஒன்றுமில்லாததால் அங்கும் மந்திரோச்சாரணத்திற்கு அதிருஷ்டம்தான் பிரயோஜனமென்று மீமாம்ஸர்களே சொல்லுகிறார்கள். ஆதலால் அர்த்தக்ஞானம் அத்ருஷ்டப் பிரயோஜனமென்றும் பல இடங்களில் திருஷ்டப்பிரயோஜனமில்லை என்றும் அவர்களே அங்கீகரிக்கிறார்கள்.

இவ்விஷயமாக பிராசீன பிரஸித்த நிபந்தன கிரந்தமாகிய திரிகாண்டியில் கூறியுள்ளதை இங்கே காட்டுவோம்.

यद्वाद्ध्ययन संसिद्ध विज्ञानरहितोऽपि सन ।
नास्तीहाधिक्रियाशून्यः भर्तृयज्ञादिदर्शनात् ॥

என்ற மூலத்திற்கு வியாக்யானம் செய்கையில்

तादृश वेदाद्ध्ययनवत्वमेव अधिकारि विशेषणं, न तु अर्थज्ञानवत्वमेव । तेन अर्थज्ञानाभावे कर्मणि अधिकारो नास्तीति वक्तुं न युक्तं इति भावः ।

என்பதால் அர்த்தக்ஞானம் இல்லாவிட்டாலும் கர்மாவில் அதிகாரம் உண்டு என்பதை ஸ்தாபித்தார். இதற்கு மேலும் அந்த திரிகாண்டீ வியாக்யானத்தில் அர்த்தக்ஞான கக்ஷியானது நிலைக்காதென்பதை அநேக உதாஹரண பூர்வகமாக காட்டப்பட்டிருக்கிறது.

"அத்வரமீமாம்ஸா குதூஹலவிருத்தி" என்ற மீமாம்ஸா வியாக்யான கிரந்தத்திலும் विधिशब्दाच्च என்ற ஸூத்ரத்தில் வெகு விஸ்தாரமாக சர்ச்சை செய்து அர்த்தக்ஞானம் அனுவச்யகமென்றும், அசக்யமென்றும் அது ஜைமினியின் அபிப்பிராயமல்லவென்றும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது மேற்படி இரு கிரந்தங்களிலும் சொல்லப்பட்டிருக்கும் பிரமாண நியாயங்களை இங்கு தொகுத்துக்கூறுவோம்.

"ஜைமினி மந்திரார்த்தக்ஞானம் வேண்டுமென்று சொன்னாராகிலும் அந்த அர்த்தக்ஞானம் யாருக்குவேண்டுமென்பதை அவர் தமது ஸூத்ரங்களில் விளக்கவில்லை. பொதுவாக உலகில், பேசுகிறவன் ஒருவனும் அதை கேழ்பவன் ஒருவனும் ஆக இரண்டு பேர் இருப்பது அவசியம். இதில், பேச்சானது பிறர் புரிந்துகொள்ளுவதற்காகவே ஏற்பட்டது. அதாவது பேச்சின் அர்த்தமானது பிறருக்கு, அதாவது கேழ்பவனுக்கு புரிய வேண்டியது முக்யமானது. எவரும் தனக்காகப் பேசிக்கொள்ளமாட்டார்கள். தான் புரிந்துகொள்ள, தாமே பேசிக்கொள்ளுவதென்பது இயற்கை விரோதம். ஆதலால் பேச்சின் அர்த்தக்ஞானம் பிறனுக்கு அதாவது கேழ்பவனுக்கு ஏற்பட வேண்டியதுதான் முக்யமாகும். ஆதலால் மந்திரங்களை நாம் உச்சரித்தாலும் தேவதை முதலியவர்களை உத்தேசித்தே நாம் உச்சரிப்பதால் அந்த மந்திரத்தின் மூலயாக நாம் என்ன கேழ்கிறோம் என்பது தேவர்களுக்கு தெரியவேண்டியதே அவசியம். ஆகையால் மந்திரார்த்தக்ஞானம் அக்னி இந்திராதி, தேவர்களுக்கே அவசியமல்லது மந்திரத்தை சொல்லுகிறவனுக்கு அவசியமில்லை. இது विष्णो हव्यं रक्षस्व । इषेत्वोर्जेत्वा முதலான இடங்களில் ஸுலபமாக அறியக்கூடியது. உலகில் நாம் ஒருவனை கத்ய, பத்யாதி ஸ்துதிகளால் ஸ்தோத்ரம் செய்கிறோம், அந்த ஸ்தோரத்திலுள்ள பிரார்த்தனைகளையும், ரஸங்களையும் அந்த மனிதன் அறிந்து திருப்தி அடைந்து ஸ்தோத்ரம் செய்தவனுக்கு உபகரிப்பதுபோல் வேதத்திலும் நினைக்கவேண்டும். भवति भिक्षां देहि என்ற வாக்கியத்திலுள்ள பதங்களையும், அந்தப் பதங்களின் அர்த்தங்களையும் லிங்கம், விபக்தி, முதலியவைகளையும் சிறிதும் அறியாத சிறுவன் ஒருவன் அந்த வாக்யத்தை சொன்னால் கூட பிக்ஷை கிடைத்துவிடுகிறது, பிக்ஷை கேட்பவனுக்கு அந்த அர்த்தக்ஞானம் இல்லாவிட்டாலும் பிக்ஷை போடுகிறவன் அர்த்தம் புரிந்துகொண்டு பிக்ஷைபோடுகிறான் அல்லவா? ஆதலால் மந்திரம் சொல்லுகிறவனுக்கு அந்த மந்திரார்த்தக்ஞானம் அவச்யமில்லை என்று ஏற்படுகிறது). இந்த மந்திரத்தால் இந்த கர்மாவை செய்யவேண்டுமென்று வேதமும் கல்ப ஸூத்திரமும் விதித்திருப்பதால் அந்த விதிப்படி செய்தாலேபோதும்.

மேலும் ஆபஸ்தம்ப, போதாயனுதி அநேக கல்ப ஸூத்ர காரர்கள் கர்மாக்களுக்கு பற்பல அங்கங்களை சொல்லி உள்ளார் கள். அம்மாதிரி அவச்யமான அங்கங்களில் மந்திரார்த்தக்ஞானம் என்பது ஓர் அங்கமாக அவர்களால் ஓர் இடத்திலும் விதிக்கப் படவில்லை. அந்த க்ஞானமானது முக்ய அங்கமாக இருந்தால் ஏன் கல்பஸூத்ரக்காரர்களில் ஒருவராவது அதைச் சொல்ல வில்லையோ? ஆதலால் கல்பஸூத்ரகாரர்களுக்கு அது இஷ்ட மில்லை என்றே விசிதமாகுகிறது.

இதுபோல் மந்திரங்களுக்கு ரிஷி, சந்தஸ், தேவதை முதலி யவை தெரியவேண்டுமென்பதும் பிரசம்ஸா பரமே அல்லது நியத மல்லவென்று கல்பஸூத்ரக்காரர்களின் அபிப்ராயமாகும்.

மேலும் மந்திரங்கள் அநுஷ்டேய பிரயோக ஸ்மாரகங்கள் என்கிற கக்ஷியும் அஸியதமென்று முன்பு நிரூபிக்கப்பட்டது. இத்துடன், பிரயோககாலங்களில் மந்திரார்த்தங்களை ஸ்மரித்துக் கொண்டே பிரயோகம் நடத்துவது அசக்யமென்றே கல்பஸூத்ர அபிப்ராயத்தால் ஏற்படுகிறது. ஹோதா சஸ்திரங்களையும், ஸாமி தேனீ முதலிய மந்திரங்களையும் ஸந்ததமாக அதாவது துடர்ந்து சொல்லிக்கொண்டே போகையில் மந்திரார்த்தங்களை ஸ்மரிப்பது அசக்யம், முன் ருக்கையும் பின் ருக்கையும் பிணைத்துச் சொல்லு வதே ஸந்ததமாகையால் அந்த ஸமயத்தில் ஸரியான அர்த்தஞானம் எற்படுவதற்கு அவகாசமே இல்லை. மேலும் சஸ்திர மந்திரங்களில் அனுஷ்டேயார்த்த ஸ்மாரகத்வம் சிறிதும் இல்லை. ஆகையால் அங்கு மந்திரங்களுக்கு அதிருஷ்டம் தான் பிரயோஜனமாகும். (மேலும் ஸாம கானத்தில் மந்திரங்களின் பதங்களும் அக்ஷரங் களும் ஸ்வரகதியை அனுஸரித்து சிதறிப் போய்விடுவதால் அங்கு அர்த்தக்ஞானம் எப்படி ஏற்படும்? தவிரவும் स्विष्टकृत यாகம் முதற்கொண்டு யாஜ்யானுவாக்யைகளை வெகுவேகமாகச் சொல்ல வேண்டுமென்று ஆபஸ்தம்பாதிகள் वाक्सन्द्रवश्च तद्वत् என்பதால் விதிக்கிறுர்கள். அவ்வளவு வேகமாக் மந்திரங்களை பிரயோகிக் கையில் அர்த்தங்களை ஸ்மரிப்பது ஸர்வதா முடியாததே).

मन्त्रान्तैः कर्मादीन् सन्निपातयेत् என்று ஆபஸ்தம்பரும் ஜைமினி யும் மந்திரங்களின் உச்சாரண முடிவில் அதனுல் செய்யவேண்டிய பிரயோகத்தை பிணைக்கவேண்டுமென்று விதித்திருப்பதும் வீணுகி விடும். மந்திரத்தைச் சொல்லி, பிறகு அர்த்தத்தை ஸ்மரித்து, அதன் பிறகுதான் பிரயோகம் செய்யவேண்டிவருமாதலால் மேற் கண்ட விதி வியர்த்தமாகிவிடும்.

தவிர அர்த்தக்ஞானம் அங்கமென்ருல் உபநயனத்தில் மாண வகன் விஷயம் எப்படி ஸித்திக்கும்? உபநயன காலத்திலோ, உபநயனம் ஆனவுடனேயோ அந்த மாணவகன், தான்பிரயோகி க்கும் மந்திரங்களின் அர்த்தங்களை அறிந்துகொள்ளமுடியுமா? அப்படி இருந்தும் கல்பஸூத்ரகாராதிகள் அந்த மாணவகனுக்கு அநேக மந்திரங்களையும் பிரயோகங்களையும் விதிப்பதிலிருந்து அர்த்தக்ஞானம் அவசியமில்லை என்று ரிஷிகளின் அபிப்பிராயம் வெளிப்படவில்லையா? ஆகையால் ஜைமினியின் அபிப்ராயப்படி அர்த்தக்ஞானம் அவசியமாகிவிட்டால் பெரிய க்ஷோபங்கள் ஏற் படும். ஸந்தியாவந்தனுதி ஸகல நித்யகர்மாக்களும் அர்த்தக்ஞான மில்லாதகாரணத்தால் நிஷ்பலங்களாகி பிராம்ஹண்யமே நிலைக்க வழியில்லாமல் போய்விடும், ஆகையால் கல்பஸூத்ரகாரர்களும் யாக்ஞிகர்களும் அர்த்தக்ஞான பக்ஷத்தை அங்கீகரிக்கவில்லை.

இவ்வாறு "குதூஹலவிருத்தி" கூறிவிட்டு கடைசியில் ஸித்தா ந்தம் கூறுவதாவது.

"मन्त्राणां तु अपौरुषेयत्वेन नित्यसिद्धतया तत्प्रयोक्तुः अर्थज्ञानं न आवश्यकं। तथा च अव्युत्पन्नस्यापि मन्त्रप्रयोगः न विरुद्ध्यते என்றும் तथा च कर्मकाले कल्पसूत्रादितः विनियोगमात्रं जानानस्य अर्थज्ञान शून्य-स्यापि मन्त्रप्रयोगः सिद्धः। என்று

இவ்வாறு சொல்லப்பட்டிருப்பதை கவனிக்கவும். வேறு சிலரோ என்ருல் ஜைமினி அர்த்தக்ஞானம் அங்கமென்று சொல்லியது காம்யகர்ம விஷயமென்றும் நித்யகாமங்களில் अपिवापि एकदेशेस्यात् என்ற ஸூத்திரத்தால் ஜைமினியே நித்யகர்மாக்களில் ஸகலாங் கபூர்த்தி அவசியமில்லை என்று ஸித்தாந்தம் செய்துவிட்டபடியால் எவ்வித க்ஷோபத்திற்கும் இடமில்லை என்று ஸமாதானம் கூறு வார்கள்.

### ஏகதேச அத்யயனம்.

யக்ஞங்களை அனுஷ்டிக்கிறவரும் செய்துவைக்கும் ரித்வி க்குகளும் தம்தம் வேதசாகைகளை பூர்ணமாக அத்யயனம் செய்தி ருக்கவேண்டும் என்பது முக்யவிஷயமே. ஆயினும் பூர்ணுத்யயனம் செய்யாதவனும் நித்யங்களான அக்னிஹோத்ராதிகளை விடமுடி யாது, செய்துதீரவேண்டியதுதான் என்பது சாஸ்திர அபிப்ராயம். ஸந்தியாவந்தனுதி நித்யங்களுக்கு எப்படி பூர்ண அத்யயனுதி நிமித்தங்கள் கிடையாதோ அதுபோலவே நித்ய அக்னிஹோத் ராதிகளுக்கும் கிடையாது, பூர்ணுத்யயனம் செய்யாதவன் ஸந்தி

யாவந்தன, ஔபாஸன, வைச்வதேவாதிகளை த்யஜிக்கமுடியுமா? அந்த ஸ்மார்த்த கர்மாக்களையே த்யஜிக்க முடியாததால், பிரத்யக்ஷ சுருதி விஹிதங்களான அக்னிஹோத்ராதி நித்யகர்மாக்களை, விடக்கூடாதென்பது கைமுதிக நியாயஸித்தமல்லமா? கல்ப ஸூத்ரகாராதிகளும் பூர்ணாத்யயனம் செய்தவன் தான் அனுஷ்டிக்கலாம். ஏகதேசாத்யயனம் செய்தவனுக்கு வேண்டியதில்லை என்று எங்கும் விதிசெய்யவுமில்லை. திரிகாண்டியில்

स्वाध्यायविधिसंसिद्ध कृत्स्नवेदार्थ वेदनः ।
यद्वाद्ध्ययन संसिद्धानुष्ठेयमखमात्रवित ॥ என்பதால்

பூர்ணாத்யயனம் செய்தவன் முக்யாதிகாரி என்பதை சொல்லி விட்டு அதில்லாவிட்டாலும் அந்தந்த யாகங்களுக்குமட்டும் வேண்டிய மந்திரங்களை அறிந்தாலே போதுமென்று சொல்லப் பட்டிருக்கிறது, பிரஸித்த பிரயோககாரரும், பிரமாணகோடியில் முதல் ஸ்தானம்பெற்றவருமான ஸ்ரீ ஆண்டபிள்ளை என்கிற சிஷ்டோத்தமரும் தமது கிரந்தத்தில் अनधीतस्यापि साधोः என்ற வாக்யத்தால் அத்யயனம் செய்யாவிட்டாலும் ஸதாசாரம் உள்ள ஸாதுவுக்கும் யக்ஞாக்னிஹோத்ராதிகளை செய்ய வேண்டியது அவச்யம் என்று நிர்ணயித்தார்.

ஆபஸ்தம்ப கிருஹ்யஸூத்ர, வியாக்யாதாவான ஸ்ரீ ஸுதர்சனாசாரியரும் தாத்பர்ய தர்சனத்தில்

तस्मादेते मन्द, मध्यम, उत्कृष्टाधिकारिभिः अवश्यानुष्ठेयाः ।

என்ற வாக்யத்தால் மந்தனான அதிகாரியும் நடுத்தர அதிகாரியும் உத்கிருஷ்ட அதிகாரியும் ஆகிய எல்லோரும் அவசியம் யக்ஞாதிகளை அனுஷ்டிக்கவேண்டுமென்று சொல்லியிருப்பதையும் பார்க்கலாம்.

மஹாபாரதம் சாந்திபர்வாவில் 59-வது அத்தியாயத்தில்,

स्तेनो वा यदि वा पापः यदिवा पापकृत्तमः ।
यष्टुमिच्छति यज्ञं यः साधुमेव वदन्ति तम् ॥
ऋषय स्तं प्रशंसन्ति साधुचैतदसंशयम् ।

என்பதால், "ஒருவன் ஸதாசாரமற்ற, பாபியாயிருந்தால்கூட அவன் யாகம்செய்ய முன்வந்தால் அவனை ஸாதுவாகவே பெரியோர்கள் பேசுவார்கள்" என்று கூறி நிகிருஷ்ட அதிகாரிக்குக்கூட யாகாநுஷ்டானம் அநுமதிக்கப்பட்டிருக்கிறதும் கவனிக்கக் கூடியது,

வைத்யநாததீக்ஷிதிய ச்ராத்தகாண்டத்தில் நிமந்த்ரணார்ஹ ப்ராம்ஹணர்களைப்பற்றிக் கூறுமிடத்தில் सन्ध्याग्निहोत्रनिष्ठश्चेत् श्राद्धे सोऽर्होऽप्यवेदवित् என்ற ஆச்வலாயன வசனத்தை உதாஹரித்து, வேதாத்யயனம் செய்யாதவனாயிருப்பினும் ஒருவன், ஸந்த்யையிலும், அக்னிஹோத்ரத்திலும் நிஷ்டனாயிருந்தால் அவனும் நிமந்த்ரணத்திற்கு அர்ஹன் என்று சொல்லியிருப்பதால் வேதாத்யயனம் செய்யாதவனுக்கும் அக்னிஹோத்ரம் நியத்மென்பது ரிஷிகளின் அபிப்பிராயமாக வெளிப்படுகிறது.

மேலும், போதாயனர் வேதங்களில் ஏகதேசத்தை அத்யயனம் செய்தவனுக்கும் "பிராம்மணன்" என்கிற அதிகாரம் உண்டு என்று वेदानां किञ्चित् अधीत्य ब्राह्मणो भवति என்றஸூத்ரத்தால் ஸ்பஷ்டமாக ஏகதேச அத்யயனத்தை அங்கீகரித்திருப்பதும் கவனிக்கத்தக்கதாம்.

### ரித்விக்குகளுக்கும் ஏகதேச அத்யயனம்

இதுபோல் ரித்விக்குகளும் பூர்ணாத்யயனம் செய்திருந்தால் விசேஷமேயாகும். அப்படி இல்லாமல் அவர்கள் ஏகதேசாத்யயனம் செய்திருந்தபோதிலும், அல்லது அந்தந்த யக்ஞங்களுக்குமட்டும் அபேக்ஷிதங்களான மந்திரங்களை அத்யயனம் செய்திருந்த போதிலும் ஆர்த்விஜ்யம் செய்ய அதிகாரம் உண்டென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இது ஆபஸ்தம்ப ஸூத்திரத்தில் गोमधुपर्कार्हः वेदाध्यायः என்ற ஸூத்திரத்திலும் அதற்கடுத்த ஸூத்திரத்திலும் வ்யக்தமாகிறது. பூர்ணவேதாத்யயனம் செய்தவனுக்கு கோ மதுபர்க்கம் கொடுக்கவேண்டுமென்று மேற்கண்டஸூத்ரத்தால் விதி செய்துவிட்டு அடுத்த ஸூத்ரத்தில் आचार्यः, ऋत्विक्, स्नातकः, राजा वा धर्मयुक्तः என்பதால் ஆசார்யன், ரித்விக், ஸ்நாதகன், அரசன், இவர்களுக்கும் கோ மதுபர்க்கம் கொடுக்கவேண்டுமென்றுவிதிக்கிறார், இந்த ஸூத்திரத்தில் ரித்விக் என்று அவர் தனியாக ஏன் குறிப்பிடவேண்டும்? முதல் ஸூத்திரத்தில் வேதாத்யயனம செய்தவர்களுக்கெல்லாம் கோ மதுபர்க்கம் உண்டென்று பொதுவாகச் சொல்லிவிட்டாரே? யாகம் செய்துவைக்கும் ரித்விக் பூர்ண வேதாத்யயனம் செய்தவனாகத்தானே இருப்பான்? ஆகையால் முதல் ஸூத்திரத்தாலேயே ரித்விக்கையும் கிரஹிக்கக் கூடியதாக இருக்கையில் அடுத்த ஸூத்திரத்தில் ரித்விக்கை ஏன் தனியாக சொல்லவேண்டும்? இதிலிருந்து தெரிவதென்னவென்றால் ரித்விக் ஸம்பூர்ணாத்யயனம் செய்யாதவனாயுமிருக்கலாம், ஆதலால் முதல்

ஸூத்ரத்தால் அவனுக்கு கோ மதுபர்க்கம் ஸித்திக்கவழியில்லை, ஆதலால்தான் அடுத்த ஸூத்திரத்தில் ரித்விக்கைத் தனியாக நிர்தேசிக்கவேண்டிய ஆவச்யகதை ஏற்பட்டது. இங்கு வியாக்யானத்தில் ஹரதத்தர்

अवेदाध्यायाकपि आचार्यादयः गोमधुपर्कार्हाः

अत एव ज्ञायते एकदेशाध्यायिनौ ऋत्विगाचार्यौ भवत इति

என்பதால் "ஆசார்யன் ரித்விக் முதலியவர்கள் வேதாத்யயனம் செய்யாதவர்களாயிருந்தாலும் அவர்களுக்கும் கோ மதுபர்க்கம் உண்டு, ஸூத்ரகாரர் இப்படிச் சொல்லுவதால் ஆசார்யனும் ரித்விக்கும் ஏகதேசாத்யயனம் செய்தவர்களாக இருக்கலாம் என்று அறியப்படுகிறது" என்று சொன்னார்;

ஆகையால் ரித்விக் ஏகதேசாத்யயனம் அதாவது அந்தந்த யாகத்திற்கு வேண்டிய மந்திரங்களைமட்டும் அத்யயனம்செய்து ஆர்த்விஜ்யம் செய்யலாமென்று ஆபஸ்தம்பாபிப்ராயத்தை ஹரதத்தர் வெளியிட்டு இருக்கிறார், இதனால் ரித்விக் எந்த சாகா நிஷ்டனாய் இருந்தாலும் ஆத்வர்யவம், ஹௌத்ரம், ஔத்காத்ரம் முதலிய எல்லா சாகா ஆர்த்விஜ்யத்திற்கும் ஏகதேசாத்யயனம் செய்து அதிகாரியாகலாம் என்பதும் நிர்ணீதமாயிற்று. ஸ்வ சாகையை அத்யயனம் செய்வதற்காக முதலில் செய்யப்படும் உபநயனத்தாலேயே இதர சாகைகளை அத்யயனம் செய்யும் அதிகாரமும் ஸித்திக்கிறதாக சாஸ்திரம் சொல்லுகிறது. அதற்காக தனியாக உபநயனம் வேண்டியதில்லை என்றும் நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது, वेदानधीत्य वेदौ वा वेदंवापि 'यथाक्रमं என்ற மனு வசனத்தால் ஒரே உபநயனத்தினால் எல்லா வேதங்களிலும் பிராம்மணனுக்கு அதிகாரம் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது, ஆனால் ஒருவன் ஸ்வசாகையை த்யஜித்துவிட்டு அன்ய சாகையை அத்யயனம் செய்தால் அதுதான் தோஷமாகச்சொல்லப்படுகிறது. ஸ்வசாகையுடன் இதர சாகையிலும் அபேக்ஷிதமான ஏகதேச அம்சங்களை அத்யயனம்செய்ய எவ்வித நிஷேதமும் இல்லை, ஆகையால் ஆபஸ்தம்பாபிப்ராயப்படி ரித்விக்குகள் ஏகதேசாத்யாயிகளாகவோ இதர சாகா ஆர்த்விஜ்யம் செய்கிறவர்களாகவோ இருக்கலாம் என்பது ஸித்தமாயிற்று. சிஷ்டாசாரமும் இன்று வரையில் இப்படியே இருந்துவருகிறது.

### அஹிம்ஸாவாதிகளுக்குப் பதில்.

இனி அஹிம்ஸாவாதிகளுக்கும் யுக்திவாதிகளுக்கும் ஓர் பதில் கூறவேண்டியது அவசியமாகிறது. யாகம் உயர்ந்த வைதிக தர்மமானாலும், பசு ஹிம்ஸை தர்மமென்று எவ்வளவு நிரூபித்தாலும்

இந்த நாகரீககாலத்தில் அதைச் செய்வது அனுசிதமென்று சில ரால் வாதிக்கப்படுகிறது,

நாம் நமது ஸ்வதர்மத்தை அனுஷ்டிக்கையில் யாருக்காக பயப்படவேண்டும்? அல்லது ஸங்கோசப்படவேண்டும்? நாம் இப்படி ஸங்கோசப்படுவது ஸாங்க்ய, ஜைந, பௌத்த, மதங்களை ஆதரிப்பதாக வல்லவோ ஆகும்? வைதிகமதத்தில் இருந்து கொண்டு அதன் ஸித்தாந்தத்திற்கு விரோதமாய் நினைப்பது மதத்ரோஹ கார்யமாகுமல்லவா? தவிர நாம் எந்த தேசத்தார் அல்லது ஜாதியாருக்காக வெட்கப்பட்டு ஸ்வதர்மத்தைக் கைவிட வேண்டுமோ? இந்த நவீன நாகரிககாலத்தில் மனிதக்கொலையில் ஈடுபடாததேசம் ஒன்ருவது உண்டா? இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, அமெரிக்காபோன்ற உலக நாகரிக ஆசானுக பிரமிக்கப்படும் எல்லாத் தேசங்களிலும் இன்று நம் கண்முன் நடப்பதென்ன? சுருக்கமாகச் சொன்னல் எந்த தேசங்களும், அர்த்த காமாதி சிறிய பிரயோஜனங்களுக்காக மனிதக்கொலை செய்வதை ஓர் ஸாதாரண காரியமாகவே செய்துவருகின்றன. ராஜீய காரணங்களுக்காகவும், வேறு வியாபாராதி லௌகிக காரணங்களுக்காகவும், அரசனையும், மந்திரிகளையும், பொது ஜனங்களையும் தலைவர்களையும் மூர்க்கமாகக் கொன்றுவிடுவது மேற்றிசைகளில் சரித்திரங்களிலும் இன்றைக்கு நேரிலும் வெகு சகஜமாய் காணப் படவில்லையா? ராஜாங்கங்களே இத்தகைய கோரகார்யங்களில் ஈடுபடுவதைப் பார்க்கிறோம். தவிரவும் இப்போது நடக்கிற பயங்கர யுத்தத்தில் மேற்றிசை ஜாதியினர் மனித உயிரை துரும்பாக நினைத்து நிரபராதிகளையும், ஸ்திரீகளையும், குழந்தைகளையும் அகாரணமாகக் கொன்று குவிக்கும் அநாகரிக, ஈவிரக்கமற்ற, கணக்கற்ற கோரகாரியத்தை நடுக்கத்துடன் உலகம் முழுவதும் பார்த்துவரவில்லையா? இத்தகைய அநாகரிகச் செயல் புரியும் போலி நாகரீகர்களிடம், ஸ்வதர்மத்தை ஆசரிக்க நாம் எதற்காக ஸங்கோசப்படவேண்டும்? உலகிலுள்ள ஸகல ஜாதி மதஸ்தர்களும் வயிற்றுக்காகவும் அதிகார ஆசைக்காகவும் மூர்க்கமாக பிராணிஹிம்ஸை செய்வதில் மிக்க அநாகரிக முறைகளையும் கையாண்டுவருகையில் வேதோக்த தர்ம கார்யத்தைச் செய்யும் நம்மை அவர்கள் நகைக்க இடமென்ன இருக்கிறது? அஹிம்ஸையிலும், ஜீவகாருண்யத்திலும் வைதிகமதத்தைமிஞ்சினவர் உலகில் எங்கும் எவரும் இல்லை. மேற்படி இரண்டு தர்மங்களையும் இதர மதங்களுக்கு பிச்சைகொடுத்த கௌரவம் வைதிக மதத்திற்கே உரியதாகும்.

ஈச்வர ஸிருஷ்டியிலேயே வைதிகமதத்தினர் மிகுந்த பிராணிதயை வாய்ந்தவர். மற்ற ஜாதியினரைப்போல் பிறவியிலேயே

கொடும் நெஞ்சுபடைத்து ஈவிரக்கமற்றவர்களல்லர். இதைக் கவி குலதிலகமான காளிதாஸனே கூறுவதைக் கேளுங்கள்.

सहजं किल तद्विनिन्दितं न खलु तत्कर्म विवर्जनीयं ।
पशुमारण कर्मदारुणः अनुकम्पामृदुरेव श्रोत्रियः ॥

"ஸ்வதர்மமாக விதிக்கப்பட்ட கர்மத்தில் சிறிது தோஷமிருப்பினும் அது ஸஹஜமாகையால் அதற்காக அந்த தர்மத்தை விலக்கக்கூடாது. யாகத்தில் ப்சு ஹிம்ஸை செய்யும் ச்ரோத்ரியன் அதாவது வேதவிதி நிஷ்டன் காருண்யமற்றவன்போல் தோன்றினாலும் அவன் ஸ்வபாவமாக மிகுந்த தயை பொருந்தியவனே" என்று கூறியுள்ளார், இது வைதிகமதஸ்தர்களின் மனோபாவத்தை அப்படியே எடுத்துக்காட்டுவதாகிறது.

## ஸ்ரீ அப்பய்யதீக்ஷிதர் உதாஹரணம்

இதற்கு ஸ்ரீ அப்பய்யதீக்ஷிதேந்திராள் சரித்திரமே உதாஹரணமாயிருக்கிறது. அம்மஹான் காஞ்சியில் வாஜபேய மஹா யக்ஞம் அனுஷ்டிக்கையில் யூபத்தில் கட்டியுள்ள யாகபசுக்களைப் பார்த்துக் கருணை நிறைந்தவராகி "வேதமே! நீயே எனக்கு கதி" என்று கூறி கீழ்கண்ட சுலோகத்தையும் அநுஸந்தித்தார்—

या ब्रह्मणो निश्वसितं यदुक्तिः सत्या अनिशं यज्ञपतोविमुक्तिः ।
सैव प्रमाणं ननु मादृशानां श्रुते नमस्ते भवती गतिर्नः ॥ என்று.

"எந்த வேதமானது பிர்ம்ஹத்தின் மூச்சுக்காற்றோ, எந்த வேதத்தின் வாக்யமானது ஸத்யமோ, எந்த வேதத்தை ஜபிப்பதால் முக்தியோ, அத்தகைய வேதமே என்போன்றவர்களுக்கு பிரமாணமாகும். ஆகையால் ஏ! சுருதியே! உனக்கு நமஸ்காரம். நீயே எங்களுக்கு கதி!!"

இவ்வாறு தீக்ஷிதேந்திராள் யாக பசு விஷயமாகத் தமது ஜீவ காருண்யத்தையும், ஆயினும் சாஸ்திரவச்யதைப்படி வேதவிதியை நம்பி பசுகார்யத்தைச் செய்யவேண்டிய கடமையிருப்பதையும் காட்டினார்.

கடைசியில் ஸ்ரீபரமேச்வரனை ஸ்ரீ தீக்ஷிதேந்திராள் ஸ்துதி செய்து பிரார்த்தித்தபடி வபாயாகம் நடந்தபிறகு, இறந்த அந்த யாகபசுக்கள் அங்குள்ள ஸகல ஜனங்களும் ஆச்சர்யமாகப் பிரத்யக்ஷத்தில் பார்த்துக்கொண்டிருக்கும்போதே உயர்ந்த சரீரம் பெற்று தேவலோகம் சென்றனவென்றும் அந்த சரித்திரம் கூறுகிறது.

யாகத்தில் பசு ஹிம்ஸைசெய்யும் வைதிகன் கூட அந்தக் காரியமானது மிகுந்த கருணை நிறைந்த கார்யமென்றே நம்பிச்செய்கிறான். யாகத்தில்தனது உடலையும் உயிரையும் அர்ப்பணம் செய்து உயர்ந்த த்யாகம் செய்யும் பிராணியானது தனது ஹீன ஜன்மத்தை விட்டு உயர்ந்த கதியையும் க்யாதியையும் அடைவதாக நாம் நம்பும் வேதம் கூறுகிறது. அதன்படி பசு ஹிம்ஸை யானது உத்தம காருண்ய கார்யமென்றே வைதிகன் நம்புகிறான். ஆகையால்தான் ஸ்ரீ பகவத் ராமானுஜர், ஸ்ரீ அப்பய்யதீக்ஷிதர் முதலியவர்கள் இதை ரக்ஷணம் என்று சொல்லுகிறார்.

### யுத்தக்கொலைக்கு என்ன ஸமாதானம்?

எந்த நாகரிக தேசத்தினரும் இதைப் பரிஹஸிப்பதற்கில்லை. ஏனெனில் யுத்தக் கொலையைப்பற்றி அவர்களும் இந்த ஸமாதானத்தையேதான் சொல்லவேண்டியிருக்கிறது, சொல்லவும் சொல்லுகிறார்கள். லக்ஷக்கணக்கான மனிதர்களை யுத்தகளத்தில் கொன்று குவிக்கிறார்களல்லவா? அங்கு உயிர்விடும் ஸோல்ஜர்கள் தியாகிகள் என்றும் தேச க்ஷேமத்திற்காக உடலையும் உயிரையும் தியாகம் செய்த வீரர்களென்றும், அதன் காரணமாக அவர்கள் உயர்ந்த லோகம் போகிறார்கள் என்றும் சொல்லாத தேசமும் ஜாதியும் மதமும், உலகில் எங்காவது இருக்கிறதா? சுயநலமும் ஆக்ரஹமும், துரோஹ சிந்தையும், பழிவாங்கும் கெட்ட மனோபாவமும் கொண்டு தர்மமுறையே இல்லாமல் நடத்தப்படும் யுத்தங்களில் கூட, கொலைசெய்யுப்படும் மனிதர்கள் தியாகிகளாகி நல்லுலகம் போவது நிஜமானால் உலக க்ஷேமார்த்தமான உயர்ந்த யாக தர்மத்தில் தனது உடல், உயிரை, உபயோகித்து தியாகம் செய்யும் அந்த யாக பசுவும் ஏன் நல்லகதி அடையக்கூடாது? இந்த நம்பிக்கை மட்டும் மூடநம்பிக்கை என்று மூடர்களும் சொல்லுவார்களா?

### ஸாதாரணக் கொலைக்கும் யுத்தக் கொலைக்கும் வாசியென்ன?

ஸாதாரண காலத்தில் ஒருவன் ஒருவனைக் கொன்றால் குற்றவாளியாகிறான். கொன்றவனுக்கு மரணதண்டனை விதிக்கப்படுகிறது. ஆனாலும் யுத்தத்தில், மனிதனைக் கொன்றால் அந்தக் கொலையானது புனிதமாகக் கருதப்படுவதுடன் கொன்றவனுக்கு கௌரவமும் ஸன்மானமும் பிருதங்களும் கொடுக்கப்படுகின்றன. ஒருவன் எவ்வளவுக்கெவ்வளவு யுத்தத்தில் அதிகமாக கொலை புரிகிறானோ அவ்வளவுக்கு அவனுக்கு கௌரவமும் அதிகரிக்கிறது அவனை வீரன் சூரன் என்று புகழ்ந்து பாடுகிறார்கள். உண்மையில் ஸாதாரணக் கொலைக்கும் யுத்தக் கொலைக்கும் என்ன வாசி இருக்கிறது? இரண்டிற்கும் வித்யாஸம் பிரத்யக்ஷத்தில் கண்ணுக்குப் புலப்படுகிறதா? இரண்டிலும், கொலை செய்யப்

பட்டவன் அநியாயமாகத் தனது அருமையான பிராணனை இழப்பது ஸமமாகவே இருக்கிறது. மஹாக்ரூரமான கத்தி, துப்பாக்கி வெடிகுண்டு முதலிய ஆயுதங்களால் தாக்கப்பட்டு கோரமான ரத்தப் பிரவாஹத்தில் வீழ்ந்து உழன்று துடித்து பரிதாபமாய் சாகுகிறான். கொன்ற க்ஷத்ரியாரோ இதைக் கண்டு ஸந்தோஷ ஆரவாரம் செய்கிறார்கள். ஆயினும் ஸாதாரணக் கொலைமட்டும் குற்றமென்றும், அதர்மமென்றும், கருதப்பட்டு தண்டனை விதிப்பதற்கும், யுத்தக் கொலை தர்மமென்று சொல்லி அதைச் செய்தவனை கௌரவிப்பதற்கும் யுக்திவாதிகளும் அஹிம்ஸாவாதிகளும் என்னபதில் சொல்லமுடியும்? யுக்திவாதம் உபயோகப்படுமா? சாஸ்திரத்தைத்தானே காட்டவேண்டும்?

நம்மவர்கள் எவர்களைக் கண்டு நாகரிகர்கள் என்று மோஹிக்கிறார்களோ அத்தேசத்தார் யாவரும் யுத்தக் கொலையில் மிக்க கியாதிபெற்று விளங்கவில்லையா? மனிதன் உயிரை தனித்தனியாகவும் கூட்டம் கூட்டமாகவும் அழித்துக் கொல்ல தினம் தோறும் எவ்வளவு உபாயங்களும் ஸாதனங்களும் கண்டுபிடிக்கப்படுகின்றன. இந்த யுத்த கொலையை கற்றுக்கொடுக்க எவ்வளவு பள்ளிக்கூடங்கள்? எவ்வளவு செலவு? இந்த கோரக் கொலைத் தொழிலை கற்கவேண்டி ஹிந்துக்களாகிய நாம் போட்டிபோடுவது எவ்வளவு? இப்படி எல்லாம் ஸஹஜமாக இருக்குகையில் நமது பரிசுத்தமான வைதிகதர்மமான யாக பசு விஷயத்தைமட்டும் தோஷமாகப்பேச எந்த தேசத்தாருாகாவது எந்த நாகரீக ஜாதியாருக்காவது அருஹதை உண்டா? வாய் உண்டா? அவர்களைக் கண்டு நாம் நமது ஸவதர்மத்தை அனுஷ்டிகக ஏன் ஸங்கோசப்படவேண்டும்?

### கணக்கற்ற ஹிம்ஸை நடக்கவில்லையா?

மேலும் இப்பொழுது உலகமெங்கும் ஜீவகாருண்யமும் அஹிம்ஸையும எந்த நிலைமையில் இருக்கிறதென்பதை அஹிம்ஸாவாதிகள் யோஜித்ததாக தெரியவில்லை. பிராணிகளில் மனித உயிர் ஒன்றுதான் உயர்ந்ததாகவும் மற்றப் பிராணிகளின் உயிர் அலக்ஷியமாகவும் நினைக்கப்படுவதே உலக இயல்பாய் இருக்கிறது. மனிதன் ஒருவனே பூவுலகில் ஸகல ஸௌகர்யங்களுடன் வாழ பாத்யபபட்டவனும் மற்ற சராசர பிராணிகள் யாவும் மனிதனுடைய அனுபவத்திற்காகவே ஏற்பட்டனவென்றும் உரிமை கொண்டாடப்படுகிறது. ஆதலால் மனித ஸுகத்திற்காக ஒவ்வொரு நாளும் லக்ஷக்கணக்கான பிராணிகள் ஆஹார நிமித்தம் கொல்லப்படுகின்றன. கருணையற்ற இந்த கோர கொலைக்கு ராஜாங்கமும், முனிஸிபாலிடிகளும் உடந்தையாய் இருந்து பூர்ண ஆதரவு அளிக்கின்றன,

தவிரவும் மனித ஸமூகத்திற்கு இடையூறு விளைவிக்கும் பிராணிகளை நிர்தாக்ஷிண்யமாக கொன்றுவிட வேண்டுமென்கிற கொள்கையே உலகமெங்கும் ஸாதாரணமாகப் பரவி இருக்கிறது. மனிதன் தலையில் உள்ள பேன், பூச்சி, உபத்ரவம் செய்வதால் அதை எடுத்து நசுக்கிப்போடுகிறார்கள். பாம்பு தேள் முதலிய பிராணிகளும் மனிதனுக்கு கஷ்டம் விளைவிப்பதால் கொல்லப் படுகின்றன. வீடுகளில் எறும்பு, எலி முதலிய பிராணிகளைக் கொல்லுவதே நித்யகார்யமாய் இருக்கிறது. புலி சிங்கம் போன்ற கொடிய மிருகங்களும் எங்கு கண்டாலும் உடனே கொல்லப்படு கின்றன. மனித ஸமூகத்திற்கு ஆபத்து விளைவிக்கிற காரணத் தாலேயே. நாய்கள் எலிகள் பூச்சிகள் இவைகளை கொல்ல சர்க்கார் செலவு செய்கிறார்கள், இவைபோன்ற கணக்கற்ற ஹிம்ஸைகளுக்கு அஹிம்ஸாவாதிகள் என்ன பதில் கூறமுடி யும்? சிங்கம் புலி பாம்பு தேள் முதலிய ஜந்துக்களும் பிராணி கள்தானே? ஈச்வர ஸ்ருஷ்டியில் எல்லா பிராணிகளும் ஸமம் தானே. மனிதனுடைய நன்மைக்காக அவைகளைக் கொல்லுவது தர்மமா? மனித உயிருக்கும் மேற்படி ஜந்துக்களின் உயிர்களுக் கும் வித்யாசம் கற்பிப்பது தர்மமா? பூலோக வாழ்கையில் அந்த ஜந்துக்களும் மனிதனைப்போல் வாழ உரிமை பெறவில்லையா? அப்படி இருக்க மனிதன் தன் ஆஹாரத்திற்காகவும் ஸமூகவாழ் கைக்காகவும் அந்த பிராணிகளை கொல்ல என்னபாத்யம் பெற்றி ருக்கிறான்?

ஆதலால்! அஹிம்ஸா வாதத்திற்கு வரையரை அல்லது விலக்கு விதியை இவர்கள் ஒப்புக்கொள்ளாமல் ஜீவகாருண்யத்தை நிலைநிறுத்தமுடியாது. துஷ்ட ஜந்துக்களை கொல்லுவது நியாய மென்று இவர்கள் ஒப்புக்கொண்டால் அஹிம்சா வாதம் அழிந்து போயிற்று. யுக்திவாதமும் நிலைக்கமுடியாமல் போகிறது. ஆகை யால் அஹிம்ஸாவாதிகளும் யுக்தி வாதத்தைவிட்டு சாஸ்திர விதி யை சரணமாகக்கொண்டாலன்றி வேறுகதி கிடையாதென்பதை அறியவேண்டும். நியாயாதிபதி ஒருவன் நீதிஸ்தலத்தில் நூற்றுக் கணக்கான மரணதண்டனைகளை விதித்து தானும் கூட இருந்து நிறைவேற்றுகிறான். இது அஹிம்ஸையா! ஹிம்ஸையா! அஹிம் ஸாவாதியான வக்கீல் குற்றவாளிக்கு மரணதண்டனை விதிக்க வாதாடுகிறான். இது அஹிம்ஸை கொள்ளுகைக்கு ஏற்றதா! அஹிம்ஸாவதிகாளான டாக்டர்கள் வியாதியஸ்தனை கத்தியால் அறுத்தும், ஊசியால் குத்தியும் நெருப்பால் சுட்டும் கதறவைக் கிறார்கள், அநேக வியாதியஸ்தர்கள் இறந்தும் போய்விடுகிறார் கள் இது அஹிம்ஸையா? ஹிம்ஸையா? கிருஷிசெய்கையில் பூமியை உழவுசெய்யும் காலத்தில் பூமியில் வாழும் கணக்கற்ற

பிராணிகள் கொல்லப்பட்டுப் போகின்றன. மனிதன் வண்டியில் சவாரி செய்கையிலும், நடக்கும் பொழுதும், உட்காரும்பொழுதும், படுக்கும்பொழுதும் அநேக பிராணிகள் தெரிந்தும் தெரியாமலும் கொல்லப்பட்டுபோவதை நாம் அறியவில்லையா?

ஆதலால் அஹிம்ஸாவாதிகளும் சாஸ்திர உதவியின்றி கேவல யுக்திவாதத்தால் மட்டும் தங்கள் துர்வாதத்தை நிலைநிறுத்த முடியாதென்பதை பலவகையில் ஊஹித்துப்பார்த்து மயக்கம் தெளிவதே நியாயமென்பதை எடுத்துக்காட்டினோம்.

இவ்வாறும் வேறு பல வழிகளாலும் ஸமீசீனபிரமாண, ந்யாய, யுக்திகளைக்கொண்டு யாக ஸத்தர்ம ஸம்ரக்ஷணம் இக்கிரந்தத்தில் செய்யபபட்டிருப்பதை ஆஸ்திகசிரேஷ்டர்கள் ஊன்றிப் படித்துப் பார்க்க பிரார்த்திக்கிறோம்.

இது ஓர் அபூர்வமான கிரந்தமே. ஏனெனில் இதுவரையில் யக்ஞ விஷயமாயுள்ள ஸகல சர்ச்சைகளையும் ஒரே இடத்தில் சேகரித்து எழுதப்பட்ட கிரந்தம் ஒன்றும் வெளிப்படவில்லை. காலதேச நிலைமையை யநுஸரித்து இத்தகைய கிரந்தமொன்று எழுதப்பட வேண்டுமென்று, திருக்கருகாவூர், ஆஸ்திக சிரேஷ்டரும் வேதமார்க்க ப்ரதிஷ்டாபகரும், யாக ஸத்தர்மங்களை ஸம்ரக்ஷித்து யாக அநுஷ்டானத்தைப் பரவச்செய்வதிலே தமது ஸத்திரவ்யங்களை ப்ரயோகித்து வருகிற மஹானுமாகிய பிரம்மஸ்ரீ ஸூப்பய்யர் அவர்களுடைய மனதில் பகவான் தோன்றச் செய்தார். அம்மஹானுடைய சிரத்தை நிறைந்த நியமனத்தின்மேல் நாம் இதை எழுத முன்வந்தோம்.

இக்கிரந்தத்தை எழுதவும், பிரசுரிக்கவும் ஸகல வழியிலும் உபகரித்த ஷை ஸ்ரீ ஸூப்பய்யரவர்களுக்கு நாமும், வைதிக ஸமூஹத்தினரும் என்றென்றும் அளவற்ற நன்றிசெலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

இக்கிரந்தத்தைப் பிழையறப் பரிசோதிப்பது முதலான கார்யங்களில் மிகுந்த ஊக்கத்துடன் உதவிபுரிந்த வித்வான் ஸ்ரீ உ-வே சதுர்வேதம் சதக்ருது, சி. ர. ஸ்ரீநிவாஸபாட்டராசாரியஸ்வாமிக்கும், இதை மிக சிரத்தையுடன், ஒற்றுமைத்து உதவிபுரிந்து முத்ரணம் செய்து பிரசுரித்த ஸ்ரீ ஜனார்தன அச்சுக்கூட மானேஜர் ஸ்ரீ கல்யாணசுந்தரமய்யரவர்களுக்கும் நமது மனப்பூர்வகமான நன்றியைச் செலுத்துகிறோம்.

அக்நிஹோத்ரம்

**கோபாலதேசிகாசாரியர்.**

ஸ்ரீரஸ்து

# யக்ஞஸம்ரக்ஷிணீ

## விஷய ஸூசிகை.


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ச்ரௌத தர்மம் பலீயஸ்-முக்யம் ... | 1 |
| 2. | ச்ரௌதத்தை அநாதரித்து ஸ்மார்த்தத்தை ஆசரிப்பதில் தோஷம் ஸ்மிருதிசந்திரிகா பிரமாணம் ... | 2 |
| 3. | ஸ்மார்த்த கர்மம் ச்ரௌத கர்ம சேஷமே. தாத்பர்யதர்சன வாக்யங்கள், ... | 4 |
| 4. | அக்நிஹோத்ராதிகள் நித்யங்கள் ... | 6 |
| 5. | இதற்கு மாதவீயத்தில் சுருதி பிரமாணம் ... | 7 |
| 6. | நித்யமென்பதற்கு காரணங்கள் வீப்ஸாதிகள் | 9 |
| 7. | இதில் மனு, யாக்ஞவல்க்ய அபிப்பிராயம் ... | 10 |
| 8. | விவாஹமாகியவுடன் அக்நிஹோத்ர ஆரம்பம் | 11 |
| 9. | இதில் ஆபஸ்தம்ப, போதாயன, சந்திரிகா பிரமாணங்கள் ... | 12 |
| 10. | யக்ஞாதிகள் ஸம்ஸ்காரங்கள் ... | 14 |
| 11. | யக்ஞாதிகள் ஆச்ரம தர்மங்கள் ப்ரம்ஹஸூத்ர பிரமாணம் ... | 14 |
| 12. | இதில் ஸ்ரீ சங்கர பகவத் பாதாசார்யாள் அபிப்பிராயம் ... | 15 |
| 13. | இதில் ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதாள் அபிப்பிராயம் | 17 |
| 14. | இதில் கீதையின் நிர்ணயம் .... | 18 |
| 15. | யக்ஞாதிகள் நித்யங்கள், தாத்பர்ய தர்சன வாக்யம் ... | 20 |
| 16. | யக்ஞம்செய்யாவிட்டால் ருணதோஷம் சுருதி பிரமாணம் ... | 23 |

17. ருணதோஷம் உபபாதகம் மனுவின் அபிப்பிராயம் 23
18. இதில் யக்ஞவல்க்ய, விக்ஞாநேஸ்வர நிர்ணயங்கள் ... 24
19. இதில் வஸிஷ்ட ஸூத்ர நிர்ணயம் ... 26
20. யக்ஞம் நித்யமானல் ஸன்யாஸாச்ரமம் உண்டா? 26
21. இதில் பிர்ம்மஸூத்ர நிர்ணயம் ... 27
22. இதில் பாஷ்யகாரர்கள் அபிப்பிராயம் ... 29
23. ஆஹிதாக்நியாயில்லாமை உபபாதக தோஷம் 30
24. அதிகார விசாரம், மிதாக்ஷரா, சந்திரிகாதி நிர்ணயம் ... 31
25. சில ஸ்ம்ருதி வசனங்கள் ... 36
26. யக்ஞாதிகள் கேவல காம்யங்களல்ல ... 37
27. நித்ய-காம்ய இரண்டு விதிகள் உண்டு ... 38
28. இதில் மீமாம்ஸையின் அபிப்பிராயம், நித்ய காம்யபேத நிருபணம் ... 40
29. நித்ய அக்நிஹோத்ராதிகளை செய்யாவிட்டால் பிரத்யவாயமுண்டு } 42
30. காம்ய அக்நிஹோத்ராதிகளை செய்யாவிட்டால் பிரத்யவாயமில்லை } 42
31. இதில் காத்யாயன, பாஷ்ய நிர்ணயங்கள் } 42
32. கீதையில் காம்ய யக்ஞநிந்தை ... 45
33. உபநிஷத்திலும் காம்ய யக்ஞ நிந்தை ஸ்ரீசங்கர ஸ்ரீராமானுஜ அபிப்பிராயம் } 47
34. கேவல காம்யமானல் அனுபபத்திகள் ... 49
35. நித்யங்களில் யதாசக்தி அனுஷ்டானம் போதும் 52
36. இதில் மீமாம்ஸா நிர்ணயம் ... 52
37. இதில் காத்யாயன அபிப்பிராயம் ... 53
38. இதில் மாதவீய அபிப்பிராயம் ... 54
39. பணமுள்ளவனே ஸோமயாகாதிகாரி என்ற மனு வசனம்
40. அது காம்ய ஸோமயாக விஷயம், நித்ய ஸோம யாக விஷயமில்லை ... } 56

41. இதில் மேதாதி, விக்ஞானேச்வர, மாதவ, குல்லூகபட்ட, ஸ்மிருதிசந்திரிகாகார வைத்யநாத தீக்ஷிதாதி நிர்ணயங்கள் ... 57
42. கல்பஸூத்ரங்களில் கௌணபக்ஷ உபதேசம் 59
43. தக்ஷிணைகளுக்கு பிரதிநிதி ... 61
44. யாகத்திற்காக திரவ்ய ஆர்ஜனம் சாஸ்திரீயம் 66
45. திரவ்ய உபகாரம் அவச்யம் செய்யவேணும் ... 64
46. யாக பூர்த்திக்காக திரவ்ய அபஹாரம் (மனு) 65
47. யாகார்த்தம் பிரதிக்ரஹத்தில் சாஸ்திர நிர்ணயம் 66
48. யாக பசு விஸஸனம் தர்மம் ... 69
49. பசுவுக்கு உயர்ந்த கதி (சுருதி வாக்யம்) ... 69
50. யாக பசு விஷயமாக மனுஸ்மிருதி வசனம் ... 72
51. இதில் மஹாபாரத வசனங்கள் ... 73
52. யாக பசு விஷயமாக வேதாந்த ஸூத்ர நிர்ணயம் ... 76
53. இதில் ஸ்ரீ சங்கர பகவத்பாத பாஷ்ய நிர்ணயம் 77
54. இதில் ஸ்ரீ பகவத் ராமானுஜரின் அபிப்பிராயம் 79
55. இதில் ஸ்ரீ மத்வ பாஷ்ய நிர்ணயம் ... 82
56. இதில் ஸ்ரீ வேதாந்த தேசிகர் அபிப்பிராயம் ... 83
57. இதில் ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதாள் ஸித்தாந்தம் 85
58. அவச்ய ஹிம்ஸையும் தர்மமே (கீதை) } 85
59 ஹிம்ஸைக்கு லக்ஷணமென்ன ? }
60. யாக ஹவிஸ் சேஷ உபயோகம் (கல்ப ஸூத்ர விதி) ... 88
61. இதில், மனு, யாக்ஞவல்க்ய விக்ஞானேச்வராதி நிர்ணயங்கள் ... 90
62. கலியிலும் செய்யவேண்டியதே ... 93
63. கலிவர்ஜ்யத்தில் நித்ய யாகம் சேரவில்லை ... 94
64. கலியிலும் யாகாநுஷ்டான விதிகள் ... 94
65. கலியில் காம்யாக்நி ஹோத்ரமே நிஷேதிக்கப் படுகிறது ... 95

66. சுருதிவிதியை புராண வசனம் பாதிக்குமா ?
(ஸ்ரீ சங்கர, ராமானுஜ அபிப்பிராயம்) ... 99
67. கலியில் அர்த்ததானம் உண்டு, பூர்ணதானமே நிஷித்தம் ... 101
68. வர்ணப் பிரிவும் வேதமும் உள்ளவரையில் ஸன்யாஸமும் அக்நிஹோத்ரமும் உண்டு ... 103
69. யாகநிந்தையும், யாக பசு விஷய நிந்தையும் மஹாபாபகரம்
70. இதில் மஹாபாரதத்தில் பகவானின் உபதேசம் 105
71. நிந்தை, மற்றொன்றை ஸ்துதிக்கவே (நஹி நிந்தா நியாயம்) ... 106
72. இதற்கு ஸ்ரீ பாகவதம் ப்ராசீன பர்ஹிஸ் உதாஹரணம் ... 107
73. இதற்கு ஸ்ரீ வேதாந்த தேசிகரின் பிரமாண வாக்யம் ... 108

உ

॥ श्रीरस्तु ॥

॥ श्रीयज्ञवराहपरब्रह्मणे नमः ॥

# யஜ்ஞஸம்ரக்ஷிணீ

# ( यज्ञसंरक्षिणी )

चतुर्भिश्च चतुर्भिश्च द्वाभ्यां पंचभिरेव च ।
हूयते च पुनः द्वाभ्यां स नो विष्णुः प्रसीदतु ॥
कांडद्वयोपपाद्याय कर्मब्रह्मस्वरूपिणे ।
स्वर्गापवर्गरूपाय यज्ञेशाय नमो नमः ॥

வேதவிஹிதங்களான அக்னிஹோத்ர தர்சபூர்ணமாஸ பசுபந்த ஜ்யோதிஷ்டோமாதி உத்தம யாக ஸத்தர்மங்களை வேதப்ரமாணனுஸாரிகளான பிராம்ஹணர்கள் அவச்யம் அநுஷ்டிக்க வேண்டுமென்பது ஸம்சயத்திற்கு இடமில்லாதபடி வேதத்தாலும், மனு யாக்ஞவல்க்யாதி ஸ்மிருதிகாரர்களாலும் கல்பஸூத்ரங்களாலும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இதற்கான பிரமாணங்கள், பிரமாண பராணர்களான ஆஸ்திகர்களின் ஸௌகர்யத்திற்காக ஸங்கிரஹித்து வெளியிடப்படுகின்றன.

### ச்ரௌதகர்மம் பலீயஸ், முக்யம்.

வைதிக மதத்தில் வேதமே முக்யமாக முதல்தர பிரமாணமென்பது நிர்விவாதம். வேதத்திற்கு விரோதமில்லாத ஸ்மிருதிகளும் அவைகளுக்கு விரோதமில்லாத புராணாதிகளும் வேதங்களுக்குக் கீழ்பட்ட பிரமாணங்களாகவே ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆதலால் வேதவிஹிதங்களான கர்மாக்களையே வைதிகர்கள் முதலில் அனுஷ்டிக்கவேண்டியவர்களாவார். அதன் பிறகுதான் ஸ்மார்த்தகர்மங்களில் பிரவிர்த்திக்கவேணுமென்பது மனு முதலிய மஹர்ஷிகளால் நிஷ்கர்ஷிக்கப்பட்டிருக்கிறது.

वेदोदितं स्वकं कर्म नित्यंकुर्यादतन्द्रितः ।
तद्धि कुर्वन् यथाशक्ति प्राप्नोति परमां गतिम् ॥
(மனு. 6—4—14)

என்ற மனு வசனத்தால் வேதவிஹிதமான நித்யமான ஸ்வகர்மாவையே ஆலஸ்யமின்றி அநுஷ்டிக்கவேணுமென்றும், அந்த வேதவிஹித ஸ்வகர்மாவை யதாசக்தி அநுஷ்டிப்பவனன்றோ மோக்ஷரூபமான பரமகதியை அடைவான் என்றும் சொல்லப்படுகிறது. இவ்விஷயம் பிரஸித்த பிரமாண கிரந்தமான ஸ்மிருதி சந்திரிகையிலும் விசாரித்து நிர்ணயிக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

प्रधानं वैदिकं कर्म गुणभूतं तथेतरत् ।
गुणनिष्ठः प्रधानं तु हित्वा गच्छत्यधोगतिम् ॥
यो वैदिकमनादृत्य कर्म स्मार्तैतिहासिकम् ।
मोहात् समाचरेत् विप्रः न स पुण्येन युज्यते ॥ (ஸ்ம் சந்)

இந்த வசனத்தில் "வேதோக்தமான கர்மாவே பிரதானமாகுமென்றும், மற்ற ஸ்மார்த்தகர்மாக்கள் வைதிக கர்மாவுக்கு சேஷமானவைகளென்றும், ஆதலால் சேஷமான கர்மாவை மட்டும் அனுஷ்டித்து பிரதான கர்மாவை அநுஷ்டிக்காமல்விட்டால் அதோகதி ஏற்படு"மென்றும் கூறப்படுகிறது. ஆதலால் "எவன் வேத விஹித கர்மாவை அநாதரவு செய்துவிட்டு, ஸ்மார்த்தமாயும் இதிஹாஸப் பிராப்தமாயுமுள்ள கர்மாவைமட்டும் ஆசரிக்கிருனே அவன் புண்யத்தை அடையமாட்டான்" என்றும் வசனம் கூறுகிறது.

இந்த வசனத்திற்கு ஸ்மிருதிசந்திரிகாகாரர் வ்யாக்யானம் செய்கையில்,

एतत् विद्यमान वैदिकसामर्थ्यविषयं
अतः सति सामर्थ्ये भवितव्यं वैदिकेनेत्युक्तंभवति

என்று சிரௌதகர்மாக்களை அநுஷ்டிக்க ஸாமர்த்தியம் இருந்தால் அவச்யம் அவைகளைச் செய்யவேண்டுமென்று ஏற்படுவதாகச் சொல்லுகிருர்.

அடுத்த வரியில் இதற்குப் பிரமாணத்தையும் சந்திரிகா காரர் காட்டுகிருர் அதாவது— तथाच वसिष्ठः

अलं अग्न्याधेयाय नाऽनाहिताग्निः स्यात् ।
अलं सोमाय नाऽसोमयाजी स्यात् ॥ (வஸி 9—9, 10)
अलं-समर्थइत्यर्थः ।

இந்த வஸிஷ்ட ஸூத்ரத்தில் "ஸாமர்த்தியமுள்ளவன் அதாவது அக்னி ஆதானம் செய்ய சக்தியுள்ளவனுயிருந்தால் அவன் அநாஹிதாக்னியாக இருக்கக்கூடாதென்றும், அதுபோல் ஸோமயாகம் செய்ய ஸாமர்த்தியமுள்ளவன், ஸோமயாகம் செய்யாமலிருக்கக்கூடாது' என்றும் சொல்லப்பட்டது.

ஆகவே ஸ்மிருதி சந்திரிகாகாரர் यो वैदिकमनादृत्य என்ற வசனத்தை எடுத்துக்காட்டி ஸாமர்த்தியமுள்ளவன் அதாவது அதிகாரமுள்ளவன் அக்னிஹோத்ர ஸோமயாகாதிகளை உபேக்ஷித்து ஸ்மார்த்தகர்மாவில் மாத்திரம் பிரவிர்த்திப்பது புண்யமல்லவென்று வஸிஷ்டஸூத்ர பிரமாணத்தைக்கொண்டு நிர்ணயம் செய்திருப்பது முக்யமான விஷயம்.

இங்கு சந்திரிகாகாரர் (सामर्थ्य) ஸாமர்த்தியம் என்பதற்கும் அர்த்தம் செய்திருப்பது அவச்யம் கவனிக்கத்தக்கதாம். ஸாமர்த்யமுள்ளவன் என்ருல் என்ன?

"सामर्थ्यं च अनाहिताग्नि पितृराहित्यादि" என்ருர்

ஜீவித்திருக்கும் தகப்பனுரோ தமயனே அக்னிஹோத்ரியாயில்லாதிருந்தால் புத்ரனுக்கும், கநிஷ்டனுக்கும் அக்னிஹோத்ரம் செய்ய அதிகாரமில்லையென்பது சாஸ்திரம். அது "பரிவித்தி" என்ற தோஷமாகும். ஆதலால் மேற்கண்ட தடை இல்லாமலிருப்பதே ஸாமர்த்தியம் என்று சந்திரிகாகாரர் சொல்லுகிருர். ஆகையால் சாஸ்திரத்தில் தடுக்கப்படாத அதிகாரமுள்ளவன் அவச்யம் சிரௌதங்களை அனுஷ்டிக்கவேணுமென்பது சந்திரிகாகாரரின் நிர்ணயம். விக்ஞாநேச்வராதிகளும் இதேமாதிரி அர்த்தம் செய்வதை மேலே காட்டுவோம். இதனுல்

श्रौतं कर्म नचेत् शक्तः स्मार्तं कर्म समाचरेत् ।
तत्राप्यशक्तः करणे कुर्यात् आचारमन्ततः ॥

(ஸ்ம்ருதி சந்திரிகா)

என்ற வசனமும் வ்யாக்யாதமாயிற்று. சிரௌத கர்மா செய்ய சக்தியில்லாதவன் ஸ்மார்த்தகர்மாவைச் செய்யலாம். ஸ்மார்த்தகர்மாவையும் செய்ய சக்தியில்லாதவன் கடைசி பக்ஷமாக ஸம்பிரதாய ஆசாரங்களைச் செய்யலாம் என்று கூறப்படுவதில் "சக்தியில்லாமை" என்பது "அதிகாரமில்லாமை" என்ற அர்த்தமுள்ளது. பத்நியில்லாமை, பிதா-ஜ்யேஷ்டன் இவர்கள் அக்நிஹோத்ரியாயில்லாமை, முதலிய சாஸ்திரீய அதிகாரமில்லாததே "அசக்தி" என்கிற விஷயம் மேலே விவரமாக நிரூபிக்கப்படும். லௌகிகமான அசக்தி இங்கு சொல்லப்படவில்லை.

### ஸ்மார்த்தகர்மம் சிரௌத சேஷமே.

ஸ்மார்த்தங்களைவிட சிரௌதங்களே பலீயஸ் என்பது विप्रतिषेधे श्रुति लक्षणं बलीयः । श्रुतिर्हि बलीयस्यानुमानिकादाचारात् । என்பதால் ஆபஸ்தம்ப கௌதமாதிகள் வியவஸ்தை செய்திருக்கிறார்கள். (ஆப. தர்மஸூத்ரம்) மீமாம்ஸையிலும் இது விசாரித்து நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. வேத விஹிதகர்மாக்களே முக்யங்களென்றும், ஸ்மார்த்தமான, உபநயநம், ஔபாஸநாதி பாகயஜ்ஞங்கள் சிரௌத கர்மாக்களுக்கு சேஷமென்பதை ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ர வ்யாக்யானமான தாத்பர்ய தர்சனத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

औपासन होमादीनि पाकयज्ञशब्द वाच्यानि,
पाणिग्रहणादीनिच यज्ञेषु अधिकरिष्यमाणस्य
देह संस्कारार्थानि कर्माणि (ஆப- க்ரு 1—1).

இதில் "ஔபாஸநாதி ஸ்மார்த்த கர்மாக்களும், பாணிக்ரஹணாதிகளும், மற்ற பாகயஜ்ஞங்களும், யாகம் செய்ய அதிகாரம் பெறப்போகிற விப்ரனுடைய சரீர ஸம்ஸ்காரங்களுக்காக ஏற்பட்ட கர்மங்கள்" என்று கூறப்படுகிறது. மேலேயும்

यज्ञेषु अधिकरिष्यमाणस्य पुरुषस्य देह
संस्कारा व्याख्याताः (ஆ. க்ரு. 11—17).

என்பதாலும் ஔபாஸனாதிகளின் நிலைமை சொல்லப்பட்டது. ஆதலால் ஸ்மார்த்தகர்மாக்கள் ஸ்வதந்திரங்களல்லவென்றும், சிரௌத யாகங்கள் செய்யப்போகிறவர்களுக்கு சரீர ஸம்ஸ்கார ரூபங்களாகையால் சிரௌத கர்மாக்களுக்கு சேஷங்களென்றும் ஏற்படுகிறது. ஆகவே சேஷங்களான ஸ்மார்த்த கர்மாக்களைமட்டும் அநுஷ்டித்துவிட்டு சேஷியான சிரௌத கர்மாக்களை உபேக்ஷித்து அநுஷ்டியாமலிருப்பதுதோஷமென்பது ஸ்மிருதி சந்திரிகையில்,

**प्रधानं वैदिकं कर्म गुणभूतं तथेतरत् ।**
**गुणनिष्ठः प्रधानं तु हित्वा गच्छत्यधो गतिम् ॥**

என்ற கார்க்ய வசனத்தால் காட்டப்பட்டது. இந்த வசனத்திலும் சிரௌதங்களான வைதிக கர்மாக்களே பிரதானங்கள் என்றும், ஸ்மார்த்தங்களான மற்ற கர்மாக்கள் "குணங்கள்" அதாவது சேஷங்களென்றும் ஸ்பஷ்டமாகச் சொல்லப்படுவது கவனிக்கத்தக்கது.

இவ்வாறு பிரத்யக்ஷ சுருதிகளில் விதிக்கப்பட்டுள்ள சிரௌத யாகாதி கர்மாக்கள் பிரபலங்களென்றும் முக்யங்களென்றும் ஏற்பட்டபிறகு, கிரஹஸ்தனுக்கு யாவஜ்ஜீவம் தினமும் ஸாயம் ப்ராத: காலங்களில் செய்யவேண்டிய அக்நிபரிசர்யை அதாவது ஹோமமானது சிரௌதமாக இருப்பதே முக்யமென்பது விதிக்கிறது.

**संध्या स्नानं जपो होमः देवतानां च तर्पणम् ।**
**आतिथ्यं वैश्वदेवं च षट्कर्माणि दिने दिने ॥**

என்பதால் பராசரரும், மனு யாக்ஞவல்க்யாதி ஸகல ஸ்மிருதிகாரர்களும், ஆபஸ்தம்பாதி எல்லா ஸூத்ரகாரர்களும் நித்யமாக விதிக்கும் ஸாயம் ப்ராத: ஹோமமானது அக்நிஹோத்ரஹோமமாகவே இருக்கவேண்டுமென்பது நிஸ்சிதமாகிறது. சுருதியே நேரில் அக்நிஹோத்ரத்தை நித்யமாக விதிக்கிறபடியால் அதுவே முக்யமென்று ஏற்படுகிறது. ஔபாஸனமும் ஆவச்யகமாயினும் அது பிரத்யக்ஷ சுருதிகளில் விதிக்கப்படவில்லை. அது சிஷ்டாசாரத்தினாலும் ஸ்மிருதிகளாலும் ஏற்பட்ட கர்மாவே யல்லது பிரத்யக்ஷவேதவிஹிதமல்ல. இதை ஆபஸ்தம்பர்

'अथ कर्माणि आचाराद्यानि गृह्यन्ते'

என்ற ஸூத்ரத்தால் ஔபாஸனாதி க்ருஹ்யகர்மாக்கள் ஆசார ப்ராப்தங்களென்று சொல்லுகிறார். ஔபாஸனாதிகளுக்கு அநுமிதசுருதிமூலமாகவே பிராமாண்யம் என்றும் வைதிகமதத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. அக்னிஹோத்ரமோவெனில் இப்போது பிரத்யக்ஷமாயிருக்கும் வேதங்களிலேயே நேராக விதிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் அது பலீயஸ்ஸாகையால் ஸாயம் ப்ராத: காலங்களில் நித்யமாக க்ருஹஸ்தன் செய்ய வேண்டிய ஹோமம் அக்னிஹோத்ரம் தான் என்பது ஸித்தமாகிறது. சுருதி ஸ்மிருதி கல்பஸூத்ராதிபிரமாணங்கள் யாவற்றும் அக்னிஹோத்ரத்தையே முக்யமாக விதிக்கின்றன.

## அக்னிஹோத்ராதிகள் நித்யங்கள்.

வேதங்களில் கர்மகாண்டம் முழுவதிலும் கணக்கற்ற பற்பல யக்ஞங்களும் அவைகளின் பிரயோகங்களும் விதிக்கப்படுகின்றன. இந்த யக்ஞப்பிரயோகங்களைத் தெளிவாகக்கூற ஆபஸ்தம்பாதிகளான அநேக ரிஷிகள் கல்பஸூத்ரங்களைச் செய்துள்ளார்கள். யக்ஞப்ரயோகங்களில் ஏற்படும் ஸம்சய விபர்யயாதிகளைப் போக்கவேண்டியே ஜைமினி மஹர்ஷி பூர்வமீமாம்ஸை என்ற சாஸ்திரத்தைச் செய்துள்ளார். ஆகையால் வேதார்த்த விசாரத்திற்காக ஏற்பட்ட மேற்படி சாஸ்திரங்கள் வைதிகமதத்தில் வேதத்தைப்போல் முக்ய பிரமாணங்களாயிருக்கின்றன.

சுருதிகளில் விதிக்கப்பட்ட யக்ஞங்கள் நித்யம், நைமித்திகம், காம்யம் என்று மூன்று வகைப்பட்டவை என்று பராசரமாதவீயம் கூறுகிறது.

एते च सर्वे यज्ञाः यथायोगं नित्य नैमित्तिक
काम्यभेदेन त्रिविधाः ।

என்று மாதவீயம் கூறிவிட்டு, அவைகளுக்கு உதாஹரணத்தையும் காட்டுகிறது. அக்னிஹோத்ர, தர்சபூர்ணமாஸ, ஸோமயாகாதிகள் நித்யங்கள். க்ஷாமவதீஷ்டி, ஜாதேஷ்டி முதலியவை நைமித்திகங்கள். காரீரீஷ்டி முதலியவை காம்யங்கள். இவை

களைத் தவிர அச்வமேதம், ராஜஸூயம், பௌண்டரீகம், த்வாதச ராத்ரம் முதலிய உத்தமக்ரதுக்களும் வேதத்தில் விதிக்கப்பட்டிருக்கின்றன.

இவைகளில் பிராம்ஹணன், நித்யமாயும், வர்ணாச்ரமதர்ம மாயும் நிஷ்காமமாக யாவஜ்ஜீவம் அநுஷ்டிக்கவேண்டியவைகளாக ஏழு ஹவிர்யக்ஞங்களும், ஏழு ஸோமயக்ஞங்களும் விதிக்கப் பட்டிருக்கின்றன. அக்நிஹோத்ரம், தர்சபூர்ணமாஸம், ஆச்ர யணம், சாதுர்மாஸ்யம், நிரூட பசுபந்தம், ஸௌத்ராமணி, பிண்டபித்ரு யக்ஞம் ஆகிய ஏழும் ஹவிர் யக்ஞங்களெனப்படும். அக்நிஷ்டோமம், அத்யக்நிஷ்டோமம், உக்த்யம், ஷோடசீ, வாஜ பேயம், அதிராத்ரம், அப்தோர்யாமம் என்ற ஏழு யக்ஞங்கள் ஸோம யக்ஞங்களெனப்படும்.

இந்த ஏழு ஹவிர்யக்ஞங்களும், ஏழு ஸோமயக்ஞங்களும் நித்யங்களாயும் ஆச்ரமதர்மங்களாயும், செய்யாவிட்டால் ப்ரத்ய வாய, பிராயச்சித்தாதிகள் உள்ளவையென்றும் ஸகல ஸ்மிருதிக ளும், நிபந்தனகாரர்களான சிஷ்டர்களும் நிஷ்கர்ஷித்திருப்பதால், பிராம்மணர்கள் நிஷ்காமமாக, பகவத் பிரீதியைமட்டும் கருதி இவைகளைச் செய்யவேண்டியது அவச்யமாகுமென்பது நிரூ பிக்கப்படுகிறது.

### இதற்கு சுருதி பிரமாணங்கள்.

பராசரமாதவீயத்தில்,

**तत्र यज्ञानां नित्यत्वं आथर्वणशाखायां श्रूयते-**
**"मन्त्रेषु कर्माणि कवयो यान्यपश्यन् तानि**
**त्रेतायां बहुधा संततानि तान्याचरथ नियतम् "**

(முண்டகம் 2-1)

என்பதால் யக்ஞங்கள் நித்யங்களென்பதற்கு ஆதர்வண சாகையிலிருந்து ஒரு சுருதி வாக்யம் பிரமாணமாகக் காட்டப் பட்டிருக்கிறது.

"கவிகளெனப்படுகிற பிரம்க்ஞர்களான ருஷிகள், மந்திரங் களில் எந்த கர்மாக்களை தபஸ் மஹிமையால் கண்டார்களோ,

அந்த கர்மாக்கள் கார்ஹபத்ய ஆவஹநீய, தக்ஷிணாக்நி என்ற த்ரேதாக்நிகளில் ஸம்பந்தப்பட்டிருக்கின்றன. ஆகையால் அந்த கர்மாக்களை நியதமாக அநுஷ்டியுங்கள்'' என்று இந்த வேதம் கூறுகிறது.

மேலும் மாதவீயத்தில்.—

" कुर्वन्नेवेह कर्माणि जिजीविषेत् शतं समाः "
एतद्वै जरामर्यमग्निहोत्रं जरसावा, हि अस्मात्
प्रमुच्यते मृत्युना च என்ற சுருதியையும் உதாஹரித்து அக்நிஹோத்ராதி கர்மாக்கள் யாவஜ்ஜீவம் அநுஷ்டிக்கப்பட வேண்டியவை என்று காட்டப்பட்டிருக்கிறது.

அக்நிஹோத்ராதிகள் நித்யங்களென்பது

यावज्जीवमग्निहोत्रं जुहोति।
यावज्जीवं दर्शपूर्णमासाभ्यां यजेत ॥

என்ற சுருதி வாக்யங்கள் ஜீவனை நிமித்தமாக வைத்து வீப்பவிதிலிருந்து ஸ்திரப்படுவதாக கல்பஸூத்ரங்களும் ஸ்மிருதிகளும் கூறுகின்றன. நித்யகர்மாக்கள் எவை என்பதை அறிவதற்கு ஒரு ஸங்கேதம் சாஸ்திரங்களால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதாவது-எந்த விதிவாக்யங்களில் நித்யம், ஸதா, ஸததம், ஸர்வதா முதலிய பதங்கள் காணப்படுகின்றனவோ அந்த கர்மாக்கள் நித்யங்களென்று அறியவேணும், இத்துடன் எந்த கர்மாவின் விதி வாக்யத்தில் வீப்ஸை அதாவது அப்யாஸம் அல்லது ஆவ்ருத்தி காணப்படுகிறதோ அது நித்யமென்று நிஸ்ஸந்தேஹமாக அறியவேணும். உதாஹரணமாக ஸந்த்யா வந்தன விதிவாக்யத்தைப் பார்க்கலாம்.

" अहरहः संध्यामुपासीत "

என்பதில் "ஒவ்வொரு நாளும் ஸந்த்யையை உபாஸிக்க வேணும்" என்று சொல்லுகையில் अहरह: என்பது வீப்ஸை அதாவது இரட்டித்துக் கூறப்படுகிறது. "ஒவ்வொரு நாளும்" என்று சொல்வதால் ஒரு நாளாவது ஸந்த்யையைவிடக்கூடாதென்ற நியமம்ஏற்பட்டு இதனால் ஸந்த்யாவந்தனம் நித்யகர்ம என்று ஸ்மிருதிகாரர்கள் நிர்ணயித்துள்ளார்கள். யாவஜ்ஜீவம்

என்ற பதமும் வீப்ஸை அர்த்தத்திலேயே விதிக்கப்படுகிறது. "ஜீவன் உள்ளவரையில் அக்நிஹோத்ரம் செய்யவேணும்" என்று சொன்னால், ஜீவன் உள்ளவரையில் அதை விடக்கூடாதென்கிற நியமம் ஏற்பட்டு நித்யமென்கிற விஷயம் நிச்சயிக்கப்படுகிறது.

பராசரமாதவீயத்தில்

विधिवाक्येषु जीवनाद्युपबन्धस्तु नित्यत्वलक्षकः
"यावज्जीवमग्निहोत्रं जुहोति" इति ॥ என்பதால் ஜீவபதம் பிரயோகித்திருப்பது நித்யம் என்பதை காட்டுகிறதென்று சொல்லப்பட்டது.

இந்த அர்த்தத்தை ஸ்திரப்படுத்தி ஶ்ருதியில்

"अहरहः प्रवृज्यते यदग्निहोत्रं"
"अर्धमासेऽर्धमासे प्रवृज्यते"
"तं सन्ततमुत्तरेऽर्धमास आलभते"
तं काले काले आगते यजते" என்று

அக்நிஹோத்ர, தர்சபூர்ணமாஸாதி விதிவாக்கியங்களில், அஹரஹ:" "அர்த்தமாஸே அர்த்தமாஸே" ஸந்ததம்" "காலே காலே" என்று வீப்ஸை அல்லது அப்யாஸம், (ஆவ்ருத்தி) காணப்படுவதைக்கொண்டு அவை நித்யங்களென்று நிர்ணயிக்கப் பட்டிருக்கின்றன.

அக்நிஹோத்ராதிகளைச் செய்யாவிட்டால் ப்ரத்யவாயம், அதாவது தோஷமும், அதற்கு பிராயஶ்சித்தமும் விதிக்கப்பட்டிருப்பதிலிருந்தும் அவைகள் நித்யகர்மாக்களென்று ரிஷிகள் ஸித்தாந்தம் செய்துள்ளார்கள். இவையெல்லாம் மேலேகாட்டப்படும் ஒவ்வொரு பிரமாணங்களிலிருந்தும் ஸ்பஷ்டமாவதைக் கவனிக்கவும். பராசர மாதவீயத்தில் இது சொல்லப்பட்டுள்ளது.—

अकरणे प्रत्यवायश्च नित्यत्व गमकः । तथा च आथर्वणे—
यस्याग्निहोत्रमदर्शपूर्णमासमनाग्रयणमतिथिवर्जितमहुत

वैश्वदेवमविधिनाहुतं आसप्तमान् तस्य लोकान् हिनस्ति।
इति । (मु. 2—3)
यस्य पिता पितामहोवा सोमं न पिबेत् स व्रात्यः ।
इति च ॥

இந்த மாதவீய வாக்யத்தில் காட்டியுள்ள ஆதர்வண சுருதி பிரமாணமானது, அக்நிஹோத்ராதிகளைச் செய்யாவிட்டால் பிரத்யவாயத்தைச் சொல்லுவதால் அக்நிஹோத்ராதிகள் நித்யங்களென்று தெரிந்துகொள்ளவேணுமென்று ஸ்பஷ்டமாகக்கூறப் படுகிறது.

மனு யாக்ஞவல்க்ய அபிப்பிராயம்

மனுஸ்மிருதியில்:—

अग्निहोत्रं च जुहुयात् आद्यन्ते द्युनिशोः सदा
दर्शेन चार्धमासांते तथर्त्वन्ते द्विजोऽध्वरैः ।
पशुनात्वयनस्यान्ते समान्ते सौमिकैर्मखैः ॥ (म-4—25)

என்பதால் "ஸாயம் ப்ராத:காலங்களில் எப்போதும் அக்நிஹோத்ரம் செய்யவேண்டுமென்றும், அர்த்தமாஸத்தில், தர்சபூர்ணமாஸமும் அயநங்களின் முடிவில் பசுபந்தமும், வர்ஷ முடிவில் ஸோம யாகங்களும் எப்போதும் செய்யப்படவேணும்" என்று விதிக்கப்படுகிறது. இந்த சுலோகத்தில் "ஸதா" (எப்போதும்) என்ற பதம் பிரயோகிக்கப்பட்டிருப்பதால் இது நித்ய கர்ம ஸம்பந்தமான விதியென்று வ்யாக்யாதாக்கள் நிர்ணயித்தார்கள்.

யாக்ஞவல்க்யரும்

प्रतिसंवत्सरं सोमः पशुः प्रत्ययनं तथा ।
कर्तव्याग्रयणेष्टिश्च चातुर्मास्यानिचैवहि ॥ (या-आ-125)

"ஒவ்வொரு வர்ஷத்திலும் ஸோம யாகமும், ஒவ்வொரு அயனத்திலும் பசுபந்தமும, ஆக்ரயணேஷ்டியும், சாதுர்மாஸ்யங்களும் செய்யப்படவேண்டும்" என்று விதிக்கிறார். இந்த வச

னத்தின் வ்யாக்யானத்தில் விக்ஞானேஸ்வரர் काम्यानिश्रौतनि अभिधाय इदानीं नित्यानि आह என்றதால் இந்தவசன விஹித ஸோமா யாகாதிகள் நித்யங்களென்று ஸ்பஷ்டமாகச் சொன்னார்.

तेन संवत्सरे संवत्सरे यजेत
षट्सु षट्सु मासेष्वित्येके (आ-श्रौ-7-28-6)

என்பதால் பசுபந்தம் ஒவ்வோரு வர்ஷமும் செய்யப்பட வேணும். ஆறு—ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை என்று சிலர் அபிப்பிராயம்'' என்று விதிப்பதிலும் வீப்ஸை இருப்பதைப் பார்க்கவும்.

இப்படியே,

वसन्ते वसन्ते ज्योतिष्टोमेन यजेत

என்ற சுருதி—ஸூத்ர வாக்யத்திலும், "ஒவ்வொரு வஸந்த காலத்திலும் ஜ்யோதிஷ்டோம யாகம் செய்யவேணும்'' என்று வீப்ஸை காணப்படுகிறபடியால் மேற்படி மனு யாக்ஞவல்கிய வசனம் போஷிக்கப்படுகிறது.

### ஆபஸ்தம்ப போதயனுதி அபிப்பிராயம்.

இவ்வாறு அக்நிஹோத்ராதிகள் நித்யகர்மாக்களாயிருப்பதால் விவாஹமாகி, கிருஹஸ்தாஸ்ரமம் புகுந்த உடனேயே ஆதானம் செய்து அக்நிஹோத்ராரம்பம் செய்துவிடவேணுமென்று ஆபஸ்தம்ப போதயனுதிகள் விதிக்கிறார்கள்.

ஆபஸ்தம்பர்

निवेशे हि वृत्ते नैयमिकानि श्रूयन्ते
अग्निहोत्रं, अतिथयः—(आ-ध-1-13-22)

என்பதால் "விவாஹம் முடிந்தவுடனேயே நியதமாக (கட்டாயமாக)ச் செய்யவேண்டிய கர்மாக்கள் சுருதியில் விதிக்கப் பட்டிருக்கின்றன. அவை, அக்நிஹோத்ரம், வைஸ்வதேவம் முதலானவைகள்'' என்று விவாஹமானவுடன் அக்நிஹோத்ரம் நியதமாகச் செய்யப்படவேண்டுமென்கிறார். இங்கு नियमेन कर्तव्यानि नित्यानिकर्माणि (கட்டாயம் செய்யப்படவேண்டியவை) என்று

ஹரதத்தர் வ்யாக்யானம் செய்வதால் அக்நிஹோத்ரானுஷ்டான த்தின் ஆவச்யகதை சொல்லப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது.

போதாயனரும் தமது கிருஹ்ய ஸூத்ரத்தில் விவாஹ கர்மாவைச் சொல்லிவிட்டு உடனே—

**अत्र अग्न्याधेयस्य कालः। यथाश्रद्धं**
**अत ऊर्ध्वं जीवति पितरि अग्नीनादधीतेति बोधायनः।**
**जीवति मृतेवा जायामवाप्य दशमे**
**अहनीति शालीकिः॥ (बो-गृ-1-10-1)**

"இங்கு அக்நி ஆதானம் செய்யக்காலம். விவாஹ கார்யத்திற்கு பிறகு பிதா ஜீவித்திருக்கும்போதே ச்ரத்தைக்கேற்றபடி அக்நி ஆதானம் செய்யவேண்டுமென்று போதாயனரின் அபிப்பிராயம். சாலீகி ரிஷியோவென்றால், பிதா ஜீவித்திருந்தாலும் இல்லாவிட்டாலும், பத்நியை அடைந்த பிறகு (விவாஹமான பிறகு) பத்தாவது நாளிலேயே அக்நி ஆதானம் செய்துவிட வேண்டுமென்கிறார்."

என்பதால் விவாஹமான பத்து தினங்களிலேயே அக்நிஹோத்ராரம்பம் செய்துவிடவேணுமென்று விதிக்கிறார்.

அடுத்த ஸூத்ரத்தில், கீழ் சொன்னபடி அக்நி ஆதானம் செய்து அக்நிஹோத்ராம்பம் செய்யாமல்போனால் தோஷத்தைக் கூறுகிறார்.

**मादुर्ब्राह्मणोभवति । अथाप्युदाहरन्ति·**
**यस्य वेदश्च वेदिश्च विच्छिद्येते त्रिपूरुषम् ।**
**स वै दुर्ब्राह्मणो नाम यश्च वै वृषलीपतिः॥ (बो·गृ·1.10-4**

"அக்நி ஆதானம் செய்யாமலிருந்து அதனால் துர் பிராம்மணனாக ஆகவேண்டாம். இதைப்பற்றி முன்னோர்கள் கூறுவதாவது:—எவனுக்கு வேதமும், வேதியென்கிற அக்நிஹோத்ராதி கர்மாக்களும் மூன்று தலைமுறை விச்சேதம் அடைந்து விட்டனவோ, அதாவது அநுஷ்டானமில்லாமல் விட்டுப்போய் விட்டனவோ, அவன் துர்ப் பிராம்மணன் எனப்படுவான்."

என்பதால் தௌர்ப்ராம்ஹண்யம் என்ற தோஷம் உண்டாவதாகச் சொல்லியுள்ளார்.

மூன்று தலைமுறை அக்நிஹோத்ராதிகள் விட்டுப்போனவன் ஸோம யாகம் செய்யவிரும்பினால் தௌர்ப்பிராம்மண்ய தோஷ பரிஹாரார்த்தமாக ஆச்விந பசு யாகம் செய்ய வேண்டுமென்று

आश्विनं धूम्रललाममालभेत यो दुर्ब्राह्मणस्सोमं पिपासेत् ॥

என்ற தைத்திரீய சுருதி கூறுகிறது. இதன் ஸாயண பாஷ்யத்தில் மேற்கண்ட போதாயன ஸூத்ரமான यस्य वेदश्च वेदिश्च என்ற பிரமாணம் உதாஹரிக்கப்பட்டிருப்பதையும் கவனிக்கவேணும்.

ஸ்மிருதி சந்திரிகையிலும்—

विवाहात्परमाधाय जुहुदेवाग्निहोत्रकम्
दर्शपूर्णमासेष्टि चातुर्मास्यान् क्रमाच्चरेत्
सर्वथा प्रथमः सोम यागः कार्यो बुधोत्तमैः।
यथासंभविनांगेन शक्त्या दत्वा तु दक्षिणां।
व्रात्य दुर्ब्राह्मणत्वादि महादोषोपशान्तये ॥

"விவாஹத்திற்குப் பிறகு ஆதானம் செய்து அக்நிஹோத்ரம் செய்துகொண்டு, தர்ச பூர்ணமாஸ, சாதுர்மாஸ்யாதிகளை அநுஷ்டிக்கவேணும். எப்படியாவது யதாசக்தி தக்ஷிணை கொடுத்தும், முடிந்தவரையில் அங்கங்களைக் கொண்டும் ஸோம யாகத்தை முதலாவதாக அநுஷ்டித்து தீரவேண்டும். ஏனெனில் வ்ராத்யதை, தௌர்ப் பிராம்மண்யம் முதலிய மஹா தோஷங்கள் யக்ஞாநுஷ்டானத்தினால் நீக்கப்பட வேண்டியவைகளாயிருக்கின்றன."

என்ற வசனங்களால் போதாயனர் கூறியதுபோல். விவாஹத்திற்குப் பிறகு உடனேயே ஆதாநாக்நி ஹோத்ராதிகளும், ஸோம யாகமும் செய்யவேண்டுமென்று வற்புறுத்தியிருப்பதுடன் போதாயனர் சொன்ன தௌர்பிராம்மண்ய தோஷமும் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

## யக்ஞாதிகள் ஸம்ஸ்காரங்கள்.

கௌதம மஹர்ஷி, அக்னிஹோத்ராதிகர்மாக்களை ஸம்ஸ்கார கர்மாக்களாக விதிக்கிறார். அவர் கூறியுள்ள நாற்பது ஸம்ஸ்காரங்களில் கீழேசொன்ன ஏழு ஹவிர் யக்ஞங்களையும், ஏழு ஸோம யக்ஞங்களையும் சேர்த்து அவைகளைக் கட்டாயமாக அநுஷ்டிக்கவேணுமென்று விதிக்கிறார். (கௌ-தர்ம)

மனுவும் யக்ஞதீக்ஷையை ஓர் ஸம்ஸ்காரமாகக் கூறியுள்ளார்.

**मातुरग्रेऽधिजननं द्वितीयं मौंजिबंधने**
**तृतीयं यज्ञदीक्षायां द्विजस्य श्रुतिचोदनात्** (ம-2-169)

"தாயிடம் பிறப்பது முதல் ஜந்மம், இரண்டாவது ஜன்மம் உபநயந ஸம்ஸ்காரத்தினால் வருகிறது. மூன்றாவது ஜன்மமானது யாகதீக்ஷயில் ஏற்படுகிறதாக சுருதியின் கட்டளையிருக்கிறது".

இம்மாதிரி வேறு பல ஸ்மிருதிகாரர்களும் சொல்லியுள்ளார்கள். ஆகையால்தான் மனு,

**महायज्ञैश्च यज्ञैश्च ब्राह्मीयं क्रियते तनुः।**

என்பதால் யக்ஞானுஷ்டானத்தினால் இந்த சரீரமானது பிரம்ஹமயமாகச் செய்யப்படுகிறதென்றும் கூறியுள்ளார்.

## பிரம்ஹஸூத்ர அபிப்பிராயம்.

யக்ஞாக்னிஹோத்ராதிகள் நித்யங்களென்றும், ஆச்ரமதர்மங்களென்றும், சுருதி, ஸ்மிருதிகள் விதிப்பதுபோல் பிரம்ஹஸூத்ரத்திலும் விதிக்கப்பட்டிருப்பதும், அங்கு ஸ்ரீசங்கர ஸ்ரீராமானுஜர் முதலிய ஆசார்யர்கள் தங்கள் பாஷ்யங்களில் வெகுதெளிவாக, இதை நிர்ணயித்திருப்பதையும் இங்கு காட்டுகிறோம்.

பிரம்ஹஸூத்ரம் ஸர்வாபேக்ஷாதிகரணத்தில்

**"तमेतं वेदानुवचनेन ब्राह्मणा विविदिषन्ति यज्ञेन–"**

என்ற சுருதியால் வித்யா ஸாதனார்த்தமாகவோ, பிரும்ஹ வித்யாங்கமாகவோ அக்னிஹோத்ராதியக்ஞங்கள் முமுக்ஷுவுக்கும் அவச்ய கர்த்தவ்யங்களென்பதை **सर्वापेक्षाच यज्ञादि श्रुतेरश्ववत्।** என்ற ஸூத்ரத்தில் ஸித்தாந்தம் செய்துவிட்டு,

विहितत्वाच्च आश्रमकर्मापि ॥ 3—4—32.

என்கிற ஸூத்ரத்தால் அக்நிஹோத்ர, தர்சபூர்ணமாஸாதி யக்ஞங்கள் யாவஜ்ஜீவ சுருதிகளால் நித்யங்களாயும், ஆச்ரம தர்மங்களாகவும் விதிக்கப்பட்டிருப்பதால் முமுக்ஷுவல்லாத எல்லா கிரஹஸ்தர்களும் வித்யாஸாதனார்த்தமன்றிக்கே, ஸ்வதந்திரமாக ஆச்ரம தர்மங்களாக யக்ஞாதிகளை அநுஷ்டிக்கவேணுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது

ஆதலால் பிர்ம்ஹஸூத்ரமே அக்நிஹோத்ராதிகள் ஆச்ரம தர்மங்களென்றும் நித்யங்களென்றும் எல்லா கிரஹஸ்தர்களும் அவைகளை அநுஷ்டிக்கவேணுமென்றும் விதித்துவிட்டதால் இது அசைக்கத்திருப்பமுடியாத பிரமாணமாயிருப்பதை ஆஸ்திகர்கள் கவனிக்கவேணும்.

### ஸ்ரீசங்கரபகவத்பாதாள் அபிப்பிராயம்.

இந்த ஸூத்ரபாஷ்யத்தில் பலவிடங்களில் ஸ்ரீ பகவத்பாதாசார்யாள், அக்நிஹோத்ராதிகள் நித்யகர்மாவென்றும், அவச்ய கர்த்தவ்ய ஆச்ரம தர்மங்களென்றும் சொல்லியிருப்பதைப் பார்க்கலாம்.

ஆச்ரம கர்மாதிகரணத்தில் ஸ்ரீபகவத்பாத பாஷ்யம் கூறும் ஸித்தாந்தமாவது—

आश्रममात्रनिष्ठस्यापि अमुमुक्षोः कर्तव्यान्येव नित्यानिकर्माणि "यावज्जीवमग्निहोत्रं जुहोति" इत्यादिना विहितत्वात् ।

இந்த வாக்யத்தால் முமுக்ஷுவல்லாத கிரஹஸ்தாஸ்ரமியும் யாவஜ்ஜீவ சுருதிவிஹிதங்களான அக்நிஹோத்ராதி நித்யகர்மாக்களை ஆச்ரம தர்மமாக அவச்யம் அநுஷ்டிக்கவேணுமென்பதை ஸ்ரீமத் ஆசார்யாள் ஸ்பஷ்டமாகச் சொல்லுகிறார்கள். இங்கு ஆசார்யாள் யாவஜ்ஜீவ சுருதியை பிரமாணமாகக் காட்டியிருப்பதும், அக்நிஹோத்ராதி கர்மாக்களை நித்யங்களென்று கூறியிருப்பதும் மிகவும் முக்யமானது.

யக்ஞாக்நிஹோத்ராதி நித்யகர்மாக்கள் ஆச்ரம தர்மங்களாகவும் எல்லா கிரஹஸ்தர்களாலும் அனுஷ்டிக்கப்பட வேண்டி

யவைகளாயும் विहितत्वाच्च आश्रमकर्मापि என்ற ஸூத்ர ஸித்தாந்த மாகையால், முமுக்ஷுவானவன் பிரம்ஹவித்யாஸாதனமாக அதே யக்ஞாதிகளை எப்படி அனுஷ்டிக்க முடியுமென்று சங்கித்து सहकारित्वेन च என்ற அடுத்த ஸூத்ரத்தால் அந்த யக்ஞாதி களையே வித்யாஸஹகாரிகளாயும் அனுஷ்டிக்கலாமென்று நிர்ண யிக்கப்பட்டது.

இங்கு ஸ்ரீபகவத்பாதாசார்யாள், நித்யாநித்ய ஸம்யோக விரோதம்வராதென்று ஸித்தாந்தம் செய்திருப்பதும் முக்ய மாகும். டக்ஞாக்நி ஹோத்ராதிகள் ஆச்ரமதர்மங்கள். அவைகள் யாவஜ்ஜீவசுருதி விஹிதங்களாகையால் நித்யங்கள். तमेतं वेदानुवचनेन, என்ற சுருதியால் வித்யாஸாதனமாக விதிக்கப்பட்ட அந்த யக்ஞாதிகளே அநித்யங்களாகின்றன. இப்படி நித்யா நித்ய ஸம்யோக விரோதம் தோன்றினாலும் இரண்டும் தனித் தனியானதென்று, காதிர—யூப உதாஹரணத்தைக் காட்டி ஸ்ரீ ஆசார்யாள் நிர்ணயித்தார்கள். இங்கு

नित्योह्येकः संयोगः यावज्जीवादि वाक्य कल्पितः ।

என்ற வாக்யத்தால் யாவஜ்ஜீவ சுருதி விஹிதங்களான அக்நி ஹோத்ர தர்சபூர்ணமாஸாதிகள் நித்யங்களென்பதை ஸ்ரீ ஆசார் யாள் குறிப்பிட்டிருப்பது கவனிக்கத்தக்கது.

மேலேயும் अनभिभवंचदर्शयति என்ற ஸூத்ரபாஷ்யத்திலும், ஸ்ரீ ஆசார்யாள்,

तस्मात् यज्ञादीनि, आश्रम कर्माणि च भवन्ति ।
विद्यासहकारीणिचेति निश्चितम् ।

என்ற வாக்கியத்தாலும் யக்ஞாதிகள் ஸ்வதந்திரமான ஆச் ரமகர்மாக்கள் என்பதை நிஸ்சிதம் என்ற பதத்தைப்போட்டு நிச் சயித்திருக்கிறார்கள்.

அக்நிஹோத்ராதி அதிகரணத்திலும், அக்நிஹோத்ராதி கர்மபலனான புண்யத்திற்கும் அச்லேஷம் சொல்லப்பட்டதால் அக்நிஹோத்ராதிகள் முமுக்ஷுவுக்கு வேண்டியதில்லையென்கிற

பூர்வபக்ஷத்தை நிரஸனம் செய்து अग्निहोत्रादितु, என்கிற ஸூத்ரத்தால் அக்னிஹோத்ராதிகள் அவச்யானுஷ்டேயங்களென்று ஸித்தாந்தம் செய்யப்பட்டது. இங்கும் ஸ்ரீபகவத்பாதாசார்யாள்

यत् नित्यं कर्म वैदिकं अग्निहोत्रादि
तत् तत्कार्यायैव भवति। ज्ञानस्य
यत्कार्यं तदेव अस्यापि कार्यमित्यर्थः ॥

என்ற வாக்யத்தால் அக்னிஹோத்ராதி வைதிக கர்மாவானது நித்யமென்று கூறியுள்ளார். இதற்கு அடுத்த ஸூத்ரத்திலும்

अतः अग्निहोत्रादेःनित्यात्कर्मणः।

என்ற வாக்யத்திலும் அக்னிஹோத்ராதிகள் நித்யங்களென்று சொல்லுகிறார்.

இவ்வாறு பிர்ம்மஸூத்ரபாஷ்யம், கீதாபாஷ்யம் முதலிய விடங்களில் பலவிடத்தில் ஸ்ரீபகவத்பாதாசார்யாள் யக்ஞாக்னிஹோத்ராதிகள், நித்யங்களென்றும் ஆச்ரம தர்மங்களென்றும் அவச்யானுஷ்டேயங்களென்றும் சொல்லி, முமுக்ஷுவல்லாத கிரஹஸ்தன், ஆச்ரமதர்மங்களாகவும், முமுக்ஷுவானவன் வித்யாஸாதனமாகவும் யக்ஞாதிகளை அநுஷ்டிக்கவேண்டுமென்று ஸந்தேஹத்திற்கு இடமின்றி நிர்ணயித்திருக்கிறார்.

விசிஷ்டாத்வைத பாஷ்யகாரராகிய ஸ்ரீபகவத் ராமானுஜரும் மேற்கண்ட பிர்ம்ஹஸூத்ரங்களில் பகவத்பாத பாஷ்யத்தைப் போலவே ஸித்தாந்தம் செய்திருப்பதை மேலே தனியாகக் குறிப்பிட்டுள்ளோம்.

### ஸ்ரீஅப்பய்ய தீக்ஷிதாள் அபிப்பிராயம்.

ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதேந்த்ராளும் சிவார்க்கமணி தீபிகையில் ஆச்ரம கர்மாதிகரணத்தில் विहितत्वाच्च என்ற ஸூத்ரத்தில்

यज्ञादिकं कर्म आश्रम कर्मापि भवति।
अपिशब्दात् विद्यासाधनं च। "यावज्जीवमग्निहोत्रं जुहोति"
इति श्रुत्या आश्रम धर्मत्वेन विहितत्वात्

आश्रमधर्मत्वेनापि अनुष्ठेयम् ।

என்ற வாக்யங்களால் யக்ஞாதிகள் யாவஜ்ஜீவசுருதி விஹிதங்களாகையால் அவைகளை ஆச்ரமதர்மங்களாகவும் அனுஷ்டிக்க வேணுமென்று கூறியுள்ளார்.

### கீதையின் நிர்ணயம்.

பிர்ம்ஹ ஸூத்ரத்தில்போல் பகவத்கீதையிலும் பகவான் பலவிடங்களில் காம்யகர்மாக்களை வர்ஜிக்கும்படி உபதேசிப்பதுடன் பல, ஸங்கத்யாகாதி புரஸ்ஸரமாக நித்யகர்மாக்களை, முக்யமாக யக்ஞாதிகளை அனுஷ்டிக்கவேண்டுமென்று உபதேசிக்கிறார்.

கீதையில் பகவான்,

अफलाकांक्षिभिः यज्ञो विधिदृष्टो य इज्यते
यष्टव्यमेवेतिमनः समाधाय स सात्विकः ॥ (17-11)

என்பதால் "பலனைக் கோராமல் சாஸ்திர விதியை அநுஸரித்தும், அவச்யம் செய்யவேண்டுமென்ற ஒரே மனோபாவத்துடனும் செய்யப்படும் யக்ஞமே ஸாத்விக யக்ஞமாகும்" என்றார்.

இங்கு यष्टव्यमित्येव' என்பதால் யக்ஞமானது சாஸ்திரவிதிகளை அநுஸரித்து அவச்யம் செய்து தீரவேண்டியதென்கிற ஒரே அபிஸந்தியுடன் யக்ஞத்தை அநுஷ்டிப்பதே நியாயமென்று பகவான் சொல்வதிலிருந்து யக்ஞங்கள் நித்யங்களென்பது தெளிவாகிறது.

கீதையில் 18-வது அத்யாயத்திலும் பகவான் பூர்வபக்ஷஸித்தாந்தரூபமாக சர்ச்சை செய்து யக்ஞானுஷ்டானம் அவச்யமென்பதை உறுதிப்படுத்தியுள்ளார்.

त्याज्यं दोषवदित्येके कर्म प्राहुः मनीषिणः । (18-3)

என்பதால் "யாகாதி கர்மங்களில் பிராணி ஹிம்ஸாதி தோஷம் கலந்திருப்பதால் அவைகளை விட்டுவிடலா"மென்று சில புத்திமான்கள் வாதிப்பதாக பூர்வபக்ஷம் செய்துகொண்டு, "இவ்விஷயத்தில் என்னுடைய நிச்சயத்தைச் சொல்லுகிறேன் கேள்" என்று பகவான்,

निश्चयं शृणुमे तत्र (गी–18—4)
என்பதால் சொல்லி,

यज्ञ दान तपः कर्म न त्याज्यं कार्यमेव तत् (गी 18-5)

என்பதால் "யக்ஞாதி கர்மாக்களைவிடக்கூடாது. அவச்யம் அவை செய்யப்படவேண்டியவைகள்" என்று தீர்மானம் சொல்லுகிறார். न त्याज्यं "விடக்கூடாது" என்று சொன்னதுடன் நில்லாமல் कार्यमेव என்பதால் "செய்தேயாகவேண்டும்" என்று வற்புறுத்தி பகவான் கூறுவதும் கவனிக்கத்தக்கது. ஏன் செய்தேயாகவேண்டுமென்பதற்குக் காரணமும் பகவான் கூறுகிறார்—

यज्ञो दानं तपश्चेति पावनानि मनीषिणां

யக்ஞாதிகள் பலாபிஸந்தியின்றி பகவத் பிரீதியைமட்டும் கருதிச் செய்யும் உபாஸகர்களுக்கு பரமபரிசுத்திகரங்களான கர்மாக்கள். ஆகையால் அவைகளை விடக்கூடாதென்றார். இதற்கு மேல் ஸ்லோகத்தாலும் பகவான் தமது ஸித்தாந்தத்தை

एतान्यपितु कर्माणि संगं त्यक्त्वा फलानिच।
कर्तव्यानीति मे पार्थ निश्चितं मतमुत्तमम् ॥ (गी18—6)

என்பதால் முடிவாகக் கூறியுள்ளார். அதாவது "இந்த யக்ஞாதி கர்மாக்களை பல, ஸங்க த்யாகபுரஸ்ஸரமாக அவச்யம் செய்யவேண்டுமென்று என்னுடைய நிஸ்சிதமாயும், உத்தமமாயுமுள்ள அபிப்பிராயமாகும்" என்று. இங்கு பகவான் निश्चितम्, उत्तमम्) "நிஸ்சிதம், உத்தமம்" என்ற அழுத்தமான பதங்களை பிரயோகித்துப் பேசுவதிலிருந்து யக்ஞாதிகளின் முக்யத்வமும், அது விஷயமாக பகவானின் ஸ்பஷ்டமான திருவுள்ளமும் வெளிப்படுகிறது. ஆரம்பத்தில், "எனது நிஸ்சயத்தைக்கேள்" என்று பிரதிக்ஞையுடன் பகவான் தொடங்கி முடிவிலும் இதுவே எனது நிஸ்சிதமான அபிப்பிராயம், என்று இரண்டு இடத்திலும் நிஸ்சய பதம் போட்டிருப்பது முக்யமாகும்.

கீதையில் இந்த ப்ரகரணம் நித்ய கர்மாவான யக்ஞவிஷயமென்றும்: காம்ய யக்ஞ விஷயமல்லவென்றும், ஸ்ரீபகவத் பாத பாஷ்யம் கூறுவதுடன் இது முமுக்ஷு விஷயமென்றும் சொல்

லப்படுகிறது. கீதையில் கீழே त्रैविद्यामां என்பதால் கூறப்படுவது காம்ய யக்ஞ விஷயமென்றும் ஸ்ரீபகவத் பாத பாஷ்யத்தில் தெளிவாக்கப்பட்டிருக்கிறது.

பிரம்ம ஸூத்ரத்தில் शमदमाद्युपेतस्स्यात् என்ற ஸூத்ர பாஷ்யத்தில் ஸ்ரீபகவத் பாதாசார்யாள், கீதையில் யக்ஞாதிகளைப்பற்றிய உபதேசத்தைப் பற்றிக் கூறுகையில்

स्मृतिष्वपि गीताद्यासु, अनभिसन्धाय फलं
अनुष्ठितानि यज्ञादीनि मुमुक्षोः ज्ञानसाधनानि भवन्ति इति
प्रतिपाद्यते ।

என்பதால் கீதையில் முமுக்ஷுக்களுக்கும் ஞான ஸாதனார்த்தமாக யக்ஞாதிகள் அனுஷ்டிக்க வேண்டியவைகளாக விதிக்கப்பட்டுள்ளன என்று சொல்லியுள்ளார். கீதையில் यज्ञ दान तपः कर्म, இத்யாதிகளில் காணப்படும் யக்ஞ தான தபஸ் முதலியவை यज्ञेन दानेन तपसाऽनाशकेन என்ற சுருதியை அநுவதிப்பதுடன் பிரம்மஸூத்ரத்தில் ஸர்வா பேக்ஷாதிகரணாதிகளில் வெளியிடப்பட்ட ஸித்தாந்தமே மேற்படி கீதையிலும் சொல்லப்படுகிறதாகையால் இரண்டும் ஸமமான விஷயமென்பது விசதமாகும்.

### தாத்பர்ய தர்சன வாக்யங்கள்

ஆபஸ்தம்ப கிருஹ்ய ஸூத்ரவ்யாக்யானமாகிய ஸூதர்சன பாஷ்யத்தில் யக்ஞங்களைப் பற்றிக் கூறியிருப்பதை அறிந்தால் அநேக ஸந்தேஹங்கள் நிவிர்த்தியாகிவிடும். அங்கு காணப்படும் வாக்யங்களாவன:—

"इह हि यज्ञाः एकविंशति भेदाः । सप्त पाकयज्ञाः औपासन होमादयः । सप्त हविर्यज्ञाः अग्निहोत्रादयः । सप्तचैव सोमसंस्थाः अग्निष्टोमादयः ।
एते च नित्याः । नियत प्रदोषकालीन जीवन निमित्तका इत्यर्थः । कुत एते नित्याः? "जायमानो वै ब्राह्मणः—यज्ञेन देवेभ्यः"—इत्यत्र एकवचनं, "यज्ञं व्याख्यास्याम" इतिवत्

जात्यभिप्रायं मन्यमानस्य भगवतो वसिष्ठस्य "नैयमिकं ह्येतद्गणसंस्तुतं" इति वचनेन एषामवश्यानुष्ठेयत्वावगमात् ॥
(ஆ-க்ரு-1-1)

அதாவது "இங்கு யக்ஞங்கள் 21 பேதங்களுள்ளவை. ஔபாஸனாதிகளான ஏழு பாக யக்ஞங்கள். அக்னிஹோத்ராதிகளான ஏழு ஹவிர் யக்ஞங்கள். அக்னிஷ்டோமாதிகளான ஏழு ஸோம யாகங்கள். இவைகள் நித்யங்கள். ஜீவனை நிமித்தமாகக்கொண்டு விதிக்கப்பட்டவை என்று அர்த்தம். இவைகள் எப்படி நித்யங்கள்? "ஜாயமானோவை" என்ற சுருதியில் தேவருண பரிஹாரார்த்தமாக யக்ஞம் விதிக்கப்பட்டிருப்பதாலும், அந்த யக்ஞபதமானது கீழ் சொன்ன எல்லா யக்ஞங்களைப்பற்றியதாகையாலும், வஸிஷ்டர், யக்ஞாதிகள் ருண தோஷத்தைக் காட்டி விதிக்கப்பட்டிருப்பதால் நியமமாக (கட்டாயமாக) அனுஷ்டிக்கப்பட வேண்டுமென்று சொல்லுவதாலும் இவை நித்யங்களாகும்;'

सायंप्रातरत ऊर्ध्वं, "यावज्जीवमग्निहोत्रं जुहोति"
"वसन्ते वसन्ते ज्योतिष्टोमेन यजेत"
इत्येवमादिभिः—प्रयोगाभ्यासावगमात् ॥

என்ற வாக்யங்களால் வீப்ஸை அல்லது அப்யாஸத்துடன் விதிக்கப்படுவதாலும் மேற் கண்ட யக்ஞங்கள் நித்யங்கள்.

तथैव सोमेष्ट्यादेश्च अकरणे प्रायश्चित्तविधानेन
प्रत्यवायोत्पत्यवगमात् । न तु सौर्यादिवत् केवल काम्याः ।
उक्तहेतूनां सर्वेषामनुपपत्तेः । यत एवैते नित्याः अत एव
अनाहिताग्नितायाः उपपातकगणे पाठः
तस्मात् मन्द मध्यम उत्कृष्टमतिभिः
सर्वैपि एते अवश्यं कर्तव्याः" ॥ (ஆ-க்ரு-1-1)

"ஸோமபாக தர்ச பூர்ணமாஸாதிகளைச் செய்யாவிட்டால் பிராயச்சித்தம் விதிக்கப்படுவதால் பிரத்யவாய மேற்படுவதாயிருக்கிறது. ஆகையால் இந்த யக்ஞங்கள் ஸௌர்யாதி யாகங்கள் போல் கேவல

காம்யங்களல்ல. இந்த யக்ஞங்கள் நித்யங்களாயிருப்பதால் தான். "ஆஹிதாக்நியாயில்லாமை," தோஷமாகக் கருதப்பட்டு, அதை உபபாதக பாபங்களில் ஸ்மிருதிகள் படித்து விட்டன. ஆதலால் மந்தன், மத்யமன், உயர்ந்தவன் ஆகிய எல்லா அதிகாரிகளாலும் யக்ஞாதிகள் அவச்யம் அநுஷ்டிக்கப்படவேண்டியவைகளே"

மேற்கண்ட வாக்யங்களால் ஸுதர்சன பாஷ்யகாரர் யக்ஞ விஷயமாகப் பல ஸந்தேஹங்களை நிவிர்த்தி செய்துவிட்டார். அந்த வாக்யங்களில் இவர் யக்ஞங்கள் நித்யங்களென்று பிரமாணங்களால் விளக்குகிறார். யக்ஞங்களைச் செய்யாவிட்டால் பிரத்யவாய பிராயச்சித்தங்கள் உண்டென்று காட்டுகிறார். யக்ஞங்கள் கேவல காம்யங்களல்லவென்கிறார். யாகம் செய்யாவிடில் ருண தோஷம் ஏற்படுவதாயும், ஆஹிதாக்நியாய் ஆகாமலிருப்பது உப பாதக பாபமென்றும் காட்டுகிறார். கடைசியாக, மந்தன், மத்யமன், உயர்ந்தவன் ஆகிய எல்லா அதிகாரிகளும் அவச்யம் யக்ஞாதிகள் செய்ய வேண்டியதே என்று முடிக்கிறார்.

## ருண தோஷ நிரூபணம்

யக்ஞம் செய்யாவிட்டால் ருண தோஷம் போகாதென்று இவர் கூறுவது, சுருதியாலும் மநு-யாக்ஞவல்க்யாதி ஸ்மிருதிகாரர்களாலும் சொல்லப்பட்டிருப்பதை மூலமாகக் கொண்டதாகையால், இது விஷயமாக சுருதி ஸ்மிருதி அபிப்பிராயங்களை எடுத்துக் காட்டுகிறோம். யக்ஞ விஷயமான ருண தோஷத்தைப் பற்றி சுருதியும், ஸ்மிருதிகாரர்களும் வெகு பிரபலமாகக் குறிப்பிடுவதால் அதன் நிர்ணயத்தை யாவரும் அறிந்து கொள்வது அவச்யம்.

தைத்திரீய யஜுர் வேதம் 6வது காண்டத்தில்

जायमानो वै ब्राह्मणः त्रिभिर् ऋणवा
जायते ब्रह्मचर्येणर्षिभ्यः यज्ञेन देवेभ्यः प्रजया पितृभ्यः
एषवा अनृणो यः पुत्री यज्वा ब्रह्मचारिवासी ॥ என்ற

சுருதியானது "பிராம்மணன் ஜனிக்கும் போது மூன்று ருணங்களுடன் ஜனிக்கிறான். வேதாத்யயனத்தினால் ரிஷிகளுக்கும், யக்ஞங்களால் தேவர்களுக்கும், பிரஜை அல்லது ஸந்ததியால் பித்ருக்களுக்கும், திருப்தி செய்து அந்த ருணம் நீக்கப்படவேணும். ஆகையால் புத்ரவானையும், யாகம் செய்தவனையும், வேதாத்யயனம் செய்தவனையுமிருப்பவனே ருண தோஷமற்றவன்"

என்று சொல்லுகிறது. ஆதலால் யக்ஞம் செய்யாவிட்டால் தோஷம் உண்டென்று சுருதியின் அபிப்பிராயம். இங்கு காணப்படும், "யக்ஞ" பதத்திற்கு அக்னிஹோத்ராதிகளும், ஸோமயாகாதிகளும் அர்த்தமென்று ஏற்படுகிறது. ஏனெனில் அடுத்த வாக்யத்தில் 'யஜ்வா' என்ற பதம் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது. 'யஜ்வா' என்பது சிரௌத யக்ஞங்களைச் செய்தவனையே சொல்லும் சக்தியுள்ளது. ஔபாஸனாதி ஸ்மார்த்த கர்மாக்களை அநுஷ்டிப்பவர்களை 'யஜ்வா' என்று சாஸ்திரமோ லோகமோ வ்யவஹரிப்பதில்லை. பிரத்யக்ஷ சுருதி விஹிதங்களான அக்னிஹோத்ராதிகளைச் செய்தவனே ருணதோஷமற்றவனென்று ஏற்படுகிறது. இதை போதாயன மஹர்ஷி தமது ஸூத்ரத்தில்

एष वा अनृणो यः पुत्री यज्वेति आहिताग्निरेव एष उक्तो भवति ॥ (बो-1-2-4)

என்பதால் ஆஹிதாக்னியாயிருப்பனவே ருணதோஷ மற்றவனென்று அந்த சுருதிதாத்பர்யமென்பதை விளக்கியுள்ளார். மனு-யாக்ஞவல்க்யாதி ஸ்ம்ருதிகாரர்களும் எல்லா நிபந்தனகாரர்களும் இந்த ருணதோஷத்தை முக்யமாகக்கொண்டு விதிகள் செய்வதிலிருந்து சுருதியில் கூறப்பட்ட ருண தோஷமானது கேவலம் பிரசம்ஸை, அல்லது அர்த்தவாதம் மாத்திரமென்று நினைக்க இடமில்லை.

## இதில் மனுவின் அபிப்பிராயம்

மனு-இந்த ருணதோஷத்தை வற்புறுத்தி மூன்று சுலோகங்களால் சுருதியின் தாத்பர்யத்தை விளக்கி விதி செய்வதாவது:—

ऋणानि त्रीणि अपाकृत्य मनो मोक्षे निवेशयेत् ।
अनपाकृत्य मोक्षं तु सेवमानो व्रजत्यधः ॥ (म-6-35)

"மூன்று ருணங்களையும் நீக்கிக்கொண்ட பிறகே மனதை மோக்ஷவழியில் (ஸன்யாஸத்தில்) வைக்க வேணும். ருணத்தை நீக்கிக்கொள்ளாமல் ஸன்யாஸத்தை அனுஷ்டிப்பவன் அதோகதி அடைவான்"

ஆகையால்

अधीत्य विधिवत् वेदान् पुत्रांश्चोत्पाद्य धर्मतः ।
इष्ट्वा च शक्तितो यज्ञैः मनो मोक्षे निवेशयेत् ॥ (3—36)

"சாஸ்திரப்படி வேதங்களை அத்யயனம் செய்தும், புத்ரோத்பத்தி செய்தும், சக்திக்கேற்றவாறு யக்ஞங்களால் யாகம் செய்தபிறகும் மனதை ஸன்யாஸத்தில் வைக்கலாம்"

இப்படியன்றி

अनधीत्य द्विजो वेदं अनुत्पाद्य सुतांस्तथा ।
अनिष्ट्वा चैव यज्ञैस्तु मोक्षमिच्छन् व्रजत्यधः ॥ (6—37)

"த்விஜன், அத்யயனம் செய்யாமலும், புத்ரோத்பத்தி செய்யாமலும், யக்ஞங்களால் யாகம் செய்யாமலும் ஸன்யாஸத்தை விரும்பினால் அதோகதி அடைவான்"

இங்கு "யக்ஞை:" என்பதற்கு அக்நிஷ்டோமாதி யாகங்களால் என்று குல்லூகபட்ட வ்யாக்யானம் கூறுகிறது.

अधीतवेदः जपकृत् पुत्रवानन्नदोऽग्निमान् ।
शक्त्या च यज्ञकृत् मोक्षे मनः कुर्यात्तु नान्यथा ॥ (या-प्रा-57)

என்பதால், யாக்ஞவல்க்யரும், வேதாத்யயநம் செய்தும், புத்ரவானும், யதாசக்தி யக்ஞம் செய்தவனுமேதான் ஸந்யாஸாச்ரமத்தில் மனஸ்வைக்கலாம். இல்லாவிடில் கூடாது என்று சொல்லியிருப்பதில் ருண தோஷமும், அதற்காக யக்ஞாநுஷ்டானமும் அவச்யமென்று மனுவைப்போல் கூறியுள்ளார். இதன் வ்யாக்யானமான மிதாக்ஷரையில் விக்ஞாநேச்வரர்

अनाहिताग्निर्ज्येष्ठत्वादिना प्रतिबन्धकाभावे, कृताधानः नित्यनैमित्तिकान् यज्ञान् कृत्वा चतुर्थाश्रमम् प्रविशेत्। नान्यथा ॥

என்ற வாக்யங்களால், "சாஸ்திரீயமான பிரதிபந்தகங்கள் எவையுமில்லாத பக்ஷத்தில் ஆதானம் செய்து, நித்ய நைமித்திக யாகங்களைச் செய்துவிட்டு, பிறகுதான் நான்காவது ஆச்ரமம் போகலா" மென்கிறார்.

இவ்வாறு மனுவும், யாக்ஞவல்க்யரும் சுருதிசொல்லிய ருண தோஷத்தைப் பிரபலமாக்கி விதி செய்ததுடன் நிற்காமல் மேற்படி ருணத்தைப் பரிஹரிக்காவிட்டால் உபபாதக பாபம் ஏற்படுவதாயும் கூறியுள்ளார்கள்.

மனு—உபபாதகபாபங்களைக் கூறுமிடத்தில்

**अनाहिताग्निता स्तेयं ऋणानां चानपाक्रिया ॥** (म-11-65)

என்பதால் "ருணங்களைப் பரிஹரிக்காமை" ஓர் உபபாதக பாபமென்று சொன்னார்.

### யாக்ஞவல்க்ய-விக்ஞானேச்வர அபிப்பிராயங்கள்

**गोवधो व्रात्यता स्तेयं ऋणानामनपाक्रिया' ॥** (या-प्रा-234)

என்று யாக்ஞவல்க்யரும் உபபாதகங்களில் 'ருணதோஷத்தை நீக்காமை'யைச்சேர்த்துப் படித்தார். ஆதலால் யக்ஞாதிகளைச் செய்து ருணதோஷத்தைப் போக்கிக் கொள்ளாவிடில் உபபாதக தோஷமேற்படுவதாயும், அதற்காக விதிக்கப்பட்டுள்ள பிராயச்சித்தத்தைச் செய்துகொள்ள வேணுமென்றும் மிதாக்ஷரயில் விக்ஞானேச்வரர் விதித்தார். அவர் அங்கு கூறுவதாவது:—

**वैदिकस्य "जायमानोवै ब्राह्मणः" इत्येतद्वाक्येन ऋण संस्तुत-यज्ञाद्यकरणे च "उपपातक शुद्धिः स्यात् एवं" इत्यादिना उपपातक सामान्यविहितं व्रतचतुष्टयं शक्त्यपेक्षया योज्यम् ॥**

(या-प्रा-265)

ஆகையால் யக்ஞாதிகளைச் செய்யாவிட்டால் ருணதோஷமும், ருணதோஷத்தை நீக்கிக்கொள்ளாவிட்டால் உபபாதகதோஷமும் உண்டென்று மனு யாக்ஞவல்க்ய மிதாக்ஷராகாராதிகள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

ஆதலால்தான் வஸிஷ்டரும் தமது ஸூத்ரத்தில்

अवश्यं ब्राह्मणोऽग्नीनादधीत ।
दर्शपूर्णमास पशुबंधसोमैश्च यजेत ।
नैयमिकं ह्येतत् ऋण संस्तुतम् ॥ (वसि-11-41)

என்பதால் "பிராம்மணன் அவச்யம் அக்நி ஆதானம் செய்ய வேண்டும். தர்சபூர்ணமாஸ, பசுபந்த, ஸோமயாகாதிகளாலும் யஜிக்க வேணும். ஏனெனில், மேற்படி யக்ஞாதிகர்மாவானது நியமமாக (கட்டாயமாக)ச் செய்யப்பட வேண்டுமென்று ருணதோஷ பிரஸ்தாவத்தை முன்னிட்டு விதிக்கப்பட்டுள்ளதன்றோ?"

என்று ஆதானாதிகளைக் கட்டாயமாக விதித்துள்ளார். "ஜாயமானோ வை" சுருதியை மூலமாகக்கொண்டே இந்த வஸிஷ்டஸூத்ரம் பிரவிருத்தித்திருப்பது முக்யமானது.

மனு யாக்ஞவல்க்ய யம வசனங்களில் इष्ट्वा च शक्तितो यज्ञैः, शक्त्या च यज्ञकृत् ॥ उत्पाद्य धर्मतः पुत्रान् इष्ट्वा यज्ञैश्च शक्तितः என்று யதாசக்தி முடிந்தவரையில் யக்ஞாநுஷ்டானம்செய்யலாமென்று கூறியிருப்பதாலும், तद्धि कुर्वन् यथाशक्ति என்ற வசனத்திலும் வேதோக்த நித்ய கர்மாக்களை யதாசக்தியாவது அநுஷ்டிக்க வேண்டுமென்பதாலும், முடிந்தவரையில அநுஷ்டித்தால் கூட ருண தோஷாதிகள் நீங்குமென்று வ்யவஸ்தை செய்யப்பட்டுள்ளது.

### ஸன்யாஸ ஆச்ரமம் உண்டா ?

இந்த ருணதோஷப் பிரஸ்தாவத்தை முன்னிட்டு ஸன்யாஸாச்ரம விஷயமாயும், ஸ்மிருதி- நிபந்தனகாரர்கள் செய்துள்ள சர்ச்சைகளும், பிரஹ்மஸூத்ர நிர்ணயமும் பிரகிருதத்தில் அவச்யம் அறிந்துகொள்ள வேண்டியவைகளாயிருப்பதால் அவைகளைச் சுருக்கமாகக்கூறுவோம்.

கீழே நாம் காட்டியுள்ள பிரமாணங்களின்படி யக்ஞாதிகள் நித்யங்களாகிவிட்டதால் ஸந்நியாஸாச்ரமத்தின் கதியென்ன? ஏனெனில் यावज्जीवमग्निहोत्रं जुहोति ॥ என்ற சுருதி, ஜீவன்உள்ள

வரையில் அக்நிஹோத்ரத்தை விதிக்கிறது. ஆகையால் அதை விட முடியாது. சுருதியும்

वीरहा वा एष देवानां योऽग्निमुद्वासयते

என்பதால் ஆஹிதாக்நியா யிருப்பவன் எந்தக் காரணத்தைக் கொண்டும் அக்நிஹோத்ராக்நியைப் பரித்யாகம் செய்வது "வீர ஹத்யை" என்ற மஹா தோஷத்திற்கு ஸமமாகு மென்று கூறுகிறது.

மனுவும்

अग्निहोत्री अपविध्याग्नीन् ब्राह्मणः कामकारतः ।
चान्द्रायणं चरेत् मासं वीरहत्यासमं हि तत् । (म-11-41)

என்பதால், "அக்நிஹோத்ரியாயிருப்பவன் காமகாரமாக ஸ்ரௌதாக்நிகளை த்யாகம் செய்தால் அது வீரஹத்யாதோஷத்திற்கு ஸமம். ஆகையால் அதற்காக ஒருமாஸம் சாந்திராயண விருதத்தை பிராயஸ்சித்தமாக ஆசரிக்கவேணும்" என்று மேற்படி சுருதியின் கருத்தையே வற்புறுத்தி யிருக்கிறார். மேலும் கீழே சொன்னபடி சுருதியும், மனு, யாக்ஞவல்க்யாதிகளும் ருணதோஷத்தைப் பிரபலமாகக்கூறி, அதைப் பரிஹரிக்காமல், அதாவது யாகாதிகளைச் செய்யாமல் ஸந்யாஸத்திற்குப்போக அதிகாரமில்லை யென்று தடுத்துக் கூறுகிறார்கள்.

மிதாக்ஷரையில் விக்ஞானேஸ்வரரும்

अनेन अपाकृत ऋणत्रयस्यैव गृहस्थस्य प्रव्रज्यायां अधिकारं दर्शयति । यथाह मनुः — (या-प्रा-57)

என்பதால் "ருணதோஷத்தை நீக்கிக்கொண்ட கிரஹஸ்தனுக்குத்தான் ஸந்யாஸத்தில் அதிகார முண்டென்று மனு-யாக்ஞவல்க்யாதிகள் காட்டினார்கள்" என்று தெளிவாகக் கூறினார்.

## இதில் பிரம்மஸூத்ர நிர்ணயம்

இந்த விஷயத்தைப்பற்றி பிரம்மஸூத்ரத்தில் புருஷார்த்தாதிகரணத்தில் விஸ்தாரமாக விசாரிக்கப்பட்டது. யாவஜ்ஜீவம்

அக்நிஹோத்ரத்தை விதிக்கும் யாவஜ்ஜீவ சுருதியானது பிரபலமாகையாலும், சுருதிகளில் ஸந்யாஸ ஆச்ரமமே விதிக்கப்படாததாலும், ஸ்ம்ருதிகளில் ஸந்யாஸ ஆச்ரமம் விதிக்கப்பட்டிருந்தாலும், யாவஜ்ஜீவ சுருதிக்கும் ருணச்ருதிக்கும் விருத்தமான அந்த ஸ்மிருதி பிரமாணமல்லவென்று ஜைமினி மஹர்ஷியின் அபிப்பிராயத்தைப் பூர்வபக்ஷமாக

परामर्शं जैमिनिरचोदनाच्चापवदति हि ॥ (3-4-18)

என்பதால் காட்டப்பட்டது. இந்த ஸூத்ரத்தில் वीरहावा என்கிற கீழேகாட்டிய சுருதி வாக்கியத்திலும், மனு வசனத்திலும், ஜீவன் இருக்கும்போது அக்கினிஹோத்ரத்தை விடுவது வீரஹத்யா தோஷமாகக் கூறப்பட்டிருப்பதால் ஸன்யாஸத்திற்குப்போக முடியாதென்பது "அபவததிஹி" என்பதால் பலமான காரணமாகக் கூறப்பட்டிருக்கிறது.

ஆயினும்,

अनुष्ठेयं बादरायणः साम्यश्रुतेः ॥ (3-4-19)

विधिर्वाधारणवत् ॥ (3-4-20)

என்ற ஸூத்திரங்களால் ஸந்யாஸ ஆச்ரமும் உண்டென்றும், சுருதியும் இதை விதிப்பதாயும், ஆகையால் மிகுந்த வைராக்யம் அடைந்த கிரஹஸ்தன் ஒருவன், அதன் காரணமாக கிரஹஸ்த ஆஸ்ரமத்தைவிட்டு விலகவிரும்பினால் அக்நிஹோத்ராதி யாவஜ்ஜீவ கர்மாக்களை விட்டுவிட்டாவது ஸன்யாஸத்திற்குப் போக அனுமதியுண்டென்றும், யாவஜ்ஜீவ சுருதி முதலியவைகள் வைராக்கிய மிகுதியால் ஸன்யாஸத்திற்குப்போகாத கிரஹஸ்தன் விஷயமென்றும் ஸித்தாந்தம் செய்யப்பட்டது. இந்த விசாரத்தினால் பிரகிருதத்தில் ஏற்பட்டதென்னவென்பதையே கவனிக்க வேணும். அக்நிஹோத்ர தர்சபூர்ணமாஸாதிகளான யாவஜ்ஜீவ கர்மாக்களைக் கிரஹஸ்தன் அநுஷ்டித்துத் தீரவேணுமென்பதை வேதாந்திகளும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். மிகுந்த வைராக்கியம் உண்டாகி, கிரஹஸ்தாச்ரமத்தை விட்டு ஸந்யாஸம்போக இஷ்டப்பட்டவனுக்கு மட்டும், அக்நிஹோத்ராதிகளை விட்டுப் போக அனுமதி கொடுக்கப்பட்டதேயன்றி, கிரஹஸ்தாச்ரமத்திலேயே இருப்பவர்களை யாவஜ்ஜீவ சுருதியும், ருணச்ருதியும்,

வீரஹத்யாதோஷ சுருதியும் நிர்ப்பந்தமாகக் கட்டுப்படுத்தித் திருமென்பதை பிரம்மஸூத்ராமும் அங்கீகரித்திருக்கிறதென்பதே முக்ய விஷயமாகும்.

இந்த ருணதோஷ விஷயத்தை பாஷ்யகாரர்களாகிய ஸ்ரீசங்கர பகவத்பாதாசாரியாளும், ஸ்ரீபகவத் ராமாநுஜரும் மேற்படி பிரம்ஹஸூத்ரங்களில் பிரஸ்தாவித்து நிர்ணயம் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது. ऊर्ध्वरेतस्सु च शब्देहि என்ற ஸூத்ர பாஷ்யத்தில் ஸ்ரீபகவத்பாதாள்

प्रतिपन्नाप्रतिपन्नगार्हस्थ्यानां अपाकृत अनपाकृत ऋणत्रयाणां च ऊर्ध्वरेतस्त्वं श्रुति स्मृतिप्रसिद्धम् ॥ (3-4-17)

என்ற வாக்யத்தால், "ஒருவன் பிரம்ஹசாரியாயிருந்தாலும், கிருஹஸ்தனுயிருந்தாலும், ருணதோஷத்தைப் பரிஹரித்துக்கொண்டாலும், இல்லாவிட்டாலும் மிகுந்த வைராக்யம் காரணமாக, ஸன்யாஸத்திற்குப்போக சுருதி ஸம்ருதிகள் அனுமதி கொடுப்ப"தாகக் கூறினர்.

இதிலிருந்து ஸங்யாஸம் போகாமல் கிரஹஸ்தனுக இருப்பவனுக்கு ருணதோஷமும், அதைப் பரிஹரித்துக்கொள்ள யக்ஞாக்னிஹோத்ராதிகளும் அவச்யமென்றும் ஸ்ரீபகவத்பாதாளின் அபிப்பிராயம் ஸ்பஷ்டமாவதைக் காணலாம்.

இதை ஸ்ரீபகவத் ராமானுஜரும் தெளிவுபடுத்தியுள்ளார்:—

एवं, आश्रमान्तर विधानात् ऋणश्रुतिः, यावज्जीवश्रुतिः, अपवादश्रुतिश्च अविरक्तविषया एवेति वेदितव्याः ॥ (3-4-20)

என்பதால் ருணதோஷமும், யாவஜ்ஜீவ சுருதியும், வீரஹத்யா தோஷமும், அவிரக்தனை அதாவது ஸன்யாஸத்திற்குப்போகாத கிரஹஸ்தனைக் கட்டுப்படுத்துமென்று கூறினர்.

தவிர விக்ஞானேஸ்வரர், இங்கு மற்றொரு வ்யவஸ்தையையும் செய்துள்ளார். யக்ஞவிஷயமான ருணதோஷமானது கிரஹ

ஸ்தாஶ்ரமத்தில் புகுந்த பிறகுதான் ஏற்படுகிறது. ஆத லால் பிர்ம்ஹசர்யத்திலிருந்தே (கிரஹஸ்தாச்ரமம் போகாமல்) ஸன்யாஸத்திற்குப் போவதையும் ருணச்ருதி தடுக்காது. जायमानोवै என்ற ருணசுருதியில் "ஜாயமான:" என்பதற்கு "अधिकारीजायमान:" "அதிகாரியாக ஆனவன்" என்று அர்த்தம் செய்வதால் மேற்கண்ட வியவஸ்தை ஏற்படுவதாயும் அவர் காட்டியுள்ளார்.

ஆரம்பம் முதல் இதுவரை காட்டியுள்ள பிரமாணங்களாலும், முக்யமாக இந்த வேதாந்த ஸூத்ர விசார நிர்ணயாதிகளாலும், அக்நிஹோத்ராதிகள் கேவலம் காம்யமென்று பிரமிக்கும் சிலருடைய துர்வாதமும் தூரத்தள்ளப்பட்டதாகிறது. அதை மேலே விவரிப்போம்.

### அநாஹிதாக்நிதா தோஷம், அதிகார விசாரம்.

இனி ருணச்ருதியைப்போல், "ஆஹிதாக்நியாயில்லாமை" (अनाहिताग्निता) என்பதும் தோஷமென்று மனுயாக்ஞவல்க்யாதிகளும், மற்ற ஸ்மிருதிகாரர்களும் கூறுகிறார்கள். மனு, யாக்ஞவல்க்யர் இருவரும் "அநாஹிதாக்நிதை" அதாவது ஆதானம் செய்து அக்நிஹோத்ரம் ஆரம்பிக்காததை உபபாதக பாபத்தில் சேர்த்திருக்கிறார்கள்.

अनाहिताग्निता स्तेयं (मनु-11-45)

अनाहिताग्निता पण्यविक्रयः ॥ (याज्ञ-प्रा 234)

இங்கு விக்ஞானேஶ்வரரும்,

सत्यधिकारे अनाहिताग्नित्वं उपपातकम् ॥ (या-5-236)

என்பதால் "அதிகாரமிருக்கையிலும் ஆதானம் செய்யாமலிருப்பது" தோஷமென்றார். மனுஸ்மிருதிவ்யாக்யானத்தில் குல்லூகபட்டரும் மேற்கண்ட வாக்யத்தை எழுதியுள்ளார். இங்கு "அதிகாரமிருந்தும்" என்பதில் "அதிகாரம்" என்பதின் அர்த்தமென்ன, என்றால், இதைவிக்ஞானேஶ்வரரே விளக்கியிருக்கிறார். ஆதானம் செய்து ஆஹிதாக்நியாவதற்கு கிரஹஸ்தனாயிருப்பது ஒன்றுதான் அதிகாரமாகும். கிரஹஸ்தனாகிய உடனேயே

ஆதானத்திற்கு அதிகாரம் ஏற்பட்டு விடுகிறது. உபநயநத்திற்கு பிராம்மண்யம அதிகாரத்தைக் கொடுக்கிறது. வேதாத்யயனத்திற்கு உபநயநம் அதிகாரத்தைக் கொடுக்கிறது. மற்றவை அல்ல. அதுபோல் ஆதானத்திற்கு கிருஹஸ்தனுயிருப்பது தான் அதிகாரம். ஆகையால் கிரஹஸ்தனுயிருந்தும் ஆதானம்செய்து ஆஹிதாக்நியாய் ஆகாமலிருப்பது தோஷமென்று மனு யாக்ஞவல்க்யாதிகள் சொல்லுகிறுர்கள்.

ஆபஸ்தம்பர்,

अशूद्राणां अदुष्टकर्मणां उपायनं वेदाध्ययनं अग्न्याधेयं फलवन्ति च कर्माणि ॥ (ஆ த-1-1-6)

என்பதால் "சூத்ரனல்லாதவர்களுக்கும், கெட்ட காரியத்தால் பதிதர்களாகாதவர்களுக்கும் உபநயநம் வேதாத்யயனம் அக்நி ஆதானம் இவை ஆவச்யகமென்று சொல்லுகிறுர். 'சூத்ரனுயில்லாமை' பதிதனுயில்லாமை ஆகிய இரண்டைமட்டும் அதிகாரமாகக் குறிப்பிட்டார். தவிர இங்கு அவர் உபநயனம், வேதாத்யயனம், ஆகிய இரண்டு நித்ய கர்மாக்களுடன் சேர்த்து, ஆதானத்தையும் விதிப்பதிலிருந்து உபநயந வேதாத்யயனுதிகள்போல் ஆதானமும் ஓர் நித்யகர்மாவான ஸம்ஸ்காரமென்றும் உபநயந வேதாத்யயனங்களுக்கு எப்படி பிராம்மண்யம் மாத்திரம் அதிகாரமோ, மற்றவை வேண்டியதில்லையோ அதுபோல் அக்நி ஆதானத்திற்கும் கிரஹஸ்தனுயிருப்பதுமட்டும் அதிகாரமென்பதும் அவருடைய அபிப்பிராயமாக வெளியாகிறது.

விக்ஞானேச்வரரே "அதிகாரம்" என்பதின் அர்த்தமென்ன என்பதை இரண்டுவிதமாக விளக்கியுள்ளார். "அதிகாரமிருந்தும் ஆதானம் செய்யாதது உபபாதகதோஷம்" என்று அவர் கூறியதை யதிதர்ம பிரகரணத்தில் ஸ்பஷ்டமாக்கியிருப்பதைக் காட்டுவோம்.

ஒருவனுக்கு, அநாஹிதாக்நியான பிதாவோ, அல்லது ஜ்யேஷ்ட பிராதாவோ ஜீவித்திருக்கையில், ஆதான அக்நிஹோத்ராதிகளில் அதிகாரம் கிடையாதென்று சாஸ்திரவிதியிருக்கிறது. இது "பரிவித்தி" தோஷமென்று கூறப்படுகிறது.

ஆகையால் "அதிகாரமில்லாமை" என்பதற்கு இதுதான் அர்த்தமென்று விக்ஞானேச்வரர்

अनाहिताग्निज्येष्ठत्वादिना प्रतिबन्धकाभावे कृताधानः
नित्यनैमित्तिकान् यज्ञान् कृत्वा मोक्षे मनः कुर्यात् ॥

என்ற வாக்யத்தால் தெளிவுபடுத்தியுள்ளார். "ஜ்யேஷ்டன் அநாஹிதாக்நியாய் ஜீவித்திருப்பது முதலிய பிரதிபந்தகங்கள் இல்லாதுபோனால் ஆதானம்செய்து நித்ய நைமித்திக யக்ஞங்களைச் செய்து ஸந்யாஸம் செய்துகொள்ளவேணும்" என்று விக்ஞாநேச்வரர் "அதிகாரம்" என்பதின் பொருளை விளக்கிவிட்டார். மேலும் ஆதான அக்நிஹோத்ராதிகளுக்கு பத்நீ இருக்க வேண்டியது ஓர் பிரதான அதிகாரம். அந்த அதிகாரம் ஏற்பட்டுவிட்டால் ஆதானம் செய்யாமல் இருக்கக்கூடாதென்பதும் விக்ஞாநேச்வரர் அபிப்பிராயமாயிருக்கிறது.

जायमानो वै ब्राह्मणः என்ற சுருதியின் கருத்தை அவர் விளக்குகையில் இதைக் கூறியுள்ளார். அதாவது:—

नहि जातमात्रः अकृतदाराग्निपरिग्रहः यज्ञादिषु अधिक्रियते ? तस्मात्, अधिकारीजायमानो ब्राह्मणादिः यज्ञादीन् अनुतिष्ठेत् इति तस्यार्थः ॥ என்று (या-प्रा-57)

மேற்படி சுருதியில் "ஜாயமாந:" என்பதற்கு "பிறந்தவுடன்" என்ற அர்த்தமில்லையென்றும், "அதிகாரியாக ஆனவுடன்" என்ற அர்த்தமே பொருந்துமென்றும், ஆகையால் விவாஹமாகி பத்நீ ஏற்பட்டவுடன்தான் யக்ஞத்திற்கு அதிகாரம் ஏற்படுவதாயும், அந்த அதிகாரம் ஏற்பட்ட பிறகும், யக்ஞாதிகள் செய்யாதிருந்தால்தான் ருணதோஷாதிகள் ஏற்படுமென்றும் இந்த வாக்யத்தில் விளக்கிவிட்டார்.

ஸ்மிருதி சந்திரிகாகாரரும் இதை ஸ்பஷ்டமாக்கியிருப்பதை காட்டுகிறோம்.

வஸிஷ்ட ஸூத்ரத்தில்

अलं अग्न्याधेयाय न अनाहिताग्निस्स्यात् ।
अलं सोमाय नासोमयाजीस्यात् ॥

என்பதால், "ஒருவன், ஆதானம்செய்ய சக்தியிருந்தால் ஆஹிதாக்நியாயில்லாமல் இருக்கக்கூடாது. ஸோமயாகம் செய்ய சக்தியுள்ளவன் அஸோமபாஜியாய் இருக்கக்கூடாது" என்று விதித்தார்.

இந்த ஸூத்ரத்திற்கு ஸ்மிருதி சந்திரிகாகாரர் வ்யாக்யானம் கூறுகையில்

अलं-समर्थ इत्यर्थः । सामर्थ्यं च अनाहिताग्नि पितृराहित्यादि । एवं च यस्य आधानादि सामर्थ्यं अस्ति तस्यैव "अनाहिताग्निता स्तेयं" इत्यादिदोषः ॥

என்று சொல்லுகிறார். வஸிஷ்ட ஸூத்ரத்திலுள்ள "அலம்" என்பதற்கு ஸாமர்த்யம் அதாவது அதிகாரம் என்று அர்த்தமென்றும்; பிதா அநாஹிதாக்நியாயிருப்பது முதலான தடையே "அதிகாரமில்லாமை" என்றும், ஆதலால் மேற்கண்ட தடையில்லாமல் எவனுக்கு ஆதானுதிகள் செய்ய ஸாமர்த்நியம் இருக்கிறதோ அவன் அவச்யம் ஆதானம் செய்யவேணும். அப்படி அதிகாரமிருந்தும் ஆதானம் செய்யாதவனுக்குத்தான் மனுயாக்ஞவல்க்யாதிகள் சொன்ன உபபாதக தோஷம் ஏற்படுமென்றும் கூறியிருக்கிறார்.

விக்ஞானேஸ்வரர் கூறியதையே இவரும் சொல்லியிருப்பது முக்ய விஷயம். ஆதலால் விக்ஞானேஸ்வரர் सत्यधिकारे अनाहिताग्नित्वं என்று கூறியதற்கு வேறு அர்த்தம் செய்ய இடமில்லை. "அதிகாரம்" என்பதை ஸ்மிருதிகாரர்களோ நிபந்தனகாரரோ விசேஷிக்காதவரையில், அவரவர் தம்தம் இஷ்டப்படி அதிகாரத்தை நிர்ணயித்துக்கொண்டு நித்யங்களான யக்ஞாதிகளை பரித்யஜிக்க நினைப்பார்கள். யாவஜ்ஜீவ சுருதியால் அக்நிஹோத்ராதிகள் நித்யங்களென்று விதித்ததும், செய்யாவிட்டால் ப்ரத்யவாய பிராயஸ்சித்தாதிகள் விதிக்கப்பட்டதும் வீணுகி யஜ்ஞவிதிகள்யாவற்றும் நிர்விஷயமாகி பெரிய க்ஷோபம் பிரஸங்கிக்கும். அதனுல்தான் விக்ஞாநேஸ்வர, ஸ்மிருதி சந்திரிகாகாராதிகள் மேற்படி வியவஸ்தை செய்தார்கள்.

ஆபஸ்தம்ப, போதாயனாதிகள் விவாஹமானவுடனேயே அக்நிஹோத்ர ஆரம்பம் செய்யவேணுமென்று விதித்ததைக் கீழே காட்டியுள்ளோம். கிருஹ்யதாத்பர்ய தர்சனத்திலும்

तस्मात् मन्द, मध्यम उत्कृष्टादिभिः
सर्वैरप्येते अवश्यं अनुष्टेयाः (आ-गृ-1-1)

என்பதால் மந்தனான அதிகாரிக்குக் கூட அக்நிஹோத்ராதிகள் அவச்யம் அநுஷ்டேயம் என்று சொன்னதை முன்பு காட்டினோம்.

"अर्थी समर्थो विद्वान् यजेत" என்ற வாக்யத்திற்கும் மேற்கண்ட வழியில் விரோதமின்றிக்கே அர்த்தம் செய்யவேண்டுமென்பது ஸித்தம். மேற்கண்ட குணங்கள் இருந்தால் விசேஷமென்று கருத்தே தவிர வேறன்றென்பது யாக்ஞிக சிஷ்டர்களின் அபிப்பிராயமாகும்.

ஸ்ரீ ஆண்டபிள்ளை என்ற மஹா பிரஸித்தரான சிஷ்டாக்ரேஸரர் யாகபிரயோகம் எழுதியவர். அவர் தமது கிரந்தத்தில்

अनधीतस्यापि साधोः ।

என்பதால் வேதாத்யயனம் செய்யாதபோதிலும், சிஷ்டனான ஸதாசாரஸம்பந்நனான அதிகாரிக்கும் அக்நிஹோத்ர-ஸோம யாகாதிகளில் அதிகாரம் உண்டு என்று வெகு தெளிவாகச் சொல்லியிருக்கிறார். ஆகையால் "அதிகாரம்" என்பதற்கு எவரும் ஸ்வேச்சைபாக அர்த்தம் செய்துகொள்ளச் சிறிதும் இடமில்லை.

இவ்வாறு, மனு-யாக்ஞவல்க்யாதிகள் "ஆஹிதாக்நியாயில்லாமை" உபபாதகமென்று சொல்லியிருப்பதை விக்ஞாநேஸ்வரர் உபபாதக பிராயஸ்சித்த பிரகரணத்திலும் எடுத்து அதற்கு பிராயஸ்சித்தத்தையும் விதித்துள்ளார். அதாவது:—

"तथा अधिकृतस्य अनाहिताग्नित्वेपि ("उपपातक शुद्धि स्स्यात्" इति विहितम्) एतदेव व्रत चतुष्टयं आपदि वत्सरादूर्ध्वं शक्त्यपेक्षया योज्यम् ॥ अनापदितु मानवं त्रैमासिकम् ॥
(या-प्रा-265)

"அதிகாரமிருந்தும் ஆஹிதாக்நியாக இல்லாத தோஷத்திற்காக உபபாதக பிராயஸ்சித்தமாக விதிக்கப்பட்டுள்ள நான்கு விரதங்களான சாந்திராயணாதிகளை ஆபத்கல்பமாகச் செய்யவேணும். ஆபத்தில்லாத காலத்திலோவென்றால் மனு கூறுகிற மூன்றுமாத விரதத்தை பிராயஸ்சித்தமாகச் செய்யவேணும்."

மேலும் விக்ஞானேஸ்வரர் கூறுகிறதாவது :—

अर्वाक्पुनः संवत्सरात् कार्ष्णाजिनिः विशेषमाह—
कालेत्वाधाय कर्माणि कुर्यात् विप्रो विधानतः ।
तदकुर्वन् त्रिरात्रेण मासि मासि विशुद्ध्यति ॥

"கார்ஷ்ணாஜினி என்ற ரிஷியோவென்றால் இங்கு விசேஷமாகக் கூறுகிறார். அதாவது :—
விஹிதமான காலத்தில் அக்நி ஆதானம்செய்து விதிப்படி சிரௌதகர்மாக்களைச் செய்யவேணும். அப்படிச் செய்யாவிட்டால், ஒவ்வொரு மாஸத்திலும், மூன்று நாள் விரதமிருந்து பிராயஸ்சித்தமனுஷ்டிக்கவேணும்"

மேற்கண்ட வாக்யங்களால் விக்ஞாநேச்வரர் மனு, யாக்ஞவல்க்ய அபிப்பிராயத்தைத் தெளிவுபடுத்தியும் கார்ஷ்ணாஜினி என்ற மஹர்ஷியின் அபிப்பிராயத்தையும் உதாஹரித்து விஹிதகாலத்தில் ஆதானம்செய்து ஆஹிதாக்நியாக ஆகாமலிருப்பதை உபபாதக தோஷமென்று ஸ்திரப்படுத்தியிருப்பதை பிராமாணிகர்கள் கவனிக்கவேணும்.

இதுவரையில் நிரூபித்துவந்ததிலிருந்து யக்ஞங்கள் நித்யங்களென்றும் செய்யாவிட்டால் தோஷம் ஏற்படுவதாயும் ஸித்தமாகிறதால் இதை அநுஸரித்து வேறு பல ஸ்மிருதிகளும் விதி செய்துள்ளன.

## சில ஸ்மிருதிவசனங்கள்.

பராசரமாதவீயத்தில்

आलस्यादथवा अज्ञानात् योऽग्नीन् नाधातुमिच्छति ।
यजेत वा न यज्ञेन स याति नरकान् बहून् ॥
तस्मात् सर्वप्रयत्नेन ब्राह्मणो हि विशेषतः ।
आधायाग्नीन् विशुद्धात्मा यजेत परमेश्वरं ॥

"சோம்பலாலோ, அறியாமையாலோ எவன் அக்நி ஆதானம் செய்யவிரும்பவில்லையோ, அவன் பலகாலம் நரகம் அடைகிறான். ஆகையால் எல்லாவித முயற்சி செய்தும் பிராம்மணன் அக்நி ஆதானம்செய்து பரிசுத்தாத்மாவாகி பரமேஸ்வரனைக் குறித்து யாகம் செய்ய வேணும்."

என்று நரகாதி தோஷத்தைக் காட்டி அக்நியாதான யாகாதிகள் செய்யும்படி விதிக்கப்படுகிறது.

மேலும் மாதவீயத்தில்

सर्वसंस्थाधिकारी स्यात् आहिताग्निः धने सति ।
आदध्यात् निर्धनोऽप्यग्नीन् नित्यं पापभयात् द्विजः ॥

என்பதால் "ஆஹிதாக்நியான பிறகு எல்லாவித யாகங்களையும் திரவ்ய ஸௌகர்யமிருந்தால் செய்யலாம். ஆனால் பணமில்லாத தரித்ரனுயிருந்தாலும்கூட த்விஜன் பாப பயத்தால் ஆதானம் மட்டும் நித்யமாகச் செய்யவேணும்" என்றும் விதிக்கப்பட்டுள்ளது. மனுவும், உஞ்சவ்ருத்தி செய்து ஜீவிக்கும் பரம தரித்ரன்கூட, அக்நிஹோத்ர, தர்சபூர்ணமாஸாதிகளை விடாமல் அவச்யம் செய்யவேணுமென்று

वर्तयन् च सिलोंछाभ्यां अग्निहोत्र परायणः ।
इष्टीः पर्वायणान्तीयाः केवला निर्वपेत् सदा ॥ (म-4-10)

என்பதால் சொல்லுகிறார்.

மஹாபாரதம் சாந்திபர்வாவில் ஸ்ரீ பீஷ்மாசாரியரும்

सर्वथा सर्वदा विप्रैः यष्टव्यमिति निर्णयः ।
न हि यज्ञसमं किंचित् त्रिषु लोकेषु विद्यते ॥
तस्मात् यष्टव्यमित्याहुः पुरुषेणानसूयता ।
श्रद्धापवित्रमाश्रित्य यथाशक्ति यथावसु ॥
(म-शा-59-56)

என்பதால் யக்ஞத்திற்கு ஸமமாக உத்தம தர்மம் எதுவும் மூன்று லோகத்திலும் கிடையாதாகையால் எப்படியாவது விப்ரர்கள்

எப்போதும் யக்ஞத்தை யதாசக்தி, திரவ்ய சக்திக்கேற்றபடி சிரத்தையுடன் அநுஷ்டிக்கவேண்டுமென்று கூறியுள்ளார்.

இவ்வாறு யக்ஞாக்நி ஹோத்ராதிகள் நித்யங்களென்பதை ஒரே மாதிரியாக ஸகல ஸ்மிருதிகளும் ஸ்மிருதிசந்திரிகா, ஹேமாத்ரீ, மாதவீய, அபரார்க்காதிகளான ஸகல நிபந்தன காரர்களும் ஒரு முகமாக வற்புறுத்தியுள்ள பிரமாண வாக்யங்கள் இன்னும் கணக்கில்லாமலிருக்கின்றன. அவைகளை விஸ்தாரபயத்தால் இங்கு வெளியிடவில்லை.

### யக்ஞாதிகள் கேவலகாம்யங்களல்ல.

இதுவரையில் நிரூபித்ததிலிருந்து அக்நிஹோத்ராதி சிரௌதகர்மாக்கள் நித்யங்களென்பதுடன் கேவல காம்யங்கள் அல்லவென்பதும் நிர்விவாதமாக ஸித்தமாகிறது. ஆயினும் சில பண்டிதர்களும், பாமரர்களும், யக்ஞாதிகள் ஸ்வர்க்காதி அல்ப, அஸ்திர பலன் உள்ளவையாகையால் அவச்யாநுஷ்டேயங்களல்லவென்று பிரமித்துப் பேசுவதுபற்றி, இவ்விஷயத்தைச் சிறிது விரிவாக இங்கு நிரூபிக்கவேண்டியிருக்கிறது. அக்நிஹோத்ராதிகள் வெறும் காம்யகர்மாக்களென்று பேசுவது வைதிக மதத்தின் அடிப்படையான அம்சங்களை அடியோடு அறியாத அக்ஞவாதமாயிருப்பதுடன் ஸகல பிரமாணங்களுக்கும் அது விருத்தமாகும். நாம் இதுவரையில்காட்டிய சுருதி, ஸ்மிருதி, நிபந்தனபிரமாணங்கள், ஆசார்யர்களின் அபிப்பிராயம் யாவற்றும் நிர்விஷயமாகப்போகவும் நேரிடும்.

நித்ய காம்ய விஷயமாக வைதிகமத ஸித்தாந்தமென்னவென்பதை முதலில் இவர்கள் அறிந்துகொள்ளவேண்டியது அவச்யம். एतेच यज्ञाः नित्य, नैमित्तिक, काम्यभेदेन त्रिविधाः என்று பராசரமாதவீயத்தில் சொன்னபடி நித்யம்,நைமித்திகம்,காம்யம் என்று வைதிககர்மாக்கள் மூன்றுவகையாகப் பிரிக்கப்பட்டிருப்பதில் அநேக கர்மாக்கள், நித்யம், காம்யம் என்ற இரண்டு ஆகாரமுள்ளவையென்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஸந்தியாவந்தனம் நித்யகர்மாதான். ஆனால் ஸ்வர்க்காதி சிறிய பலனை யுத்தேசித்தும் ஒருவன் ஸந்த்யாவந்தனம் செய்யலாம்.

அப்போது அது காம்யமாகிறது. ஆதலால் ஸந்த்யைக்கு, நித்யத்வம், காம்யத்வம் ஆகிய இரண்டு ஆகாரம் இருக்கிறது.

प्राजापत्यं गृहस्थानां ब्राह्मं सन्यासिनामपि ॥

முதலியவைகளால் இதை அறியலாம்.

இதுபோல் ஏகாதசி, சிவராத்ரி, ஜன்மாஷ்டமீ முதலிய பல விரதங்களிலும், நித்யத்வமும், காம்யத்வமும் உண்டென்று சாஸ்திரம் சொல்லுகிறது.

**நித்ய காம்ய இரண்டு விதிகள் உண்டு.**

அதுபோல், அக்நிஹோத்ர, தர்சபூர்ணமாஸ, ஸோமயாகாதிகளுக்கும், நித்யத்வம், காம்யத்வம் என்ற இரண்டு ஆகாரம் உண்டென்பது ஸகல சுருதி ஸ்மிருதி கல்ப ஸூத்ர, மீமாம்ஸாதிகளில் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. அக்நிஹோத்ராதிகள் யாவஜ்ஜீவம் நித்யமாக நிஷ்காமமாக அனுஷ்டிக்கவேண்டியவைகளென்பது ஒரு புறமிருக்க, எவனாவது ஸ்வர்க்க, பசு, புத்ராதி பலன்களை அபேக்ஷித்து அந்த பலனுக்கான அக்நிஹோத்ராதிகள் செய்யவிரும்பினால், அவன் காம்ய அக்நிஹோத்ரத்தைச் செய்யலாம். நிஷ்காமமாக நித்யமாகச் செய்யப்படவேண்டிய அக்நிஹோத்ராதிகளுக்கும், காம்ய அக்நி ஹோத்ராதிகளுக்கும் ஸம்பந்தமில்லை. இது வேறு. அது வேறு. காம்ய அக்நிஹோத்ரம், வேறு, நித்ய அக்நிஹோத்ராதிகள் வேறு என்பதை சுருதியானது இரண்டு தனித்தனியாக விதிவாக்யங்களால் கூறியிருப்பதைக் கொண்டே அறியலாம்.

"यावज्जीवमग्निहोत्रं जुहोति" என்ற சுருதி வாக்யமானது எவ்வித பலனையும் குறிக்காமல் நித்யமான அக்நிஹோத்ரத்தை விதிக்கிறதென்று கல்பஸூத்ரம், மீமாம்ஸை, ப்ரம்மஸூத்ரம், ஸ்மிருதிகள் இவைகளில் ஸ்பஷ்டமாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இதுபோல்

अग्निहोत्रं जुहुयात् स्वर्गकामः

என்ற மற்ளெரு சுருதி வாக்யமானது ஸ்வர்க்க ஆசையுள்ளவன் அக்னிஹோத்ரம் செய்யலாமென்று காம்ய அக்னிஹோத்ரத்தை விதிக்கிறது.

இதுபோல் “यावज्जीवं दर्शपूर्णमासाभ्यां यजेत’ என்ற வாக்யமானது யாவஜ்ஜீவம் நித்யமாகச் செய்யவேண்டிய நிஷ்காம இஷ்டிகளை விதிக்கிறது.

இந்த தர்சபூர்ணமாஸ இஷ்டிகளையே ஸ்வர்க்க காமனையால் ஒருவன் செய்தால் அந்த பலன் கிடைக்குமென்று

दर्शपूर्णमासाभ्यां स्वर्ग कामो यजेत ।

என்று காம்யவிதி செய்யப்படுகிறது.

ஸோம யாகத்திலும், நித்யம், காம்யம் என்ற பேதம் சுருதியிலேயே கூறப்படுகிறது.

“वसन्ते वसन्ते ज्योतिष्टोमेन यजेत”

“ஒவ்வொரு வஸந்தத்திலும், ஜ்யோதிஷ்டோமத்தினல் யஜிக்க வேணும்”.

என்பது நித்ய ஸோமயாக விதியாகும்.

ज्योतिष्टोमेन स्वर्गकामो यजेत என்ற மற்றொரு விதியானது ஸ்வர்க்க ஆசையுள்ளவன் ஜ்யோதிஷ்டமம் செய்யும்படி விதிக்கிறது.

ஆகையால் நித்ய, காம்ய அக்னிஹோத்ர, அக்னிஷ்டோமாதி கர்மாக்கள் பிரயோகத்தால் ஒன்ருகயிருந்தபோதிலும் ஸங்கல்பத்தால் வேறுபட்ட கர்மாக்கள். ஒன்று ஜீவனை நிமித்தமாகக் கொண்டு நித்யமாகவும், மற்றொன்று ஸ்வர்க்காதி காமனையை நிமித்தமாகக்கொண்டு காம்பமாகவும் இரண்டு விதிவாக்யங்களால் தனித்தனியாக விதிக்கப்படுவதால் ஒன்றுக்கொன்று எவ்வித விரோதமும் கிடையாதென்று யாக்ஞிகர், மீமாம்ஸர்கள் வேதாந்திகள் ஆகிய யாவரும் ஏகமதிகளாக ஒப்புக்கொண்டனர்.

இதைத் தான் “विनियोग पृथक्त्वं” என்று அவர்கள் எங்கும் வ்யவஹரிப்பதைக் காணலாம்.

ஆகையால் அக்நிஹோத்ராதிகள் கேவல காம்யங்களென்று சிலர் நினைப்பது சாஸ்திர மர்யாதையை அறியாததாலேயே. அதை அறிந்தவர்களுக்கு இந்த ஶங்கையே ஏற்பட அவகாசமில்லை.

காம்ய கர்மாக்கள் ஸ்வர்க்க, பசு, புத்ராதி காமனை இருப்பவனுக்குத்தான் ஏற்பட்டவையேயல்லது மற்றவர்களைக் கட்டுப்படுத்தா. மேற்கண்ட காமனையில்லாதவன் காம்யாக்நிஹோத்ராதிகளைச் செய்ய கட்டுப்படவில்லை. ஆகையால் காம்யகர்மாக்கள் அநித்யங்களே. ஸ்வர்காதி காமனையுள்ளவனும் அவை, அஸ்திர பலன், அல்ப பலன் என்ற வைராக்ய உணர்ச்சி அடைந்து விட்டானாகில் உடனே, காம்யாக்நிஹோத்ராதிகளை விட்டு விடலாம்.

காம்யாக்நிஹோத்ராதிகளை ஒருவன் செய்யாவிட்டாலும், ஆரம்பித்து, நடுவில் பரித்யாகம் செய்துவிட்டாலும், பிரத்யவாயமோ, பிராயஶ்சித்தமோ கிடையாது.

நித்யாக்நிஹோத்ராதிகளோ அப்படியல்ல. உயிருள்ளவரையில் எவ்வித பலனையும் எதிர் பாராமல் ஸந்த்யாதிகளைப் போல் ஆச்ரம தர்மமாக அவை அநுஷ்டிக்கப்படவேண்டியவை என்று மனு, யக்ஞவல்க்யாதி ஸ்மிருதிகளும் விக்ஞானேஶ்வராதி நிபந்தனகாரர்களும் வற்புறுத்தியுள்ளார்கள். செய்யாவிட்டால் முன் காட்டியபடி, ருண தோஷம், உபபாதக தோஷம், தௌர் ப்ராம்மண்ய தோஷம் முதலிய தோஷங்களும், அவைகளுக்கான பிராயஶ்சித்தங்களும் ஏற்படுகின்றன. கேவல காம்யங்களாயிருந்தால் அகரணே ப்ரத்யவாய பிராயஶ்சித்தாதிகள் விதிப்பது பொருந்துமா? ஜைமினி, காத்யாயனர் முதலிய மஹர்ஷிகள் இதை நன்கு தெளிவுபடுத்தியிருப்பதையும் இங்கே காட்டுவோம்.

**மீமாம்ஸையின் அபிப்பிராயம் (நித்யகாம்யபேதம்)**

பூர்வ மீமாம்ஸை 6-வது அத்யாயம் மூன்றும் பாதத்தில்

**सर्वशक्तौ प्रवृत्तिस्स्यात् तथा भूतोपदेशात् ॥** (மீ-6-3)

என்ற ஸூத்ரத்தால், யக்ஞாக்நிஹோத்ராதிகளை, சாஸ்திரங்களில் கூறிய ஸகல அங்கங்களில் ஒன்று கூடக்குறைவில்லாமல்

பூர்ணமாக அநுஷ்டிக்க ஸர்வ சக்தியும் பொருந்தியவனே செய்யலாமென்றும், மற்ற அதிகாரிகள் செய்யக்கூடாதென்றும் பூர்வபக்ஷம் செய்துகொண்டு,

अपिवाप्येकदेशेस्यात् प्रधाने ह्यर्थनिर्वृत्तिः गुणमात्रमितरत्तदर्थत्वात्

(मी-6-3-2 )

என்ற ஸித்தாந்த ஸூத்ரத்தால் நித்யங்களான அக்நிஹோத்ர ஜ்யோதிஷ்டோமாதிகளில், அங்கி அல்லது பிரதானயாகமே முக்யமென்றும், மற்றவை அதற்குச் சேஷமாகையால் முடிந்த வரையில் அங்கங்களை அநுஷ்டித்தால் போதுமென்றும், அதனால் அங்கியான பிரதான யாகத்திற்குக் குறைவு ஏற்படாதென்றும் ஸித்தாந்தம் செய்யப்பட்டது.

இந்த ஸித்தாந்தத்திற்கு முக்யமான காரணமென்னவென்பதை

प्रायश्चित्त विधानाच्च । (मी-6-3-7)

என்ற ஸூத்ரத்தால் ஜைமினி விளக்கினார். அதாவது நித்யங்களான அக்நிஹோத்ராதிகளைச் செய்யாவிட்டால் பிராயஸ்சித்தம் விதிக்கப்படுகிறபடியால் யதாசக்தி ஸாத்யமான அங்கங்களை வைத்துக்கொண்டாவது நித்யத்தைச் செய்து தீர வேண்டுமென்று கூறினார். ஆதலால் நித்யமான யக்ஞாதிகளில் அங்கங்களில் ஏதாவது குறைவு ஏற்பட்டால்கூட யக்ஞத்திற்குக் குறைவு ஏற்படாதென்றும் ஸித்தாந்தம் செய்தார்.

அப்படியானால் காம்ய அக்நிஹோத்ர ஜ்யோதிஷ்டோமாதிகளிலும் மேற்படி ஸூத்ர ஸித்தாந்தப்படி அங்கங்கள் பூர்த்தியாக அனுஷ்டிக்கப்படவேண்டியதில்லை என்று

काम्येषु चैवमर्थित्वात् । (मी-6-3-8)

என்பதால் பூர்வபக்ஷம் செய்துகொண்டு

असंयोगात्तु नैवंस्यात्.... என்ற ஸித்தாந்த ஸூத்ரத்தால் காம்ய கர்மாக்களில் ஒவ்வொரு அங்கமும் சேர்ந்துதான் ஸ்வர்காதி பலனைக்கொடுக்கச் சக்தியுள்ளதென்று சுருதி அபிப்பிராயப்படுவதால் அங்கங்களில் குறைவு ஏற்பட்டால் காம்ய பலம் ஸித்திக்காது என்றும், காம்ய யாகங்களில் ஒரு அங்கமும்

குறைவுபடாமல் ஸகல அங்கங்களும் யதாவத்தாக அனுஷ்டிக்கப்பட்டால்தான் கர்மா பூர்த்தியாகுமென்றும் சொன்னார். இதற்குக் காரணத்தையும்

**अकर्मणि च अप्रत्यवायात्** (மீ-6-3-10)

என்பதால் கூறினார். காம்ய அக்நிஹோத்ராதிகளைச் செய்யாவிட்டால் தோஷமோ, பிராயச்சித்தமோ கிடையாதாகையால் அவைகளைக் கட்டாயமாகச்செய்து தீரவேண்டிய அவச்யமில்லை. காமனையால் செய்தால் ஸகல அங்க பூர்த்தியுடன்தான் செய்யவேணும். அங்க பூர்த்தியில்லாவிட்டால் காம்யகர்மங்களின் பலன்கிடைக்காது.

மேற்படி மீமாம்ஸா ஸூத்ர ஸித்தாந்தத்தால், நித்ய அக்நிஹோத்ராதிகள், காம்ய அக்நிஹோத்ராதிகள் என்ற தனியான் இரண்டு பிரிவு இருப்பதில், நித்யாக்நிஹோத்ராதிகளைச் செய்யாவிட்டால் ப்ரத்யவாயமுண்டென்று ஜைமினி ஸ்பஷ்டமாகச் சொல்லுவதும் பிரகிருதத்தில் கவனிக்கத்தக்கன. காம்யாக்நிஹோத்ராதிகள் அநித்யங்களென்பதும், செய்யாவிட்டால் தோஷம் கிடையாதென்பதும் மேற்படி ஸூத்ரந்யாயங்களால் ஸித்தித்தன.

இவ்விஷயம் காத்யாயன மஹர்ஷியால் இன்னும் வ்யக்தமாகக் கூறப்படுவதையும் காட்டுவோம்.

### காத்யாயன ஸூத்ராபிப்ராயம்.

காத்யாயனர் தமது கல்ப ஸூத்ரத்தில்

**फलयुक्तानामारंभे याथाकामी फलार्थित्वात् ।** (का-अ-1-31)

என்பதால் ஸ்வர்க்காதி பலன் உள்ள ஸ்ரௌதகர்மாக்களைச்செய்வதில் அந்தக் காமனையுள்ள அவரவருடைய இஷ்டமே காரணமென்று கூறி, காம்யகர்மாக்கள் அநித்யங்களென்பதைக் காட்டினார்.

இந்த நியாயம், நித்யகர்ம விஷயத்திலும் வரக்கூடாதென்று நினைத்து அடுத்த ஸூத்ரத்தால் விதி செய்கிறார்.

**न नियम निमित्त अग्निहोत्र दर्शपूर्णमास —— पशु बंधेषु प्रवृत्तेः ।** (का-अ-1-32)

அதாவது நித்ய, நைமித்திக கர்மாக்களை முக்யமாக அக்நி ஹோத்ர தர்சபூர்ணமாஸ, பசுபந்தாதிகளை அநுஷ்டிக்கப் பிர விருத்திப்பதில் மனிதனுடைய இஷ்டம் காரணமாகாது. ஏனெ னில் சாஸ்திரவிதியே பிரவிர்த்திக்கச் செய்கிறது.

இங்கு ஷீ ஸூத்ரபாஷ்யம் கூறுவதாவது:—

एवं अग्निहोत्रेऽपि न याथाकाम्यं "यावज्जीवमग्निहोत्रं जुहुया" दिति हि श्रूयते । "अग्निहोत्रं जुहुयात् स्वर्गकामः" इति सः पृथक्काम्य प्रयोगः, अयं पुनरपरो जीवन निमित्त इति ॥

"அக்நிஹோத்ரம் ஆரம்பிப்பதிலும் இஷ்டம் காரண மாகாது. ஏனெனில் யாவஜ்ஜீவம் அக்நிஹோத்ரம் செய்யவேணுமென்று சுருதியே விதிக்கிறது."

"ஸ்வர்க்க காமனையுள்ளவன் அக்நிஹோத்ரம் செய்ய லாம்" என்ற மற்றொரு சுருதி வாக்யமோவென்றால், அது காம்ய அக்நிஹோத்ர விதியாகும், நித்ய அக்நி ஹோத்ர விதியோவென்றால் ஜீவனத்தை நிமித்தமாகக் கொண்டு விதிக்கப்படுகிறது.

மேலும்,

दर्शपूर्णमासादिष्वपि एवमेव द्रष्टव्यम् । तत्रापि "दर्शपूर्ण-मासाभ्यां स्वर्गकामो यजेत" "यावज्जीवं दर्शपूर्णमासाभ्यां यजेत" इति काम्य चोदना यावज्जीव चोदना च भवतः ॥

"தர்சபூர்ணமாஸாதிகளிலும் இப்படியே அறிய வேணும். அதிலும் ஸ்வர்க்க காமனுவிதி வாக்யமும், யாவஜ்ஜீவவிதி வாக்யமும் தனித்தனியாக இருக்கின்றன."

மேலும்,

सोमे चैके । (का-।-33)

என்ற ஸூத்ரத்தால் ஸோம யாகாநுஷ்டான விஷயத்திலும் இஷ்டப்படி நடக்கமுடியாது அதாவது "செய்தாலும் செய்ய லாம், விட்டாலும் விடலா"மென்ற எண்ணம் கூடாது. அவச்யம் செய்தே தீரவேணும் என்று விதிக்கப்படுகிறது.

இந்த ஸூத்ரபாஷ்யத்திலும்,

सोमेच न याथाकाम्यम् । एवं हि श्रूयते "वसन्ते वसन्ते ज्योतिषा यजेत" इति । अत्र साभ्यास वसन्तग्रहणं ज्योतिष्टोमस्य निमित्तम् । यथा जीवनं अग्निहोत्रस्य । "ज्योतिष्टोमेन स्वर्गकामो यजेत" इति तु पृथक् प्रयोग एव सः । एकः स्वर्गकाम प्रयोगः । अपरः नैयमिकः कर्तृ धर्म इति ॥

ஸோமயாக விஷயத்திலும் இஷ்டம் காரணமாகாது. ஏனெனில் "வஸந்தே வஸந்தே" என்ற சுருதியால் "ஒவ்வொரு வஸந்தத்திலும் ஸோம யாகம் செய்ய வேணும்" என்று நித்யகர்மாவாக விதிக்கப்படுகிறது. அக்நிஹோத்ரத்திற்கு, "யாவஜ்ஜீவம்" என்பதால் எப்படி ஜீவன் நிமித்தமோ, அதுபோல் ஜ்யோதிஷ்டோமத்திற்கு ஆவ்ருத்தியுடன் கூடிய வஸந்தகால நிர்த்தேசம் நிமித்தமாகிறது. "ஸ்வர்க்ககாமன் ஜ்யோதிஷ்டோமம் செய்யலாம்" என்ற விதியானது தனியானதே. ஒருவிதி ஸ்வர்க்ககாமனை உள்ளவனைக் குறித்துவந்தது. மற்றொன்று யஜமானன் கட்டாயமாகச் செய்யக் கடமைப் பட்டவன் என்பதை விதிக்கிறது.

என்ற வாக்யங்களால், நித்ய, காம்யங்களின் பிரிவை நன்கு விளக்கி விட்டு அக்நிஹோத்ராதிகள் நித்யங்களென்பதற்குக் கீழ்க்கண்ட சுருதி வாக்யமும் பிரமாணமென்று சொல்லுகிறார்—

"त एतान् यज्ञ क्रतूँ स्तेनिरे अग्निहोत्रं दर्शपूर्णमासौ चातुर्मास्यानि पशुबंधं सौम्यमध्वर"मिति नित्यानां अनुक्रमणम् ॥

என்று. இப்படி, சுருதியிலும், மீமாம்ஸையிலும், காத்யாயனாதி கல்ப ஸூத்ரங்களிலும், விக்ஞானேஸ்வர, மாதவ, சந்திரிகாகாராதி நிபந்தனங்களிலும், ஆசார்யர்களால் பிர்ம்ஹஸூத்ரபாஷ்யாதிகளிலும் காம்யயாகங்கள் வேறு, நித்ய யாகங்கள் வேறு என்று ஸ்பஷ்டமாகச் சொல்லியிருப்பதால் யக்ஞாதிகளைக் கேவல காம்யங்களென்று பேசுவது சாஸ்திர வியவஸ்தையை மீறியதேயாகும்.

## கீதையில் காம்ய யக்ஞ நிந்தை.

கீதையில் "यामिमां पुष्पितां वाचम्" (2-42) "त्रैविद्या मां सोमपाः धूत पापाः"—(9-20) முதலிய சுலோகங்களைக் காட்டிச் சிலர் யக்ஞங்கள் கேவல காம்யங்களென்றும், பகவானே இதை நிந்திப்பதால் யக்ஞங்கள் ஆவச்யகமில்லையென்றும் ஏமாற்றிப் பேசுவதைக் கேட்டிருக்கிறோம். மேற்படி இரு சுலோகங்களிலும் பகவான் ஸ்வர்க்க, பசு, புத்ராதி க்ஷுத்ர பலங்களைமட்டும் கோரி, காம்யயஜ்ஞங்களை அநுஷ்டிப்பவர்களையே நிந்திக்கிறாரென்பது தெளிவான விஷயம். 'कामात्मानः स्वर्गपराः" என்றும் स्वर्गगतिं प्रार्थयन्ते"—என்றும் வாக்யங்களால் "ஸ்வர்க்க ஆசையுள்ளவர்களென்றும், காமாத்மாக்கள்" என்றும் அவர்களைப் பகவான் நிர்த்தேசிப்பதிலிருந்து காம்ய யக்ஞாநுஷ்டானிகளைப்பற்றியே இந்த நிந்தையென்பது தெளிவாக இருக்கிறது. ஆகையால் மேற்படி சுலோகங்கள், நித்யங்களாயும், ஆச்ரம தர்மங்களாயும், அகரணே ப்ரத்யவாயமுள்ளவைகளுமான நித்ய யக்ஞாக்நிஹோத்ராதிகளைப்பற்றியதல்லவென்பது ஸ்பஷ்டமாகவில்லையா? ஆகையால் கீதையில் மேற்படி சுலோகங்களால் பொதுவாக எல்லா யக்ஞங்களும் நிந்திக்கப்படுவனவாகக் கூறுவது அபத்தமாகும்.

ஏனெனில், கீதையிலேயே பகவான் பலவிடங்களில் பலஸங்க த்யாகபுரஸ்ஸரமாக ஸ்வதர்மமான வர்ணாச்ரம கர்மாக்களை அனுஷ்டிக்கவேணுமென்று பலமாக வற்புறுத்திக் கூறுவதுடன், குறிப்பாக யக்ஞாதிகளை அவச்யம் செய்தே தீரவேணுமென்று உபதேசிப்பதும் விரோதிக்கும்.

अफलाकांक्षिभिर्यज्ञो विधिदृष्टो य इज्यते ।
यष्टव्यमित्येव मनः समाधाय स सात्विकः ।। (17-11)

என்பதால், யக்ஞங்களை, ஸாத்விக, ராஜஸ, தாமஸாதி மூன்று பேதங்களுள்ளவையென்று வகுத்து, "எவ்வித பலனைக் கோராமலும், சாஸ்திர விதியை அனுஸரித்தும், "செய்யவேண்டியது கடமை" என்ற மனோபாவத்துடனும் செய்யப்படும் யாகமானது ஸாத்விகம்"என்பதால் பகவான் யக்ஞங்களை கட்டாயமாகச்செய்

யும்படி சொல்லுகிறார். இது நித்யங்களான யக்ஞங்களைப்பற்றிய விதியென்பது ஸ்பஷ்டம். "यष्टव्यमित्येव" "யாகம் செய்யவேண்டியது கடமை" என்ற எண்ணத்துடன் செய்யவேண்டுமென்று பகவான் குறிப்பிட்டிருப்பதால் இது நித்ய யக்ஞங்களைப்பற்றியதென்பது தெளிவு. பொதுவாக யாகங்களே காம்யங்களாயிருந்தால், பகவான் யக்ஞம் செய்யும்படி இதில் வற்புறுத்தியிருப்பது எப்படிப் பொருந்தும்? காம்ய யாகங்களைச் செய்யவேண்டியது கடமையென்று பகவான் உபதேசிப்பாரா?

மேலும் 18-வது அத்யாயத்தில், யக்ஞாநுஷ்டானம் அவச்யம் என்று ஸித்தாந்தம் கூறியிருப்பதும் இங்கு கவனிக்கத்தக்கது. யக்ஞாதிகள் வேண்டுமா, வேண்டாமா என்ற சர்ச்சையை பகவான் செய்து "இதில் என்னுடைய நிச்சயத்தைக் கேள்" என்று "निश्चियं शृणु मे तत्र" என்பதால் சொல்லி

यज्ञ दान तपः कर्म न त्याज्यं कार्यमेव तत् ॥ (18-5)

என்று யக்ஞாதிகளை அநுஷ்டிக்காமல் விடக்கூடாது என்றும், அவச்யம் செய்யவேண்டுமென்றும் கூறியுள்ளார். இந்த சுலோகத்தில். (न त्याज्यं) "விடக்கூடாது" (कार्यमेव) "செய்தே யாக வேண்டும்" என்று பகவான் ஸந்தேஹத்திற்கிடமில்லாத உறுதியான இரண்டு பதங்களை பிரயோகித்து தனது அபிப்பிராயத்தை வெளியிட்டிருப்பது விசேஷமாகும்.

மேலும், பகவான்

कर्तव्यानीति मे पार्थ निश्चितं मतं उत्तमम् ॥ (18-6)

என்பதால் "யக்ஞாதிகள் அவச்யம் செய்யப்படவேண்டியவைகள் என்பது, என்னுடைய நிச்சயமானதும், உத்தமமானதுமான அபிப்பிராயம்" என்று சொல்லியிருப்பதை அறிந்தவர்களுக்கு யக்ஞங்கள் கேவல காம்யங்களென்ற துர்வாதம் தோன்றவே இடமில்லை. கீழ் அத்யாயங்களில் காம்யயக்ஞாதிகளை நிந்தித்த பகவான் அதே யக்ஞங்களை இங்கு "அவச்யம் செய்ய வேண்டியவை" என்று உபதேசிப்பதாகச் சொல்வது பொருந்துமா?

ஆதலால் त्रैविद्या मां என்றவைகளால் காம்ய யக்ஞாநுஷ்டா னத்தைப் பகவான் நிந்தித்துவிட்டு, நிஷ்காமமாக நித்ய யக்ஞங் களை அனுஷ்டித்துத் தீரவேண்டுமென்பதை 18-வது அத்யாயத் திலும், வேறு பலவிடங்களிலும் உபதேசிக்கிறாரென்றே ஸந்தே ஹமில்லாமல் அறியவேணும்.

இதை ஸ்ரீசங்கர பகவத்பாதாசாரியாள் शमदमाद्युपेतस्स्यात् என்ற பிரம்ஹஸூத்ர பாஷ்யத்தில்—

स्मृतिष्वपि भगवद्गीतायासु अनभिसंधाय फलं अनुष्टितानि यज्ञादीनि मुमुक्षोः ज्ञान साधनानि भवन्तीति प्रपञ्चितम् ॥

என்ற வாக்யங்களால், கீதையில் முமுக்ஷுவுக்கு ஞான ஸாதன மாக நிஷ்காமமாக யக்ஞாதிகள் அநுஷ்டிக்கும்படி விதிக்கப்பட் டிருக்கிறதாகச் சொல்லுகிறார். ஆதலால் கீதையில் முமுக்ஷுக் கள் அநுஷ்டிக்கவேண்டிய நித்ய யக்ஞங்களே உபதேசிக்கப்பட் டிருக்கின்றனவென்பதை ஸ்ரீ சங்கராதி ஆசார்யர்களும் சொல்லி யிருப்பதும் கவனிக்கத்தக்கது. ஆகவே யக்ஞங்கள் நித்யம், காம்யம் என்ற இருவகைப்பட்டவையென்பதை கீதையும் அங்கீ கரிப்பது ஸ்பஷ்டமாகிறது.

## உபநிஷத்திலும் காம்ய யஜ்ஞ நிந்தை.

வேறு சிலர், முண்டக உபநிஷத்தில் प्लवाह्येते अदृडा यज्ञरूपाः என்ற சுருதியில் யக்ஞங்கள் காம்யங்களென்ற நிந்தை காணப் படுவதைக் காட்டி, பொதுவாகவே யக்ஞங்கள் அநாவச்யங்க ளென்று பேசுகிறார்கள்.

இந்த சுருதியிலும் கீதையில்போல் அல்ப-அஸ்திர பலன் களுள்ள காம்ய யக்ஞாநுஷ்டானமே நிந்திக்கப்படுகிறதேயல்லது நித்யகர்மாக்களான யக்ஞங்களைப்பற்றி நிந்திக்கப்படவில்லையெ ன்று அறியவேண்டும்.

“यज्ञेन देवेभ्यः”—“यावज्जीवमग्निहोत्रं जुहोति” என்பன போன்ற அநேக சுருதி வாக்யங்கள் யக்ஞாதிகளை நித்யமாக விதித்துவிட்டு, அந்த சுருதிகளே, அந்த யாகங்களை நிந்திப்ப

தாகச் சொல்வது பொருந்தாது. உபநிஷத்தும், "तमेतं वेदानु-वचनेन" என்ற வாக்யத்தால் முமுக்ஷுவுக்கும் வித்யாஸாதனமாகவோ, ப்ரம்ஹ வித்யாங்கமாகவோ யக்ஞனுஷ்டானத்தை விதிக்கிறது. உபநிஷத் பாகத்திற்கு ஸூத்ரம் செய்த ப்ரம்ஹ ஸூத்ரகாரரும் வேதவாக்கியங்களைப் பிரமாணமாகக்கொண்டே "विहितत्वाच्च आश्रमकर्मापि" என்பதால் யக்ஞாதிகள் ஆச்ரம தர்மங்களாக அநுஷ்டிக்கப்படவேண்டியவை என்று ஸித்தாந்தம் செய்திருக்கிறார். முண்டக சுருதி பொதுவாக யக்ஞநிந்தை செய்வதாகக் கூறினால் இவையெல்லாம் எப்படிப் பொருந்தும்?

மேலும் மேற்படி சுருதி வாக்யத்திற்குக் கீழேயுள்ள मन्त्रेषु कर्माणि कवयः— என்ற சுருதியானது யக்ஞாதிகளைக் கட்டாயமாக அநுஷ்டிக்கும்படி तान्याचरथनियतम्— என்பதால் விதிக்கிறது. "நியதம்" என்றபதம் பிரயோகிக்கப்பட்டிருப்பதால் நித்யங்களான யக்ஞங்களை இது விதிக்கிறதென்பது ஸ்பஷ்டமானது. பராசர மாதவீயத்தில், யக்ஞாதிகள் நித்யங்களென்றும், அவச்யானுஷ்டேயங்களென்றும் உபபாதிக்கையில் இந்த "मन्त्रेषु कर्माणि என்ற முண்டக சுருதி வாக்யமே பிரமாணமாகக் காட்டப்பட்டிருப்பதை ஆரம்பத்தில் நிரூபித்துள்ளோம். இப்படி யக்ஞங்கள் நித்யங்களென்றும் அவச்யானுஷ்டேயங்களென்றும் கூறிய சுருதியே அடுத்த வாக்யத்தில் प्लवाह्येते என்பதால் அந்த யக்ஞங்களையே நிந்திக்கிறது என்று சொல்லுவது நியாயமுள்ளதாக ஆகுமா? ஸ்ரீமாதவாசாரியரும் யக்ஞங்கள் நித்யமென்று கூறியதுடன் அதற்கு இந்த முண்டக சுருதியையே பிரமாணமாகக் காட்டியதும் எப்படி ஸமஞ்ஜஸமாகும்?

ஆகையால்தான் प्लवाह्येते என்ற சுருதியானது காம்ய யக்ஞானுஷ்டானத்தையே நிந்திப்பதாக, ஸ்ரீ சங்கர, ஸ்ரீ ராமானுஜாதிகளான ஆசார்யர்கள் வ்யவஸ்தை செய்தார்கள்.

ஸ்ரீ சங்கராசாரியாள்—

एतच्च ज्ञानरहितं कर्म, एतावत्फलं; अविद्याकामकर्मकार्यं
अतोऽसारं दुःखभिश्रमिति निन्द्यते ॥

என்ற வாக்யம் மேற்படி சுருதியானது, ஞானரஹிதமாயும்,

அவித்யா, காம கர்மமாயுமுள்ள யக்ஞத்தையே நிந்திப்பதாக வ்யாக்யானம் செய்து வியவஸ்தை கூறினர். (मुंडक-1-2-7)
ஸ்ரீ பகவத் ராமானுஜரும்

"प्लवाह्येते" इत्यादिना फलाभिसन्धिपूर्वकत्वेन, ज्ञानविधुरतया च अवरं कर्म आचरतां पुनरावृत्तिमुक्त्वा॥ (श्रीभा-1-2-23)

என்பதால் இந்த சுருதி காம்ய யக்ஞநிந்தாவிஷயமென்று ஸ்பஷ்டமாகச் சொல்லியுள்ளார். ஆகையால் மேற்படி சுருதியானது காம்ய யக்ஞத்தை நிந்திக்கிறதேயல்லது நித்ய யக்ஞங்களை நிந்திக்கவில்லையென்று பாஷ்யகாரர்களாகிய ஆசார்யர்களின் நிர்ணயத்தாலும் தெளிவாகிறபடியால் விபரீத அர்த்தம் செய்ய இடமில்லை.

இவ்வாறு உபநிஷத்திலும, புராணாதிகளிலும் ஞானமார்க்கத்தை ப்ரசம்ஸை செய்வதற்காக கர்மாக்களை நிந்திப்பது ஸஹஜமாகையால். அங்கெல்லாம் "நஹிநிந்தா" நியாயப்படி ஞான பிரசம்ஸையில், நோக்கமேயல்லது, கர்ம நிந்தையில் உண்மையான நோக்கமல்லவென்கிற வைதிகமத ஸித்தாந்தத்தையும் பிரமாண ஸரணர்கள் கவனிக்கக் கடமைப்பட்டுள்ளார்கள்.

## கேவல காம்யமானுல் அநுபபத்திகள்

யக்ஞங்கள் கேவல காம்யங்களாயிருந்தால் கீழே நிரூபித்த பிரமாணங்களுக்கும் வேறு பல பிரமாணங்களுக்கும் ஏற்படும் விரோதத்தை ஒருநாளும் பரிஹரிக்க முடியாது. காம்யங்களை செய்வதற்கு காமனையே முக்யமான தூண்டுதலாகும். காமனையில்லாதவன் காம்யத்தைச் செய்யவேண்டியதில்லை. காம்யகர்மாவைச் செய்கிறவனும் எந்த க்ஷணத்திலும் அதை நிறுத்திவிடலாம. காமனை அழிந்துபோய்விடலாம். ஆதலால் காம்யங்களைச் செய்யாவிட்டால் பிரத்யவாயமோ, பிராயஸ்சித்தமோ ஏற்பட அவகாசமில்லை. இதை ஜைமினி மீமாம்ஸையிலும், காத்யாயனரும தெளிவாக்கியிருப்பதை முன்பு காட்டினேம். இந்த அம்ஸத்தை மனதில் வைத்துக்கொண்டு கவனித்தால் யக்ஞாக்னிஹோத்ராதிகள் செய்யாவிட்டால் பிரத்யவாய பிராயஸ்சித்தாதிகள் உண்டென்று சுருதி, கல்பஸூத்ர, ஸ்மிருதி நிபந்தன பிர

மாணங்கள் விதிப்பது எப்படி பொருந்தும்? காம்யங்களாயிருந்தால் இது பொருந்துமா? சுருதியானது யாகம் செய்யாவிட்டால் ருணதோஷமுண்டென்று சொல்லியதும், மனு, யாக்ஞவல்க்யாதி ஸ்மிருதிகாரர்கள் மேற்படி ருணதோஷத்தை ஸ்திரப்படுத்தி உபபாதக தோஷமாக சேர்த்ததும், வஸிஷ்டாதிகள் ருண தோஷத்தைக்காட்டி ஆதாநாக்நிஹோத்ராதிகள் கட்டாயமென்று காட்டியதும் ஸங்கதமாகுமா? அக்நிஹோத்ராதிகள் கேவல காம்யங்களாயிருந்தால் "ஆஹிதாக்நிபாயில்லாமை"யை மனு, யாக்ஞவல்க்யர்கள், உபபாதக தோஷத்தில் சேர்த்தது எப்படி? யாவஜ்ஜீவ சுருதியின்படி உயிருள்ளவரையில் அக்நிஹோத்ரம் செய்துதீரவேணுமென்றும், ஆரம்பித்த அக்நிஹோத்ரத்தை, நடுவில் எந்தகாரணத்தைக்கொண்டும் பரித்யாகம் செய்தால் "வீரஹத்தி" தோஷம் ஏற்படுமென்றும் சுருதியும் மனுவும் கூறியதன் கதியென்ன? காம்யத்தை ஆரம்பிக்கவும் இஷ்டமான போது நிறுததவும் காமமே காரணமாகையால் மேற்கண்டபடி வீரஹத்தி தோஷம் காம்யத்திற்கு உண்டா?

ஆபஸ்தம்ப போதாயனுதிகள், விவாஹமானவுடனேயே ஆதான, அக்நிஹோத்ராதிகளை ஆரம்பிக்கவேணுமென்று விதிப்பதும், போதாயனர் "தௌர்பிராம்மண்யம்" என்ற தோஷத்தைச் சொல்லியதும் காம்யத்திற்கு ஒவ்வுமா? காம்யத்தைச் செய்ய காமனை தோன்றும் காலமே காலமாகையால் விவாஹாதி காலங்களைக் காட்டி நிர்பந்திக்க நியாயமுண்டா?

யக்ஞாக்நிஹோத்ராதிகளை பரித்யாகம் செய்துவிட்டு, ஸந்யாஸத்திற்குப்போக சாஸ்திரமில்லையென்றும், யாவஜ்ஜீவ சுருதி பிரபலமென்று ஜைமினி கூறியதும், வேதாந்திகள் யாகாதிகள் நித்யங்களாயிருந்தாலும், மிகுதியான வைராக்யத்தால் ஸன்யாஸத்திற்கு போகிறவன்மட்டும் யக்ஞாதிகளைவிட்டு அதற்குபோக விதிவிலக்கு உண்டென்று கூறி, ஸன்யாஸத்திற்குப்போகாத கிரஹஸ்தனுக்கு, யாவஜ்ஜீவசுருதி, ருண சுருதி, வீரஹத்தி தோஷம் உண்டென்றும் அங்கீகரித்தார்களே? காம்யமாயிருந்தால் இது சிறிதாவது ஒவ்வுமா? யக்ஞாதிகள் ஆச்ரம தர்மங்களென்றும், ஸம்ஸ்காரங்களென்றும் வ்யாஸ கௌதமாதிகள் எப்படிச் சொன்னார்கள்?

மனு முதலியவர்கள், ஆஹிதாக்நியின் பார்யை இறந்து போனால், உடனே மறு விவாஹம் செய்துகொண்டு, சிறிதுகூட தாமவிக்காமல் மறுபடி ஆதானக்நிஹோத்ராதிகளை ஆரம்பித்து விடவேணுமென்று கூறினார்கள். யாக்ஞவல்க்யர்,

दाहयित्वाग्निहोत्रेण स्त्रियं मृतवतीं पतिः ।
आहरेत् विधिवत् दारान् अग्नीन् चैव अविलंबयन् ।
(या-आ-89)

என்பதாலும்

पुनर्दारक्रियां कुर्यात् पुनराधानमेव च ॥

என்பதால் மனுவும், விதி செய்வது ஸரியாகுமா? காம்யமாயிருந்தால் இந்த விதி செய்ய என்ன நியாயம்?

கிருஹஸ்தன் வானப்ரஸ்த ஆச்ரமத்திற்குப்போன பிறகும்,

"गृहीत्वाचाग्निहोत्रं तु होमं तत्र न हापयेत" ।
"अग्निहोत्रं च जुहुयात् पंचयज्ञान् समाचरेत्" ।
"वैतानिकं च जुहुयात् अग्निहोत्रं यथाविधि" ॥

என்கிற வசனங்களால் அக்நிஹோத்ராதிகளை த்யஜிக்காமல் அநுஷ்டிக்கவேணுமென்று விதிப்பது பொருந்துமா? காம்யங்களாயிருந்தால் இந்த விதி எதற்காக?

—

பிர்ம்ம ஸூத்ரத்தில் ஸ்ரீ வியாஸர் विहितत्वाच्च என்ற ஸூத்ரத்தால் யக்ஞாக்நிஹோத்ராதிகள் ஆஸ்ரம தர்மங்கள் என்று கூறியதும், அங்கு ஸ்ரீ சங்கர ஸ்ரீ ராமானுஜாதி பாஷ்யகாரர்கள் யாவஜ்ஜீவ சுருதியை காட்டி யக்ஞாதிகள் ஆச்ரம தர்மங்களென்று ஸ்தாபித்திருப்பதும், எல்லாவற்றையும்விட முக்யமாகும். இவைகளை சிறிதாவது பராமர்சித்தால், யக்ஞாக்நிஹோத்ராதிகள் கேவல காம்யங்களென்ற அசட்டுவாதமானது அந்த பிரமாணங்களின் எதிரில் தலைக்காட்டமுடியாமல் பறந்தோடி மறைந்து போகவேண்டியவைகளே.

## நித்யங்களில் யதாசக்தி அநுஷ்டானமேபோதும்.

இவ்வாறு அக்நிஹோத்ராதிகள் நித்யங்களாயிருப்பதால் தான் இந்த நித்யகர்மங்களை பரிபூர்ண அங்கங்கள் இல்லாவிட்டாலும் யதாசக்தி கிடைக்கும் அங்கங்களை வைத்துக்கொண்டாவது செய்துதீரவேணுமென்றும், அதனால் அந்த கர்மாவுக்கு சாஸ்திரீயமாக எவ்விதக் குறைவும் எற்படாதென்றும் ஸகல சாஸ்திரங்களும் ஒரு முகமாக விதி செய்துள்ளன. இந்த முக்ய விஷயத்தை பிராமாணிகர்கள் கவனிக்கவேண்டியதவஶ்யம். யக்ஞத்தையும் அதை அனுஷ்டிக்கும் சிஷ்டர்களையும் குறைகூறும் சிலர், யச்ஞாதிகள் பரிபூர்ண அங்கங்களுடன் முக்ய கல்பமாகவே செய்யப்படவேணுமென்றும், இல்லாவிட்டால் யாகாதிகள் பூர்த்தியாகாததுடன் தோஷமேற்படுமென்றும் விபரீத பிரஸங்கம் செய்வதைப் பார்க்கிறோம். இது மறைமுகமாக யக்ஞ தூஷணத்தில் சேர்ந்ததே. ஆகையால் இவ்விஷயத்தில் சாஸ்திர விதியென்னவென்பதை யாவரும் தெரிந்துகொள்ளவேண்டியதவஶ்யம். நித்யங்களாக விதிக்கப்பட்ட யக்ஞாக்நிஹோத்ராதிகளை பூர்ண சக்தியுள்ளவன் பரிபூர்ண அங்க கலாபங்களுடன் முக்ய கல்பமாகச் செய்வது நியாயமே. ஆயினும், காலதேச வைகுண்யத்தினாலும், அஶக்தியாலும், வேறு காரணங்களாலும் நித்யாக்நிஹோத்ராதிகளை யதாவத்தாக அநுஷ்டிக்க ஸந்தர்ப்பமில்லாது போனாலும், அதற்காக யக்ஞாதிகளை நிறுத்தக்கூடாது.

யதாசக்தி நேர்ந்த அங்கங்களை வைத்துக்கொண்டு யாகம் செய்தாலேபோதும். இவ்விஷயத்தை இதம்பரமாக விசாரித்து மீமாம்ஸா, கல்பஸூத்ர ஸ்ம்ருதி நிபந்தனகாரர்கள் மேற்கண்டபடி ஸித்தாந்தம் செய்துள்ளார்கள்.

## இதில் மீமாம்ஸையின் அபிப்பிராயம்

ஶ்ரௌதகர்ம விசாரத்திற்காகவே ஏற்பட்ட மீமாம்ஸையில் 6-வது அத்யாயத்தில் செய்துள்ள ஸித்தாந்தத்தை முன்பு காட்டியுள்ளோம். அங்கு सर्व शक्तौ प्रवृत्तिस्स्यात् என்பதால் பூர்ண சக்தியுள்ளவன், பரிபூர்ண அங்ககலாபங்களுடன் செய்வதாயிருந்தால்தான் யாகத்தில் பிரவர்த்திக்கலாமென்று பூர்வபக்ஷம்செய்துகொண்டு, अपिवाप्येकदेशेस्यात् என்ற ஸித்தாந்த ஸூத்ரத்தால், நித்யகர்மாக்களை யதாசக்தி செய்தால் போதுமென்றும், அவை

நிறைவேறிவிடுமென்றும், பரிபூர்ண அங்ககலாபங்களை முடிந்த வரையில் செய்யலாமென்றும், ஏனெனில் நித்யங்களைச் செய்யாவிட்டால் ப்ராயஸ்சித்தத்தை சுருதிகள் விதிக்கின்றனவென்றும் ஸித்தாந்தம் சொல்லப்பட்டது.

அதோடு, காம்யகர்மாக்களில் இந்த நியாயம் வராதென்றும், காம்யயக்ஞங்கள் அநித்யங்களாயும், செய்யாவிட்டால் தோஷமில்லாதவைகளாயுமிருப்பதால், ஸகல அங்க பூர்த்தியுடன் செய்யப்பட்டால்தான் காம்யகர்மா ஸித்திக்குமென்றும்

काम्येषु चैवमर्थित्वात्—अकर्मणिच अप्रत्यवायात् ॥

என்பதால் கூறப்பட்டது.

இதில் காத்யாயன அபிப்பிராயம்

இதை காத்யாயனரும் சொல்லுகிறார்.

विगुणेऽपि फलनिर्वृत्तिः अङ्गप्रधानभेदात् ॥ என்று

இங்கு பாஷ்யம் கூறுவதாவது :—

विगुणेपि नित्ये कर्मणि फलनिर्वृत्तिः भवत्येव । कुत एतत् यतः अङ्गानि प्रधानानि च भिन्नानि । यावज्जीव वाक्येषु दर्शपूर्णमासादीनामेव कर्तव्यत्वं विधीयते । नाङ्गानाम् ॥

"அங்ககலாபக் குறைவால் விகுணமாயிருப்பினும் நித்ய கர்மாவானது பூர்த்தியடைந்ததாகவே ஆகும். ஏனெனில், நித்யங்களில், அங்கங்களும், பிரதான யாகங்களும் தனித்தனியானவைகளே. யாவஜ்ஜீவ சுருதி வாக்யங்களால் விதிக்கப்படும் தர்சபூர்ண மாஸாதி ஶப்தத்திற்கு முக்யமான அர்த்தம் ஆக்னேயாதி ஆறு யாகங்கள்தான். அதில் அங்கங்களுக்கு விதியில்லை." என்று

மேலும் காத்யாயனர்

तथा च दृष्टं என்றதால் நித்யகர்மாவை அங்க பூர்த்தியில்லாமல் செய்தாலும் அது பூர்த்தியாகிவிடுவதாக சுருதியில் காணப்படுகிறதென்று காட்டினார். இங்கும் கர்க்க பாஷ்யத்தில்,

विगुणमपि नित्यं कर्म यथा कथंचित् परिसमाप्यमानत्वेन श्रुतौ दृष्टं........तस्मात् विगुणमपि नित्यं फलं साधयत्येव ॥

என்பதால் நித்யகர்மா ஸகலாங்க பூர்த்தியற்றதாயிருந்தாலும் பூர்த்தியடைவதாகக் கூறி ஒரு சுருதியையும் உதாஹரிக்கிறார். இந்த ந்யாயம் காம்யகர்மாக்களிலும் வரலாமோவென்று சங்கித்து காத்யாயனர் அடுத்த ஸூத்ரத்தால் நிராகரிக்கிறார்.

न श्रुति लक्षणत्वात् ॥ என்று

இங்கு பாஷ்யமாவது

नैवं विगुणेऽपि काम्ये फलमस्ति । तस्मात् सगुणमेव काम्यं फलं साधयति । नित्ये पुनः सर्वदा कर्तव्यत्वावश्यंभावात् अवश्यं भाविनि वैगुण्ये उपपदार्थः कल्प्यते "यथा शक्नुयात्" इति ॥

காம்ய கர்மாக்களில் அங்கம், பிரதானம் எல்லாம் ஸம்பந்தப்படுவதால் எல்லா அங்க பூர்த்தியுடன் செய்தால்தான் பலஸித்தியுண்டென்று ஸித்தாந்தம் செய்யப்பட்டது.

தைத்திரீய சுருதியும்,

तदेव यादृक् कीदृक् च होतव्यम् என்பதால் நித்யாக்நிஹோத்ராதிகளை யதாசக்தி கிடைத்த அங்கங்களை வைத்துக்கொண்டு எப்படியாவது செய்யவேணுமென்று விதிக்கிறது.

### மாதவீய அபிப்பிராயம்.

கலியுக தர்மத்தைச் சொல்லவந்த பாராசர மாதவீயத்திலும் இந்த விஷயம் விசாரித்து நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. மாதவீயம் கூறுவதாவது:—

विहित दक्षिणापर्याप्त द्रव्याभावेऽपि नित्यं न लोपयेत् । .... नित्यानां असमर्थेनापि अपरित्याज्यत्वात् तत्र यथाशक्तिप्रयोगः। अपरित्याज्यानि, नित्यानि । जीवनादि नित्यवशेन, तत्प्रवृत्तेः ।

(परा-3-7-1-आचार कांडः)

"விதிக்கப்பட்ட தக்ஷிணைக்கு வேண்டிய திரவ்யாதிகள் இல்லாதபோதிலும் நித்யங்களான யாகங்களைவிடக் கூடாது என்று வசனங்கள் கூறுகின்றன. சக்தியற்றவனுயிருந்தாலும் நித்யங்களான யக்ஞங்களை விடமுடியாதாகையால் அங்கு யதாசக்தி அனுஷ்டானம் போதும். அக்நிஹோத்ராதிகள் யாவஜ்ஜீவ சுருதியால் ஜீவனை நிமித்தமாகவைத்து விதிக்கப்படுகின்றன. ஆதலால் நித்யங்கள் விடத்தக்கவையல்ல."

மேற்கண்ட வாக்யங்களால் ஸ்பஷ்டமாக நித்யங்களில் ஸகலாங்கபூர்த்தி அவச்யமில்லையென்பதை மாதவீயம் சொல்லிவிட்டு இந்த நியாயம் காம்யயக்ஞ விஷயத்தில் வராதென்று மேல் வாக்யங்களால் ஸித்தாந்தம் செய்கிறது.

कामनातु न निमित्तं । येनावश्यमिष्टिं प्रवर्तयेत् । अतो न काम्यस्य अपरित्याज्यत्वं । काम्यफलस्य कृत्स्नांगोपकृत प्रधानमन्तरेण अनिष्पत्तेः यदा कृत्स्नांगानुष्ठानशक्तिः तदैव काम्यमनुष्ठेयम् ॥

என்ற வாக்யங்களால், காமனையானது கட்டாயமாக யாகம் செய்யத் தூண்ட ஒரு நிமித்தமாகாது என்றும், ஆதலால் காம்ய யக்ஞங்களைவிடக்கூடாதென்ற பபமில்லையென்றும் ஸகல அங்கபூர்த்தியுடன் காம்யத்தை செய்ய சக்தியிருந்தால்தான் செய்யலாமென்றும்

மாதவீயத்தில் வியவஸ்தை செய்யப்பட்டது. இவ்வாறு அநேகப் பிரமாணங்களைக்கொண்டு, நித்யம் காம்யம் என்ற பிரிவு உறுதிப் படுத்தப்பட்டிருப்பதுடன் நித்யங்களான யக்ஞங்களை முடிந்தவரையில் யதாசக்தி அங்கபூர்த்தியுடன் செய்தாலும் போதுமென்றும், ஏனெனில் நித்ய யக்ஞங்களைச் செய்யாவிடில் ப்ரத்யவாய பிராயஸ்சித்தாதிகள் விதிக்கப்பட்டிருப்பதுதானென்றும் ஸித்தமாகியது. இதனுல் மனுஸ்மிருதியிலும், யாக்ஞவல்க்யத்திலும் காணப்படும் ஒரு விஷயத்திற்கும் ஸமாதானம் கூறப்பட்டதாகிறது.

**பணமுள்ளவனே ஸோமயாகாதிகாரி என்பது காம்யவிஷயம்**

மனுஸ்மிருதியில் "எவனுக்கு மூன்று வருஷம்வரை குடும்ப ரக்ஷணம் செய்யவேண்டியதற்கான பணமிருக்கிறதோ, அவன்தான் ஸோமயாகம் செய்யலாம். ஆகையால் ஸ்வல்ப தனம் உள்ளவன் ஸோமபானம் செய்யக் கூடாது. அப்படிச் செய்தாலும் அதன் பலனை அவன் அடையமாட்டான்" என்று

यस्य त्रैवार्षिकं भक्तं पर्याप्तं भृत्यवृत्तये ।
अधिकं वापि विद्येत स सोमं पातुमर्हति ।
अतः स्वल्पीयसि द्रव्ये यस्सोमं पिबति द्विजः ।
स पीतपूर्वसोमोपि न तस्याप्नोति तत्फलम् ॥ (11-7-8)

என்பதால் ஸோமயாகம் செய்ய நிபந்தனை விதிக்கப்படுகிறது. மூன்று வருஷங்களுக்கு குடும்ப ஸம்ரக்ஷணம் செய்யப் பணமுள்ள அதிகாரியே ஸோமயாகம் செய்யலாமென்றால் மற்றவர்கள் செய்யக்கூடாதென்று விதிப்பதுடன் ஸோமயாகம் நித்யமென்ற ஸித்தாந்தமும் போய்விடுகிறது.

யாக்ஞவல்க்யரும்

त्रैवार्षिकाधिकान्नो यः स हि सोमं पिबेत् द्विजः ।
प्राक्सौमिकीः क्रियाः कुर्यात् यस्यान्नं वार्षिकं भवेत्
(யா-ஆ-124)

என்பதால் மனுவைப்போல் சொல்லுகிறார். நித்ய யக்ஞங்கள் யதாசக்தி செய்தால் போதுமென்று மேலேகாட்டிய பிராமாணங்களுக்கு இது விருத்தமாயிருக்கிறது. ஆகையால் இந்த விதிகள் காம்ய ஸோமயாக விஷயமென்று வ்யாக்யாதாக்களும், சந்திரிகா மாதவீயாதிகளிலும் வியவஸ்தை கூறியுள்ளனர். ஸோமயாகம் நித்யமென்றும், யதாசக்தி செய்தால்கூடப் போதுமென்றும் சுருதிகளும், மனு முதலியவர்களும் கூறியிருக்கையில்,

மூன்று வருஷத்திற்குவேண்டிய பணமுள்ளவன்தான் ஸோம யாகம் செய்யலாமென்று இங்கு நிபந்தனை விதிப்பது விருத்த மாகுமல்லவா ? மனுஸ்மிருதியில், समान्ते सौमिकैः मखैः என்ற தால் ஒவ்வொரு வஸந்தகதிலும் ஸோமயாகம் செய்யவேணு மென்று நித்யமாக விதித்தார். யாக்ஞவல்க்யரும் प्रतिसंवत्सरं सोमः என்பதால வீப்ஸை காட்டி ஸோமயாகம் நித்யமென்று விதித் தா. அப்படியிருக்க இங்கு நியமம் விதிப்பது காம்ய ஸோமயாக விஷயந்தானென்பதில் ஸந்தேஹமுண்டோ ?

### இதில் மேதாதிதி அபிப்பிராயம்.

மேற்படி சுலோக வ்யாக்யானத்தில் மேதாதிதி கூறுவதாவது:—

> "इच्छासोमविषयोयं विधिः" । फलग्रहणाच्च काम्यविषयता स्फुटतरा प्रतीयते ॥
>
> மூன்று வருஷங்களுக்கான திரவ்யமுள்ளவன் ஸோம பானம் செய்யலாமென்ற இந்த விதியானது காம்ய ஸோமயாக விஷயம், இதில் பலனைக் குறிப்பிட்டு விதிக்கப்படுவதால், இது காம்ய விஷயமென்று ஸ்பஷ்டதமமாகத் தெரிகிறது" என்று.

### விக்ஞானேஸ்வரர்

விக்ஞானேஸ்வரரும் மிதாக்ஷரையில்—

> एतच्च काम्यभिप्रायेण, नित्यस्य अवश्यकर्तव्यत्वात् न नियमः।
>
> "இந்த விதியானது காம்ய ஸோமயாக விஷயமான அபிப்பிராயத்துடன் சொல்லப்பட்டது. நித்ய ஸோம யாகம் அவச்யம் செய்து தீரவேண்டியதாகையால் அதற்கு இந்த நியமம் கிடையாது."

என்று கூறினர்

### ஸ்ரீமாதவாசார்

பராசர மாதவீயத்திலும் ஸம்பூர்ண த்ரவ்ய ஸௌகர்ய மிருந்தால்தான் ஸோமயாகம் செய்யலாமென்று

> ननु संपूर्णद्रव्यसंपत्तावेव सोमयागः कार्यः

என்பதால் பூர்வபக்ஷம் செய்துகொண்டு மேற்படி மனுவசனத்தை

அதற்கு ஆதாரமாகக் காட்டிவிட்டு, ஸித்தாந்தம் கூறுகையில்

एतेषां वचनानां काम्य सोमयाग विषयत्वात् ॥ (प-आ-)

என்ற வாக்யத்தால் மேற்கண்ட மனு, யாக்ஞவல்க்யாதி வசனங்கள் காம்ய ஸோமயாக விஷயம் என்று நிர்ணயித்தார்.

குல்லூகபட்டர்

மேற்படி மனு வசனவ்யாக்யானத்தில், குல்லூகபட்டரும்

यस्य वर्षत्रयपर्याप्तभक्तादि स्यात् सः काम्यसोमयागं कर्तुं मर्हति । नित्यस्य सोमादेस्तु यथा कथंचित् कर्तव्यत्वात् नानिषेधः । अतएव "समान्ते सौमिकैः मखैः" ॥

इति नित्यविषयत्वमुक्तवान्

என்பதால் "எவனுக்கு மூன்று வருஷத்திற்குப்போதுமான த்ரவ்ய சக்தியுள்ளதோ, அவன் காம்ய ஸோமயாகம் செய்யத்தகுதியுள்ளவன். நித்ய ஸோமயாகம் யதா சக்தி எப்படியாவது செய்யப்படவேண்டியதாகையால் இந்த நிஷேதம் நித்யத்திற்கு அல்ல. ஆகையால் மனுவே, கீழ் அத்யாயத்தில் "பிரதி வருஷமும் ஸோம யாகம் செய்யவேணும்" என்ற தனி விதியால் நித்ய ஸோம யாகத்தைச் சொன்னார்" என்று

வெகு தெளிவாக வ்யவஸ்தை கூறினர்.

ஸ்மிருதிசந்திரிகா

ஸ்மிருதி சந்திரிகையிலும், மேற்கண்ட மனு யாக்ஞவல்க்ய வசனங்கள் காம்யஸோம யாகவிஷயமென்று வியவஸ்தை செய்யப்பட்டிருக்கிறது.

அதாவது :—

"यस्य त्रैवार्षिकं" इत्येतत् वचनं काम्यसोमयागाभिप्रायम् । ऋणश्रुतेः नित्यस्य अवश्य कर्तव्यत्वात्, अकरणे प्रत्यवाय विधानाच्च । अतः न अल्पधनः काम्य सोमयागं कुर्यात् । ........तेन अल्प धनस्यापि नित्य सोमयागे अधिकार सिद्धिः ॥

என்பதால் ருணதோஷம், ப்ரத்யவாயம் முதலிய காரணங்களால் நித்ய ஸோமயாகம் அவச்யம் செய்யவேண்டியதாகையால் மனு வசனம் காம்ய ஸோமயாக விஷயமென்று சொல்லப்பட்டது.

ஸ்ரீதீக்ஷிதர்

ஸ்மிருதி முக்தாபலம் வர்ணாச்ரம காண்டத்தில் வைத்யநாத தீக்ஷிதரும் மேற்கண்ட மந்வாதி வசனங்களை எடுத்து

एतानि मन्वादिवचनानि काम्ययाग विषयाणि । यतः विहित दक्षिणापर्याप्त द्रव्याभावेऽपि नित्यं न लोपयेत् इत्याह बोधायनः ।........"नित्यं नित्यानि कुर्वीत नच नित्यानि लोपयेत्" ॥ इति ।

என்கிற வாக்யங்களால் மேற்படி மந்வாதி வசனங்கள் காம்ய ஸோமயாக விஷயமென்றும், ஏனெனில், சாஸ்திரப்படியான தக்ஷிணைக்கு வேண்டிய த்ரவ்யமில்லாவிட்டால் கூட நித்ய யாகங்களை லோபம் செய்யக்கூடாதென்று போதாயனர் கூறுவதாகக் காட்டினார்.

ஆகையால் மூன்று வருஷத்திற்கான தனமுள்ளவன் ஸோமயாகம் செய்யலாமென்ற மனு யாக்ஞவல்க்ய வசனங்களும், ஸ்வல்ப தக்ஷிணையுடன் யாகங்களைச் செய்யக்கூடாதென்று

नत्वल्पदक्षिणैः यज्ञैः यजेतेह कदाचन

என்பதுபோன்ற நிஷேத வசனங்களும் காம்ய ஸோமயாக விஷயமென்று நிர்ணீதமாயிற்று.

ஆகையால்தான் ஸ்மிருதி சந்திரிகையில்,

सर्वथा प्रथमः सोमयागः कार्यो द्विजोत्तमैः ।
यथा संभविनाङ्गेन शक्त्या दत्वा तु दक्षिणाम् ॥

என்று யதாசக்தி தக்ஷிணை கொடுத்தும், முடிந்தவரையில் அங்க பூர்த்தி செய்தும் ஸோமயாகத்தை அநுஷ்டிக்கவேணுமென்று சொல்லப்பட்டது.

கல்ப ஸூத்ரங்களில் கௌணபக்ஷ உபதேசம்

யாகப்பிரயோகங்களைச் செய்துள்ள போதாயன ஆபஸ்தம்பாதி ஸகல கல்ப ஸூத்ரகாரர்களும் நித்ய யக்ஞங்களை யதாசக்தி

கௌணகல்பத்தை அநுஸரித்தாவது செய்யவேண்டுமென்பதை தங்கள் ஸூத்ரங்களில் தெளிவாக்கியுள்ளார்கள். முதலில் ஆதானத்தில், அஜம், அச்வம், காளைமாடு, பசுமாடு, ஆகிய பல வித தக்ஷிணைகள் கூறப்பட்டன. பணமில்லாதவன் மேற்கண்ட தக்ஷிணைகளைக் கொடுக்கமுடியாதாகையால் ஆபஸ்தம்பர் ஏழைகளுக்கு ஏற்றதான ஒரு விதியையும் உடனே சொல்லலானார்.

यद्यनाढ्योऽग्नीनादधीत काममेव एकां गाम् दद्यात् ।
सा गवां प्रत्याम्नायो भवतीति विज्ञायते ॥

என்பதால் ஏழையாயிருப்பவன் அக்நி ஆதானம் செய்தால் ஒரே ஒரு பசுவைமட்டும் தக்ஷிணையாக கொடுத்தால்போதுமென்றும், அதுவே மற்ற தக்ஷிணைகளுக்கும் பிரதிநிதியாகிவிடுகிறதென்றும் கௌணகல்பத்தையும் கூறினார். போதாயனரோவென்றால் மேற்படி ஒரு பசுவைக்கூட தக்ஷிணையாகக் கொடுக்கச் சக்தியற்ற யஜமானன், வஸ்திரம், ஓதனம், முதலியவைகளைக் கொடுத்தால் கூட போதுமென்றும், அதனால் ஆதானம் பூர்த்தியாகிவிடுவதாயும் கூறியுள்ளார்.

प्रसिद्धाः अग्न्याधेय दक्षिणाः ददाति, तांश्चेत् नाधिगच्छेत्
वासांसि एतावन्ति मन्थान्वा ओदनान्वा एतावतो दद्यात् ॥

என்று மேற்கண்டபடி ஆபஸ்தம்பரும்,போதாயனரும் சொன்ன கௌணகல்பம் சுருதியிலே சொல்லப்பட்டதாகும்.
மனுவும்,

प्रजापत्यमदत्वाश्वं अग्न्याधेयस्य दक्षिणाम् ।
अनाहिताग्निर्भवति ब्राह्मणो विभवे सति ।

என்பதால் ஆதானத்தில் அஸ்வதக்ஷிணையை சக்தியுள்ள பிராம்மணன் கொடுத்தால்போதுமென்றும் அசக்தனுக்கு அது நிர்ப்பந்தமில்லையென்றும் காட்டினார்.

ஸோமயாகத்திலும், ஏழு பசுமாடுகள், அல்லது இருபத்தொன்று, அறுபது, நூறு,நூற்றிப்பன்னிரண்டு, ஆயிரம் முதலிய பலவித ஸங்கியை உள்ள கோக்களை தக்ஷிணையாகக் கொடுக்கும்

படி கூறிவிட்டு, கடைசியாக கௌண கல்பமாக மூன்று பசுக்களை யாவது தக்ஷிணையாகக் கொடுத்தால்போதுமென்று

वसन्ते वसन्ते ज्योतिषा यजेत तस्य तिस्रो दक्षिणा इति छन्दोग ब्राह्मणं भवति ।

என்பதால் சந்தோக ச்ருதி பிரமாணத்தைக் காட்டி ஆபஸ்தம்பர் கூறினார்.

## தக்ஷிணைகளுக்கு பிரதிநிதி.

யாகாதிகளில், வஸ்திரம், ஹிரண்யம், முதலிய த்ரவயங்களும் பசுமாடு, காளைமாடு, அஜம் முதலிய பிராணிகளும் பெரும்பாலும் தக்ஷிணையாக விதிக்கப்படுகின்றன. அவைகளை அந்தப்படியே கொடுப்பது நியாயமாயினும், அவைகளுக்குப் பிரதிநிதியாகப் பணத்தைக் கொடுப்பதையும் சாஸ்திரங்கள் ஆதரிக்கின்றன. சில விஷயங்களில் பிரதிநிதியே பொருத்தமாயும் காணப்படுகிறது. ஏனெனில், சில இஷ்டி, அல்லது யாகங்களில் எல்லா ரித்விக்குகளுக்கும் பொதுவாக ஒரே ஒரு வஸ்திரமே தக்ஷிணையாக விதிக்கபபடுகிறது. ஒரு வஸ்திரத்தை நான்கு பேர்கள் எப்படிப் பிரித்துக்கொள்ளுவது? இதுபோல் ஹிரண்யம் முதலியவைகளையும் ரித்விக்குகள் தங்களுள் பிரித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. இந்த சிரமம் பசு, காளை, முதலிய பிராணிகளை தக்ஷிணையாகக் கொடுக்கும் விஷயத்தில் அதிகமிருக்கிறது. ஆதான, பசுபந்தாதிகளில் காளைமாடு, அல்லது பசுமாடு முதலிய பிராணிகள் தக்ஷிணையாக விதிக்கப்பட்டிருப்பதால், நான்கு அல்லது ஆறு ரித்விக்குகள் அந்த பிராணிகளை எப்படி பங்குபோட்டுப் பிரிப்பது? ஆதலால் பிராணி தக்ஷிணைக்குப் பிரதிநிதியாக அவைகளின் கிரயங்களை 'கோமூல்யம்'' என்று கணக்குச் செய்து பணமாகக் கொடுக்கவேண்டிவருகிறது. இதை அறிந்துதான் சாஸ்திரங்கள் இவைகளுக்குப் பிரதிநிதிகளை விதித்துள்ளன.

த்ரிகாண்ட மண்டனத்தில்

न लभ्यन्ते यदा गावो दक्षिणात्वेन चोदिताः ।
प्रत्येकं तत्र निष्कं स्यात् तदर्धं पादएव वा ॥

(த்ரிகாண்ட-2-92)

गावो हेमानि वस्त्राणि चोद्यन्ते यत्र दक्षिणाः ।
तदभावे ददेत् मन्थं तत्संख्यानथवौदनान् ॥
(த்ரிகாண்ட-2-95)

என்ற வசனங்களால், தக்ஷிணைக்காக விதிக்கப்பட்ட பசுமாடுகள், ஹிரண்யம், வஸ்திரம், முதலியவை கிடைக்காவிட்டால் அவைகளுக்குப் பதிலாகப் பணம் முதலியவைகளைக் கொடுக்கலாமென்று விதிக்கப்படுகிறது.

ஒரு பசுமாட்டுக்குப் பிரதிநிதியாக ஒரு நிஷ்கம் என்ற அளவுள்ள தனத்தைக் கொடுக்கவேண்டுமென்றும், ஒரு நிஷ்கம் கொடுக்க முடியாவிட்டால், அதில் பாதியோ, அல்லது நான்கில் ஒரு பாகமோ பிரதிநிதியாகக் கொடுக்கலாமென்றும் விதிக்கப்பட்டது. இங்கு "கிடைக்காவிட்டால்" என்பதில் தாரித்ரியம் காரணமாகக் கிடைக்காமையும் சேர்ந்தது. ஏனெனில் போதிய தனமில்லாதவனும் கௌணமாக பிரதிநிதியைக் கொண்டு செய்ய அதிகாரமுண்டென்று கீழே பலபடி நிரூபிக்கப்பட்டதல்லவா?

தசரதர் செய்த அச்வமேதத்தில், ரித்விக்குகளுக்கு प्राचीं होत्रे ददौ राजा என்பதால் கிழக்கு முதலிய ஒவ்வொரு திக்குகளை ரித்விக்தக்ஷிணையாகக் கொடுத்தார். ஆனால் ரித்விக்குகள், திக்குகளால் தங்களுக்கு பிரயோஜனமில்லையென்று சொல்ல அவைகளுக்குப் பிரதிநிதியாகப் பணத்தையே கொடுத்ததாகச் சொல்லப்பட்டிருப்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.

न भूम्या कार्यमस्माकं न हि शक्तास्म पालने ।
निष्क्रयं किंचिदेवेह प्रयच्छतु भवानिति ।
मणिरत्नं सुवर्णं वा गावो यद्वा समुद्यतं (रा-बा-14- 8)

பிராயஶ்சித்தம், தக்ஷிணை முதலியவைகளில் எங்கெங்கு கோதானம் விதிக்கப்பட்டிருக்கிறதோ அங்கெல்லாம், அதற்கு பிரதிநிதியாக கோமூல்யமே கொடுக்கலாமென்பதை ஸ்மிருதிகாரர் பலரும் விதித்திருப்பதை பிராயஶ்சித்த பிரகரணங்களில் காணலாம். வைதிகமதத்தில் சிஷ்டாசாரமும் இன்றளவும்

எங்கும் இப்படியே இருந்துவருவதையும் கவனிக்கவேணும். ஆதலால்தான் யதாஶக்தி தக்ஷிணை கொடுத்தாவது நித்யங்களான அக்னிஹோத்ர ஜ்யோதிஷ்டோமாதி ஸ்ரௌத கர்மாக்களை விடாமல் அநுஷ்டிக்கவேண்டுமென்று சாஸ்திரங்கள் விதித்தன வென்று அறியவும்.

### யாகத்திற்காக திரவ்ய ஆர்ஜனம்

நித்யகர்மாக்களான யாகங்களைச் செய்வதற்கு திரவ்யம் அவச்யம் அபேக்ஷிதமாகையால் அதைப்பற்றியும் ஸ்மிருதி கல்ப ஸூத்ரகாராதிகள் செய்துள்ள வியவஸ்தையை இந்த ஸந்தர்ப் பத்தில் கூறவேண்டியிருக்கிறது. யாகத்திற்கு வேண்டிய திர வ்யங்களை தார்மிக தனிகர்களிடமிருந்து யாசனைசெய்து பெற வேண்டுமென்று விதிகாணப்படுகிறது. யாகத்தால் ஏற்படும் மழை முதலிய க்ஷேமங்கள் எல்லா பிரஜைகளுக்கும் பொது வாயிருப்பதால் ஒவ்வொருவரும் யதாசக்தி யாகத்திற்கு திரவ்ய உபகாரம் செய்யவேண்டியது கடமையென்றும் மனு முதலிய வர்கள் விதித்துள்ளார்கள்.

யக்ஞ பிரயோகம் எழுதிய ஆபஸ்தம்பாதி ஸூத்ரகாரர்கள் யாகத்திற்கு வேண்டிய திரவ்யங்களை சேகரித்து வருகிறவர் களுக்கு "ஸம்ஹாரர்கள்" என்ற பெயர்கொடுத்து திரவ்யம் சேகரிக்க அநுமதிகொடுத்துள்ளார்கள். ஸுவர்ண, வஸ்திராதி ரூபங்களான அந்த யாசனை திரவ்யங்களை மந்திர பூர்வமாக யஜமானன் வாங்கிகொள்ளுவதற்காக சுருதியில் "चन्द्रमसि मम भोगाय भव" இத்யாதி மந்திரங்களும் படிக்கப்பட்டிருக்கின்றன.

ஆபஸ்தம்ப கௌதமாதிகள் தர்ம ஸூத்ரத்தில் யக்ஞார்த் தமாக யாசனை செய்வதை விதிக்கிறார்கள். ஆபஸ்தம்பர்,

भिक्षणे निमित्तं आचार्यो यज्ञः
मातापित्रोः शुश्रूषा अर्हतश्च नियम विलोपः ॥
(आ-ध-2-5-1)

என்பதால் யாசனைக்கு நிமித்தங்களைக் கூறுகையில் யக்ஞத்தை எடுத்துள்ளார். மேலும் இதில் अर्हतश्च नियम विलोपः என்பதால் சிஷ்டர்களுக்கு, த்ரவ்யமில்லாத காரணத்தால் அக்நிஹோத்ராதி தர்மங்களுக்கு லோபம் ஏற்படும் போலிருப்பதும் யாசனைக்கு ஒரு காரணமாகக் கூறப்பட்டுள்ளது. இங்கு வ்யாக்யானத்தில் ஹரதத்தர்,

विद्यादिमतः अग्निहोत्रादि नियमे योग्यस्य अर्थस्य अभावेन लोपः ।

என்பதால் இதை விளக்கியுள்ளார். இப்படி யாகார்த்தமாக யாசனையை விதித்துவிட்டு அடுத்த ஸூத்ரத்தால் யாசனை கொடுப்பவர்களுக்கு விதிசெய்து யாகாதிகளுக்காக அந்த கார்ய கௌரவத்தை கவனித்து யதாசக்தி கொடுக்கவேண்டுமென்கிறார்.

த்ரவ்ய உபகாரம் அவச்யம் செய்யவேணும்.

तत्र गुणान् समीक्ष्य यथा शक्तिदेयम् । என்று. இங்கு देयं என்பதால் "கொடுக்கவேண்டு"மென்று கட்டாய விதியாகச் சொல்லியிருப்பதால் கொடுக்காவிட்டால் தோஷமுண்டென்பது நிச்சயமாகிறது. இதை வ்யாக்யானத்தில் ஹரதத்தர்

अवश्यं देयम् । अदाने प्रत्यवायात् ॥

என்பதால் கொடுக்காவிட்டால் ப்ரத்யவாயம் (தோஷம்) ஏற்படுமாகையால் அவச்யம் கொடுக்கவேணும" சொன்னார்.
கௌதமரும், இதே மாதிரி விதிசெய்தார்.
மனுஸ்ம்ருதியில்

सान्तानिकं यक्ष्यमाणम् ।

(म-11-1)

என்பதால் யாகம் செய்வதற்காக யாசனை கேட்கவந்தவன் "தர்ம பிக்ஷுகன்" அதாவது தர்ம கார்யத்திற்காக பிக்ஷை எடுக்கிறவன் என்று ப்ரஸம்ஸித்து, அவனுக்கு அவச்யம் திரவ்ய தானம் செய்யவேணுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது இங்கு வ்யாக்யானத்தில் குல்லூகபட்டர் "யக்ஷ்யமாணம்" என்பதற்கு

अवश्य कर्तव्य ज्योतिष्टोमादि यागं चिकीर्षुः ॥

"அவச்யம் செய்யவேண்டியதாகிய ஜ்யோதிஷ்டோமாதி யாகத்தைச் செய்ய உத்தேசித்தவன்"

என்று விவரணம் கூறியிருப்பதில் "அவச்யம் செய்யவேண்டிய" என்ற பதங்களால் நித்ய ஸோமயாகம் அவச்யம் என்பதைக் குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது. யாகார்த்தம் யாசனை வாங்க அரசனிடம்வந்தால் அரசன் ஸர்வ விதமான ரத்நங்கள், யாகத்திற்காக வேண்டிய தக்ஷிணை த்ரவ்யங்கள் எல்லாவற்றையும் கொடுத்து உபகரிக்கவேண்டுமென்று மனு அடுத்த சுலோகத்தில் விதித்தார்.

## யாகபூர்த்திற்காக திரவ்யத்தை அபஹரிக்கலாம்.

மனுபகவான் இதோடு நிற்கவில்லை யாகத்திற்கு வேண்டிய திரவ்யம் தனிகர்களிடமிருந்து போதியபடிகிடைக்காமல், அதனால் அந்த யாகம் தடைப்படக் கூடிய நிலைமையில் இருந்தால், ஆஹிதாக்நிகளாயில்லாதவர்களும், யாகம் செய்யாதவர்களுமாகிய பிராம்மண, க்ஷத்திரிய, வைச்யர்திகளுடைய கிரஹங்களிலிருந்து திரவ்யங்களைத்தெரிவித்தும் தெரிவிக்காமலும் பலாத்காரமாகவும் எடுத்துக்கொண்டுவரலாமென்றும், இதில் சௌர்ய தோஷமில்லையென்றும், தார்மிகனான அரசன், இக்கார்யத்திற்காகத் தண்டனை விதிக்கக்கூடாதென்றும், மனு ஐந்து ஆறு சுலோகங்களால் கடுமையானவிதி செய்திருப்பதை பிரமாண பரணர்களான ஆஸ்திகர்கள் கவனிக்கவேணும். (மனு-11, 11-21)

இவ்வாறு "அஸாதுக்களான தனிகர்களிடமுள்ள பணத்தை அபஹரித்துக் கொண்டுவந்து தார்மிகர்களான யாக ரித்விக்குகளுக்குக் கொடுக்கிறவன், தன்னை ஒரு ஓடமாகக்கொண்டு, அந்த தனிகனையும் யாக கர்த்தாவையும் கரையேற்றிவைக்கும் புண்ய புருஷன்". (மனு 11-14)

என்றும் மனு பிரசம்ஸை செய்கிறார். இதிலிருந்து வேதோக்தமான யாககர்மாவின் மஹிமையும், அதைச் செய்யவேண்டிய நிர்ப்பந்தமும், அதற்குத் தனிகர்கள் உபகாரம் செய்யவேண்டிய கடமையும் தெளிவாகிறது.

## பிரதிக்ரஹாதிகளில் சாஸ்திர நிர்ணயம்.

மனுவையனுஸரித்து வேறு பல ஸ்மிருதிகாரர்களும் யாக தர்மார்த்தமாக யாசனை செய்யும் விஷயமாகப் பல வசனங்களை வெளியிட்டிருக்கிறார்கள்.

ஸ்மிருதி பாஸ்கரத்தில்,

निर्धनो धनसाध्येषु नित्येषु विकृतेषु च ।
चौर्यात् अन्यैः कुमार्गैर्वा इज्यार्थं धनमाहरेत् ॥
चण्डालात् प्रतिगृह्यापि यजेत् आवश्यकैः मखैः ।

என்பதால் தனமில்லாதவன் திரவ்ய ஸாத்யமானதும், அவச்யம் செய்து தீரவேண்டியதாக விதிக்கப்பட்டதுமான நித்யமான யாகத்தைச் செய்ய சௌர்யம் முதலிய எவ்லா தவறான வழியாலும் கூட திரவ்ய சேகரிக்கலாம் என்று கூறப்பட்டது.

மேலும் மனு யாக்ஞவல்க்யாதிகள் யாகத்திற்காக சூத்ரனிடமிருந்து திரவ்யம் வாங்கக்கூடாதென்று தீவ்ரமாகத் தடுத்து

न यज्ञार्थं धनं भिक्षेत् शूद्रादपि कदाचन ।

என்பதால் விதி செய்ததுடன பிரபலமான தோஷமும் கூறினார்கள். ஆயினும் அந்த வசனங்கள் காம்ய ஸோமயாக விஷயமென்றும், நித்ய ஸோமயாகம் அவச்யகரணீயமாகையால் அவச்ய மேற்பட்டால் அந்த பிரதிக்ரஹமும் செய்டலாமென்றும் சில நிபந்தனகாரர்கள் வ்யவஸ்தை கூறினார்கள்.
த்ரிகாண்டமண்டனத்தில்

"ये शूद्रादधिगम्यार्थं अग्निहोत्रमुपासते" ।
इत्यादि निन्दावाक्यानि काम्य होम विवक्षया ॥

(த்ரிகாண்ட-1-110)

என்பதால், "மனுஸ்மிருதியில் சூத்ரபிரதிக்ரஹத்தை நிந்தித்து செய்யப்பட்ட வசனங்கள் காம்ய அக்நிஹோத்ர ஸோம அபிப்ராயமாகச் சொல்லப்பட்டவை" என்று சொல்லப்படுகிறது. இதன் வ்யாக்யானத்திலும்,

मन्वाद्युक्तं निन्दावचनं काम्येहोम विषयं न नित्य विषयम् । तेषां करण श्रवणस्य बलीयस्त्वात् । स्मृतेश्च तदपेक्षया दुर्बलत्वात् ॥

என்பதால், "நித்ய யாகங்களை விதிக்கும் வேத வாக்யங்களைவிட, சூத்ரப்ரதிக்ரஹ நிஷேத ஸ்மிருதி வசனங்கள் துர்பலங்களாகையால், மன்வாதி ஸ்மிருதிகளில் சூத்ரப்ரதிக்ரஹத்தை நிந்திக்குமிடங்கள் காம்ய யாக விஷயமேயல்லது நித்ய யாக விஷயமல்ல" என்று விவரணம் செய்யப்பட்டிருக்கிறது.

வைத்யனாத தீக்ஷிதீய ஸ்மிருதி முக்தாபலத்திலும், தீக்ஷிதர் வாக்யமானது :—

एतानि शूद्रप्रतिग्रहनिषेध पराणि वचनानि नित्ययतिरिक्त-विषयाणि । "चण्डालात् प्रतिगृह्यापि यजेत् आवश्यकैः मखैः" इति नित्यस्यावश्यकत्वस्मरणात्, इति स्मृतिरत्नावल्यादौ अभिहितम् ॥

இதில் "சூத்ரப்பிரதிக்ரஹநிஷேத வசனங்கள் நித்ய யாகத்தைத் தவிர மற்றவைகளின் விஷயமாகும் 'சண்டாளனிடம் பிரதிக்ரஹம் செய்தாவது அவசியமான யக்ஞங்களால் யஜிக்கவேண்டும், என்று நித்யயாகங்களைக் கட்டாயமாக விதித்திருப்பதால், என்று ஸ்மிருதி ரத்நாவளிமுதலியவைகளில் சொல்லப்பட்டிருக்கிறது". என்ற வாக்யங்களால் ஸ்மிருதி ரத்நாவளி முதலிய க்ரந்தங்களின் அபிப்பிராயத்தையும் தீக்ஷிதர் வெளியிட்டிருக்கிறார்.

மேற்கண்ட நிர்ணயங்களை ஒருவருக்கதிகமாக அநேக நிபந்தனகாரர்களும் ஒரே மாதிரியான வ்யவஸ்தை செய்து கூறுவதிலிருந்து அவர்களுக்கு உள்ளூரவே அந்த அபிப்பிராயமிருப்பது ஸ்பஷ்டமாகிறது. ஆகையால் அது உண்மையான நிர்ணயமென்றே நினைக்கவேண்டியிருக்கிறது.

இந்த நிர்ணயங்களை இங்கு மேற்கண்ட நிபந்தனகார வாக்யங்களைக் கொண்டு நிரூபித்தபோதிலும் சுத்தமான த்ரவ்யங்

களைக் கொண்டு யதாசக்தி பூர்ண அங்ககலாபங்களுடன் யக்ஞாதிகளைச் செய்யவேண்டுமென்பதை சிஷ்டர் எவரும் மறுக்கமாட்டார். ஆயினும் சாஸ்திரங்களின் போக்கு எத்தகையதென்பதை இதிலிருந்து பிராமாணிகர்கள் அறியவேண்டியது அவச்யம்

அந்த நிர்ணயங்களை இங்கு நாம் எடுத்து வெளியிட்டதற்குக் காரணமென்னவெனில், அக்நிஹோத்ர, ஸோமயாகாதி ச்ரௌத கர்மாக்கள் நித்யங்களென்பதை காட்டுவதற்கேயாகும். அந்த வைதிக கர்மாக்களை அவச்யமனுஷ்டிக்கவேண்டுமென்ற அபிப்ராயத்தை முன்னிட்டு சாஸ்திரங்கள் எவ்வளவு சலுகை காட்டியுள்ளனவென்பதையும், நிர்ப்பந்தங்களை எவ்வளவு தளர்த்திக் கொடுத்திருக்கின்றனவென்பதையும் ஆஸ்திகர்கள் அறியவேண்டியது நமது நோக்கம்.

மேலும் சிலர் தாங்கள் யாகானுஷ்டானம் செய்யாததற்கு திரவிய சுத்தி, ரித்விக் சுத்தி, தக்ஷிணா ஸம்ருத்தி முதலியவை இல்லாதது காரணமென்று பெருமை பேசுவதுடன், யாகத்தின் மீதும் யாகானுஷ்டானம் செய்யும் ஸாத்விகர்கள் மீதும், தக்ஷிணை போதாது, சுத்திபோதாது, என்று ஏதாவது குறைகளைக்காட்டி பேசுவது வழக்கமாயிருப்பதால் நித்ய யாகங்களை எவ்வளவு குறைவுடனும் செய்தாலும் தோஷமில்லையென்று சாஸ்திர ஆதாரத்துடன் காட்டி அவர்களது ஸந்தேஹத்தை அல்லது துர்வாதத்தை நிவர்த்திக்க வேண்டியதும் நமது நோக்கமாகும்.

ஆக இதுவரையில் நிரூபித்ததிலிருந்து ச்ரௌதகர்மாக்கள் நித்யங்களென்றும், கேவல காம்யமல்லவென்றும், அவைகளை யதாசக்தி கிடைத்த தக்ஷிணாதி அங்கங்களைக் கொண்டு செய்தாலும் போதுமென்பதும் ஸித்தமாகியது.

## யாகபசு விசஸனம் தர்மம்.

இவ்வாறு வேதங்களில் விதிக்கப்பட்ட பசுபந்த, ஸோமயாகாதி யாகங்களில் புரோடாசம், பயஸ், தநி, ஆஜ்யம்போன்ற பற்பல ஹவிஸ் திரவியங்களைப்போல், வபை, ஹ்ருதயம், ஜிஹ்வை

போன்ற பசு அவயவங்களும் ஹவிஸ்ஸாக சுருதிகளால் விதிக்கப் பட்டிருப்பதால், அதற்காக பசு ஆலம்பனம் (ஹிம்ஸை) செய்யும்படி வேதங்களும் கல்பஸூத்ராதி தர்ம க்ரந்தங்களும் விதிக்கின்றன. पशुना यजेत என்ற சுருதி வாக்யத்தில் பொதுவாக பசு என்று குறிப்பிட்டிருந்தாலும், பசுவானது அச்வமேதாதி பற்பல யாகங்களில் பல விதமாக விதிக்கப்பட்டுள்ளது. பசுபந்த, ஜ்யோதிஷ்டோமாதிகளில், छागस्य वपाया: என்பதுபோன்ற மந்திர பலத்தைக்கொண்டு "ச்சாகம்" அதாவது அஜம் பசுவாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. பசு என்பது யாகங்களில் உபயோகப்படும் பிராணிகளுக்குப் பொதுவான பெயராக வழங்கப்படுகிறது.

சுருதியானது 'अग्नीषोमीयं पशुमालभेत" என்ற வாக்யத்தினுல் பசு ஆலம்பனத்தை ஒரு வேத விதியாக விதிக்கிறது. வைதிக மதத்திற்கு ஸர்வோத்தமான பிரமாணமாகிய வேதமே யாகங்களில் பசு ஹிம்ஸையை விதிப்பதாலும், அந்த ஹிம்ஸையானது அந்தப் பசுவுக்கு அதி உத்தம கதியைக் கொடுப்பதாக வேதமே நியமிப்பதாலும் அந்த ஹிம்ஸையானது பரம பரிசுத்தமானதென்றும், "அஹிம்ஸை" என்றே நினைக்கத்தக்கதென்றும், வேதாநுஸாரிகளாகிய, ஸ்மிருதி, கல்பஸூத்ர, மீமாம்ஸா, பிரம்ஹஸூத்ர, புராணுதிகளான ஸகல பிரமாண க்ரந்தங்களும், வைதிக மத ஸ்தாபனம் செய்த ஸகல ஆசார்யர்களும் வெகு பலமாக தங்கள் கிரந்தங்களில் வற்புறுத்திச் சொல்லியுள்ளனர்.

### பசுவிற்கு உயர்ந்த கதியேன்று சுருதி கூறுகிறது.

அந்த ஹிம்ஸையானது யாக பசுவுக்கு, மிகவும் தாழ்ந்ததான மிருக சரீரமாகிய அஜசரிரம் நீங்கி, மிக உத்க்ருஷ்டமான சரீரமும், மோக்ஷாதி உத்தம கதி பிராப்தியும் கொடுக்கவல்லதென்று சுருதியே பலவிடங்களில் நியமிக்கிறது.

न वा उवेतन्म्रियसे न रिष्यसि देवाँ इदेषि पथिभिः सुगेभिः।
यत्र यन्ति सुकृतो नापि दुष्कृतः तत्र त्वा देवस्सविता दधातु॥

இந்த மந்த்ரமானது பசுவைப் பார்த்து யஜமானன் பிரார்த்திப்பதாகும். "ஏ பசுவே! நீ வீணுன மரணம் அடையவில்லை. நீ

கெட்டுப்போகவில்லை. ஆனால் நல்ல உயர்ந்த வழிகளால் நீ தேவர்களை அடைகிறாய். ஸகல உலகத்தையும் பிரேரணை செய்யும் ஸவிதா என்ற பரமாத்மா, எங்கு பாபிகள் இல்லையோ எங்கு புண்யசாலிகள் இருக்கிறார்களோ அந்தவிடத்தில் உன்னை கொண்டுபோய் வைக்கட்டும்" என்று மந்திரம் கூறுகிறது. மற்றொரு சுருதி வாக்யமானது.

हिरण्यशरीरः ऊर्ध्वः स्वर्गं लोकमेति ॥

"இந்த பசுவானது தங்கமயமான சரீரம்பெற்று உயர்ந்து ஸ்வர்க்க மெனப்படுகிற மோக்ஷலோகத்தை அடைகிறது" என்கிறது பசுவானது தாமஸ குணமுள்ள மிருக ஜன்மமாயிருந்தாலும் லோகக்ஷேமார்த்தமான யாக தர்மத்திற்குக். தனது உடலையும், உயிரையும் கொடுத்து உதவி, உயர்ந்த "த்யாகம்" செய்கிற படியால் அதற்கு தியாகிகளுக்கேற்ற உயர்வும் உத்தம கதியும் கிடைப்பதாக சுருதி கூறுவதில் அதிசயமில்லை. இதை யுத்த உதாஹரணம் கொண்டு கீதையில் பகவான் உபதேசிக்கிறார். யுத்தத்தில் ஸோல்ஜர்கள் தங்கள் உடலையும், பிராணனையும் யஜமானனாகிய அரசன் பொருட்டுக் கொடுத்து உதவுகிறார்கள். அந்த வீரர்களுக்கும் தியாகிகளுக்கும் வீர ஸ்வர்க்கம் கிடைப்பதாக நமது வேதம் கூறுகிறது.

ये युध्यन्ते प्रधनेषु शूरासः—ये तनुत्यजः

யுத்தத்தில் சரீரத்தை பலிகொடுத்து உபகரிப்பவர்கள் ஸூர்ய மண்டலத்தைப் பிளந்துகொண்டு ஸ்வர்க்காதி உத்கிருஷ்ட லோகம்போவதாக நமது ஸ்மிருதிகளும் கூறுகின்றன. இதை பராசரர்

युद्धे चाभिमुखो हतः என்பதால் சொன்னார்.

இந்தக் கொள்கையானது நமது மதத்தில் மட்டுமில்லை. பாபம், புண்யம், பரலோகம், தெய்வம், வேதம் இவைகளை ஒப்புக்கொண்ட உலகிலுள்ள எல்லா மதங்களும், யுத்தத்தில் சரீரத்தைக் கொடுத்து உதவியவர்கள் உயர்ந்தகதி அடைவதாக பிரத்யக்ஷமாக ஒப்புக்கொண்டிருப்பதைக் காண்கிறோம்.

இதுமட்டுமில்லை தேசத்திற்காகவோ, அல்லது பொதுஜன நன்மைக்காகவோ தனது உடல், பொருள் ஆவிகளை அர்ப்பணம் செய்யும் த்யாகிகளை இந்த நாஸ்திக, நாகரிக காலத்தில்கூட உலகம் கொண்டாடுவதைப் பார்க்கிறோம்.

ஆதலால் யாகத்தில் தனது சரீரத்தை அர்ப்பணம் செய்யும் ஸுக்ருதப்பெற்ற பசுவானது உத்தமகதியடைவதாக நமது வேதம் கூறுவது பொருத்தமானதே. யாக பசுவின் பரலோக நன்மைக்காக யாகத்தில் உச்சரிக்கப்படும் பற்பல மந்திரங்களையும், செய்யப்படும் கார்யங்களையும் சுருதிகள் விதித்திருப்பதை கவனித்தால் அதற்கு நல்லகதி கிடைக்கத்தடையென்ன? தர்ம அதர்ம வியவஸ்தை கூறும் பிரமாணமாகிய வேதமல்லவோ இதைச் சொல்லுகிறது?

யஜுர் வேதத்தில் 6-வது காண்டத்தில்

मृत्यवे वा एष नीयते यत्पशुः என்ற வாக்யத்தால் யாக பசுவானது மிருத்யுவுக்காகக் கொண்டுபோகப்படுகிறதென்று பூர்வ பக்ஷிகள் வாதித்தை மறுத்து

अथो खल्वाहुः सुवर्गाय वा एष लोकाय नीयते

என்பதால் யாக பசு ஸ்வர்க்க லோகத்திற்கு கொண்டுபோகப் படுவதாக ஸித்தாந்தம் கூறியுள்ளது.

மற்றொரு மந்த்ரத்திலும்

सुवर्गं याहि पथिभि र्देवयानैरोषधीषु प्रतितिष्ठा शरीरैः ।

"தேவயானமென்கிற தேவர் செல்லும் வழிகளால் நீ! தேவலோகம் செல்லுவாயாக" என்று சொல்லப்படுகிறது.

இம்மாதிரி அநேக மந்திரங்களும் பிராம்ஹணங்களும் இருப்பதை விஸ்தாரபயத்தால் இங்கு வெளியிடவில்லை.

### இதில் மனு அபிப்பிராயம்.

மனுஸ்மிருதியில் யாகபசு ஹிம்ஸா விஷயமாக உறுதியான அபிப்பிராயம் கூறப்பட்டிருப்பதைக் காட்டுவோம்.

यज्ञार्थं पशवः सृष्टाः स्वयमेव स्वयंभुवा ।
यज्ञोऽस्य भूत्यै सर्वस्य तस्मात् यज्ञे वधो अवधः ॥
(मनु-5-39)

இதில், யாகத்தில் செய்யப்படும் பசுவதமானது வதமே அல்ல என்று மனு கூறி அதை வதம் என்று நினைப்பதே பிசகு என்று காட்டினார். பிர்ம்ஹா, பிராணிகளை ஸிருஷ்டிக்கும் அதிகாரம் படைத்தவர். அவர் பசுக்களை ஸிருஷ்டிக்கையில் யாகத்திற்காக உபயோகப்பட வேண்டியதற்காகவே அவைகளை ஸிருஷ்டித்துள்ளார்கள். ஆதலால் எந்தக் கார்யத்திற்காக அவை ஸிருஷ்டிக்கப்பட்டனவோ அதில் உபயோகப்படுவது நியாயமாகையால் அதை வதமென்று சொல்லமுடியாதென்கிறார் மனு. மேலும் மற்றொரு முக்ய காரணமும் சொல்லுகிறார். யாகமானது எல்லா உலகங்களுக்கும் க்ஷேமத்தைக் கொடுக்கிற ஒரு பொது தர்மமாகும். அத்தகைய லோகக்ஷேமார்த்தமான கார்யத்தில் செய்யப்படும் ஹிம்ஸையானது வதமென்றே நினைக்கத்தக்காதது என்றும் கூறியுள்ளார்.

மேலும் மனு

या वेदविहिता हिंसा नियतास्मिन् चराचरे ।
अहिंसामेव ता विद्यात् वेदात् धर्मो हि निर्बभौ ॥
(मनु-5-49)

"குறிப்பிட்ட ஒரு காலத்தில், குறிப்பிட்ட ஒரு அதிகாரியால், குறிப்பிட்டதொரு கார்யத்திற்காகமட்டும் செய்யலாமென்ற நிர்பந்தங்களுடன் வேதத்தில் எந்த ஹிம்ஸை சொல்லப்பட்டுள்ளதோ அந்த ஹிம்ஸையை அஹிம்ஸையாகவே நினைக்கவேணும். அதாவது அந்த ஹிம்ஸையால் தோஷம் கிடையாதாகையால் அது ஹிம்ஸையாகாது. ஏனெனில் வேதத்திலிருந்து வெளிப்பட்டதெல்லாம் தர்மமல்லவா? அதாவது வேதத்திலிருந்து தர்மம்மட்டுமல்லவோ வெளியாகியது"

என்பதாலும் யாகபசு ஹிம்ஸை வேதத்தில் ஸ்பஷ்டமாக விதிக்கப்படுவதாலும், யாகபசு ஹிம்ஸை அதர்மமாயிருந்தால் அந்த அதர்மத்தை வேதம் நமக்கு விதிக்காதாகையாலும், வேதத்திலிருந்து தர்மந்தான் வெளிப்பட்டதென்றும் வெகு உறுதியாக யாக பசு ஹிம்ஸை ஹிம்ஸையே அல்ல என்றார்.

ओषध्यः पशवो वृक्षाः तिर्यञ्चः पक्षिणस्तथा ।
यज्ञार्थं निधनं प्राप्ताः प्राप्नुवन्ति उद्गतीः पुनः ॥ (म-5-40)

ஸோமாதி ஒஷதிகள், பசுக்கள், யூபாதி வ்ருக்ஷங்கள் ஆகியவை களெல்லாம் யாகத்திற்காக உபயோகம் அடைந்தால் உயர்ந்த கதியை அடைகின்றன.

एष्वर्थेषु पशून् हिंसन् वेदतत्वार्थवित् द्विजः ।
आत्मानं च पशूंश्चैव गमयति उत्तमां गतिम् ॥ (மனு.5-42)

“வேத தத்வார்த்தத்தை நன்கறிந்த த்விஜன் யாகாதி தர்மங்களுக்காக பசு ஹிம்ஸை செய்தால், தன்னையும் அந்த பசுக்களையும் உத்தம கதி அடையும்படி செய்கிறான்”

என்பதால் யாக பசுவுக்கும் அந்தக் கார்யத்தைச் செய்கிறவனுக்கும் உத்தம கதி உண்டாவதாக மனு கூறுகிறார்.

இதில் மஹாபாரத வசனம்.

மஹா பாரதாதி புராணங்களிலும் யாகபசு ஹிம்ஸா விஷயமான பிரசம்ஸை கணக்கற்றவிடங்களில் பற்பலவாறு காணப்படுகிறது. சிலவற்றைமட்டும் இங்கு குறிப்பிடுவோம்.

மஹாபாரதம் அநுசாஸன பர்வம், 213 அத்யாயத்தில் பார்வதீ தேவியின் பிரச்னத்திற்குப் பதிலாக ஸ்ரீ மஹேச்வரன் கூறுவதாவது:—

पशवः पशुबन्धेषु ये हन्यन्ते अध्वरेषु च ।
यूपे निबध्य मन्त्रैश्च यथान्यायं यथाविधि ॥
मन्त्राहुति विपूतास्ते स्वर्गं यान्ति यशस्विनि ।
ये तत्र दीक्षिताः देवि! सर्वे स्वर्गं प्रयान्ति ते ॥

ஹே! தேவி! பார்வதி! "பசுபந்தங்களிலும் யாகங்களிலும் யதா சாஸ்திரம் வதம் செய்யப்படுகிற பசுக்கள் மந்திரங்களாலும் ஆஹுதிகளாலும் பரிசுத்தங்களாகி ஸ்வர்க்கலோகம் போகின்றன" என்பதால் பசுவுக்கும் யஜமானனுக்கும் உத்தம கதி கிடைப்பதாக பகவானே ஈச்வரியிடம் சொல்லுகிறார்.

இங்கும் வேறு சிலவிடங்களிலும் சொல்லப்படும் "ஸ்வர்க்கம்" என்ற பதமானது பிரம்ஹ லோகத்தையே குறிக்கிறதேயல்லது இந்திராதி லோகத்தை குறிக்கவில்லையென்று அறியவேணும்.

பரமாத்மாவாகிய மஹேஸ்வரன் திருவாக்கினால் சொன்னது போல் பகவான் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவும் மஹாபாரதம் ஆச்வமேதிக பர்வத்திலுள்ள வைஷ்ணவ தர்ம பர்வம் 111-வது அத்யாயத்தில் தமது திருவாக்கினால் கூறுவதையும் கவனிக்கவும்

यस्मात् पशुत्वमिच्छन्ति पशवः स्वर्गलिप्सया ।
तस्मात् पशुवधे हिंसा नास्ति यज्ञेषु पांडव ।
यूपाः तन्मन्त्र संस्कारैः दर्भाश्च पशवस्तथा ।
यजमानेन सहिताः स्वर्गं यान्ति नराधिप ।
यावत्कालं हि यज्वा वै स्वर्गे लोके महीयते ।
तावत्कालं प्रमोदन्ते पशवोऽपि अध्वरे हताः ॥

"யாகத்தில் உபயோகப்பட்டு உயர்ந்தகதி அடையலாம் என்ற ஆசையால் பசுக்கள், பசு ஜன்மம் வேண்டுமென்று தாங்களே அபேக்ஷிப்பதால் யாகபசு வதத்தில் ஹிம்ஸை கிடையாது. யூபம், தர்ப்பம், பசு ஆகிய எல்லாம் மந்திர ஸம்ஸ்காரத்தினால் யஜமானனோடு உயர்லோகம் போகின்றன. யஜமானன் உத்தமலோகத்தில் இருக்கும் வரையில், யாகத்தில் வதம்செய்யப்பட்ட பசுக்களும் அவனோடு அங்கேயே ரமித்துக்கொண்டிருக்கின்றன" என்று ஸ்ரீ பகவான் நேரிலேயே யுதிஷ்டிரரிடம் கூறுகிறார்.

இங்க அத்யாயக் கடைசியில் பகவான் யாகம் செய்தவர்களை பிரஶம்ஸிக்கையில்

यथोक्तमग्निहोत्रं ये जुह्वते विजितेन्द्रियाः ।
ते यान्ति अपुनरावृत्ति भित्वा चादित्यमंडलम् ।
मम लोकं सपत्नीकाः यानैः सूर्यसमप्रभैः ॥

என்பதால் "யாகாதிகள் செய்தவர்கள் ஸூர்யமண்டலத்தைப் பிளந்து கொண்டு ஸூர்யனுக்கொப்பான காந்தியுள்ள விமானங்களுடன், புனராவ்ருத்தியற்றதான எனது லோகத்திற்குப் போகிறார்கள்"

என்று கூறுவதில் புனராவ்ருத்தியற்ற விஷ்ணுலோக பிராப்தியை ஸ்பஷ்டமாகக் கூறுவதால், முன் சுலோகங்களில் காணப்படும் ஸ்வர்க்கபதம் பிரம்மலோகபரமே யல்லது இந்திராதிலோகபரமல்லவென்று தெளியவும். உபநிஷத்தில் பலவிடங்களில் பிரம்ஹலோகத்தை ஸ்வர்க்கபதத்தால் நிர்தேசிப்பதைக் காணலாம்.

மஹாபாரதம் ஆச்வமேதிக பர்வ 23-வது அத்யாயத்திலும் யாக பசு விஷயமாக சுருதியின அபிப்பிராயம் விளக்கப்பட்டிருப்பதைக காணலாம்.

तमध्वर्युः प्रत्युवाच नायं च्छागो विनश्यति ।
श्रेयसा योक्ष्यते जन्तुः यज्ञात् श्रुतिरियं तथा ।
यो ह्यस्य पार्थिवो भागः पृथिवीं स गमिष्यति ।
यदस्य वारिजं किंचित् अपस्तत् संप्रवेक्ष्यति ॥
सूर्यं चक्षुः दिशः श्रोत्रे प्राणोऽस्य दिवमेवच ।
आगमे वर्तमानस्य न मे दोषोऽस्ति कश्चन ॥ (भा-आश्व-23)

யாகத்தில் உபயோகப்படும் பசுவானது வீணாக மரிக்கவில்லையென்றும், அந்த ஜந்துவானது மிகுந்த சிரேயஸ்ஸை அடைவதாக சுருதி கூறுகிறதென்றும், இந்த பசுவின் சரீரத்திலுள்ள பஞ்சபூதங்கள் ஸம்பந்தமான சக்திகள் அததன் மூல அம்சத்தில் போய் லயித்து விடுவதாயும், பிருதிவீ ஸம்பந்தமான அம்சங்கள் பிருதிவியிலும், அப்பு அல்லது ஜல ஸம்பந்தமான தத்வங்கள் ஜலத்திலும், கண் ஸூர்யனிடமும், காது ஆகாயத்திலும்,

பிராணன் தேவலோகத்திலும் லயிப்பதாயும் வேதவிதிப்படி இக்கார்யத்தைத் தாம் செய்வதால் தமக்கு எவ்வித தோஷமும் கிடையாதென்றும் அத்வர்யு நிரூபணம் செய்துள்ளார்.

மேற்கண்ட சுலோக அர்த்தத்திற்கு ஆதாரமான சுருதி வாக்யமும் உளது. அதாவது:—

सूर्यं चक्षुर्गमयतात् । वातं प्राणमन्ववसृजतात् ।
अन्तरिक्षमसुं । दिशः श्रोत्रं । पृथिवीं शरीरं ॥

என்பது. இந்த மந்திரத்தில் யாக பசுவின் கண், காது, சரீரம் பிராணன் முதலியவை வெளிப்பட்டு லயிக்கும் பிரகாரம் காட்டப்பட்டது.

## இதில் வேதாந்த ஸூத்ர நிர்ணயம்

இனி பிரம்ஹ ஸூத்ரத்திலும் அதன் பாஷ்யங்களிலும் பூர்வபக்ஷ ஸித்தாந்தமுறையில் சர்ச்சை செய்து பசு ஹிம்ஸை உத்தம தர்மமென்று வெளியிடப்பட்டுள்ள நிர்ணயத்தை இங்கு எடுத்துக்காட்டுவோம்.

ஸாங்க்ய மதஸ்தர்கள், வேதத்தில் யாகபசு ஹிம்ஸை அவச்யமாக விதிக்கப்பட்டதை அங்கீகரித்தார்கள். ஆயினும் அந்த ஹிம்ஸையால் யாகத்திற்கு உபகாரமேற்படுமாகிலும், யஜமானனுக்கு ஹிம்ஸாஜந்யமான ஸ்வல்ப தோஷம் ஏற்படுமென்றும், அந்த ஹிம்ஸா தோஷபலனை யஜமானன் அனுபவிக்க வேணுமென்றும் வாதித்தார்கள்.

हिंसा हि पुरुषस्य दोषमावक्ष्यति क्रतोश्च उपकरिष्यति ॥

என்பதால் இதைச் சொன்னார்கள். மேலும்

"न हिंस्यात सर्वा भूतानि" என்ற பொது விதியால் "ஒரு பிராணியையும் ஹிம்ஸை செய்யக்கூடாது" என்ற நிஷேதம் விதிக்கப்படுகிறது. இதற்கு அபவாத விதியாக அதாவது விலக்கு விதியாக

अग्नीषोमीयं पशुमालभेत ॥

என்பதால் "யாகபசுவை ஹிம்ஸிக்கவேணும்" என்று வேதம் கூறியபோதிலும், இது விலக்கு விதியாக ஒப்பக்கூடியதல்லவென்றும் ஸாங்க்யர்கள் கக்ஷிசொன்னார்கள். இந்த இரண்டு விதிவாக்யங்களும் தனித் தனி விஷயத்தைச் சொல்லவந்ததால் இரண்டிற்கும் ஸம்பந்தமில்லையென்றும் வாதித்தார்கள். ஆதலால் யாகபசு ஹிம்ஸை அசுத்தமென்று ஸாங்க்யர்கள் ஸ்தாபித்தார்கள். ஸாங்க்யர்களுடைய இந்த துர்வாதத்தை நிரஸனம் செய்து வேதவிஹித ஹிம்ஸை பரிசுத்தமானதென்பதை ஸ்தாபிப்பிதற்காகவே பிரம்ஹ ஸூத்ரத்தில் ஸ்ரீ வ்யாஸாசார்யர்

अशुद्धमिति चेन्न शब्दात् (3-1-25)

என்று ஒரு ஸூத்ரத்தைச் செய்து ஸாங்க்ய மதத்தைக் கண்டித்திருக்கிறார். "பசு ஹிம்ஸையுடன் கூடியதாகையால் யாகாதி கர்மாக்கள் அசுத்தங்களென்று ஸாங்க்யர்கள் வாதிப்பது ஸரியல்ல, ஏனெனில் வேதாதி சாஸ்திர பிரமாணங்களால் யாகபசு ஹிம்ஸை பரிசுத்தமானதென்று விதிக்கப்பட்டிருப்பதால்" என்று இந்த ஸூத்ரம் கூறுகிறது.

இந்த பிரம்ஹஸூத்ரத்திற்கு பாஷ்யம் செய்த மூன்று வைதிக மத பாஷ்யகாரர்களும் வெகு ஸ்பஷ்டமாக விவரணம் செய்திருப்பதைக் எடுத்துக்கூறுகிறோம்.

### இதில் ஸ்ரீசங்கரபாஷ்ய அபிப்பிராயம்

அத்வைத பாஷ்யகாரராகிய ஸ்ரீசங்கரபகவத் பாதாசாரியாள் இங்கு கூறுவதாவது:—

"यत्पुनरुक्तं पशुहिंसादियोगात् अशुद्धं आध्वरिकं कर्म........ इति । तत्परिह्रियते—न, शास्त्रहेतुत्वात् धर्माधर्म विज्ञानस्य । अयं धर्मः अयमधर्म इति शास्त्रमेव विज्ञाने कारणम् । अतीन्द्रियत्वात्तयोः अनियत देशकाल निमित्तत्वाच्च । यस्मिन् देशे काले च निमित्तेच यो धर्मोऽनुष्ठीयते, स एव देश काल निमित्तान्तरेषु अधर्मो भवति ।

तेन शास्त्रादृते धर्माधर्म विषयं विज्ञानं न कस्यचिदस्ति । शास्त्राच्च हिंसानुग्रहाद्यात्मको ज्योतिष्टोमः धर्म इति अवधारितः । स कथमशुद्ध इति शक्यते वक्तुम्? ॥

ननु "नहिंस्यात् सर्वा भूतानि" इति शास्त्रमेव भूत विषयां हिंसां अधर्म इति अवगमयति । बाढं । उत्सर्गस्तु सः । अपवादः, "अग्नीषोमीयं पशुमालभेत" इति । उत्सर्गापवादयोश्च व्यवस्थित विषयत्वम् । तस्मात् विशुद्धं कर्म वैदिकं। शिष्टैः अनुष्ठीयमानत्वात् अनिंद्यमानत्वाच्च ॥

"பசுஹிம்ஸாதி ஸம்பந்தமுள்ளதாயிருப்பதால் யாகாதி கர்மா அசுத்தமென்று ஸாங்க்யர் சொன்னது பரிஹரிக்கப்படுகிறது. அவர்கள் சொல்லுவது சரியன்று. ஏனெனில், தர்மாதர்ம அறிவுக்கு, சாஸ்திரமே காரணமாயிருப்பதால். இது தர்மம், இது அதர்மம், என்று அறிவதில் சாஸ்திரமே காரணமாயிருக்கிறது. அந்த தர்மாதர்மங்கள்,கண் முதலிய இந்திரியங்களுக்கு ப்ரத்யக்ஷமாயில்லையாகையால், சாஸ்திரத்தாலேயே அறியப்பட வேண்டியவையாயிருக்கின்றன. தேசம், காலம், நிமித்தம் ஆகியவைகளாலும் அந்த தர்மா தர்மங்கள் அநியதமாயிருக்கின்றன. அதாவது ஒரு தேசத்திலும், குறிப்பிட்ட ஒரு காலத்திலும், குறிப்பிட்டதொரு நிமித்தத்திலும் அநுஷ்டிக்கப்படும் ஒரு தர்மமானது, மற்றொரு தேச, கால, நிமித்தங்களில் அதர்மமாக ஆகிறது. ஆகையால் சாஸ்திரத்தைக்கொண்டல்லது வேறு விதத்தால் தர்மாதர்ம ஜ்ஞானம் எவனுக்கும் ஏற்பட இடமில்லை. சாஸ்திரத்தால் ஹிம்ஸாநுக்ரஹத்துடன் விதிக்கப்பட்ட ஜ்யோதிஷ்டோமமானது தர்மமென்றே நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. அதை அசுத்தமென்று எப்படிச் சொல்லமுடியும்?

"ஒரு பிராணியையும் ஹிம்ஸிக்கக்கூடாது" என்ற சாஸ்திரவிதியே பிராணி ஹிம்ஸையை அதர்மமென்று அறிவிக்கவில்லையா, என்று கேட்கலாம். ஆனால் அந்த விதியானது பொது விதியாகும். அதாவது ஸாமாந்ய சாஸ்திரம். "யாகத்தில் ஹிம்ஸை செய்யலாம்" என்ற வேத விதி வாக்யமானது அபவாத சாஸ்திரம், அதாவது விலக்கு விதியாகும். ஆகையால் "ஹிம்ஸை கூடாது" என்ற விதியில், யாகத்தைத் தவிர மற்ற கார்யத்தில்—என்று வ்யவஸ்தை ஏற்படும். ஆதலால் வைதிகமான யாககர்மாவானது மிகவும் பரிசுத்தமானதே.

சிஷ்டர்களான முன்னோர்களால் யாகாதிகள் அநுஷ்டிக்கப் பட்டுவருவதாலும் நிந்திக்கப்படாமல் இருப்பதாலும், அதுபரி சுத்தமானதே".

இவ்வாறு ஸ்ரீபகவத் பாதாசார்யாள் தெளிவான வாக் யங்களால் யாகபசு ஹிம்ஸை தோஷமற்றதென்றும், ஹிம்ஸை யுடன் கூடிய யாகம் பரம பரிசுத்தமென்றும் கூறி ஸாங்க்ய மதத்தை நிரஸனம் செய்து வைதிகமத ஸித்தாந்தத்தை நிலை நிறுத்தியுள்ளார்.

எந்த மதத்திலும், எந்த விஷயத்தையும் நிர்ணயிக்க சாஸ் திரத்தை ஆதாரமாகக் கொண்டாலல்லது யுக்திவாதம் பிரயோ ஜனப்படாதென்பதையும் மேற்படி வாக்யங்களில் ஸ்ரீ ஆசார்யாள் நமக்கு உபதேசிப்பதை யுக்திவாதிகளும் கவனிக்கவேணும்.

## ஸ்ரீ ராமானுஜரின் அபிப்பிராயம்

விசிஷ்டாத்வைத பாஷ்யகாரராகிய ஸ்ரீபகவத் ராமானுஜர் பிரகிருத பிரம்மஸூத்ர பாஷ்யத்திலும், கீதா பாஷ்யத்திலும் சொல்லியிருப்பதை பிராமாணிகர்கள் நன்கு பார்க்கவேணும். யாகபசு ஹிம்ஸா விஷயமாக விசிஷ்டாத்வைதிகளின் அபிப்பிரா யம் வேறு மாதிரியானது. யாகபசு ஹிம்ஸையை "ஹிம்ஸை" என்று ஒப்புக்கொள்ளவே விசிஷ்டாத்வைதிகள் ஸம்மதிக்கவில்லை. அந்த ஹிம்ஸை அந்தப் பசுவுக்கு நல்ல சரீரத்தையும், நல்லுலக த்தையும் கொடுத்து ஸம்ரக்ஷிப்பதாக சுருதி வாக்யம் கூறுவதால் அது பசுவுக்கு ரக்ஷணம் என்றும் ஹிம்ஸையல்லவென்றும் சொல்லுகிறார்கள்.

"ஹிம்ஸிக்கக்கூடாது" என்ற பொது விதியானது ஹிம்ஸை யைத் தடுக்கிறது. யாகபசு கார்யமோவென்றால் ரக்ஷணமாகும் ஹிம்ஸையல்ல. ஆகையால் பொது விதியானது யாகபசு விஷயத் தில் வரக்கூடியதன்று. ஹிம்ஸையாயிருந்தாலல்லவோ விலக்கு விதி வேணும். ஆதலால் இரண்டிற்கும் ஸம்பந்தமில்லையென்றும் न हिंस्यात, अग्नीषोमीयं என்ற இரு வாக்யங்களுக்கும் உத்ஸர்க்க அபவாத நியாய ஸம்பந்தமே கிடையாதென்றும் விசிஷ்டா த்வைதிகளின் ஸித்தாந்தம். இதை மனதில் வைத்து அந்த ஆசார்யர்களின் வாக்யங்களைப் பராமர்சிக்கவேணும்.

மேற்படி பிரம்மஸூத்ர பாஷ்யத்தில் ஸ்ரீபாஷ்யகாரர் கூறுவதில் நித்யம், நைமித்திகம், காம்யம், என்கிற எல்லாவித யாகங்களிலும் பசு ஹிம்ஸை கலந்திருப்பதால் ஹிம்ஸா தோஷ மேற்படுமென்ற ஸாங்க்ய பூர்வபக்ஷத்தை அவர் எடுத்துக் காட்டி மேலே ஸித்தாந்தம் சொல்லுவதாவது :—

तन्न कुतः? शब्दात्। अग्नीषोमीयादेः संज्ञपनस्य स्वर्गलोकप्राप्ति हेतुतया हिंसात्वाभाव शब्दात्। पशोर्हि संज्ञपन निमित्तां स्वर्गलोकप्राप्तिं वदन्तं शब्दमामनन्ति, "हिरण्यशरीरः ऊर्ध्वः स्वर्गं लोकमेति" इत्यादिकम्। अतिशयिताभ्युदय साधनभूतो व्यापारः अल्पदुःखदोऽपि न हिंसा। प्रत्युत रक्षणमेव। तथा च मन्त्रवर्णः— "नवा उवेतन्म्रियसे + दधातु" इति। चिकित्सकंच तादात्विक अल्प दुःखकारिणमपि रक्षकमेव वदन्ति, पूजयन्ति च तदज्ञाः॥

"ஸாங்க்யர்கள் சொன்னது ஸரியல்ல. ஏனெனில் சப்தமென்கிற வேதப்ரமாணத்தால். யாகபசு ஹிம்ஸையானது அந்தப் பசுவுக்கு ஸ்வர்க்கலோகப்ராப்தி ஏற்படக்காரணமாயிருப்பதால் அதில் ஹிம்ஸை கிடையாதென்கிற சுருதி வாக்யமிருக்கிறது. "ஹிரண்யசரீரம் பெற்று உயர்ந்த ஸ்வர்க்கலோகம் அடைகிறது" என்ற வேத வாக்யமானது, பசுவுக்கு அந்த ஹிம்ஸையால் ஸ்வர்க்கலோகம் ஏற்படுமென்பதற்கு பிரமாணமாகுமென்று சுருதிகள் கூறுகின்றன. மிகவும் உத்தமமான க்ஷேமத்தைக் கொடுக்கக்காரணமாயுள்ள அந்த ஹிம்ஸையானது, தத்காலத்தில் ஸ்வல்ப கஷ்டத்தைக்கொடுப்பதாயிருந்தாலும் ஹிம்ஸையாகாது. ஆனால் ரக்ஷணமேயாகும். இதை "நவா உவேதத்" என்ற மந்திரம் நன்ருக விளக்குகிறது

ஆயுதங்களைக்கொண்டு மனித சரீரங்களில் சஸ்திர சிகித்ஸை செய்யும் வைத்தியன், அந்த ஸமயத்தில் மனிதனுக்குக் கஷ்டத்தைக் கொடுப்பவனுயிருந்தாலும் அவனை ரக்ஷகன் என்றே சொல்லுகிருர்கள். அதை அறிந்தவர்கள் அந்த வைத்தியனைக் கொண்டாடவும் செய்கிருர்கள்"

மேற்கண்ட வாக்யங்களால் ஸ்ரீ ராமானுஜர் ஸாங்க்ய மதத்தை நிரஸனம் செய்து யாகபசு ஹிம்ஸையை ஹிம்ஸையென்றே நினைக்கக் கூடாதென்றும் அது ரக்ஷணம்தான் என்றும் பிரமாண, யுக்திகளால் ஸ்தாபித்தார்.

இங்கு அவர் காட்டியுள்ள வைத்திய உதாஹரணம் மிகவும் அர்த்த புஷ்டியுள்ளது. டாக்டர்கள், சரீரத்தைக் கத்தி முதலிய ஆயுதங்களைக் கொண்டு ஆபரேஷன் செய்கிறார்கள். ஆபரேஷன் செய்யும் காலத்தில் வியாதியஸ்தன் தாங்காமல் கதறுகிறான். இதற்காக டாக்டரை ஹிம்ஸைசெய்கிறவனென்றோ, அந்தக் கார்யம் ஹிம்ஸையென்றோ நிந்திக்கிறதில்லை. ஆனால் டாக்டரை ரக்ஷகனென்றும், அவன் கத்தியால் செய்யும் ஹிம்ஸை ரக்ஷணமென்றும் உலகில் நினைக்கப்படுகிறது. ஆபரேஷனில் ஹிம்ஸை பிரத்யக்ஷமாயிருந்தும் பிறகு அதனால் வியாதியஸ்தனுக்கு க்ஷேமமேற்படுவதை முன்னிட்டு அதை ரக்ஷணமென்று நினைக்கும் நாம், பாப புண்யங்களுக்குப் பலனைச் சொல்லும் உத்தம பிரமாணமாகிய வேதம் பசுவுக்கு தத்காலம் சிரமமேற்பட்டாலும் பிற்காலத்தில் அதனால் உத்தம சிரேயஸ் ஏற்படுவதாகக் கூறுவதை நம்பாமலிருப்பது வேதத்தைப் பிரமாணமாகக் கொண்டவர்களுக்கு தகாது என்றே ஸ்ரீராமானுஜர் காட்டியுள்ளார்.

இதுபோல் ஸ்ரீராமானுஜர், கீதாபாஷ்யத்திலும் தமது ஸித்தாந்தத்தை வற்புறுத்தியிருப்பதைக் காட்டுகிறோம்.

### கீதாபாஷ்யத்தில் ஸ்ரீராமானுஜர் அபிப்பிராயம்.

கீதை 2-வது அத்யாயத்தில் "स्वधर्ममपिचावेक्ष्य" என்ற சுலோக பாஷ்யத்தில் அவர் கூறுவதாவது:—

**अपिचेदं प्रारब्धं युद्धं प्राणिमारणमपि अग्नीषोमीयादिवत् स्वधर्ममवेक्ष्य न विकम्पितुमर्हसि। ........अग्नीषोमीयादिषु च न हिंसा पशोः। निहीनतर च्छागादिदेहपरित्याग पूर्वक-कल्याणदेह स्वर्गादि प्रापकत्वश्रुतेः संज्ञपनस्य। न वा उतत् + दधातु इति श्रूयते। ........अतः चिकित्सककर्म आतुरस्येव अस्य रक्षणमेव अग्नीषोमीयादिषु संज्ञपनम् ॥**

ஏ! அர்ஜுன! மேலும், இப்போது ஆரம்பித்துள்ள இந்தயுத்தமானது பிராணிகளை வதம் செய்யும் கார்யமாயிருந்தபோதிலும், அக்நீஷோமீயாதியாகபசுவதத்தைப்போல் இது ஸ்வதர்மம் என்று அறிந்து நடுங்காமலிருப்பாயாக. அக்நீஷோமாதி யாகங்களில் செய்யப்படுவது பசுவுக்கு ஹிம்ஸையாக ஆகாது. ஏனெனில் மிகவும் தாழ்ந்ததான அஜ சரீரம் போய் சுபமான வேறு சரீரமும் ஸ்வர்க்காதி நல்ல உலகமும் ஏற்படுவதற்கு அந்த ஹிம்ஸை காரணமாயிருப்பதாக "நவா உவெ" முதலிய சுருதிகள் சொல்லுகின்றனவல்லவா? ஆகையால், வியாதிஸ்தனுக்கு சஸ்திர சிகித்ஸை எப்படி ரக்ஷணமாகிறதோ, அதுபோல் யாக பசு ஹிம்ஸையும் அந்தப் பசுவுக்கு ரக்ஷணமேயாகும்." என்பது.

மேற்கண்ட வாக்யங்களால் ஸ்ரீ ராமானுஜர் ஸ்ரீ பாஷ்யத்தில் கூறியதுபோல் யாகபசு ஹிம்ஸை ரக்ஷணமேயென்று உறுதியாக ஸித்தாந்தம் சொன்னார். கீதாபாஷ்ய வ்யாக்யான தாத்பர்ய சந்திரிகையில் இந்தவிடத்திலும், வேறு பலவிடங்களிலும் ஸ்ரீ வேதாந்த தேசிகரும் யாகபசு ஹிம்ஸை ரக்ஷணமென்பதைப் பல வழிகளால் உறுதிப்படுத்தியிருப்பதையும் காண்க.

## ஸ்ரீமத்வ பாஷ்யத்தின் அபிப்பிராயம்

த்வைத பாஷ்யகாரராகிய ஸ்ரீமத் ஆனந்ததீர்த்த பகவத்பாதாசார்யரும் "அசுத்தமிதி சேந்ந" என்ற மேற்படி பிரம்ம ஸூத்ர பாஷ்யத்தில் யாகபசு ஹிம்ஸை தோஷமற்றது என்று ஸாங்க்யர்களுக்குத் தமது பாஷ்யத்தில் பதில் கூறியுள்ளார்.

அவர் சொல்லுவதாவது :—

हिंसारूपत्वात् पापस्यापि संभवात् दुःखं च भवतु इति चेन्न।
शब्द विहितत्वात् ।
हिंसा त्ववैदिकी यातु तयानर्थो भवेत् ध्रुवम् ।
वेदोयक्त हिंसया तु नैवानर्थः कथंचन ॥
इति वाराहे ॥

"யக்ஞங்களில் ஹிம்ஸையிருப்பதால் (अनर्थ फलत्वं यज्ञादेरिति) பரலோக க்ஷேமம் கெடும் என்று கீழ் ஸூத்ரத்தில் பூர்வபக்ஷம் செய்யப்பட்டதை அநுஸரித்து யாகம் ஹிம்ஸா ரூபமாயிருப்பதாலும், பாபம் ஏற்படுவதா யிருப்பதாலும், துக்கமும் அதனால் ஏற்படும் என்று ஸாங்க்யர்கள் சொல்வது தவறு.

ஏனெனில் யாகபசு ஹிம்ஸையானது சப்தமெனகிற வேத பிரமாணங்களால் விதிக்கப்படுகிறபடியால். ஸ்ரீ வராஹ புராணத்தில் "வேதத்தில் சொல்லப் படாத லௌகிக ஹிம்ஸையால் தோஷம் ஏற்படும். ஆனால் வேதத்தில் சொல்லப்பட்ட யாகபசு ஹிம்ஸை யால் எவ்வித தோஷமும் ஏற்படாது" என்பது.

மேற்படி வாக்யங்களால் த்வைத பாஷ்யகாரரும் யாகபசு ஹிம்ஸை தோஷமற்றது என்று கூறி ஸாங்க்ய மதத்தை நிரஸனம் செய்து வைதிகமதத்தை நிலைநிறுத்தியுள்ளார் என்பது விளங்கும்.

## ஸ்ரீவேதாந்ததேசிகர் அபிப்பிராயம்

மேலே காட்டியுள்ள பற்பல பிரமாணங்களிலும் "யாக ஹிம்ஸை ஹிம்ஸையல்ல" 'யாகத்தில் வதம் வதமாகாது" என்று கூறப்படுவதால் ஹிம்ஸை என்பதையும் வதம் என்பதையும் ஒப்புக்கொள்ளுவதாக ஆகிறதேயென்று சங்கை ஏற்படலாம்.

अहिंसन् सर्वभूतानि अन्यत्र तीर्थेभ्यः ।

என்ற சந்தோக ச்ருதியிலும் "யாகாதி பரிசுத்த ஹிம்ஸை தவிர மற்ற ஹிம்ஸையை விலக்கவேணு"மென்பதால் "ஹிம்ஸை" என்றே பேசப்படுகிறது. மனுவும் "யாகத்தில் வதம் வத மாகாது" என்பதால் வதம் என்றே பேசுகிறார். ஆகையால் ரக்ஷணமென்று ஸ்ரீ ராமாநுஜர் கூறியது பொருந்துமா?

இந்த சங்கையை ஸ்ரீ வேதாந்த தேசிகர் "ஸ்வதர்மமபி சாவேக்ஷ்ய" என்ற கீதாபாஷ்ய தாத்பர்ய சந்திரிகையில் எடுத்து ஸமாதானம் சொல்லியுள்ளார். அதாவது "ஹிம்ஸை" என்று சொல்லப்படுமிடங்களிலெல்லாம் பிறருடைய அபிப்பிராயத்தை அது அநுவாதம் செய்கிறதேயல்லது ஸ்வ அபிப்பிராயமல்ல வென்று நினைக்கவேணும்

ततश्च "अहिंसन्नित्येतत् पश्चादेः भावि पुरुषार्थ विशेषानभिज्ञ-पामर दृष्ट्या उक्तम्। तस्मिन्नपिवाक्ये हिंसात्वं नास्तीत्येव तात्पर्यम्॥

'அஹிம்ஸந்,'' என்ற சுருதியில் ஹிம்ஸை என்பது பாமரர் சொல்லுவதை அநுவாதம் செய்கிறதேயல்லது, அந்த வாக்யத்திலும் ஹிம்ஸாத்வம் இல்லையென்றுதான் தாத்பர்யம். அதாவது "ஹிம்ஸை" என்று பேசப்படும இடங்களில் காணப்படும் ஹிம்ஸா பதமானது பாமரர்களின் அபிப்பிராயத்தை அநுவாதம் செய்து சொல்லப்பட்டதாகு'' மென்றூர்.

இதற்கு மனுஸ்மிருதியையும் ஸ்ரீ தேசிகன் பிரமாணமாகக் காட்டுகிறூர்.

उक्तं च मनुना—"तस्मात् यज्ञे वधोऽवधः" इति। तत्रापि वध इति पामर दृष्ट्या। अवध इति तु तत्व कथनम्।

"மனுவும் "யாகத்தில் வதம் வதமாகாது" என்று சொல்லுகிறூர். இங்கும் 'வதம்'' என்பது பாமர அபிப்பிராயம். "வதமல்ல'' என்பதே தத்தவம்''.

பரமதபங்கம் என்ற தமது கிரந்தத்தில் ஸ்ரீ வேதாந்த தேசிகன் ஜைநாதிமதங்களை நிரஸிக்குமிடத்தில் வைதிகமதத்தில் யாகபசு ஹிம்ஸை ஹிம்ஸையல்லவென்றும், அது பசுவுக்கு மிகவும் ஹிதகரமென்றும் தமிழ் வாக்யங்களால் சொல்லுகிறூர்.

அதாவது:—"தர்மாதர்ம வ்யவஸ்தாபகமான சாஸ்திரத்திஞல் அக்நீஷோமாதி யாகபசு ஹிம்ஸைகளிலும், யுத்தத்தில் வதார்ஹன் விஷயத்திலும்,...... பாபத்வ சங்கை பண்ணக்கூடாது...வைத ஹிம்ஸை பசுவுக்கு ஹிததமமென்று சாஸ்திரமாகையாலே அநர்த்தஹேதுவன்று. இது சிகித்ஸக சல்ய பிரயோகாதி நியாயத்தாலே ஹிததமமாம். ஆகையால் ஸாங்க்யாதி மதஸ்தர்கள் சொல்லிய ஸ்வல்பதோஷஸங்கரத்திற்கும் இடமில்லை. இவ்வர்த்தத்தை "அசுத்தமிதி சேந்ந சப்தாத்'' என்று வேதாந்த ஸூத்ரகாரர் அருளிச்செய்தார்.'' என்பது.

## ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் அபிப்பிராயம்.

சிவார்க்கமணி தீபிகையில் अशुद्धमिति चेन्न शब्दात् என்ற ஸூத்ரத்தில் ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதேந்திராளும் யாகபசு விஷயம் ஹிம்ஸையேயல்லவென்றும ரக்ஷணமென்றும் கூறியிருக்கிறார்.

ऋतौपशु संज्ञपनस्य पापयोनि विमोचन पूर्वकं स्वर्ग प्रापकत्वेन तद्रक्षण रूपत्वात् चिकित्सक कृत व्रण दाहच्छेदादिवत् न हिंसात्वमिति न तत्र "न हिंस्या"दिति निषेधस्पर्शः ।
अतो न यागस्य पापमिश्रत्वमिति भावः ॥ (ब्र-3-1)

என்பதால் 'யாகஹிம்ஸையால் அந்தப் பசுவுக்கு பாபமான மிருக ஜன்மம் நிவிருத்தியாகி ஸ்வர்க்கலோகம் கிடைப்பதால் அந்த ஹிம்ஸை ரக்ஷணமாகிறது. வைத்தியன் வியாதிஸ்தனு டைய சரீரத்தில் செய்யும் ருணம், சூடுபோடல், அறுத்தல் போன்றவை ஹிம்ஸையாகத் தோன்றியபோதிலும், அவை எப்படி ரக்ஷணமாகின்றனவோ, அதுபோலவே யாகபசுவிஷயமு மாகும். ஆகையால் "न हिंसस्यात्" என்ற நிஷேத ஸம்பந்தம் இங்கு யாக விஷயத்தில் சிறிதும் இல்லை. ஆகையால் யாகம் பாப மிச்ரமல்ல" என்று ஸ்பஷ்டமாக ஸித்தாந்தம் கூறியிருக் கிறார்.

## அவச்யஹிம்ஸையும் தர்மமே.

நமது வைதிகமதத்தின் அடிப்படையான ஒரு அம்சத்தை பிராமாணிகர்கள் இந்த ஸந்தர்ப்பத்தில் கவனிக்கவேண்டியது அவசியம். அஹிம்ஸாதர்மமானது நமது மதத்தில் வெகு உத்தம தர்மமாக விதிக்கப்பட்டுள்ளது. ஆயினும் அஹிம்ஸை யானது எவ்வளவு அவசியமோ அதுபோல் அவச்ய ஹிம்ஸையும் ஓர் உத்தம தர்மமாகவும், அவச்யம் ஆசரிக்கத்தக்கதாயும் நமது மதம் நிஸ்ஸந்தேஹமாக ஒப்புக்கொண்டிருக்கிறது. அவச்ய ஹிம்ஸையும் வேதவிஹிதமாகையால் வைதிகமதத்தினர் அதை பரித்யாகம் செய்ய முடியாதென்றும் காட்டுவதற்காகவே பகவத் கீதை தோன்றியுள்ளது. யுத்தத்தில் ஜனங்களைக்கொல்லுவது பாபமென்று பயந்த அர்ஜுனனுக்கு யுத்த ஹிம்ஸை ஸ்வதர்ம மென்றும், அந்த தர்மத்தைச் செய்யாவிட்டால் பாபம் வரும்

என்றும், அது உயர்ந்த ஸத்தர்மமென்றும், உபதேசிக்கவே கீதை அவதரித்தது. யுத்த ஹிம்ஸையைச் செய்யும்படியே பகவான் கீதை முழுவதும் நிர்பந்தமாக உபதேசிக்கிருர். கடைசியில் அர்ஜுனனும் மனக்குழப்பம் நீங்கி யுத்த ஹிம்ஸை செய்ய ஸம்மதிக்கிருன். ஆதலால் அவச்ய ஹிம்ஸையைவிடக் கூடாதென்றும் அதை ஹிம்ஸாபயத்தால் விட்டால் பாபம்வருமென்றும் வைதிகமத ஸித்தாந்தமாகிறது. கீதையில் பகவான் இதை—

अथचेत् त्वं धर्म्यमिमं संग्रामं न करिष्यसि ।
ततः स्वधर्मं कीर्तिं च हित्वा पापमवाप्स्यसि ॥ (2-33)

என்பதால், அர்ஜுன! நீ இந்த, தர்மரூபமான யுத்தத்தைச்செய்ய மறுத்தால், அதனுல் ஸ்வதர்மத்தையும், கீர்த்தியையும், இழந்து பாபத்தை அடைவாய்'' என்று கூறினுர்.

இங்கு யுத்த ஹிம்ஸை ஹிம்ஸையாயிருக்கையிலும் பகவான் அதைத் தர்மமென்றும், அந்த ஹிம்ஸையைச் செய்யாவிட்டால் பாபம் வருமென்றும் விதிப்பதிலிருந்து அஹிம்ஸையைப்போல் அவச்ய ஹிம்ஸையும் தர்மமென்றும் செய்து தீரவேண்டியதென்றும் உறுதிப் படவில்லையா?

அதேபோல்தான் வேதத்தில் நேரடியாக விதிக்கப்பட்டுள்ள யாக பசு ஹிம்ஸையும் பரித்யாகம் செய்யமுடியாத அவச்ய ஹிம்ஸையென்றும், தர்மமென்றும் இதை யாகாதிகளில் செய்யாவிட்டால் தோஷம் அல்லது பாபமுண்டென்றும் சுருதி, ஸ்மிருதி, புராண, பிரம்ஹஸூத்ராதி ஸகல பிரமாணங்களும், ஸகல ஆசார்யர்களும் அபிப்பிராயபேதமின்றி ஒரு முகமாகக் கூறியுள்ளார்கள். அதனுல்தான் யுத்த ஹிம்ஸைக்கு, வேத விஹிதமான யாக ஹிம்ஸையை உதாரஹணமாகக் காட்டி இரண்டும் தர்மமென்று நம் மதமும் ஆசார்யர்களும் கூறிவிட்டனர். ஆதலால் அவச்ய ஹிம்ஸையும் நமது மதத்தில் உத்தம தர்மமேயாகும்.

இவ்விஷயத்தில் தர்மாதர்ம வ்யவஸ்தைசெய்ய அதிகாரம் பெற்ற சாஸ்திரங்களே நமக்கு கதியேயல்லது எவ்வித யுக்திவாதமோ, துர்வாதமோ நிலைத்து நிற்கமுடியாது. அதை ஒரு தனி வ்யாஸத்தில் நாம் காட்டியுள்ளோம். ஸ்ரீ பகவத்பாத

பாஷ்யத்தில் தர்மாதர்மவ்யவஸ்தைக்கு சாஸ்திரத்தைவிட்டால் வேறு கதியில்லையென்று சொல்லப்பட்டிருப்பதை முன்பு காட்டினோம். அந்த பாஷ்ய வாக்யங்களை ஊன்றிக் கவனித்தால் எல்லாவித குதர்க்க வாதங்களும் சிதறிப்போய்விடும்.

## ஹிம்ஸைக்கு லக்ஷணமென்ன?

மேலும், ஹிம்ஸையென்றால் என்ன? அதற்கு எப்படி லக்ஷணம் கூறுவது? பிராணனை வாங்குவதெல்லாம் ஹிம்ஸை, என்று லக்ஷணம் கூறலாமா? அப்படியானால் பிராணனை வைத்து கால் கைகளை வெட்டுவதும், வேறுமாதிரியாக ஹிம்ஸிப்பதும் ஹிம்ஸையென்று சொல்லமுடியாமல் போய்விடும். "தத்காலத்தில் கஷ்டத்தை விளைவிக்கும் கார்யமெல்லாம் ஹிம்ஸை" யென்று லக்ஷணம் சொன்னால் வைத்தியன் சஸ்திர சிகித்ஸை செய்வதும் குழந்தைகளுக்கு காது குத்துவது போன்றவைகளும் ஹிம்ஸையாகி அதில் பாபம் நேரிடும். இந்தக் கார்யங்களை ஹிம்ஸையென்றோ இவைகளைச் செய்தால் பாபம் வருமென்றோ குதர்க்க வாதிகளும் அங்கீகரிக்கமாட்டார்கள். அப்படியானால் ஹிம்ஸை என்பது எது? "ஒருவரையும் ஹிம்ஸிக்கக்கூடாது" என்ற சாஸ்திர விதி எதைத் தடுக்கிறது? யுக்திவாதிகள் கூட இதில் பதில் கூறுவது கஷ்டமே.

ஆயினும் நம் ஆசார்யர்கள் "தத்காலத்தில் துக்கத்தைக் கொடுப்பதும் அனர்த்தம் அல்லது கேடு விளைவிப்பதுமே ஹிம்ஸை" என்று லக்ஷணம் கூறினார்கள் இந்த லக்ஷணப்படி பார்த்தால் எல்லாம் ஒற்றுவந்துவிடுகிறது. பிராணனை எடுத்து ஹிம்ஸிப்பதிலும், பிராணனை எடுக்காமல் ஹிம்ஸிப்பதிலும் இந்த லக்ஷணம் ஒட்டியிருக்கிறது. டாக்டர்கள் செய்யும்சஸ்திர சிகித்ஸை யானது தத்காலத்தில் துக்கம் கொடுத்தாலும், அந்த ஹிம்ஸையால் கேடு இல்லாததால் அது ஹிம்ஸா லக்ஷணத்தில் சேராததோடு தர்மமாயும் ஆகிவிடுகிறது.

யாகபசு ஹிம்ஸைக்கும் இதே நியாயம்தானென்று ஸ்ரீ ராமானுஜரும், ஸ்ரீ தேசிகனும் சிகித்ஸக உதாஹரணம் காட்டி யாகபசு ஹிம்ஸை ஹிம்ஸையாகாதென்று கூறியது இப்போது நன்கு விளங்கக்கூடியது.

அதாவது யாகபசு ஹிம்ஸையானது தத்காலத்தில் பசுவுக்கு சிரமத்தைக் கொடுத்தாலும், அந்த ஹிம்ஸையால் பசுவுக்கோ, செய்கிறவனுக்கோ கேடு ஒன்றுமில்லையென்றும் க்ஷேமம்தான் ஏற்படுகிறதென்றும் சுருதி முதலிய பிரமாணங்கள் கூறுவதால் ஹிம்ஸா லக்ஷணத்தில் யாகபசு விஷயம் சேராதென்று நிர்ணயிக்கப்பட்டது. இந்த விவரம் "ஸ்வதர்மமபி சாவேக்ஷ்ய" என்கிற கீதாபாஷ்ய தாத்பர்ய சந்திரிகையில் தெளிவாகக் காண்க.

### யாக ஹவிஸ் சேஷ உபயோகம்.

இனி யாக பசுஹிம்ஸையானது வேதவிஹித உத்தம தர்மமாயிருந்தாலும், யாகங்களில் ஹவிஸ் சேஷமாக மாம்ஸ பக்ஷணம் ரித்விக்குகளும் யஜமானனும் செய்யவேண்டியிருப்பதால் பிராம்மணர்களுக்கு அது கூடுமா என்ற சங்கையை சுருதியும் மீமாம்ஸா கல்பஸூத்ராதிகளும் ஸ்மிருதிகளும் நிவர்த்தி செய்திருப்பதை நிரூபிப்போம்.

### இதில் கல்பஸூத்ர விதி.

யாகங்களில் புரோடாசாதிகளான எந்த ஹவிஸ்ஸுகள் சாஸ்திர விதிப்படி ஹோமம் செய்யப்பட்டனவோ, அந்த ஹவிஸ் சேஷத்தை ரித்விக்குகளும், யஜமானனும் கட்டாயமாக மந்திர பூர்வகம் சாப்பிடவேணுமென்று சுருதி, கல்பஸூத்ராதிகள் நித்யமாக விதிக்கின்றன. இதற்கு "இடா பக்ஷணம்" என்று பெயர். இந்த சேஷபக்ஷணமானது பிரதான ஹோமத்திற்கு அங்கமாக விதிக்கப்படுகிறது. ஹவிஸ் சேஷ பக்ஷணம் செய்யாது போனால் யாகம் பூர்த்தியாகிறதில்லை. ஆகையால் ஹவிஸ் சேஷப்ராசனமானது யக்ஞத்திற்கு அங்கமாக ஆகிறது. அதை பரித்யாகம் செய்ய முடியாது. மீமாம்ஸையும் இதை பிரதிபத்தி கர்மா என்று கூறுகிறது. ஆகையால்தான், ஆபஸ்தம்ப போதாயன, பாரத்வாஜாதிகளான கல்ப ஸூத்ரகாரர்கள் எல்லோரும் பசு அங்கயாகங்களைக் சொல்லிவிட்டு,

उपहूतां मैत्रावरुणषष्ठाः भक्षयन्ति । प्रतिप्रस्थाता सप्तमः ॥

இத்யாதி ஸூத்ரங்களால் பசு கார்யங்களில் ஸம்பந்தப்பட்ட ரித்விக்குகள் யஜமானனுள்பட சேஷமாகிய "இடா பக்ஷணம்" செய்யும்படி விதிக்கிறார்கள். தர்ம ஸூத்ரங்கள் செய்து நமக்கு

தர்மா தர்மங்களை வ்யவஸ்தை செய்து கொடுத்த ஆபஸ்தம்பாதி ரிஷிகளே ஹவிஸ் சேஷ பக்ஷணம் சாஸ்திரீய மென்று விதித்தால் அதை நாம் எப்படி அதர்ம மென்று நினைக்க முடியும்? அந்த சேஷத்தையும் குறிப்பிட்ட நியமங்களுடன், குறிப்பிட்ட வெகு சிறிய அளவில் மந்திர பூர்வகமாக பக்ஷணம் செய்யும்படி விதிக்கப் படுகிறதே யல்லது யதேச்சையாகச் செய்ய முடியாது.

ஆதலால் பிராம்ஹணர்கள் மாம்ஸ பக்ஷணம் செய்யக் கூடாது என்று பொது விதியிருந்தாலும் அதற்கு அபவாத விதியாக அதாவது விலக்கு விதியாக யக்ஞத்தில் மட்டில் சாஸ்திர விஹிதமான ஹவிஸ் சேஷத்தை சிறிய அளவில் சாப்பிடலா மென்றும், அவச்யம் சாப்பிட வேணுமென்றும், சாப்பிடா விட்டால் யாகம் பூர்த்தியாவதில்லையென்றும் மன்வாதி ஸ்மிருதிகள் நிர்ணயம் செய்தன. யாக பசு ஹிம்ஸை யானது எப்படி விலக்கு விதியால் தர்மமாக ஆகியதோ அதேபோல் தான் சேஷ பக்ஷணமும் யாகத்தில் மட்டில் தர்மமாக விதிக்கப்பட்டதென்று அறியவும்.

தைத்திரீய சுருதியில் பசு சேஷ பக்ஷணம் செய்யலாமா கூடாதா, என்று சர்ச்சை செய்து கொண்டு ஸித்தாந்தமாகக் கூறுகையில்

यदग्नीषोमीयं पशुमालभते वार्त्रघ्न एव स तस्माद्वाश्यम् ॥

(तस्मात्-उ-आश्यम्)

என்பதால் அக்நீஷோமீய பசு சேஷ பக்ஷணம் அவச்யம் செய்யத்தக்க தென்று விதிசெய்தது. இதேபோல் ரிக்வேத பிராம்ஹணத்திலும் சர்ச்சை செய்து முடிவில்

तस्मात् तस्याशितव्यं च लिप्सितव्यं च ॥

என்பதால் அக்நீஷோமீய சேஷ பக்ஷணம் அவச்யம் செய்யத் தக்க தென்றும், ரித்விக்காக இருந்து இதைச் செய்ய ஆசைப்பட வேண்டும் என்றும் கூறியுள்ளது.

## இதில் மனுவின் நிர்ணயம்.

மனுஸ்மிருதியில் மாம்ஸ பக்ஷண விஷயமாக விதி நிஷேதங்களைச் சொல்ல ஆரம்பித்து

प्रोक्षितं भक्षयेत् मांसम् । (மனு-5-27)

என்பதால் யாகசேஷ ப்ராசனம் செய்யும்படி விதிக்கப்பட்டது, இங்கு ப்ரோக்ஷிதம் என்பது யாகத்தில் மந்திர பூர்வமாக பசுவுக்குச் செய்யும்படி விதிக்கப்பட்ட "ப்ரோக்ஷணம்" என்ற ஸம்ஸ்காரத்தினுல் சுத்தமான யாக ஹவிஸ் என்று குல்லூக, விக்ஞானேச்வராதிகளால் வ்யாக்யானம் செய்யப்பட்டது. இங்கு குல்லூகபட்ட வ்யாக்யானமாவது:—

मन्त्रकृत प्रोक्षणाख्य संस्कारयुक्त यज्ञहुत पशुमांस भक्षण-मिदं यज्ञांगं विधीयते ॥ (5-27)

[மந்திரத்தினுல் செய்யப்பட்ட ப்ரோக்ஷண மென்கிற ஸம்ஸ்காரத்துடன் கூடிய யாக பசு ஹோம சேஷ பக்ஷணம் யாகத்திற்கு அங்கமாக விதிக்கப் படுகிறது.]

என்று மேற்படி வாக்யத்தில் சேஷ பக்ஷணமானது யாகத்திற்கு அங்கம் என்று ஸ்பஷ்டமாகக் கூறப்பட்டிருப்பதை பிராமாணிகர்கள் கவனிக்கவேணும். சேஷ பக்ஷணமானது யாக பிரயோகங்களான அங்கங்களில் சேர்ந்ததென்று ஏற்படுவதால் அதன் ஆவச்யகதையும், தர்மத்வமும் நன்கு வெளியாகும். ஆகையால் இது அவச்யம் செய்யப்பட வேண்டியதென்று மேற்படி வசனத்தால் மனு கூறினுர். மேலும் இந்த விஷயத்தை மனு உறுதிப் படுத்தி இன்னும் தெளிவாகக்கூறுகிறுர்.

यज्ञाय जग्धिः मांसस्येत्येष दैवोविधिः स्मृतः । (म-6-31)

இதில் "யாகத்திற்காக மாம்ஸம் பக்ஷணம் செய்வதென்பது தைவமான விதியாகும். என்று யாக சேஷ பக்ஷணமானது வேத விஹித விதியென்று சொன்னுர். இங்கும் குல்லூக பட்டர் வியாக்யானத்தில் யக்ஞ சேஷ பக்ஷண மானது யாக பூர்த்திக்காக யாக அங்கமாகச் செய்யப்பட வேணுமென்று

यज्ञसंपत्त्यर्थं, तदंगभूत मांसस्य भक्षणं दैवं अनुष्ठानम् ॥

என்பதால் சொன்னுர்.

மனு மற்றொரு வசனத்தினுலும் யாக சேஷ பக்ஷணத்தை த்ருடப் படுத்துகிறுர்.

असंस्कृतान् पशून् मन्त्रैः नाद्यात् विप्रः कदाचन ।
मन्त्रैस्तु संस्कृतान् अद्यात् शाश्वतं विधिमास्थितः ॥ (5-36

["பிராம்ஹணர் ஒருக்காலும் மந்த்ரஸம்ஸ்காரமில்லாத மாம்ஸத்தை சாப்பிடக் கூடாது.

யாக மந்திரங்களால் பரிசுத்தமாக்கப்பட்டதையோ வென்றால் சாச்வத்மான வேத விதியை அனுஸரித்து சாப்பிடவேணும்"]

என்பதாலும் வேத விஹிதமான யாகசேஷ பக்ஷணம் வேத விதியை அனுஸரித்து செய்யப்பட வேண்டியதே என்றார். வ்யாக்யாதாவும்.

शाश्वतं—प्रवाहानादितया नित्यं पशुयाग विधिम्
आस्थितः मन्त्र संस्कृतानेव अश्नीयात् इति ॥

என்பதால், "அநாதி காலமாக நித்யமாக இருக்கும் பசுயாக விதி தர்மத்தை அநுஸரித்து யாகத்தில் மந்திரங்களால் பரிசுத்த மான சேஷத்தை மட்டும் சாப்பிடலாம்" என்று கூறினர்.

இதில் யாக்ஞ வல்க்யரின் அபிப்பிராயம்.

மனுவைப்போல் யாக்ஞ வல்க்யரும்

प्राणात्यये, तथा श्राद्धे प्रोक्षितं द्विज काम्यया ॥

(யாஜ்-ஆ-171)

என்ற வசனத்தால் மாம்ஸ பக்ஷணத்திற்குச் சொல்லிய நான்கு நிமித்தங்களுள் "ப்ரோக்ஷிதம்" என்பதால் யாகபசு சேஷத்தை யும் குறிப்பிக்கிறார்.

இங்கு மிதாக்ஷரையில் விக்ஞாநேச்வரர் தெளிவாகக் கூறுவ தாவது:—

प्रोक्षणाख्य श्रौत संस्कार संस्कृतस्य पशोः यागार्थस्य अग्नीषो-
मीयादेः हुतावशिष्टं मांसं प्रोक्षितम् । तत् भक्षयेत् । अभक्षणे
यागानिष्पत्तेः ॥

"ப்ரோக்ஷிதம்" என்றால், ப்ரோக்ஷண மென்கிற சிரௌத ஸம்ஸ்காரத்தால் ஸம்ஸ்க்ருதமான, அக்நீஷோமீயாதி யாக பசுவின் ஹுத சேஷமான மாம்ஸம் என்று அர்த்தம். அந்த யாக சேஷத்தை அவச்யம் சாப்பிடவேணும் சாப்பிடாவிட்டால் யாகம் பூர்த்தியாகிறதில்லை யன்றோ?"

என்ற வாக்யங்களால் யாக சேஷ பக்ஷணம் நியத மென்றும், அதைச் செய்யா விட்டால் யாகமே நிஷ்பத்தியை அடைகிற தில்லை யென்றும் சொல்லியுள்ளார்.

இவ்வாறு யாகபசு சேஷ பக்ஷணமானது வேத விஹிதமாயும், யாக பூர்த்திக்குக் காரணமாயுமிருப்பதால் சேஷ பக்ஷணம் செய்யாமல் விடுவது மஹா பாபமென்று மனு கடைசியில் கூறுகிறார்.

> नियुक्तस्तु यथान्यायं यो मांसं नात्ति मानवः ।
> स प्रेत्य पशुतां याति सम्भवानेक विंशतिम् ॥ (ம.5 35)

> ["யாகங்களில் சாஸ்திர விதிப்படி ஏவப்பட்ட எந்த மனிதனுவது சாஸ்திர விஹிதமான சேஷ பக்ஷணத்தைச் செய்யவில்லையானுல், அவன் இறந்த பின் 21 ஜன்மங்களில் பசுவாகப் பிறப்பான்.]

இவ்வாறு ப்ரத்ய வாயமும் சொல்லப்பட்டது.

இதுவரையில் நிரூபணம் செய்ததிலிருந்து யாக சேஷ ப்ராசன மானது வேதங்களிலேயே தர்மமாக விதிக்கப்பட்டிருப்பதை அனுஸரித்து கல்பஸூத்ர காரர்களும், மனுயாக்ஞவல்க்யாதி ஸ்மிருதி காரர்களும், விக்ஞானேச்வராதி நிபந்தன காரர்களும், ஹவிஸ்சேஷ பக்ஷணம் அவச்யமென்றும், தர்மமென்றும் யாக பூர்த்தி கரமென்றும், செய்யாவிடில் தோஷ மென்றும் தெளிவாகக் கூறியிருப்பதால் சேஷபக்ஷணத்தைப் பற்றி பிரமாண பரர்களான ஆஸ்திகர்கள் மனக் கலக்கம் அடையச் சிறிதும் இடமில்லை. மாமஸ பக்ஷணத்தில் தோஷம் கூறும் மன்வாதி ஸ்மிருதிகளெல்லாம் அது யாக சேஷ விஷயமல்ல வென்றும், காம காரமாகச் சாப்பிடும் விஷயமே யென்றும் தெளியவேண்டும். மாம்ஸ பக்ஷணத்தில் மஹா தோஷம் கூறும் மனு முதலியவர்களே யாக சேஷ பக்ஷணத்தை வேத விஹித தர்மமென்று கூறிவிட்டதால் அதில் விவாதத்திற்கு என்ன இடமிருக்கிறது?

### மதுபர்க்காதிகளிலும் உண்டு

தவிர, வைதிக மதத்தில் சிரௌதகர்மாவில் மட்டும்தான் பசு ஹிம்ஸையும் மாம்ஸ பக்ஷணமும் இருப்பதாக நினைக்க கூடாது. மதுபர்க்கம், சிராத்தகர்மம் முதலிய பல ஸ்மார்த்தகர்மாக்களிலும் எல்லா கிருஹ்யஸூத்ரகாரர்களும் ஸ்மிருதிகளும் பசு

ஹிம்ஸையும் மாம்ஸ பக்ஷணத்தையும் ஸ்பஷ்டமாக விதிக்கின்றார்கள். இதற்கான பிரயோகங்களை ஒவ்வொருவரும் தங்கள் கிரஹ்ய ஸூத்ரங்களில் காணலாம். ஸூத்ரகாரர்கள் விதித்துள்ள அந்தக்கர்மாவை அதர்மமென்று எவராவது கூறமுடியுமா? கிரஹ்யஸூத்ரகாரர்கள் அவ்வித அதர்மத்தைத்தங்களது ஸூத்ரங்களில் கூறுவார்களா? நம்மை அநுஷ்டிக்கும்படிதான் சொல்லுவார்களா?

### கலியிலும் செய்யவேண்டியதே.

ஆனால் இங்கு ஒரு சங்கை தானாகவே ஏற்படுகிறது. அதாவது மது பர்க்காதி ஸ்மார்த்த கர்மாக்களில் பசு வதமும், மாம்ஸ பக்ஷணமும் விஹிதமாயிருந்தபோதிலும், கலியுகத்தில் எப்படி அது கைவிடப்பட்டதோ அதேபோல் யாகபசு விஷயமும் கலியில் ஏன் விடத்தக்கதில்லை? என்று. இந்த சங்கயை பிரமாணங்கள் மூலமாக பரிஹரிப்போம்.

முதலில் ஒரு முக்ய விஷயத்தை ஞாபகத்தில் வைக்கவேணும். வேத விஹிதமான யாகபசு விஷயமானது நித்யம். இதைவிட முடியாது. பசு இல்லாமல் யாகம் செய்யமுடியாது. மது பர்க்காதிகளில் பசு ஹிம்ஸையோ வென்றால் விகல்பமானதே. அதாவது அதைச் செய்தாலும் செய்யலாம், விட்டாலும் விடலாம். ஆகையால் அது அநித்யமானதே. மதுபர்க்க பிரகரணத்தில் ஆபஸ்தம்பாதிகள் பசுவத பிரயோகத்தைச் சொல்லிவிட்டு

यद्युत्सृजेत्

என்பதால் மதுபர்க்க பசுவைக் கொல்லாமல் விட்டு விடலாமென்றும் விகல்பமாக ஒரு பக்ஷத்தை விதித்துள்ளார்கள். இப்படி யுகாந்தரத்திலேயே விகல்பமாகக் கூறப்பட்ட மதுபர்க்க பசு ஹிம்ஸையை கலியுகத்தில் அடியோடு நிஷேதித்து விட்டார்கள்.

वराथिति पितृभ्यस्तु न पशूपाकृतिः कलौ ॥ என்றும்

मधुपर्के पशोर्वधः । என்றும்

கலியுகத்தில் மதுபர்க்க பசுவதம் கூடாதென்று வசனங்களால் தடுக்கப்பட்டுவிட்டது. இதுபோல் சிராத்தத்தில் பசு வதமும்,

மாம்ஸமும் கலியில் கூடாதென்று सन्यासं पल पैतृकं இத்யாதி களான அநேக வசனங்கள் சொல்லுகின்றன.

இங்கு நாம் கவனிக்கவேண்டியதென்ன வென்றால் மது பர்க்காதி பசு வதம் கலியில் கூடாதென்று வசனங்கள் தடுப்பது போல் யாக பசு வதம் கலியில் கூடாதென்று ஒரு வசனமாவது கிடைக்கிறதா? ஒன்றுகூட இல்லையே! கலிவர்ஜ்யங்களில் ரிஷிகள் அக்னிஷ்டோமாதி யாகங்களையோ அஜ பசு யாகத்தையோ கூடா தென்று ஒரு வசனங்கூட எழுதாமலிருக்கையில் கலியில் அவை கூடாதென்று யார் சொல்லுவது? எப்படிச் சொல்வது?

### கலிவர்ஜ்யங்களில் நித்ய யாகம் சேரவில்லை

ஆயினும் சில குறிப்பிட்ட யாகங்களையே கலியில் வேண்டா மென்று தடுத்திருப்பதும் இதற்கு ஸாதகமாயிருக்கிறது.

"दीर्घकालं ब्रह्मचर्यं नरमेधाश्वमेधकौ" ॥

"नराश्वमेधौ मद्यं च" ।

என்கிற வசனங்களால், அச்வமேதம், நரமேதம் என்ற இரண்டு யாகங்கள் கலியில் செய்யக் கூடாதென்று குறிப்பாகத் தடுக்கப் பட்டிருக்கின்றன.

இதுபோல் கோமேதம் என்றயாகமும் गोमेधश्च मखस्तथा என்பதால் கலியில் தடுக்கப்படுகிறது. ஸத்ரயாகம் வேண்டாமென்றும்

सत्रदीक्षा च

என்பதால் கலியில் நிஷேதிக்கபட்டிருக்கிறது. இம்மாதிரி குறிப் பிட்ட சில யாகங்களை மட்டும் எடுத்து கலியில் தடுப்பதிலிருந்து மற்ற யாகங்களுக்குத் தடையில்லை யென்பது விளங்குகிறது. பொதுவாகக் கலியில் ஒரு யாகமும் செய்யக்கூடாதென்று ரிஷி களின் அபிப்பிராயமிருந்தால் அந்தமாதிரி ஒரு நிஷேத வசனத்தை அவர்கள் எழுதுவது சிரமமில்லை. அப்படி எல்லா யாகங்களையும் அவர்கள் அடியோடு தடுக்காததுடன் அச்வ மேதம் முதலிய சில யாகங்களைமட்டும் தடுத்து விதி செய்திருப் பதிலிருந்து மற்றவைகளை அனுஷ்டிப்பதில் தடையில்லை யென்று ரிஷிகளின் அபிப்பிராயம் விளங்கவில்லையா? கலியில் கூடாதென் பதற்கு வசநப் பிரமாண மொன்றுமே இல்லையாகையால் நாமாக

வைதிக நித்ய கர்மாக்களான யாகங்களை எப்படி பத்ரித்யாகம் செய்வது? ப்ரத்யவாய பிராயச்சித்தாதிகள் ஸம்பவிக்குமல்லவா?

இத்துடனில்லாமல், கலியில் அச்வமேதாதிகளைத் தவிர மற்ற அக்நிஷ்டோமாதிகள் செய்யலாமென்பதற்கு கலிவர்ஜ்ய பிரகரண வசனங்களிலிருந்தே பிரமாணம் கிடைப்பதையும் இங்கே காட்டுகிறோம்.

सौत्रामण्यामपि सुराग्रहणस्य च संग्रहः

என்ற வசனத்தால் கலியில் ஸௌத்ராமணி யாகத்தில் "ஸுராக்ரஹணம்" என்ற ஹவிஸ்ஸை உபயோகிக்கக்கூடாதென்று தடுக்கப்படுகிறது. அநேக அஜ பசுக்களால் நடத்தப்படவேண்டிய ஸௌத்ராமணி யாகத்தில் "ஸுரை" கூடாதென்று தடுப்பதிலிருந்து ஸௌத்ராமணி யாகத்தைச் செய்ய அநுமதியிருப்பது தெளிவாக வில்லையா? யாகமே கூடாதென்றால், அதற்குள் ஒரு அங்கமான ஸுராக்ரஹத்தை மட்டும் தனியாகத் தடுக்க அவச்யமென்ன? இதுபோல்

शामित्रं चैव विप्राणां सोमविक्रयणं तथा ॥

என்ற வசனத்தால் கலியில் பிராம்மணர்கள், யாகங்களில், "சாமித்ரம்" என்ற கார்யத்தையும், ஸோமக்ரயம் என்றதையும் செய்யக்கூடாதென்று தடுக்கப்படுகிறது. யாகபசுவை வதம் செய்வது முதலிய ப்ரயோக கார்யங்களுக்கு "சாமித்ரம்" என்று பெயர். இந்தக்கார்யங்களை முன் யுகங்களில் பிராம்மண ரித்விக்கே செய்வது வழக்கம். இவைகளைக் கலியில் பிராம்மணர்கள் நேரில் தாங்கள் செய்யகூடாதென்று நிஷேதிப்பதிலிருந்து கலியில் யாகமும், யாக பசு வதமும் தெளிவாக ஒப்புக்கொள்ளப் பட்டிருப்பதைக் கவனிக்கவும். பசுவதமோ, யாகமோ கலியில் கூடாதானால் பிராம்மண சாமித்ரத்தை மாத்திரம் தனியாக நிஷேதிப்பது அநாவச்யகமல்லவா? மேலும் இந்த வசனத்தில் கலியில் பிராம்மணன் ஸோமலதையை விற்கும் கார்யத்தைச் செய்யக் கூடாதென்று தடுக்கப்படுகிறது. "ஸோமக்ரயம்" என்பது ஸோமயாகத்தின் நடுவில் ஒரு ப்ரயோகமாயிருக்கிறது, அந்தக் கார்யத்தை பிராம்மணன் கலியில் செய்யக்கூடாதென்று தடுப்பதிலிருந்து ஸோமயாகம் கலியில்செய்யலாமென்று விளங்கவில்லையா? ஸோமயாகமே கலியில் கூடாதானால, அதன் நடுவில்

வரும் ஒரு கார்யத்தை மட்டும் தனியாக நிஷேதிப்பானேன்? மேற்படி வசனத்தை அநுஸரித்துக் கலியில் பிராம்மணர்கள் 'ஶாமித்ர' மென்ற பசுவத கார்யத்தை நேரில் தாங்கள் செய்யாமல் இதர ஜாதியார்களைக் கொண்டே நடத்துவது ஆசாரத்திலிருக்கிறது. ஸோமக்கிரயமும் நல்ல பிராமணர்கள் கலியில் செய்வது வழக்கமில்லை.

தவிரவும், அக்னி ஹோத்ரத்தில் ஹோமம் செய்த பிறகு ஹவிஸ் சேஷத்தை சாப்பிடும்போது உச்சிஷ்டம் செய்து அதாவது எச்சில் பண்ணி சாப்பிடலாமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. இம்மாதிரி எச்சில் பண்ணி அக்னி ஹோத்ர ஹவிஸ் சேஷம் சாப்பிடுவது கலியில் கூடாதென்று

अग्निहोत्र हवन्याश्च लेह:

என்ற வசனத்தால் தடுக்கப்படுகிறது. கலியில் அக்னி ஹோத்ரமே கிடையாதானால் அதில் ஹவிஸ்சேஷம் சாப்பிடுவதைப் பற்றிய நியமம் எப்படிப் பொருந்தும்? இதிலிருந்து கலியில் அக்னி ஹோத்ரம் உண்டென்று ரிஷிகளின் அபிப்பிராயம் உறுதிப்படவில்லையா?

### இதில் மஹாபாரத பிரமாணம்.

மஹா பாரதத்தில் சாந்திபர்வாவில் பக்தர்கள் பகவானைப் பார்த்து கலியில் தர்மமானது ஒரு காலால் நிற்கும் துரவஸ்தை வந்து பூலோகத்தில் தர்மக்லானி ஏற்படு மாகையால் அப்போது தார்மிகர்கள் எந்த தேசத்தில் வஸிக்கலாமென்று கேட்டதற்கு பகவான் பதில் சொல்லுகையில்

यत्र वेदाश्च यज्ञाश्च तपस्सत्यं धृतिःक्षमा ।
हिंसाश्च धर्मसंयुक्ताः प्रचरेयुः सुरोत्तमाः ॥

என்பதால் பூலோகத்தில் எந்த தேசத்தில், வேதங்களும், யாகங்களும், தபஸ் முதலிய தர்மங்களும், சாஸ்திர விஹித தர்மமான யாகபசு ஹிம்ஸைகளும் ஆசரிக்கப்படுகின்றனவோ, அந்த தேசங்களில் பகவத் பக்தர்கள் வஸிக்கலாமென்று கூறியிருப்பதிலும் கலியில் யக்ஞங்களும், யாகபசு கார்யங்களும் நடக்கு மென்பதை வெளிப்படுத்தியிருப்பதும் கவனிக்க வேண்டும்.

### வைத்யநாத தீக்ஷிதர் நிர்ணயம்

இவ்வளவு பிரமாணங்களையும், கலிவர்ஜ்ய பிரகரண நிர்ணயங்களையும் நிஷ்கர்ஷித்து ஸ்மிருதி முக்தாபலம் ஆன்ஹிககாண்டம் போஜனபிரகரணத்தில் ஸ்ரீ வைத்யநாத தீக்ஷிதர் கூறுவதாவது:-

यज्ञव्यतिरिक्ते सर्वत्र कर्मणि कलौ प्राणिवधः मांसभक्षणंच निषिद्धम् ।

(யாகம் ஒன்று தவிர மற்ற எல்லா கர்மாக்களிலும், கலியில் பிராணி ஹிம்ஸையோ, மாம்ஸ பக்ஷணமோ நிஷித்தமாகும்) என்று

இவ்வாறு இதில் ஸ்பஷ்டமாக அவர் சொல்லிவிட்டு வியாஸ வசனம் ஒன்றையும் பிரமாணமாக எடுத்துள்ளார்.

मन्त्रेण असंस्कृतं मांसं नाद्यात् विप्रः कलौ युगे ।
यज्ञेतूपाकृतं मांसं अश्नीयात् विधिचोदितम् ॥ என்று

(கலியுகத்தில் பிராம்மணன் மந்திரத்தினால் பரிசுத்தமாகாத மாம்ஸத்தை சாப்பிடக் கூடாது. யாகத்திலோவென்றால் வேதவிதியால் விதிக்கப்பட்ட யாக பசு ஹவிஸ்சேஷத்தை சாப்பிடவேண்டியதே)

இங்கு "உபாக்ருதம்" என்பது யாகத்தில் மந்திர பூர்வமாக வதம் செய்யப்பட்ட பசு என்று उपाकृतः पशुरसौ योऽभिमंत्र्य क्रतौ हतः என்பதால் அமரகோசத்தில் சொல்லப்பட்டது.

### கலியிலும் அக்னிஹோத்ரம் உண்டு.

இவ்வளவு நிரூபித்ததிலிருந்து கலியில் யக்ஞாக்நிஹோத்ராதி சிரௌதகர்மாக்கள் தடுக்கப்படவில்லை யென்பதும் கலியில் கூட அவச்ய அநுஷ்டேயங்களென்பதும் ஸித்தமாகியதால்

अग्निहोत्रं गवालंभं सन्यासं पलपैतृकम् ।
देवराच्च सुतोत्पत्ति कलौ पंच विवर्जयेत् ॥

என்ற வசனத்தால், அக்நிஹோத்ரம், ஸன்யாஸம், மாம்ஸம் சேர்ந்த சிரார்த்தம் ஆகியவைகளை கலியில் வர்ஜிக்கவேணும் என்கிற

வசனமும் பதில் சொல்லப்பட்டதாகிறது. இதில் காம்யாக்நி ஹோத்ரமே நிஷேதிக்கப்படுகிறது. இங்கு கலியில் அக்நி ஹோத்ரம் வேண்டாமென்று சொல்வது விகல்பமாக விதிக்கப் பட்ட, அதாவது செய்தாலும் செய்பலாம், விட்டாலும் விடலாம் என்று சொல்லப்பட்ட காம்ய அக்நிஹோத்ரத்தைப்பற்றிய நிஷே தமேயாகும். இது யாவஜ்ஜீவ சுருதியால் விதிக்கப்பட்ட நித்ய அக்நிஹோத்ரத்தைப்பற்றியதல்ல. நித்ய அக்நிஹோத்ரத்தைச் செய்யாவிட்டால் பிரத்யவாய, பிராயச்சித்தாதிகள் விதிக்கப் பட்டிருப்பதாலும், காம்யத்தைச் செய்யாவிட்டால் தோஷமில்லை யாகையாலும் இந்த நிஷேதம் காம்ய அக்நிஹோத்ர விஷயமே. இதற்கு முக்ய காரணமென்னவெனில் கீழேகாட்டிய மீமாம்ஸா, காத்யாயன ஸூத்ராதி அநேக பிரமாணங்களாலும்,

सकलांगोपसंहारे काम्यं कर्म प्रसिद्धति ।

என்றதுபோன்ற வசனங்களாலும் ஸகல அங்கங்களுடனும் ஒரு வித குறைவும் இல்லாமல் பரிபூர்ணமான ஸாதனங்களுடன் செய்தால்தான் காம்யகர்ம ஸித்திக்குமென்று ஸித்தாந்தம் செய்யப்பட்டிருப்பதேயாகும். ஸகலாங்க பூர்த்தியில்லாத காம்ய கர்மா நிறைவேறுவதில்லையென்றும் சாஸ்திரங்களால் நிச்சயிக்கப் பட்டிருக்கிறதல்லவா? கலியுகத்தில், கால, தேச அதிகாரி திரவ் யாதிகளில் சாஸ்திர விதிப்படி பரிபூர்ணமாக அங்கங்கள் கிடைப் பது அஸாத்யமென்றும் வைகுண்யம் ஏற்படுவது நிச்சயமென் றும் அநுபவஸித்தமாகையால் காம்ய கர்மாக்களைச் செய்வது நிரர்த்தகமென்று நிச்சயமாகையால் காம்ய அக்நிஹோத்ரத்தைத் தடுப்பது பிராமாண நியாயாதிகளுக்கு ஏற்றதாயிருக்கிறது. நித்யாக்நிஹோத்ராதிகளிலோவென்றால் எவ்வளவு குறைவு களிருந்தபோதிலும் ஸகலாங்க பூர்த்தி அவச்யமில்லையென்று ஒரு முகமாக சாஸ்திரங்கள் ஒப்புக்கொண்டு எவ்வளவு வைகு ண்யத்துடனும் யதாசக்தி நித்யங்களை அநுஷ்டித்தால் போது மென்றும் ஸித்தாந்தமாகையால் ஸகலவித ஸாதனக் குறை வுள்ள கலியிலும் நித்யாக்நி ஹோத்ராதிகளை அநுஷ்டிப்பதில் தடையில்லை. ஆதலால் காம்யாக்நி ஹோத்ரம் கலியில் நிறைவேற வழியில்லையாகையால் அதையே மேற்படி வசனம் தடுக்கிறது.

மேலும் மேற்படி வசனத்தில் அக்னிஹோத்ர பதத்துடன் சேர்த்துப்படிக்கப்பட்டிருக்கிற மற்ற தர்மங்களும் விகல்பிதமானவைகளே. அதாவது அநித்யங்களே. "கவாலம்பம்" என்ற கோமேத யாகமானது நித்யமல்ல, விகல்பிதமேயாகும், செய்தாலும் செய்யலாம் விட்டாலும் விடலாம். அதுபோல் ஸந்யாஸமும் அநித்யமானதே. பிராம்மணனுக்கு ஸந்தியாவந்தனாதிகளைப்போல் ஸன்யாஸம் நித்யமல்ல. இஷ்டமிருந்தால் ஸன்யாஸத்திற்கு போகலாம். நிர்ப்பந்தமில்லை. இப்படியே சிராத்தத்தில் மாம்ஸம் சேர்ப்பதும் நித்யமல்ல, விகல்பமே. ஆதலால் அநித்யம், அல்லது விகல்பிதமான ஸன்யாஸாதிகளுடன் சேர்ந்து படிக்கப்பட்டுள்ள அக்னிஹோத்ரபதமும் ஸஹபாட நியாயத்தால் அநித்யமான காம்ய அக்னிஹோத்ரத்தையே குறிக்கிறதென்பது மறுக்கமுடியாத விஷயம்.

## சுருதிவிதியை புராணவசனம் பாதிக்குமா?

இங்கு மற்றொரு பிரபல நியாயமும் உள்ளது. பிரம்ஹஸூத்ரத்தில் புருஷார்த்தாதிகரணத்தில், யாவஜ்ஜீவ சுருதியால் நித்யமாக விதிக்கப்பட்ட அக்னிஹோத்ரத்தை பரித்யாகம் செய்துவிட்டு ஸந்யாஸ ஆச்ரமத்திற்குப் போகக்கூடாது என்ற கக்ஷி ஏற்பட்டதில், யாவஜ்ஜீவசுருதி பிரபலமென்றும், இதற்கு ஸமமான பலமுள்ள ஸன்யாஸவிதி சுருதி வாக்யமில்லாததால் ஸன்யாஸத்திற்கே போக அதிகாரம் ஸித்திக்காதென்றும், ஸன்யாஸத்தை விதிக்கும் ஸ்மிருதிவாக்யமிருந்தாலும் அது துர்பலமாகையால் யாவஜ்ஜீவ சுருதியை பாதிக்கும் சக்தியுள்ளதல்லவென்றும் விவாதம் ஏற்பட்டது.

பராமர்சாதிகரணத்தில் ஸ்ரீ பகவத் பாதாசார்யார்

स्मृत्याचाराभ्यां तु तेषां प्रसिद्धिः न प्रत्यक्षश्रुतेः। अतश्च प्रत्यक्षश्रुति विरोधेसति अनादरणीयास्ते भविष्यन्ति।

என்ற வாக்யத்தால் பிரத்யக்ஷ சுருதி விஹித யக்ஞாதிகர்மாக்களுக்கு விரோதமாக ஸந்யாஸ ஆச்ரமம் ஸ்மிருதிகளில் விதிக்கப்பட்டாலும், அந்த ஸ்மிருதிகள் யாவஜ்ஜீவ சுருதி விருத்தங்களாகையால் ஆதரிக்கத்தக்கவையல்ல என்று கூறினர்.

ஸ்ரீ ராமாநுஜரும் ऊर्ध्वरेतस्सु च शब्देहि என்ற ஸூத்ரபாஷ்யத்தில்

ननु ऊर्ध्वरेतस आश्रमा न सन्त्येव। यावज्जीवमग्निहोत्रंजुहोतीत्यादिना अग्निहोत्रदर्शपूर्णमासादीनां यावज्जीवाधिकारश्रुतेः। श्रुतिविरुद्धानां स्मृतीनां च अप्रामाण्यात् ॥

என்ற வாக்யத்தால் யாவஜ்ஜீவவிதி விஹித அக்நிஹோத்ராதிகர்மாக்களைப் பாதிக்கக்கூடிய ஸ்மிருதிகள் அப்ரமாணங்களென்று தெளிவாகக்கூறினார்.

ஸூத்ரகாரர் இந்தக் கக்ஷியை ஏற்றுக்கொண்டு யாவஜ்ஜீவ சுருதிக்கு ஸமமான பலமுள்ள ஸங்யாஸவிதி சுருதியும் இருப்பதாக

ऊर्ध्वरेतस्सु च शब्दे हि। என்ற ஸூத்ரத்தில் शब्देहि என்பதாலும் अनुष्ठेयं बादरायणः साम्यश्रुतेः ॥ என்பதாலும் சொன்னார். இவ்வாறு யாவஜ்ஜீவ சுருதியை பாதிக்கக்கூடிய ஸங்யாஸ விதாயக சுருதியைக் காட்ட ஸூத்ரகாரர் சிரமப்படுகிறார்.

இதிலிருந்து யாவஜ்ஜீவம் அக்நிஹோத்ரத்தை விதிக்கும் யாவஜ்ஜீவ சுருதியை அதற்கு ஸமமான பலமுள்ள மற்றொரு சுருதிதான் பாதிக்கமுடியுமென்றும் நித்ய ச்ரௌதகர்மாக்கள் பிரத்யக்ஷ சுருதி விஹிதங்களாகையால் பிரபலங்களென்றும் அவைகளை ஸ்மிருதிவசனங்கள்கூட பாதிக்கச் சக்தியற்றவையென்றும் நியாயம் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

அதன்படி இங்கு யாவஜ்ஜீவ சுருதி விஹிதமான நித்ய அக்நிஹோத்ரத்தை "अग्निहोत्रं गवालंभं" என்ற கலிவர்ஜ்ய பிரகரண புராண ச்லோகமானது பாதிக்கச் சக்தியற்றதே. சுருதி விதியை விட புராண விதியானது துர்பலமல்லவா? ஆகையால் இங்கு காணப்படும் அக்நிஹோத்ரமானது யாவஜ்ஜீவ சுருதியால் விதிக்கப்பட்ட நித்யாக்நிஹோத்ரத்தைத் தடுக்கவந்ததல்ல. காம்ய அக்நிஹோத்ரம் அநித்யமாகையால் அதை மேற்படி புராண வசனம் தடுக்கச் சக்தியுள்ளதே. ஆதலால் நித்யாக்நிஹோத்ரத்திற்கு கலியில் தடையில்லை.

இம்மாதிரி வ்யவஸ்தை செய்யாவிடில் விரோதம் ஏற்படு வதைக் கவனிக்கவேணும். கீழே நாம் நிரூபித்தபடி अग्निहोत्र-हवन्याश्च लेहः । என்கிற வசனமானது கலியில் அக்நிஹோத்ர ஹவிஸ்சேஷத்தை உச்சிஷ்டம்பண்ணி சாப்பிடக்கூடாதென்று தடுப்பதன்மூலம் கலியில் அக்நிஹோத்ராநுஷ்டானத்தை தெளி வாக அங்கீகரிக்கிறது. अग्निहोत्रं गवालंभं என்ற வசனமோ கலியில் அக்நிஹோத்ரத்தை நிஷேதிக்கிறது. இந்த இரண்டு வசனங் களுக்கும் பரஸ்பரம் விரோதம் ஏற்படுவதால், விரோதமின்றி வியவஸ்தை செய்யவேண்டியது அவச்யமாகிறது. கீழே காட் டிய பிரமாண ந்யாய பலங்களைக்கொண்டு கலியில் அக்நிஹோத்ர அநுமதியானது நித்யாக்நிஹோத்ர விஷயமென்றும் நிஷேத விதியான மற்றொன்று காம்யாக்நிஹோத்ர விஷயமென்றும் விய வஸ்தை செய்வதே பொருத்தமாயிருக்கிறது.

இதில் மற்றொருவிதமான வ்யவஸ்தையும் ஸ்மிருதி சந் திரிகை, நிர்ணயஸிந்து முதலியவைகளில் கூறப்பட்டுள்ளது.

## அர்த்தாதானம் உண்டு. பூர்ணுதானமே நிஷித்தம்.

ஆதானத்தில், அர்த்த (பாதி) ஆதானம், ஸர்வாதானம், என்று இரண்டுவகை ஸூத்ரகாரர்களால் கூறப்பட்டிருக்கிறது. ஆதானகாலத்தில் ஸ்மார்த்தமான ஔபாஸனுக்நியை, பூர்ணமாக ச்ரௌதாக்நியில் கலந்துவிடுவது (सर्वाधानं) ஸர்வாதானமாகும், பாதி ஔபாஸனத்தைமாத்திரம் கலந்து, பாக்கி பாதி ஔபாஸன த்தை தனியாக வைத்துக்கொள்ளுவது "அர்த்தாதானம்" (अर्धाधानं) எனப்படுகிறது. ஔபாஸனுக்நியை முழுவதும் சிரௌ தாக்நியில் கலந்துவிட்டால் சிராத்தாதிகளான கிருஹ்யகர்மாக் கள் எல்லாம் தக்ஷிணுக்நியில் செய்யப்படவேண்டுமென்று ஆபஸ்தம்பர்.

औपासनश्चेदाहितः एतस्मिन्नेवास्य गार्ह्याणि कर्माणि क्रियन्ते ।

என்று சொன்னர்.

மேற்படி ஸர்வாதன பக்ஷமானது கலியில் நிஷேதிக்கப்பட்டுள்ளது.

अर्धाधानं स्मृतं श्रौतस्मार्ताग्न्योस्तु, पृथक्कृतिः ।
सर्वाधानं तयोरैक्यकृतिः पूर्वयुगाश्रया ॥

இந்த வசனத்தில் ஸர்வாதானம் முன்யுகங்களைச் சேர்ந்ததென்பதால் கலியில் ஸர்வாதான மாத்ரமே நிஷேதிக்கப்பட்டதேயல்லது அர்த்தாதானத்திற்கோ, அதன் மூலமான அக்னிஹோத்ராதிகளுக்கோ கலியில் நிஷேதமில்லையென்று ஸ்மிருதி சந்திரிகையில் வ்யவஸ்தை செய்யப்பட்டது. ஆதலால் अग्निहोत्रं गवालंभं என்ற கலிநிஷேதமானது ஸர்வாதான விஷயமென்று அதில் நிர்ணயம் செய்யப்பட்டது.

நிர்ணயஸிந்துவில் மேற்படி अग्निहोत्रं गवालंभं என்ற நிஷேத வசனத்தை எடுத்து அங்குள்ள அக்னிஹோத்ர பதத்திற்கு ஆதானம் என்று வியாக்யானம் செய்யப்பட்டது.

अग्निहोत्रं—तदर्थमाधानम् । एतच्चसर्वाधानपरम् ।

என்று அந்த நிஷேத வசனம் ஸர்வாதான விஷயமென்று நிச்சயித்து இதற்கு ஸ்மிருதி சந்திரிகையையும் பிரமாணமாகக் காட்டினர்.

மேலும் चत्वार्यब्दसहस्राणि என்ற வசனத்தில் கலியில் நாலாயிரத்து நானூறு வருஷங்களுக்குப் பிறகு, ஆதானமும், ஸந்யாஸமும் செய்யக்கூடாதென்ற விஷயமும் ஸர்வாதான விஷயமென்று நிர்ணயஸிந்து நிர்ணயித்ததைக் காணலாம். ஆதலால் கலியில் அர்த்தாதானமும், அதன் மூலமான அக்நிஹோத்ர யாகாதிகளும் காலநியமும் வேறு வரையறை எதுவுமின்றியும் செய்யப்படலாமென்று ஸ்மிருதி சந்திரிகாதிகள் ஸித்தாந்தம் செய்தன. இதையனுஸரித்து தீக்ஷிதீயத்தில் இருக்கும் வாக்யத்தையும் கீழே காட்டினோம்.

## வர்ணப்பிரிவும், வேதமும் உள்ளவரையில் ஸன்யாஸமும் அக்நிஹோத்ரமும் உண்டு.

இங்கு வேறுசில நிபந்தனகாரர்கள்.

यावद्वर्ण विभागोऽस्ति यावद्वेदः प्रवर्तते ॥
सन्यासं च अग्निहोत्रं च तावत् कुर्यात् कलौयुगे ॥

என்ற வசனமானது, "கலியில் எதுவரையில் பிராம்ஹ ணாதி ஜாதிப் பிரிவு நிலைத்திருக்கிறதோ, எதுவரையில் வேதங்கள் பிராசாரத்திலிருக்கின்றனவோ, அது வரையில் கலியிலும் ஸன்யாஸத்தையும், அக்நிஹோத் ரத்தையும் அநுஷ்டிக்கலாம்"

என்று விதிப்பதைக்கொண்டு கலியில் இப்போதும் அவைகளைச் செய்யலாமென்றும் நிர்ணயித்தார்கள். இந்த வசனமானது अग्निहोत्रं गवालंभं என்கிற வசனத்திற்கு அபவாத வசனமென்றும் அதாவது விலக்கு விதியென்றும் சொன்னார்கள். இங்கு வர்ண விபாகம் என்று பொதுவாயிருந்தாலும் யாகாதிகளில் அதி காரம்பெற்ற பிராம்மண ஜாதியானது ஜாதிக்கலப்பில்லாமல் சுத்தமாயிருக்கும்வரையில் என்று அர்த்தம் கொள்வதே உசித மாகும்.

அக்நிஹோத்ரத்தை கலியில் நிஷேதிக்கும் வசனங்களில் ஸன்யாஸத்தையும் சேர்த்து நிஷேதிப்பதை, கலியில் அக்நி ஹோத்ரத்தை ஆக்ஷேபிப்பவர்கள் கவனிக்கவேண்டும். கலியில் ஸந்யாஸத்தை ஒப்புக்கொண்டு அது நிர்விவாதமாக நடப்பதற்கு பிரமாணமிருந்தால், அந்த பிரமாணமே கலியில் யாகம் செய் வதற்கும் பிரமாணமாய் இருக்கிறதல்லவா? ஸந்யாஸத்திற்கு நிஷேதமில்லையானல் யாகங்களுக்கும் நிஷேதமில்லையென்று நிஸ்சிதமாகிறது.

ஆகையால் கலியில்யாகாக்நிஹோத்ராதிகளும்,ஸந்யாஸமும் இன்றளவும் வித்வத் சிரேஷ்டர்களான மஹா சிஷ்டர்களாலும் ஆசரிக்கப்பட்டுவருவது நியாயமாயிருக்கிறது. முன்காலத்தில் ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் முதலிய மஹநீயர்களும் இப்போதும் அநேக சிஷ்டர்களும் வித்வான்களும் கலியில்கூட யாகாதிகள் செய்வதற்கு மேற்கண்ட வசநவ்யவஸ்தையே காரணமென்று அறியவேணும்.

### யாகநிந்தையும் பசுவிஷய நிந்தையும் பாபகரம்.

இவ்வாறு, வைதிகமத பிரமாணங்களைக் கொண்டு நன்கு பராமர்சித்தால் யக்ஞாக்நிஹோத்ராதி நித்யகர்மாக்களும், பசு ஹிம்ஸாதிதர்மங்களும் வைதிகமதத்தின் உயிர் ஸ்தானமான பரிசுத்த தர்மங்களாயிருப்பதால் இவைகளைப்பற்றி புராணுதிகளில் எங்காவது ஏதாவது நிந்தைகாணப்பட்டால் அதன் உண்மையான தாத்பர்யம் என்னவென்பதை ஜாக்ரதையாக அறிந்துகொள்ள வேணுமேயல்லது அதை யதார்த்தமாக நினைத்துவிடக்கூடாது.

யாகங்களையும், பசு ஹிம்ஸாதிதர்மங்களையும் உத்தம பிரமாணமாகிய வேதமே நேருக்கு நேராக விதிக்கிறது. வேதவிஹிதமாகையால், மீமாம்ஸகர்கள், கல்பஸூத்ரகாரர்கள் முதலிய கணக்கற்ற ரிஷிகள் அதை பலமாக வற்புறுத்தி பிரயோகமும் நியாயமும் செய்து பாதுகாத்தனர். ஸாங்க்யாதிகள் சொல்லிய தோஷத்தை நிராகரித்து பிர்ம்ஹஸூத்ரகாரரும் பசுஹிம்ஸை பரிசுத்தமென்றும் வேதவிஹிததர்மமென்றும் சிக்ஷித்தார். வைதிகமதத்திற்கான சட்டதிட்டங்களை ஸ்மிருதிரூபமாகச் செய்து தர்மாதர்ம வ்யவஸ்தை செய்துகொடுத்த மனுபகவான் யாகங்களை நித்யமென்றுகூறி பசுஹிம்ஸை வேதவிஹித தர்மமாகையால் அதை அஹிம்ஸையென்றே அறியவேண்டுமென்றும் சட்டமாக விதித்தார். யாக்ஞவல்க்யரும் வேறு ஸகல ஸ்மிருதிகாரர்களும் இப்படியே சொன்னார்கள். ஸ்ரீ சங்கர, ராமானுஜ மத்வாதிகளான மதாசாரியர்களும் யாக, பசு ஹிம்ஸாதிகளை தர்மமென்றும் ரக்ஷணமென்றும் கூறி ரக்ஷித்தார்கள். வைதிக மதத்தை ஸ்தாபித்த மேற்கண்ட ஸகலப் பெரியோர்களும், தர்மமாக விதித்த யாகபசு கார்யத்தை வேறு எந்த பிரமாணங்களோ, அல்லது மனிதனோ நிந்திக்கமுடியுமா? வைதிகமதத்தில் இருந்துகொண்டே ஒருவன் யாகபசு கார்யங்களை ஆக்ஷேபிக்கவும் நிந்திக்கவும் இடமில்லை. நிந்திப்பவர் வேத பாஹ்யர்களான ஜைனாதிகளாகவோ, ஸாங்க்யாதிகளாகவோதான் இருக்க முடியும்.

ஆதலால் புராணுதிகளில் நிந்தை காணப்பட்டால் அது வேதவிருத்தமென்று தள்ளப்படவேண்டியது. அல்லது வேத விரோதமில்லாமல் அதற்கு தாத்பர்யம் சொல்லி ஸமஞ்ஜஸப் படுத்தவேணும்.

## இதில் மஹாபாரத உபதேசம்.

நிந்தை இரண்டுவிதமாகும். வேதபாஹ்யர்கள் யாகாதி நிந்தை செய்வது நமக்கு உபாதேயமல்லவாகையால் அது தள்ளத்தக்கதே. ஆனால் வைதிகமதத்தில் இருப்பவனே வேத விருத்தமாக யாகாதி நிந்தையைப் புத்தி பூர்வமாகச் செய்வது ஒருவிதமாகும். வேததர்மத்தை நிந்திப்பது வேதத்தையே நிந்திப்பதாகையால் இது பிரபலமான தோஷமாயும், ப்ரத்யவாய ஹேதுவாயுமாகிறது. இது மஹாபாரதம் அநுசாஸன பர்வம் 111-வது அத்யாயத்தில ஸ்ரீ கிருஷ்ண பகவான் வாக்யத்தாலேயே உறுதியாகிறது. அங்கு பகவான் கூறுவதாவது:—

नावबुध्यन्ति ये विप्राः निन्दन्ति च पशोर्वधम् ।
ते यान्ति नरकं घोरं रौरवं तमसावृतम् ॥
दशवर्षसहस्राणि तत्र स्थित्वा नराधमाः ।
कृमिभिः भक्ष्यमाणाश्च तिष्ठेयुः पूयशोणिते ॥ என்பது

"யாக மஹிமையை அறியாமல் எந்த விப்ரர்கள் பசுவதத்தை நிந்திக்கிறார்களோ, அவர்கள் அதமர்கள், பின்னும் பயங்கரமான ரௌரவ நரகம் அடைவார்கள, பத்தாயிரம் வர்ஷங்கள் வரையில், துர்க்கந்தமுள்ள அந்த நரகத்தில் கிருமிகளால் உபத்திரவிக்கப்பட்டு துன்பப்படுவார்கள்"

என்பதால் வேத விஹித தர்மமான பசுஹிம்ஸையை நிந்திப்பது பாபமென்றும் நரகாதிப்ரத்யவாய ஹேதுவென்றும் சொல்லப்பட்டது. அடுத்த சுலோகங்களிலும்

अहिंसा वैदिकं कर्म ब्रह्मकर्मेति तत्कृतम् ।
वेदोक्तान् ये न कुर्वन्ति हिंसाबुध्या क्रतून् द्विजाः
सद्यः शूद्रत्वमायान्ति प्रेत्य चण्डालतामपि ॥ என்பதால்

வேதோக்தமான யாக கர்மாவானது அஹிம்ஸா ரூபமான கர்மாவாகும். அது பிர்ம்ஹகர்மாவென்றே விதிக்கப்பட்டுள்ளது. ஆதலால் வேதோக்த யாகாதி தர்மங்களை எவர்கள் ஹிம்ஸையென்ற எண்ணத்தால் அநுஷ்டிக்கவில்லையோ, அந்த த்விஜர்கள் உடனே சூத்ரர்களாகி, இறந்தவுடன் சண்டாளத்வத்தையும் அடைகிறார்கள். (மஹா-அநு 111-வது அத்.)

என்று வைதிகமதத்திலிருப்பவனே ஹிம்ஸா புத்தியால் யாகத்தை அநுஷ்டியாமல்விட்டால் சூத்ரத்வ, சண்டாளத்வாதி ப்ரத்யவாயங்கள் ஸ்பஷ்டமாக பகவானுல் சொல்லப்பட்டிருக்கின்றன. வேதப்ராமாண்யத்தைத் திரஸ்கரிப்பதாலேயே இவ்வளவு கடுமையான தோஷமென்று அறியவும். இப்படிச் செய்யப்படும் யாகநிந்தையானது த்வேஷத்தைஆதாரமாகக்கொண்டதே.

## மற்றொன்றை பிரசம்ஸிக்கவே

மற்றொருவித நிந்தையும் உண்டு. அது சாஸ்திரமுறையை அநுஸரித்தது. அதாவது ஒன்றை ஸ்துதிசெய்ய முயற்சிக்கையில் மற்றொன்றைத் தாழ்த்தியோ, நிந்தித்தோ, பேசுவதாகும். இந்தவிடங்களில் காணப்படும் நிந்தைகளுக்கு உண்மையாக நிந்தையில் தாத்பர்யமில்லை. மற்றொன்றை ஸ்துதிப்பதிலேயே நோக்கமென்று "நஹி நிந்தாந்யாய"த்தைக் கொண்டு அறியவேண்டுமென்பது வைதிகமதத்தின் ஸித்தாந்தமாகும். ஞானமார்க்கத்தை பிரசம்ஸை செய்வதற்காக கர்மமார்க்கத்தை வேதங்கள் நிந்திக்கும். அங்கு கர்மநிந்தையில் அதற்குத் தாத்பர்யமில்லையென்று அறிந்துகொள்ளவேணும். அதுபோல் கர்மாவை ப்ரசம்ஸிக்குமிடங்களில் ஞானமார்க்க நிந்தை இருக்கலாம். இம்மாதிரி சுருதி ஸ்மிருதி புராணுதிகளில் கணக்கற்ற நிந்தைகளும், பிரசம்ஸைகளும் காணப்படுகின்றன. அவைகளுக்கு அப்படியப்படியே அர்த்தம் செய்துகொண்டுவிட்டால் வைதிகமதமே நிலைத்திருக்காது. மனுவே, विधियज्ञात् जपयज्ञो विशिष्टो दशभिः गुणैः என்பதால் யக்ஞாதிகளைவிட ஜப யக்ஞமென்ற ஜபமானது பத்துமடங்கு உயர்ந்தது என்கிறுர். இது ஜபத்தை ஸ்துதி செய்யவந்ததேயல்லது மற்றொன்றைத் தாழ்த்திப் பேச வரவில்லை.

जप्येनैवतु संसिध्येत् ब्राह्मणो नात्र संशयः ।
कुर्यादन्यत् न वा कुर्यात् मैत्रो ब्राह्मण उच्यते ॥

என்பதால், ஜபயக்ஞத்தாலேயே ஸித்திபடைவான்
பிராம்மணன். ஆதலால் மற்ற கர்மாக்களை அவன்
செய்தாலும் செய்யலாம், விட்டாலும்விடலாம்"

என்று மனு ஜபயக்ஞத்தை ப்ரசம்ஸிக்கையில், மற்ற கர்மாக்களைக் கூட விட்டுவிடலாமென்று கூறுவதும் ஜபயக்ஞ ஸ்துதியேயல்லது மற்ற கர்மாக்களை நிந்திப்பதாகாது. ஔபாஸன, வைச்வதேவ, ச்ராத்தாதிகளைக் கூட விட்டுவிட்டு, ஜபம் செய்துகொண்டிருந்தால் போதுமென்று இதற்கு உண்மையான தாத்

பர்யம் கூறலாமா? வைதிகமதமே வ்யாகுலமாகிவிடாதா? இந்த மாதிரி கணக்கற்ற உதாஹரணமுண்டு.

## ஸ்ரீ பாகவதத்தில் உதாஹரணம்.

இதில் யாகத்தைப்பற்றியே உதாஹரணமொன்று காட்டுவோம். ஸ்ரீ பாகவதத்தில் நான்காவது ஸ்கந்தத்தில் நாரதர், ப்ராசீனபர்ஹிஸ் என்ற அரசன் கேவல காம்யயாகங்களையே செய்துகொண்டு ஞானமார்க்கத்தையே லக்ஷ்யம் செய்யாமலிருப்பதைப் பார்த்து, அவனுக்கு கர்ம பலன்களில் வைராக்யத்தை உண்டுபண்ணக் கருதி யாகபசு நிந்தாமூலமாக அவனைத் திருப்ப முயற்சிக்கிறார்.

भो भो प्रजापते राजन् पशून् पश्य त्वयाऽध्वरे ।

என்பதால் பசுஹிம்ஸையைக் காட்டிப் பேசினார். வைதிகமதஸ்தாபகரான நாரதர் வேததர்மமான யாக பசுஹிம்ஸையை நிந்திக்கமாட்டாராகையால் அந்த வாக்யத்திற்கு, மற்ற சாஸ்திரங்களோடு விரோதமில்லாமல் அர்த்தம் செய்யவேண்டுமேயல்லது யதாச்ருதமாக க்ரஹித்துவிடக்கூடாது. வேதவிருத்தமான இந்த நாரத வசனமோ, பாகவத வசனமோ அப்ரமாணமாக ஆகிவிடும். வேதம் பிரபலமா? அல்லது நாரத வாக்யமோ பாகவதமோ பிரபலமா? ஆகையால் வேதவிரோதமின்றி மேற்படி நாரத வார்த்தைகளுக்கு நஹிநிந்தா நியாயப்படி யாகபசு விஷயத்தை நிந்திப்பதில் தாத்பர்யமில்லையென்றும், பிராசீனபர்ஹிஸ்ஸுக்கு காம்ய கர்மபலங்களில் வைராக்யமுண்டுபண்ணுவதே அந்த உபதேசத்தின் நோக்கமென்றும் ஸ்ரீதரீய வியாக்யானத்திலும், வீரராகவீயத்திலும்

कर्म फलेषु वैराग्य जननार्थत्वेन अन्य परत्वात् तदुक्तेः ।

என்ற வாக்யங்களால் நாரதவாக்யமானது வேறு நோக்கத்துடன் சொல்லப்பட்டதென்று வியவஸ்தை சொல்லப்பட்டிருப்பதைக் காணலாம். இம்மாதிரியே எங்கெங்கு காணப்படுகிறதோ அங்கெல்லாம் வியவஸ்தை செய்துகொள்ளவேண்டும். பாரத பாகவதாதி புராணங்களில் யாகபசு விஷய நிந்தை எங்கேயாவது ஒன்றிரண்டு காணப்படுவதுபோல், யாகத்தைப்பற்றி வெகு பலமாக பிரசம்ஸைகளும் கணக்கற்ற விடங்களில் புராணங்களிலேயே காணப்படுகின்றனவே? இப்படி நிந்தையும் பிரசம்ஸையும் கலந்திருக்கும் இடங்களில் வைதிக மதஸ்தர் செய்துகொள்ளவேண்டிய வியவஸ்தை இதுதான் என்று அறியவும். இதை ஸ்ரீ வேதாந்ததேசிகர் அதிகரணஸாராவளி க்ரந்தத்தில்

तस्मात् यज्ञे वधोऽसाववध इति मनुः, स्तौति निन्दात्विहान्यत् ॥

என்பதால் "யாகபசு வதம், வதமேயல்லவென்று மனு சொல்லுகிறார். ஆகையால் யாகபசு விஷயமாக நிந்தை எங்காவது காணப்பட்டால் அது மற்றொன்றை ஸ்துதிசெய்வதற்காக வந்ததென்றே கொள்ளவேணும்" என்று தெளிவாக நஹி நிந்தா நியாய வ்யவஸ்தைப்படி அர்த்தம் செய்யவேண்டுமென்பதைக் காட்டினார். வைதிக மதஸ்தர்களான பிராமாணிகர்களின் கடமை இதுதான் என்பது இதனால் தெளிவாகும்.

இப்படியிருக்க புராணங்களில் लोके व्यवायामिषमद्यसेवा இத்யாதிகளான, வேறுநோக்கமுள்ள ஸூத்ரபிரமாணங்களைக்காட்டி வேதவிஹிதங்களான நித்ய யக்ஞாதிகளை எதிர்ப்பது வைதிகமத வியவஸ்தையை அறியாததாலேயே. ப்ரத்யக்ஷ சுருதி விஹிதங்களான யக்ஞாக்நிஹோத்ராதிகளை ஸ்மிருதி வசனங்கள்கூட பாதிக்கமுடியாதென்றும், அத்தகைய ஸ்மிருதிகள் பிரமாணங்களல்லவென்றும், பிரம்மஸூத்ரகாரரும், ஸ்ரீ சங்கர, ராமானுஜாதி ஆசார்யர்களும் புருஷார்த்தாதிகாணத்தில் ஸ்பஷ்டமாகச் சொல்லிவிட்டதைக் கீழே நிரூபித்தோம். ச்ரௌத யக்ஞங்களை ஸ்மிருதிகள்கூட பாதிக்கும் சக்தியற்றவையாயிருக்கையில் புராணவசனங்கள் எம்மாத்திரம்? சுருதி விருத்தமான அத்தகைய புராணவசனங்கள் தள்ளத்தக்கவைகளே, அல்லது சுருதிக்கு விரோதமில்லாமல் அந்த புராணவசனங்களுக்கு ஸமாதானம் செய்து அவைகளின் பிராமாண்யத்தைக் காப்பாற்றவேண்டும். வைதிகமத மர்யாதை இப்படியிருக்கையில் புராணவசனங்களைக் காட்டி சுருதிவிதிகளை எதிர்ப்பது அப்ராமாணிகமாகும்.

ஆதலால் வேதப்பிரமாணவாதிகளானவைதிகர்களாகிய நாம் யாகாதிகளையும் யாகபசு விஷயங்களையும் வேதோக்த உத்தம தர்மமென்று அறிந்தும் ஆசரித்தும் ஆதரித்தும் ஸகல சிரேயஸ்களையும் அடைவோமாக.

சுபமஸ்து.

---

Printed at The Sri Janardana Printing Works Ltd.,
Town High School, Kumbakonam.